கருவூரார் பல திரட்டு

பதிப்பாசிரியர்

முனைவர் சூ. நிர்மலாதேவி

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES

கருவூரார் பலதிரட்டு

பதிப்பாசிரியர்

முனைவர் சு. நிர்மலாதேவி

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES

தரமணி, சென்னை - 600 113

BIBLIOGRAPHICAL DATA

Title of the Book	:	**Karuvūrār pala tiraṭṭu**
Author	:	Dr. S. Nirmaladevi, Dip. in Epi., Dip. in Arch., Dip. in Manus. Research Assistant International Institute of Tamil Studies C.I.T. Campus, Chennai 600 113
Publisher	:	International Institute of Tamil Studies C.I.T. Campus, Chennai 600 113 Ph: 22542992
Publication No.	:	465
Language	:	Tamil
Edition	:	Second; First Edition April, 1982
Date of Publication	:	2003
Paper used	:	18.6 kg TNPL Maplitho
Size of the Book	:	1/8 Demy
Printing type used	:	10 points
No. of Pages	:	xxii+257
No. of Copies	:	1000
Price	:	Rs.70/- (Rupees Seventy Only)
Printing	:	United Bind Graphics 101-D, Royapettah High Road Chennai - 600 004
Subject		Siddha Vaithyam

பொருளடக்கம்

முனைவர் சா. கிருட்டினமூர்த்தி
இயக்குநர்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை-600 113

அணிந்துரை

"நோய்நாடி நோய் முதல்நாடி அதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல்"

என்றார் வள்ளுவர். மக்களுக்குண்டாகும் நோய்களை மண்ணில் வளரும் மூலிகைகளைக் கொண்டே குணப்படுத்தும் எளிய மருத்துவம், தமிழ் மருத்துவம் எனப்படும் சித்த மருத்துவமாகும். பதினெண் சித்தர்கள் சித்த மருத்துவத்தை அருளினர் எனக் கூறப்படுகின்றது. பதினெண் சித்தருள் ஒருவராகிய கருவூரார் கூறிய மருத்துவச் செய்திகளை உள்ளடக்கியது 'கருவூரார் பலதிரட்டு' என்ற இந்நூலாகும். சுவடிப்பதிப்பாக வெளிவந்த இந்நூல் அரிய மருத்துவக் குறிப்புகளைக் கொண்ட மருத்துவக் களஞ்சியமாகத் திகழ்கின்றது.

சாதாரண நோய்களான சுரம், உடல்வலி, சளி, கபம், குன்மம், தலைவலி முதலாகத் தீவினையால் வரும் எனக் கருதப்படும் 'கர்மநோய்கள்' எனப்படும் குட்டம், பாண்டு, காசம், நீரிழிவு, பெருநோய், மூலம் ஆகிய பெரிய நோய்களுக்குரிய மருந்துகளும் அவற்றின் செய்முறைகளும் இந்நூலில் விளக்கமாகக் கூறப்பட்டுள்ளன. கண் மருத்துவம் தொடர்பான 'அஞ்சனக்கட்டு' என்ற தலைப்பிலான பாடல்களும், குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்திற்கு இடர்ப்பாடற்ற முறைகளை எடுத்தியம்பும் 'தம்பனம்' பற்றிய பாடல்களும், இரசவாதம், காயகற்பம், அட்டகர்மம், அட்டகற்பம், யோகம், வசியம், பூசைவிதி குறித்த பாடல்களும் குறிப்பிட்டுக் கூறத்தக்கனவாகும். நீரில் மிதக்க, தீயில் நடக்க, ஒரு மாதம் பசியாதிருக்க, தண்ணீரில் விளக்கெரிக்க, ஆயுதம் ஊடுருவாதிருக்க, மலைகளையும் நொறுக்கும் வலிமைபெற எந்தெந்த மூலிகைகளை எவ்விதம் பயன்படுத்த வேண்டும் என்பதை வெளிப்படையாக இந்நூல் கூறிச்செல்கிறது.

சித்த மருத்துவ நூலுக்கு உரையெழுதுவதென்பது மிகக் கடினமான பணியாகும். அதற்குக் காரணம் பல மூலிகைப் பெயர்களையும், மருந்துச் சரக்குகளின் பெயர்களையும், செய்முறைகளையும் சித்தர்கள்

மறைபொருளாகக் (பரிபாஷை) கூறியிருத்தலேயாகும். இந்நூலிலுள்ள பரிபாஷைப் பெயர்களை அறிந்து 298 பாடல்களுக்கும் உரையெழுதி இருப்பதுடன் மூலிகைகள் மற்றும் மருந்துச் சரக்குகளுக்கான சிறப்பு விளக்கங்களையும் பதிப்பாசிரியர் முயன்று தந்துள்ளார்.

இந்நூலை மறுபதிப்புச் செய்ய இசைவளித்த இந்நிறுவனப் பதிப்புக்குழுவிற்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த மறுபதிப்புக்கு மெய்ப்புத் திருத்தம் பார்த்துத் தேவைப்படும் இடங்களில் பிற திருத்தங்களும் செய்து, பதிப்பில் செம்மையும் சீர்மையும் சிறக்குமாறு செய்த இந்நூலின் பதிப்பாசிரியர் முனைவர் சு. நிர்மலாதேவி அவர்களுக்கு நன்றியும் பாராட்டுதல்களும்.

இந்நூலை 1982இல் முதல் பதிப்பாக நிறுவனம் வெளியிட்ட பொழுது, **தமிழ் வளர்ச்சித் துறையின் சிறந்த நூற்பரிசை** இது பெற்றதென்பது குறிப்பிட்டுக் கூறத்தக்கதாகும். சித்த மருத்துவம் சார்ந்தோரும் தமிழ் அன்பர்களும் இந்நூலினைப் படித்தறிந்து பயன் பெற விழைகிறோம்.

இந்நிறுவன வளர்ச்சிக்கு ஆக்கமும், ஊக்கமும் தந்து வருகின்ற நிறுவனத் தலைவர் **மாண்புமிகு கல்வியமைச்சர் செ. செம்மலை** அவர்களுக்கும், தமிழ் வளர்ச்சி பண்பாடு மற்றும் அறநிலையத்துறைச் **செயலாளர் திருமிகு பு.ஏ. இராமையா, இ.ஆ.ப.** அவர்களுக்கும், **சிறப்புச் செயலாளர் திருமிகு தா. சந்திரசேகரன் இ.ஆ.ப.** அவர்களுக்கும் என் நன்றியறிதலைப் புலப்படுத்திக் கொள்கிறேன். இந்நூலினை ஒளியச்சுக்கோப்புச் செய்த நிறுவனக் கணிப்பொறியாளர் திருமதி இரா. வெண்ணிலாவிற்கும், இந்நூலினை அழகுற அச்சிட்டுத்தந்த யுனைடெட் பைண்ட் கிராபிக்ஸ் அச்சகத்தார்க்கும் நன்றி.

சென்னை **இயக்குநர்**
22-10-2003

முதல் பதிப்பின் முன்னுரை

(பத்ம ஸ்ரீ. டாக்டர். V. நாராயணஸ்வாமி எல். ஐ. எம்;
எச். பி. ஐ. எம்)

(இந்திய மருத்துவப் பாடத்திட்டக் குழு அங்கத்தினர் சென்னைப் பல்கலைக்கழகம்; மதுரைக் காமராசர் பல்கலைக்கழகம்)

தமிழ் மொழியும், தமிழனின் நாகரிகமும் உலகில் ஏனைய நாகரிகங்களை விடத் தொன்மையானது என்பதை வரலாற்று ஆராய்ச்சியாளர்கள் தெரிவிக்கின்றனர். அதுமட்டுமல்ல, வழக்கிலிருந்து அழிந்தொழிந்த மற்ற நாகரிகங்களைப் போன்றல்லாது ஆரம்ப காலத்திலிருந்து தொடர்ந்து நாகரிகம் வளர்ச்சி அடைந்திருக்கின்றதென்பதும் உண்மையே. நாகரிகத்தின் வளர்ச்சியினை மொழியின் இலக்கண இலக்கியங்களின் வளர்ச்சியாலும், சமுதாயத்தின் சீரிய பண்பாட்டினாலும்தான் காணமுடியும். சமூகத்தின் தொடர்ந்த வளர்ச்சி அதன் சிறந்த பழக்க வழக்கங்களாலும் நோயற்ற வாழ்வினாலும் தான் நிர்ணயிக்க முடியுமென்பது எல்லாரும் அறிந்ததே.

மனிதனின் நீண்ட ஆயுளுக்கும், நோயற்ற வாழ்க்கைக்கும் உறுதுணையாக நிற்பது மருத்துவம், மருத்துவத்தின் கோட்பாடுகளைக் கடைப்பிடிக்கா விட்டால் உடல் வளர்ச்சியும் மனோ வளர்ச்சியும் நாகரிக வளர்ச்சிக்குத் துணையாக அமைவதில்லை. தமிழரின் பண்பாட்டுக்கு ஏற்ற மாதிரி மருத்துவமும் அமைய வேண்டும். அங்ஙனம் அமைந்ததற்குச் சித்த மருத்துவம் சான்றாகும்.

உலகில் மனிதன் தோன்றுவதற்கு முன்பே செடிகொடிகளும் உலோகங்களும் தோன்றின. நோய்வாய்ப்பட்ட பொழுது அச்செடி கொடிகளையும், உலோகங்களையும், நோய்களுக்கு எங்ஙனம் உபயோகிக்க வேண்டும் என்பதை மக்கள் தங்கள் அனுபவத்தால் அறிந்தனர். மருந்து, தபசு, யோகம், மந்திரங்கள் போன்றவைகளால் 'சித்தி' அடைந்தவர்கள் சித்தர்கள் என்று போற்றப்படுகின்றனர். ஏதாவது ஒரு காரியத்தைப் பிழையின்றிச் சாதித்ததால் சித்தர் என்று போற்றப்படுகின்றனர். தமிழ்நாட்டில் வசித்த சித்தர்கள் பலர்.

அவர்கள் தாம் அடைந்த பலனைப் பிற்காலத்தவரும் அடைய எண்ணி மருத்துவ சாஸ்திரம், யோக சாஸ்திரம், ஆன்மீக சாஸ்திரம் போன்றவைகளை அருளிச் சென்றனர். அப்படி அருளிச் செய்து விட்டுச் சென்ற நூல்களில் ஒன்று உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தால் வெளியிடப் பெறும் 'கருவூரார் பலதிரட்டு' என்ற நூலாகும்.

கால வெள்ளத்தால் புதையுண்டு கிடக்கின்ற தமிழ்ச் செல்வங்களைப் புதை பொருளாராய்ச்சியாளர், நமக்குத் தெரிவிப்பதிலிருந்து தமிழனின் தொன்மையான நாகரிகம் விளங்குகின்றது ஆனால் ஓலைச்சுவடிகளில் விட்டுச் சென்ற மருத்துவம் முன்னோர்களுக்குப் பயன்பட்டது போலவே இன்றும் இக்காலத்தவர்களுக்கும் பயன்படத் தக்கதாயிருக்கிறது. விஞ்ஞானம் பெருகிவரும் இக்காலத்திலும் பல நோய்களுக்குச் சித்த மருத்துவமே பயன்படத் தக்கதாயிருக்கின்றதென்பதைப் பலரும் அறிவர். தற்கால விஞ்ஞானத்தால் அறிய முடியாத சில கருத்துகள் சித்த வைத்தியத்தில் பொதிந்து கிடக்கின்றன. அவை, மருந்துகளில் 'நாதபிந்து' 'சத்ரு மித்ரு' போன்றவை. சாதாரணமாக இப்பொருள்களின் கருத்து ஊகிக்க முடியும் என்றாலும், ஆராய்ச்சி மூலம் இக்கருத்துகளை நிரூபித்தால் தற்கால விஞ்ஞானிகளும் பயன் பெறுவார்கள் என்பது நிச்சயம்.

கருவூரார் பலதிரட்டு என்ற இந்நூல் மருத்துவம் மட்டுமல்லாமல் பிராணாயாமம், யோகம் முதலியவைகளையும் குறிப்பிடுகின்றது. கருவூரார் எக்காலத்தவர் என்பதை வரலாற்றாசிரியர்கள் தெரிவிக்கட்டும். மருத்துவர்கள் இதில் காணப்பெறும், கட்டு, கிழங்கு, கார சாரங்கள், செயநீர் போன்ற விஷயங்களை நடைமுறையில் கொண்டு வந்து பயனடைய வேண்டும்.

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தார் இந்நூலை ஆராய்ந்து பல குறிப்புகளுடனும், உரையுடனும் வெளியிட்டது போற்றத்தக்கது.

வி. நாராயணஸ்வாமி
அங்கத்தினர் இந்திய வைத்திய
பாடத்திட்டக்குழு

முதல் பதிப்பின் அணிந்துரை

டாக்டர் ஞா. கீதா
உதவி மருத்துவ அதிகாரி,
சித்த மருத்துவப் பிரிவு,
ஆரம்ப சுகாதார நிலையம்,
வேளச்சேரி, சென்னை - 42

சைவப் பேரறிவியலுக்குத் துணையாகத் தோன்றி வளர்ந்த சித்த மருத்துவம் சித்தர்களால் வரையப்பட்டு, எக்காலத்தும், எம் மக்களும் அதனைக் கற்றறிந்து நீடூழி வாழ வழி தருவதாய் அமைந்துள்ளது. இதனை,

"தமிழ்மண் டலமைந்துந் தாவிய ஞானம்
உமிழ்வது போல வுலகந் திரிவார்
அவிப மனமுமெம் மாதி யறிவுந்
தமிழ் மண்டல மைந்துந் தத்துவமாமே"

என்ற திருமூலர் திருமந்திரத்தால் அறியலாம்.

பதினெண் சித்தர்களால் தோற்றுவிக்கப்பட்ட சித்த மருத்துவம், பதினெண் சித்தர்களில் ஒருவரான கருவூராரால், சித்த மருத்துவமும், தமிழும் தழைத்தோங்கும் வண்ணம் ஓலைச் சுவடிகளில் பொறித்து வைக்கப்பட்டுள்ளது. 'கருவூரார் பலதிரட்டு' என்ற அவர்தம் ஓலைச் சுவடிகளைத் தொகுத்து ஒப்பிட்டாய்ந்து, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் ஆய்வு மாணவியாக உள்ள செல்வி இரா. நிர்மலாதேவி அவர்கள் இந்நூலைச் சிறந்த முறையில் பதிப்பித்துள்ளார்கள்.

'இந்திரர்க்கும் பிரமர்க்கும் முதல்வன் தன்னை
இருநிலம் கால் தீநீர்விண் பூத மைந்தாய்ச்
செந்திறந்த தமிழோசை வடசொல் லாகித்
திசை நான்கு மாய்த்திங்கள் நாயிறாகி"

என்கிறது திருமங்கை ஆழ்வார் பாசுரம்.

மொழிகளுள் தொன்மை வாய்ந்தது தமிழ் மொழி. மருத்துவத்துள் தொன்மை வாய்ந்தது தமிழ் மருத்துவம். (சித்த மருத்துவம்.)

சிவன் நந்திக்கு உபதேசம் செய்து, நந்தி வழியாக மற்ற சித்தர்களும் அறிந்த ஒரு தெய்வ வைத்தியம் சித்த மருத்துவம். பதிப்பாசிரியர் இத்தகு தெய்வ மருத்துவத்தைப் பதிப்பித்ததன் மூலம் தமிழுக்கும், சித்த மருத்துவத்துக்கும் தொண்டாற்றித் தெய்வப் புலமை பெற்று விட்டார்.

> **"புல்லும் மரனும் ஓரறி வினவே**
> **பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே"**

-தொல்காப்பியம், மரபியல் சூத்திரம், 583.

என்று உயிரினங்களுக்கு இலக்கணம் வகுத்தார் தொல்காப்பியனார். இத்தகு ஓரறிவுயிர்களான புல், பூண்டு, செடி, கொடி, மரம் ஆகிய இவைகள் மருந்துக்குப் பயன்படுமானால் அவற்றை மூலிகைகள் என்று அழைப்பது உலக வழக்கு. இத்தகு மூலிகைகளின் இலை, வேர், பட்டை இவற்றின் மருத்துவ குணங்களை மூலத்தில் இருந்து சிறிதும் வழுவாமல் நன்கு ஆய்ந்து பதிப்பித்துள்ளமை போற்றத்தக்கது.

'கருவூரார் பலதிரட்டு' என்ற இந்த நூலில் பதிப்பாசிரியர் கருவூராரின் வரலாற்றை மற்ற நூல்களில் காணப்படாத அளவுக்குச் சிறப்பாகத் திரட்டிக் கொடுத்துள்ளார். கருவூரார் வாழ்ந்த காலம், எழுதிய நூல்கள், சமாதி அடைந்த இடம் ஆகியவை பற்றிய கருத்துகளை ஆதார பூர்வமாகத் தொகுத்துத் தந்துள்ளார்.

சரக்குகளின் சுத்தி முறைகள், காய கற்ப மூலிகைகள், கற்ப மருந்து அருந்தும் பொழுது கடைப் பிடிக்க வேண்டிய பத்திய முறைகள், மருந்தளவு, எரிப்பு முறை, மூலிகை பறிக்கும் நாள், மூலிகைக்குக் காப்புக் கட்டுதல், முப்பூ என்ற இவற்றைப் பற்றிப் பதிப்பாசிரியர் சிறந்த விளக்கங்கள் கொடுத்துள்ளது இவருடைய சித்த மருத்துவத்தின் புலமையைக் காட்டுகின்றது.

உடலுக்குப் பலத்தைக் கொடுக்கக் கூடிய பூமிச் சர்க்கரைக் கிழங்கினை ஆவின் நெய்யுடன் கூட்டிப் பதினைந்து நாட்கள் உட்கொள்ள எலும்புருக்கி நோய் தீரும் என்று இந்நூலுள் கூறப்பட்டுள்ள மருத்துவச் செய்தியும், (பாடல் எண்கள். 206-207) இது போன்ற பல செய்திகளும், இன்றைய மருத்துவ மாணவர்கள் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ள வேண்டிய கருத்துகளாகும்.

பதிப்பாசிரியர் மூலத்தில் உள்ளது உள்ளவாறும், பொருள் மேலும் சிறப்படைதற் பொருட்டு ஆங்காங்கே சில சொற்களுக்கு விளக்கம் கொடுத்தும், பல்வேறு குறிப்புகளை இணைத்தும் உருவாக்கியுள்ளார். மென்மேலும் ஆழ்ந்து கற்கத் தூண்டுமாறு பொருட் சுருக்கமும் அமைத்துள்ளார். இந்நூல் படைப்பு அரிய பெரிய முயற்சி. சித்தர் நூல்களைப் பதிப்பித்தல் என்பது கடினமான பணியாகும். எல்லாக் கருத்துகளையும் சித்தர்கள் தமது நூலில் மறைபொருளாகவே கூறியிருத்தல் இதற்குக் காரணமாகும்.

"மணிமந்தி ரவிழ்த மார்க்கந் தெரிந்து
பிணிகள நிந்தொதுக்கிப் பின்னும் – மணியா
வுடலைவ ளர்த்திடலா லுத்தியினா னூலால்
பிடகர் வைத்தியர்க்குப் பேர்"

என்ற தேரையர் வெண்பாவின்படி (பாடல் எண். 451) இந்நூலில் மணிமந்திர அவிழ்தங்கள் சிறப்பான விளக்கத்துடன் திகழ்கின்றன.

'யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' எனும் பெருநோக்கில் கருவூரார் பல திரட்டினை வையகத்திற்கு அச்சிட்டு வழங்கியுள்ளார். அழிந்து கொண்டிருக்கும் ஓலைச் சுவடிகளில் ஒளிந்து கொண்டிருக்கும் ஏனைய சித்தர் நூல்களையும் சிறந்த முறையில் பதிப்பித்து வெளிக் கொணர்வார் என நம்புகிறேன். இப்பணிக்கு எல்லாம் வல்ல சித்தர்கள் அருள் புரிவார்களாக!

இத்தகு மேலான பணிக்கு ஆக்கமும், ஊக்கமும் அளித்து வரும் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் பணி தொடர்வதாக! வாழ்த்துக்கள்.

வாழ்க தமிழ் மொழி!

வளர்க தமிழ் வைத்தியம்!

முதல் பதிப்பின் வாழ்த்துரை

1979ஆம் ஆண்டு முதல் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் ஓலைச்சுவடிகளைப் படிப்பதும், பதிப்பிப்பதுமான கல்வியைக் கற்பித்து வருகின்றது. முதல் ஆண்டு கற்ற மாணவர்களுள் முதல் நிலை பெற்ற செல்வி இரா. நிர்மலாதேவி அவர்கள் ஓலைச் சுவடிகள் சம்பந்தமான ஆய்வில் ஈடுபட்டுள்ளார். ஏற்கெனவே அவருடைய 'பணவிடு தூது' என்ற நூல் இந்நிறுவனத்தால் வெளியிடப் பட்டுள்ளது.

அச்சாகாத சுவடிகளில் உள்ள நூல்கள் பலவற்றை நிறுவனம் வெளியிட்டு வருகின்றது. அந்நிலையில் இந்நூல் வரவேற்கத்தக்க ஒன்றாக அமைகின்றது.

தமிழருக்கே உரிய மருத்துவம் 'சித்த வைத்தியம்' என்று கூறுகின்றனர். தமிழகத்தில் பரம்பரை பரம்பரையாகச் சித்தர்கள் வாழ்ந்து வந்தனர்; தற்போதும் வாழ்ந்து வருகின்றனர். அவ்வாறு வாழ்ந்த சித்தருள் ஒருவர் கருவூரார் என்பவர். கருவூரார் என்ற சித்தர் சித்த வைத்தியம் சம்பந்தமாகவும், ஆன்மீகம் சம்பந்தமாகவும் தம்முடைய கருத்துகளைத் தொகுத்துத் தந்துள்ளார். இச்சுவடி பொதிகை மலைக்கு அருகில் உள்ள (திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த) பாபநாசத்தில் இருந்து கிடைத்தது. படித்துப் பார்த்த போது பல புதிய செய்திகள் காணப்பட்டன. செய்திகள் தமிழ் மருத்துவ உலகிற்குப் பயன்படும் என்று கருதிப் பதிப்பித்துள்ளோம்.

செல்வி இரா. நிர்மலாதேவி அவர்கள் மிகவும் நுணுக்கமாக ஆழ்ந்து, ஆராய்ந்து சித்த மருத்துவத் துறையில் உள்ள சிலரிடம் தெளிவைப் பெற்று இந்நூலைப் பதிப்பித்துள்ளார். அவருடைய முயற்சி மிகவும் பாராட்டத்தக்கது. நிறுவனத்தில் இருந்து வெளிவருகின்ற முதல் 'சித்த மருத்துவ நூல்' இந்நூல்தான். இன்னும் சில மாதங்களில் 'கண் மருத்துவம்' பற்றிய ஒரு நூல் வெளிவர இருக்கின்றது.

இந்நூல் வெளிவரக் காரணமாக இருந்த அனைவர்க்கும் எங்கள் நன்றி. சிறப்பாக, குறித்த காலத்தில் அச்சிட்டுத் தந்த 'நாவல் ஆர்ட்' அச்சக உரிமையாளர் கவிஞர் நாரா. நாச்சியப்பன் அவர்களுக்கு எங்கள் நன்றி உரித்தாகுக.

அன்புள்ள,
ச. வே. சுப்பிரமணியன்
29-4-82

முதல்பதிப்பின் நன்றியுரை

'கருவூரார் பலதிரட்டு' என்ற சுவடியை நூலாகப் பதிப்பித்து வெளியிட ஆக்கமும், ஊக்கமும் அளித்து, அனைத்து ஏற்பாடுகளும் செய்துதவிய நிறுவன இயக்குநர் டாக்டர் ச.வே.சுப்பிரமணியன் அவர்களுக்கு மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நூலுக்கு முன்னுரை கொடுத்துள்ள டாக்டர் V. நாராயண ஸ்வாமி அவர்களுக்கும், அணிந்துரை அளித்துள்ள டாக்டர் ஞா.கீதா அவர்களுக்கும் என் இதய பூர்வமான நன்றி.

வேறு ஒரு ஆய்வுக்காகச் சித்த வைத்திய நூல்கள் நூற்றைம்பதுக்கு மேல், முழுக்கப் படித்துப் பார்த்துச் சில முக்கிய குறிப்புகளை எடுத்தது தவிர, இத்துறையில் எவ்வித நடைமுறை அனுபவமும் இல்லாத எனக்கு, பல மூலிகைகள், மருந்துச் சரக்குகள், செய்முறைகள், பரிபாஷைச் சொற்கள், சித்த மருத்துவத்துக்கென்றே உரிய சொற்கள் (Technical Words) ஆகியவற்றுக்குச் சீரிய விளக்கங்கள் கொடுத்து, நூற்பதிப்பின் சிறப்புக்குத் துணை புரிந்த சித்த மருத்துவர்கள் மயிலாப்பூர் திரு. ஜெயராமன் அவர்களுக்கும் திருநெல்வேலி மாவட்டம் இளையரசனேந்தல் 'திரு. சுப்பையா பிள்ளை' அவர்களுக்கும் நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன்.

பாடல் அமைப்பினையும், பாடலின் பொருட் சுருக்கம், சொல் விளக்கம் குறித்த அனைத்துச் செய்திகளையும் முழுக்கப் படித்துப் பார்த்துப் பல இடங்களில் ஐயம் எழுப்பி, ஐயம் அறுத்த நிறுவனச் சுவடிப் பொறுப்பாளர் திரு. மு.கோ. இராமன் அவர்களுக்கு உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இரா. நிர்மலாதேவி

பதிப்பாசிரியர் முகவுரை

'கருவூரார் பலதிரட்டு' என்ற சுவடி திருநெல்வேலி மாவட்டம் பாபநாசம் தெற்குப் புதுத்தெருவில் வசிக்கும் சைவ வேளாளர் மரபைச் சேர்ந்த 'பார்வதி அம்மையார்' என்பவரிடமிருந்து, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் ஆய்வு மாணவராக இருந்த 'பவுன் துரை' என்பவரால் 1980 ஆம் ஆண்டு ஜூன் 15ஆம் தேதி நிறுவனத்துச் சுவடியியல் துறைக்கு அளிக்கப்பட்டது.

சுவடியின் புற அமைதி

37.5 X 3.4 செ. மீட்டம் நீள, அகலம் கொண்டதாக உள்ள இச்சுவடியின் ஏடுகள் பழமையானவையாகத் தோற்றமளிக்கின்றன. முதல் ஐந்து ஏடுகள் 3.5 செ. மீட்டர் நீளத்துக்கு இரு புறமும் சிதைந்துள்ளன. 55ஆம் எண்ணுள்ள ஓலை மேற் குறிப்பிட்ட அதே அளவுக்கு இடப்புறம் மட்டும் முறிந்துள்ளது. 18, 19 முதல் 26 வரை உள்ள ஏடுகளும், 28, 29 ஆம் எண்களுள்ள ஓலைகளும் மிகச் சிறு அளவில் பூச்சி அரிப்புக்கு ஆளாகியுள்ளன.

சுவடியின் அக அமைதி

பக்கத்துக்கு ஏழு முதல் எட்டு வரிகள் வரை உள்ளன. எழுத்துகள் சீரானவையாகவும், தெளிவானவையாகவும் அமைந்திருக்கின்றன. சற்றுப் பெரியனவாய், எழுத்துக்கு எழுத்து நன்கு இடம் விட்டு, தேவையற்ற நீட்சி, குறுக்கல்கள் தவிர்க்கப்பட்டு எழுதப்பட்டுள்ளன.

எண்கள்

ஓலைகளுக்குத் தமிழ் எண்கள் தரப்பட்டுள்ளன. மொத்தம் அறுபது ஓலைகள் உள்ளன. இருபுறமும் எழுதப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு பாடல் முடிவிலும் பாடல் எண்கள் (தமிழ் எண்) இடம் பெற்றுள்ளன.

குறிகள்

பாடல் முடிவினைக் குறிக்க உ, . . . என்ற குறிகளும், இதனை அடுத்துப் பாடல் எண்ணும், இதன் பின் முன்குறிப்பிட்ட அதே குறிகளும் ஆளப்பட்டுப் பாடல் முடிவு தெளிவாக்கப்பட்டுள்ளது. எண்சீர் விருத்தத்தால் ஆகிய இப்பாடல்களில் ஒவ்வொரு வரி முடிவும் - என்ற குறியிடப்பட்டு வரி எச்சொல்லுடன் முடிவடைகிறது என்பது குறிப்பிடப்பட்டுள்ளது. ஓலை இடப்புற ஓரங்களில் சிறுதலைப்புகள் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றின் இறுதியில் சிற்சில இடங்களில் . . . என்ற குறிகள் ஆளப்பட்டுள்ளன. ஏடுகளின் வலது ஓரங்களில் சொல் அல்லது வரி முடிவின்மை உணர்த்தவும் 0 என்ற குறி இடப்பட்டுள்ளது.

தவறாக எழுதப்பட்ட எழுத்துகள் எழுத்தாணியால் கீறிச் சிதைக்கப்பட்டுள்ளன. விடப்பட்ட எழுத்துகள் அவ்வெழுத்து இடம்பெற வேண்டிய இடத்தின் நேராகக் கீழே எழுதப்பட்டுள்ளன.

சிறு தலைப்புகள்

ஓலைகளின் இடது ஓரங்களில் அப்பக்கத்தில் கூறப்பட்ட செய்திக்கு உட்தலைப்பு தரப்பட்டுள்ளது

'பாடுகிறேன் பாசாணப் போக்கைக் கேளு' 71[1]

'பார்த்திடவே நாகத்தின் சுத்தி கேளு' 93

'வித்தாகு மயச்செம்பை இன்னங் கேளு' 96

'தானென்ற வெள்ளிவித்தை சொல்லக் கேளு' 102

'உருக்கிறன் வெள்ளிமுறை சொல்லக் கேளு' 111

'தானென்ற தாளகத்தின் மெழுகு கேளு' 116

'போற்றுவாய்ப் பூசைவிதி புகலக் கேளே' 153

'அறிவாக லிங்கத்தின் கட்டுச் சொல்வோம் 170

'பாரென்ற சவ்வீர வைப்புக் கேளு' 172

'பதிநில்லு அட்டகர்மப் பாசை கேளே' 175

---

1. ஆளப்படும் எண்கள் பாடல் எண்களைக் குறிக்கும்.

என்ற பாடல் வரிகளைக் கொண்டு, அவை வரும் அந்தந்தப் பக்கத்தில் முறையே பாசாணப்போக்கு, நாகசுத்தி, அயச்செம்பு, வெள்ளிவித்தை, வெள்ளிமுறை, தாளகமெழுகு, பூசைவிதி, லிங்கக்கட்டு, சவ்வீரவைப்பு, அட்டகர்மம் என உட்தலைப்புகள் கொடுக்கப்பட்டுள்ளன. இவை மூலத்தில் அன்றிப் பின்னால் படி எடுத்தவர் பாடல் விளக்கம் கருதிக் கொடுத்த தலைப்புகளாகவும் இருக்கலாம். (இவ்வேடு மூலம்அன்று படியே) இது தவிர, பல இடங்களில் பாடல் பொருள் நிலை நோக்கியும் உட்தலைப்புகள் தரப்பட்டுள்ளன.

எழுத்தமைதி

மெய்யெழுத்துகளுக்குப் புள்ளியின்றியும், ெ-ே, ா-ர என்பவற்றுக்கிடையில் உள்ள வேறுபாடு காட்டப்படாது, 'ெ', 'ா', என்றே எழுதப்பட்டுள்ளன. இரட்டித்த வல்லின மெய்கள் அதாவது க்க, த்த, ட்ட, ப்ப போன்றவை கூட்டெழுத்துகளில் எழுதப்பட்டுள்ளன. இரட்டித்த எழுத்துகளை இவ்வாறு எழுதும் முறைகள் சிற்சில இடங்களில் மட்டுமே மேற்கொள்ளப்பட்டுள்ளன. 'இகரம்' ஏறி வரும் இரட்டித்த மெய்களும் (க்கி, த்தி) இதே முறையில் எழுதப்பட்டுள்ளன.

நூலுள் செய்த ஒழுங்குகள்

மூலஏடு அன்று: "குரோதன வருஷம் மார்கழி மாசம் 5ஆம் தேதி புதன் கிழமையண்ணைக்கு தாண்டவமூர்த்தி வாத்தியார் கருவூர் நாயனார் பல கலம்பகத் திரட்டு எழுதி முடிந்தது முற்றும்".

என ஓலையின் இறுதியில் குறிப்பிடப்பட்டுள்ளது கொண்டு தமிழ் வருடமான குரோதன ஆண்டு மார்கழி மாதத்தில், 5 ஆம் தேதி புதன் கிழமையன்று இவ்வேடு தாண்டவமூர்த்தி வாத்தியாரால் படி எடுக்கப்பட்டது என்பதும், ஆகவே இது மூல ஏடு அன்று என்பதும் தெரியவருகிறது.

தலைப்புத் தந்த விதம்

'கருவூர் நாயனார் பலகலம் ப(க)த் திரட்டு' என இந்நூலின் தலைப்பு இறுதியில் கொடுக்கப்பட்டுள்ளது. பல கலம்பகம் என்பதிலும் 'க' விடப்பட்டு பல கலம்ப' என்று தவறாக எழுதப்பட்டுள்ளது. பலவற்றைத் திரட்டிக் கூறும் பல திரட்டே

ஆதலாலும், இதே நூல் 'கருவூரார் பல திரட்டு' என்ற தலைப்புடன் 'சென்னைச் சுவடிகள் ஆவணக் காப்பகம்'[2] கேரளப் பல்கலைக்கழகச் சுவடிகள் ஆவணக் காப்பகம்[3] பாரீஸ் தேசிய நூலகம் ஆகியவற்றில் காணப்படலாலும், 'கலம்பகம்' = கலப்பு + அகம் அதாவது, அகம், பல செய்திகளைக் கலந்து கூறுவது, 'பலதிரட்டு பல செய்திகளைத் திரட்டிக் கூறுகூது என ஒரே பொருளிலேயே அமைவதானும் பல கலம்பகத்திரட்டு' என்பதனைப் பல திரட்டு' என்றே அமைத்துள்ளேன்.

உட்தலைப்பில் செய்த ஒழுங்கு

சிறுதலைப்புகள் ஓலையின் ஒருபுறம் கொடுக்கப்பட்டுள்ளன. ஆனால் அது குறித்த செய்திகள் இறுதி வரியின் இறுதிச் சொல்லாக மட்டும் அமைந்து, அப்பக்கம் முழுவதும் முன்னால் உள்ள ஓலையில் குறிப்பிடப்பட்ட உட்தலைப்புக்கான செய்திகளைக் கூறுவனவாகவும் இருக்கும். எனவே இரு ஓலைகளிலுள்ள பாடல்களையும் படித்தறிந்து, எத்தலைப்புக்கான செய்தி எவ்வோலை வரை எப்பாடல் வரை இடம் பெற்றுள்ளது எனத் தெரிந்து, அப்பாடல் முடிவு வரை குறிப்பிட்ட அத்தலைப்பும், பின் மற்ற தலைப்புக்கான பாடல் தொடங்கும் இடம் அறிந்து அதற்கு அத்தலைப்பும் என இட வேண்டியிருந்தது. எனவே ஓரத்தலைப்பு மட்டும் கொண்டு அவ்வோலை அல்லது அப்பக்கம் முழுதும் அது குறித்த பாடல்களே நிறைந்துள்ளன எனக் கொள்ளல் தவறாக முடிந்தது.

செய்யுளுள் செய்த சீர்மை

எண்சீர் விருத்தத்தால் அமைந்த பாடல்கள் அசை, சீர், வரி என்ற வேறுபாடுகளை அமைப்பில் காட்டாது, ஓலையின் இடது கோடி முதல் வலது கோடி வரை ஒரே தொடர்ச்சியாக இருக்குமாறு எழுதப்பட்டிருந்தன.

அவற்றை யாப்பு முறைப்படி சீர் பிரித்து, வரி அமைப்புக் கொடுத்துப் பாடல் வடிவில் தந்துள்ளேன்.

---

2. சுவடி எண்கள் 2288, 2299

3. சுவடி எண் 7933

பல பாடல்கள் விருத்த யாப்பின்படி அடி வரையறைகளுடன் (அடி) அமைந்திருப்பினும், சில பாடல்கள் ஓர் அடி குறைந்தும்,[4] ஓர் அடி மிகுந்தும்[5] காணப்படுகின்றன. அரை அடியும், (பாடல் எண் 229). ஓர் அடியும், ஒரு சீரும், (பாடல் எண் 232). ஒரு அடியின் பிற்பாதியும், அடுத்த அடியின் முற்பாதியும், (பாடல் எண் 262) என இவ்வாறு குறைவு கொண்ட பாடல்களும் உள்ளன.

அடிகுறைந்த பாடல்கள் (3 வரிகள்) நிரப்பப்படாமலும், அடியளவால் மிகுந்த பாடல்கள் (5 வரிகள்) குறைக்கப்படாமலும் இருந்தது இருந்தவாறே தரப்பட்டுள்ளன. சிதைந்த சில எழுத்து, சொற்கள் மட்டும் ஊகித்து நிரப்பப்பட்டுள்ளன. பாடல்களின் குறைந்த அடியளவால் 'பொருள் விளங்காமை' என்ற குறைபாடும், வரி மிகையால் பொருள் குழப்பமும் ஏற்பட்டுள்ளன. முன்னதற்குப் படி எடுத்தவரின் கவனக்குறைவும், பின்னதற்குச் சொந்தக் கருத்தை உட்செருகும் தன்முனைப்பும் காரணமாகலாம்.

கருவூரார் பல திரட்டு 300 (சென்னை அரசினர் சுவடிகள் ஆவணக் காப்பகத்துச் சுவடி எண் 2288) என்ற தலைப்பும், 300 பாடல்களும் கொண்டதாக இதே செய்திகளை இயம்புகின்ற சுவடி உள்ளதால் இச்சுவடி மூலத்திலும் 300 பாடல்கள் அமைந்திருக்கக்கூடும் என எண்ண இடமுள்ளது. இரு பாடல்கள் இல்லாது கடவுள் வாழ்த்துடன் 298 பாடல்களுடன் உள்ள இவ்வேடு இருந்தபடியே பதிப்பிக்கப்படுகிறது. ஒப்பிட எடுத்துக் கொண்ட 300 பாடல்கள் உள்ள முன் குறிப்பிட்ட (எண். 2288 சென்னைக் கீழ்த்திசைச் சுவடிகள் ஆவணக் காப்பகம்) ஏடு கருத்தில் ஒன்று படினும் ஏடு பா அமைதியிலும், சொல்லாட்சியிலும், நடை நயத்திலும் மாறுபட்டுக் காணப்படலால் முழுமைப்படுத்த உதவவில்லை.

---

4. 5, 6, 112, 183, 241, 266, 271, 277, 280, 281, 285, 290, 296, 298 ஆகிய எண்களுள்ள 14 பாடல்கள்.

5. 63, 81, 116, 136, 181, 187 என்ற எண்கள் கொண்ட ஆறு பாடல்கள்.

மலிந்திருந்த பிழைகள்

காலநீட்சி, கவனக்குறைவு, மூல ஏட்டின் சிதைவு, பேச்சு வழக்கு-எழுத்து வழக்கின் இடையே வேறுபாடின்மை, பேசியபடியே எழுதியமை, ஏட்டில் கூறப்பட்டுள்ள குறிப்பிட்ட செய்திகள் குறித்த அறியாமை, விரைவு, எழுத்துகளின் வடிவ ஒற்றுமையால் ஏற்பட்ட குழப்பம் (ப-ம, க-த, க-ச, த-ச, ஆ-ஷ, து-நு, ள-ன, ஞ-ந, மு-மு, வ-ப, வ-ல, உ-கூ, ளை-ளெ, ஊ-உள, ை-ஞ, போன்றன) என்ற பல்வேறு காரணங்களால் பிழைகள் மலிந்து விடுகின்றன.

'முலைப்பாலுஞ் தேனும்', 'சொற்ப் பெரிய', 'அயர்ந்தைந்து' (ஐந்தைந்து), 'மல்க்குத்த' (மலைகுத்த), 'மந்தான்' (மந்திரந்தான்), 'சொவலியே' (சொல்லிய), 'துரைக்கெல்லாம்' (நுரைக்கெல்லாம்), 'நின்றனைய்த்தை' (நின்றதை), 'மத்தீ', (மந்தி) 'மூணவே' (பூணவே), 'போடி', (வோடி), 'யன்னடமாமே' (யண்டமாமே), 'கோட்டில்' (காட்டில்' 'சோணவே' (கோணவே), 'பீங்காங்கீகானில்' (பீங்கானில்), 'கெளளி' (கெவுனி), 'செனவேதை' (செணவேதை), 'பூசிசிபாய்' (பூச்சிகப்பு), 'தோளந்திரம், (தோலாந்திரம்), 'விளைந்துண்டு' (விரைந்துண்டு), 'வய்த்து' (வைத்து), 'நேசிக்கிரமம்' (தேசிக்கிரமம்), 'சட்டியிற்க்குள்' (சட்டிக்குள்), 'ஊறுகேட்டை' (உறுக்கேட்டை), 'சலக்கொம்பு' (கலைக்கொம்பு), அடாயுமவென (அடாயுவென), 'ஓட்டு' (ஆட்டு), 'அஷ்ட்ட கற்ப்பம்' (அட்டகர்மம்), 'அஞ்சு சுண்ணக்குகை' (அஞ்சு கண்ணுக்குகை), 'வாள் வெண்ணை', 'வாள் கோளி', 'வாள் பலகை வீரம் - முறையே வாழ் வெண்ணை, வாழ் கோழி, வாழ் பலகை வீரம் எனத் திருத்தப்பட்டுள்ளன.

நினவாக, கய்யிலேந்தி, சாவல், தினமாவு, எதுத்து போன்ற பேச்சு வழக்குச் சொற்கள் எழுத்து வழக்கில் எழுத இடம் தந்ததால் மாற்றி எழுதப்பட்டுள்ளன.

இயலாதவை அவ்வவ்வாறே கொடுக்கப்பட்டுள்ளன.

ஒப்பீட்டால் உணர்ந்தவை

அடிக்குறிப்பு எண் '2' '3' இல் குறிப்பிடப்பட்ட மூன்று சுவடிகளுடன் இச்சுவடி ஒப்பிடப்பட்டதால் உணர்ந்த உண்மைகள் பல. சொல்லாட்சி, நடையமைதி, யாப்பமைதியால் வேறுபட்டிருப்பினும்

உட்கருத்து மாறாமையினால் ஒப்பீட்டுக்கு உதவின. பாடபேதங் களையும் ஓரளவு அறிய முடிந்தது.

'ரெங்கு' (119) என்பது தங்கக்கட்டி என்றும், பூசிசிபாப்' - 125 என்பது தவறு அது பூச்சிகப்பு என்ற சொல் என்பதும், வெண்கரு 116 முட்டைக்கரு என்றும், 'தாத்தொட்டி' 90, சிவந்த புளி நடலை 96, கரிசுப்பு 122 என்பவை எழுத்துப் பிழையுள்ள பெயர்கள் என்பதும், அவற்றின் சரியான பெயர்கள் 'காத்தொட்டி', 'சிவந்தபுளி நரளை', 'கரியுப்பு' என்பதும், இவை போன்ற இன்னும் பல எளிய சொற்களின் பொருள் அறியவும், பாடற்பொருளை விளங்கிக் கொள்ளவும் ஒப்பீடு உதவியது.

சில மூலிகைப் பெயர்கள் விளங்கிக் கொள்ள இயலாதபடி மிகைப்பட எழுதப்பட்டிருந்தன.

'கொம்பினுட பாகல்', 'பிண்ணாக்கினிலை' 19, 'சுருதியென்னுஞ் சாரணை' 31, 'நிம்பநெய்மூலிகை' 197, 'கோழியுட அவரை' 234, 'கார்த்திகையின் கிழங்கு' 242 என்ற அவை முறையே கொம்பன் பாகல், பிண்ணாக்கிலை, சுருதிச்சாரணை அதாவது சிவப்புச் சாரணை, வேப்பிலை, கோழியாவரை, கார்த்திகைக் கிழங்கு என்ற தெளிவும் ஒப்பீட்டால் பிறந்தது.

ஊகித்து இட்டவை

ஒப்பீடு உதவ இயலாத இடங்களில் ஊகத்தால் சில சொற்களைத் திருத்தம் செய்துள்ளேன்.

'உருக்கே' என்பதை 'ஊருக்கே' 44 என்றும்,

'உதுகண்டு' என்பதனை உதுதண்ட 82 என்றும்,

தின்பமம் என்பதனைத் 'தின்பழம்' 111 என்றும்

யாப்பமைதி, பொருளமைதி நோக்கித் திருத்தியுள்ளேன்.

67ஆம் பாடலின் இறுதி வரியான 'இவர்கள்தான் பிறவார்க ளிருப்பார் தானே' என்பதனையும் பொருள், அடுத்த பாடலின் தொடக்கச் சொல் ஆகியவை நோக்கிப் 'பிறப்பார்க ளிறப்பார் தானே' என அமைத்துள்ளேன்.

பொருட்சுருக்கமும், சொல் விளக்கமும்

ஏட்டில் பாடல்கள் மட்டுமே இடம் பெற்றிருந்தன. பாடற் பொருளைப் பொருட் சுருக்கம் என்ற தலைப்புடன் பாடலின் கீழே கொடுத்துள்ளேன். பாடலின் ஒவ்வொரு சொல்லும் தருகின்ற முழுப்பொருளும் அவற்றில் இடம் பெறாததால் பொருட்சுருக்கம் எனப் பெயர் அமைத்தேன்.

பாடலின் சில வரிகளில் உள்ள, பொருட் சுருக்கத்தில் விளக்கிக் கூற இயலாத சில சொற்களுக்குச் சொல் விளக்கம் என்ற தலைப்பில் விளக்கம் தர முயன்றுள்ளேன்.

ஐயங்கள்

116, 117 ஆம் பாடல் பொருள் தெளிவாகவில்லை.

'வல்லது சேரில்' 8 வல்லது எது என்பதும்,

'செல்லாது அயனிட்ட வெளுத்தங் கேதான்' 9 என்ற வரிப்பொருளும்,

'சேரப்பா ஆட்டியே நித்தத்துள்ளே, 53 என்ற சொற்பொருளும்,

'ஆகாச பானமுண்டா' 67 ஆகாச பரணமா என்ற ஐயமும்,

'கெர்ச்சிக்க' 84 என்பதன் தெளிவின்மையும்,

'தாம்பிரத்தி லமுதத்தாலே' 95 தாமிரத்தின் நீர் வடிவமா? (உருகிய தாமிரம்) அமிர்தப் பாலா? உமிழ்நீரா? என்பதும்,

'அறுசனம்' 136 - அறுவகை சனமா? அரிசனம் எனும் மஞ்சளா என்ற வினாவும்,

'அமிர்தமொரு முலைப்பால் 137 அமிர்தமொடு முலைப்பாலா என்பதும்,

'ஊற்றியென்னும் நூல்' 'நேற்றியென்னும் பொடி' 20 என இதுபோன்று எதுகை மோனை இயைய வரும் மூதற் சொற்களுக்கு என்ன பொருள் என்பதும்,

'உள்ளொட்டி பிறவொட்டி' 225 என்பன யாது என்பதும்,

'வெட்டுண்ணி மண்டையோடு 244 என்பதன் பொருளும்.

'கரகேழும் 289 என்ற சொல்லின் பொருளும் தெளிவாக வில்லை. நூலுள் இவற்றுக்கு ஒருவாறு பொருள் கொண்டு விளக்கம் எழுதி இருப்பினும், சொல்லில் எழுத்துப் பிழைகள் இருந்து வேறு பொருள் கொண்டனவாக இருக்கலாம் என்ற ஐயம் உள்ளது.

பிழைகள் சுட்டிக் காட்டப்பட்டு, ஐயங்கள் தெளிவிக்கப் பட்டால் அவை மறுபதிப்பைச் சீர்மையுடன் வெளியிடப் பெருந்துணை செய்யும்.

இந்நூலிலுள்ள 'அஞ்சனக்கட்டு' என்ற தலைப்பிலுள்ள பாடல்கள் 'கண் மருத்துவம்' குறித்த கருத்துகளை உள்ளடக்கியவை என்பதும் 'தம்பனம்' என்ற தலைப்பில் அமைந்துள்ள செய்திகள் குடும்பக்கட்டுப்பாட்டுத் திட்டத்திற்கு இடர்ப்பாடற்ற ஒரு முறையை எடுத்துரைப்பவை என்பதும் ஆழ்ந்து கற்பாருக்கு அறிய வரும் செய்திகள்.

இதுபோல் எத்தனையோ கருத்துகள் இந்நூலுள் அடங்கி இருக்கலாம். அறிவுக் கண்கொண்டு காண்பவருக்கு அவை அகப்படலாம்.

இரா. நிர்மலாதேவி

குறியீடுகள், சுருக்கெழுத்துகளின் விளக்கம்

1. ( ) - சிதைந்ததை நிரப்பியது.
2. . . . - சிதைந்தவை நிரப்பப்படாது விடப்பட்டன.
3. ? - பொருள் தெரியவில்லை.
4. செ. I - சென்னை அரசினர் சுவடிகள் ஆவணக்காப்பகத்திலுள்ள சுவடி எண் 2288 'கருவூரார் பலதிரட்டு' 300ஐக் குறிக்கும்.
5. செ. II - மேற்குறிப்பிடப்பட்ட ஆவணக் காப்பகத்துச் சுவடி எண் 2299 'கருவூரார் பல திரட்டு' என்ற சுவடியைக் குறிக்கும்.
6. தி - திருவனந்தபுரம் கேரளப் பல்கலைக்கழகச் சுவடிகள் ஆவணக் காப்பகத்துச் சுவடி எண் 7933 'கருவூரார் பல திரட்டு' என்பதனைக் குறிக்கும்.
7. பொ. சு - பொருட் சுருக்கம்.
8. சொ. வி - சொல் விளக்கம்.
9. பா. பே - பாடபேதம்.

நூலாசிரியர் வரலாறு

"கருவூர் நாயனார் பலகலம்பகத் திரட்டு எழுதி முடிந்தது" என இறுதி ஓலையில் குறிப்பிடப்பட்டுள்ளது கொண்டு இதன் ஆசிரியர் "கருவூர் நாயனார்" என்பதனை அறிய முடிகிறது.

"கருவூர் நாதன்" — 'கருவூர் நாதன் ஞானம் 43'[1]

"கருவூரார்" — 'கருவூரார் லவண குளிகை'[2]

"கருவூர்ச் சாமியார்"— கருவூர்ச் சாமியார் சாஸ்திரம்'[3]
(சூத்திரம் முப்பது)

"கருவூர்த் தேவர்" — 'கருவூர்ப் புராணம்'[4]

"கருவூர்ச் சித்தர்" — 'நெல்லைத்தல புராணம்'

என்றும் இவர் குறிப்பிடப்படுவதைக் காண்கிறோம்.

இவற்றினின்றும் ஊர்ப்பெயரால் அழைக்கப்படுதலின்றி இயற்பெயர் தெரியாத நிலை இருப்பதை அறிகிறோம்.

இவ்வூர்ப் பெயருடன் இயற்பெயரும் இணைந்த புலவர்[5] பெயர்களைச் சங்கப் பாடல் பாடியவர்களாகக் காணவும் செய்கிறோம்.

பாடல் பெற்ற ஏழு திருத்தலங்களில் இக்கருவூரும்[6] ஒன்று. 'கொங்கு நாடு' எனக் கூறப்படும் பகுதியில் இது அமைந்துள்ளது.

---

1. சென்னைக் கீழ்த்திசைச் சுவடிகள் ஆவணக்காப்பகம், சுவடி எண் R 4648.
2. சென்னைக் கீழ்த்திசைச் சுவடிகள் ஆவணக்காப்பகம், சுவடி எண் R 7700.
3. தஞ்சை சரஸ்வதி மகால் நூலகம், சுவடி எண். 231 (F).
4. 'சேர்ந்தநங் கருவூர்த் தேவர் சேவடி சென்னி சேர்ப்பாம்'
5. கருவூர் ஓதஞானி, கருவூர் கதப்பிள்ளை, கருவூர் கதப்பிள்ளை சாத்தனார். கருவூர் கலிங்கத்தனார், கருவூர் கிழார், கருவூர் சேரமான் சாத்தனார், கருவூர் நன்மார்பனார், கருவூர் பவுத்திரனார், கருவூர் பெருஞ் சதுக்கப்பூதனார்.
6. தற்போது 'கரூர், (கோவை மாவட்டம்) என அழைக்கப்படுவது கருவூர் என்பதன் மரூஉச் சொல்லே.

கருவூரார் ஒருவரா?

கருவூர்ப் புராணம் காட்டும் சித்தராய கருவூராரும், திருவிசைப்பா பாடிய ஒன்பதின்மருள் ஒருவராய கருவூராரும் ஒருவரன்று என்றும், கருவூர்த் தேவர் சித்தருக்கு முந்தையவர்,[7] பிந்தையவர்[8] என்ற இருவேறு கருத்தும் அறிஞர்களிடையே நிலவுகிறது.

திருவிசைப்பா பாடிய கருவூரார்

சைவத் திருமுறைகள் பன்னிரண்டினுள் ஒன்பதாம் திருமுறையாய திருவிசைப்பா 29 பதிகங்களும் 301 பாடல்களும் கொண்டது. இதில் 19 பதிகங்கள் ஏனைய எண்மர் பாடியிருக்க கருவூரார் ஒருவர் மட்டும் 10 பதிகங்கள் (103 பாடல்கள்) பாடியுள்ளமை காண்கிறோம்.

பத்துத்[9] திருத்தலங்களுக்கும் நேரில் சென்று கண்டு உவந்து பதிகங்கள் பாடியுள்ளமையைப் பதிகங்களே சான்றாக நின்று விளக்குகின்றன.

கருவூர்ப் புராணம் காட்டும் கருவூரார்

கருவூரார் கருவூரில் மறையவர் குலத்தில் உதித்து, உலகாயதம், முதலிய பல சமயங்களை ஆய்ந்து சைவசமயமே நற்சமயமெனத் தேறி அதன் வழி ஒழுகினார் என்றும், சிவயோகங் கைவந்த சித்தர் என்றும், மாதவஞ் செய்தாலும், மாதர்பாலிருந்தாலும் தாமரையிலையினீர் போலப் பற்றற்றிருந்தார் என்றும் காளியிடம் மதுப் பெற்று அருந்தியும் மாமிசம் வேண்டி மீன் மழை பொழியச் செய்த ஆற்றல் கொண்டவர் என்றும், இவர் திறம் உணராப் புன்மதியாளர் சிலர் மதுவூனருந்தும், வாம மார்க்கத்தவர் என இகழ, அன்னாரைத் தெருட்ட,

---

7. C.K. சுப்பிரமணிய முதலியார் - கருவூர்த் தேவர். ப. 34. (10 ஆம் நூற்றாண்டுக்கு முந்தையவர்)
8. மு. அருணாசாலம், தமிழ் இலக்கிய வரலாறு, ப. 245. (16 ஆம் நூற்றாண்டாகலாம்)
9. கோயில், திருக்களந்தையாதித்தேச்சரம், திருக்கீழ்க் கோட்டூர், திருமுகத்தலை, திரைலோக்கிய சுந்தரம், கங்கைகொண்ட சோளேச்சுரம், திருப்பூவணம், திருச்சாட்டியக்குடி, தஞ்சை இராசராசேச்சுரம், திருவிடைமருதூர்.

அகாலத்தில் மழை பெய்யச் செய்தும், நதி பெருகி வரப் பண்ணியும், சிவபெருமானது திருக்கதவம் தாழ் திறக்கச் செய்தும், பூதங்கள் குடை பிடித்துவரக் கற்பித்தும் பல அற்புதங்கள் செய்தார் என்றும்,

தஞ்சை இராசராசேச்சுரர் ஆலயத்தில் சிவப்பிரதிட்டை செய்ய மருந்திளகிப் பந்தனமாகாதிருக்கக் கண்டு அனைவரும் வருந்த,

'கருவூர்த் தேவரன்றிக் காரிய சித்தி ஆகாது' என ஆகாச வாக்கு எழ, ஆங்கு "வேறொருவர் காணாமலுலகத் துலாவலாம்" என்றபடி வருகை தந்திருந்த போகரும் காக்கையின் காலில் ஓலை கட்டிக் கருவூராரை வரவழைக்க, அவர் வந்து தம் தம்பலச் சாற்றால் பந்தனம் அமைத்தார் என்றும் இவ்வாறாகச் சொல்லிச் செல்கின்றது.

இருவேறுபட்டவர்

கருவூர்ப் புராணம் (கி.பி. 1618) காட்டும் கருவூரார், திருவிசைப்பா (கிபி. 11-ஆம் நூற்றாண்டு) பாடிய கருவூரார் ஆகிய இருவருள் எவர் காலத்தால் முந்தையவர் என்பதில் கருத்து வேறுபாடு காணப்படினும், இருவரும் வெவ்வேறானவர் என்பதில் அறிஞர்களிடையே கருத்து வேற்றுமை காணப்படவில்லை.

1. திருவிசைப்பாப் பதிகங்களில் பாடப்பட்டுள்ள தலங்களைத் தவிர்த்து, கொங்கு நாடு, குடநாடு, கன்னடம், துளுவம், மத்திய தேயங்கள், காசி, காஞ்சி, காளத்தி, அருணை முதலிய தலங்கள், மதுரை, குருகூர், கன்னியாகுமரி, சுசீந்திரம், திருநெல்வேலி, திருப்புடை மருதூர்க் கோயில்கள் ஆகிய தலங்களுக்குக் கருவூரார் சென்றதாகக் கருவூர்ப் புராணம் இயம்புவது,

2. கருவூர்ப் புராணத்திலே மிகையாகக் காணப்படுகின்ற வரலாறுகள் திருவிசைப்பாவினாலே உறுதி பெறாது நிற்கின்றமை,

3. திருவிசைப்பாவின் இலக்கண வரம்புக்குட்பட்ட மொழி வளமும், சொல்லாட்சிச் சிறப்பும், கருவூர்ப் புராணம் காட்டும் கருவூர்ச் சித்தரால் பாடப்பட்டுள்ளதாகக் கருதப்படும் 'கருவூரார் பூசா விதி', 'கருவூரார் ஞானம்' போன்ற நூற்களில் இல்லாமை,

4. கருவூர்ப் புராணம்[10] கருவூரார் கருவூரில் இறைவனோடு இரண்டறக் கலந்ததாகக் குறிப்பிடுவதற்கு மாறாகத் திருவிசைப்பா கருவூரார் தஞ்சையில் கலந்ததாக வரலாறு வேறுபடுவது,

5. "இராசராசன்[11] தஞ்சைப் பெருங்கோயில் அமைத்த காலத்திலும் அவனுடைய மகன் இராசேந்திர சோழன் கங்கை கொண்ட சோழபுரம் கட்டிய காலத்திலும் கருவூரார் வாழ்ந்து இரு கோயில்கள் மீதும் பதிகங்கள் பாடிய இம்முக்கியச் செய்தியைக் கருவூர்ப் புராணம் குறிப்பிடாமை"

என்ற இது போன்ற காரணங்களைக் குறிப்பிட்டுத் திருவிசைப்பாப் பாடிய கருவூராரும், கருவூர்ப் புராணம் குறிப்பிடும் கருவூராரும் இருவேறுபட்டவர் என நிறுவியுள்ளனர்.

கருவூர் நாயனார் பல கலம்பகத் திரட்டு காட்டும் கருவூரார்

இந்நூலில் 163 முதல் 168 முடிய உள்ள 6 பாடல்களில் இந்நூலாசிரியர் குறித்த வரலாற்றுச் செய்திகள் அடங்கியுள்ளன. இவற்றின் மூலம்,

1. போகர் இவரது குரு.

2. கொங்கணரும் கருவூராரும் சமகாலத்தவர்.

3. காலாங்கிநாயன் போகரது குரு.

4. தமது குருவான போகருக்காகக் கற்சிலையைப் பெண்ணாக உருமாற்றி அழைத்து வந்த சித்து வேலையைக் கருவூராரும் கொங்கணரும் செய்தனர்.

5. குறிப்பிடப்பட்ட இவ்வனைவரும் திருமூலர் வழி வந்த 'மூலவர்க்கத்தடியார்கள்' என்ற இவ்வரலாற்றுச் செய்திகள் தெரிய வருகின்றன.

---

10. மு. அருணாசலம், தமிழ் இலக்கிய வரலாறு (பதினாறாம் நூற்றாண்டு), ப. 245.

11. பெற்ற கருத்து: மு. அருணாசலம், தமிழ் இலக்கிய வரலாறு (பதினோராம் நூற்றாண்டு), ப. 263.

இக்குறிப்புகளின் துணை கொண்டு நோக்கும் பொழுது, காலாங்கி நாயன், போகர், கொங்கணர், கருவூரார் ஆகிய நால்வரும் சமகாலத்தவர் எனக் கருத இடமேற்படுகிறது.

இந்நால்வருள் காலாங்கி நாயன் போகரது குரு என்றும், அவர் துரியத்தில் (ஆன்மா உந்திப் பிரதேசத்தில் இலயித்து நிற்கத் தன்னையே விஷயீகரிக்கும் ஆன்மநிலை) இருந்தார் என்றும், கொங்கணர், கருவூராரது குருவாகப் போகர் திகழ்ந்தார் என்றும் அறிய வருகிறோம்.

வெவ்வேறு காலகட்டத்தைச் சேர்ந்த இந்நால்வரும் தத்தம் குருவாகத் தமக்கு முந்தைய ஒரு சித்தரை ஏற்றுக் கொண்டிருக்கின்றனர் எனக் கொள்ளலாம். தூல உடலோடு அன்றிச் சூக்கும நிலையில் மேற்குறிப்பிட்ட நிகழ்ச்சி நடைபெற்றிருக்கலாம்.

பின் வந்த சீடர்கள் செவிவழி அறிந்து குறித்து வைத்திருக்கலாம். பதினெண் சித்தர் வரிசை கூறும் பாடல்களில், சிலவற்றில் இந்நால்வர் பெயரும், சிலவற்றில் ஓரிருவர் விடப்பட்டு வேறு சிலர் சேர்த்துக் கொள்ளப்பட்டும் உள்ளன. பதினெட்டுச் சித்தர்[12] யார்என்பதில் தெளிவான வரையறை காணப்படவில்லை.

எனவே இவை கொண்டும் காலம் துணிய இயலவில்லை.

இவ்வேடு குரோதன வருஷம் மார்கழி மாதம் புதன் கிழமை ஐந்தாம் தேதி தாண்டவமூர்த்தி வாத்தியார் என்பவரால் படி எடுக்கப்பட்டுள்ளது. மூல ஏடு இது அன்று என்பதால் ஏட்டின் புறத்தன்மை கொண்டும் காலத்தை நிர்ணயிக்க இயலவில்லை.

ஆயின் இரசவாதம், காயகல்பம், யோகம், மைவிபரங்கள், பூசை முறைகள், மந்திரங்கள் ஆகியவற்றை உள்ளடக்கிய பாடுபொருள் கடின நடையின்றி கேளப்பா, ஆளப்பா, கோளப்பா ஆளப்பா (பாடல் எண் 13) ஆமப்பா, ஓமப்பா, வேமப்பா, தாமப்பா (பாடல் எண். 18) என அமைந்துள்ள எளிய நடை, எழுத்து வழக்கு, பேச்சு வழக்கு எனப் பிரித்தறிய இயலாதபடி மலிந்து கிடக்கும் பேச்சு வழக்குச்

12. எஸ். சிதம்பர தாணுபிள்ளை, 'மரணகண்டி'.
எஸ். கல்யாணராமன், 'சித்தர் நாடி விஞ்ஞானக்கோர்வை'.
'பதினெண் சித்தர்கள் வைத்திய சில்லரைக் கோர்வை'.

சொற்கள், சமுதாய நிலையைத் தெளிவாகக் காட்டும் பழக்க வழக்கங்கள், நம்பிக்கைகள், சமயநிலை பற்றிய கோட்பாடுகள் என்ற இவை அனைத்தையும் தொகுத்துப் பார்க்கும் பொழுது 15, 17ஆம் நூற்றாண்டுகளுக்கு இடைப்பட்ட காலகட்டத்தைச் சேர்ந்ததாக இதன் மூல ஏடு அமையக் கூடும் எனத் தீர்மானிக்க இயலுகின்றது.

ஆசிரியரது பிற நூல்கள்

கருவூரார் பாடியவைகளாக[13] 'வைத்தியம், இரசவாதம், மை தயாரித்தல், பூசை விதி, வேதாந்தம்" பற்றிய தனித்தனி நூற்களும், இவை அனைத்தும் அடங்கும் பொது நூற்களும்[14] (இதனுள் யோகம், சமாதி போன்றனவும் அடங்கும்) இயற்றியுள்ளார்.

சுமார் 36 க்கும் மேற்பட்ட சுவடிகளும் ஒரு தாள் ஓலையும் அச்சான நூற்களும் ஆக 32க்கும் மேற்பட்டவையாக இவர் எழுதியவை கிடைத்துள்ளன.

சென்னைக் கீழ்த்திசைச் சுவடிகள் காப்பகத்தில் உள்ளவை

1.	கருவூர்நாதன் ஞானம் 3, சுவடி எண்				R4648
2.	கருவூரார் லவண குளிகை, சுவடி எண்				R7700
3.	கருவூரார் கருக்கிடை மை, சுவடி எண்				R6538
4.	கருவூரார் சூத்திரம்		"	"	R2482
5.	" "		"	"	R4666
6.	" "		"	"	R7079
7.	" "	115	"	"	R2287
8.	" "	116	"	"	R192 (c)
9.	" "	116	"	"	R911 (b)

13. 'கருவூரார் சூத்திரம்' சென்னைக் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம், சுவடிஎண், R4666 (வைத்தியம்).
'கருவூரார் இரசவாத முந்நூறு' சுவடிஎண் R936(b) (இரசவாதம்)
'கருவூரார் மைவிபரம், சுவடி எண் R7049 (மை)
'கருவூரார் பூஜாவிதி' சுவடிஎண் R7091 (பூசைவிதி).
'கருவூர்நாதன்ஞானம்' சுவடி எண் 4648 (வேதாந்தம்).
14. 'கருவூரார் பலதிரட்டு 2299 (அனைத்தும் அடங்கும்).

10.	”	” 116	”	”	R1030
11.	”	நொண்டி	”	”	R1807
12.	”	”	”	”	R2518
13.	கருவூரார் நொண்டி மாலை			”	R1179 (e)
14.	கருவூரார் பல திரட்டு			”	R2299
15.	”	”	”	”	R2288
16.	கருவூரார் பலதிரட்டுச் சூத்திரம்			”	R2519
17.	”	”	”	”	R4155
18.	”	பாடல்		”	R6421
19.	”	பூஜாவிதி		”	R7091
20.	”	”	”	”	R7895
21.	”	மாலை		”	R6949
22.	”	மூலிகைத்தயிலம் முப்பத்தாறு		”	R2481
23.	”	மைவிபரம்		”	R7049
24.	”	ரசவாத நொண்டி		”	R4925
25.	”	ரசவாதம் முந்நூறு		”	R936 (b)
26.	”	நொண்டி		”	R6047
27.	”	” மாலை		”	R1079

தஞ்சை, சரஸ்வதி மகால் சுவடி நூலகம்

28. கருவூரார் பாடல் முப்பது கலிவெண்பா சுவடிஎண் 295(F)

29. கருவூர் சாமியார் சாஸ்திரம் (சூத்திரம் முப்பது)” 231 (F)

திருவனந்தபுரம், கேரளப் பல்கலைக்கழகம் கீழ்த்திசைச் சுவடிகள் நிலையம்

30.	கருவூரார் பலதிரட்டு, சுவடி எண்			7933
31.	”	”	”	6299
32.	”	பூஜாவிதி	”	7938
33.	”	”	”	7942

35. கருவூர்ச் சித்தர் பல திரட்டு, சுவடிஎண் 6203 பி.

36. " " " 6203 ஏ.

தாள் ஓலை (Paper Manuscript)

37. கருவூரார் வைத்தியம், எண் D 1919

சென்னைக் கீழ்த்திசைச் சுவடி நூலகம்

அச்சானவை

38. கருவூரார் பூஜாவிதி, எண் 2261

39. கருவூரார் நொண்டி எனும் வாதகாவியம் 700

மறைமலையடிகள் நூலகம்.

ஆகியவை இவர் எழுதியவையாகக் கிடைக்கின்றன.

இறுதி

கருவூரில் 'திருவானிலை (திரு ஆனிலை - பசுபதீசுரர் ஆலயம்) எனும் திருக்கோயிலின் வெளிப் பிரகாரத்தில் தென் மேற்குத் திக்கிலே ஒரு சிறு ஆலயம் 'கருவூரார் சந்நிதி' என்று இன்றும் வழங்கப்படுவதைக் காண்கிறோம். இவர் சமாதி பெற்று இறைவனுடன் இரண்டறக் கலந்த இடம் இதுவே என்று கருவூர்ப் புராணம் விரித்துக் கூறுகிறது. உருவச்சிலையும் அங்கு அமைந்துள்ளது.

நூலறிமுகம்

இன்றைய இருபத்தோராம் நூற்றாண்டில், மேலை நாட்டுத் தத்துவ உலகில் விஞ்ஞானம் என்பது 'சைன்ஸ்' என்ற பெயரில், பூதாகாரமாய் வளர்ந்து, மனிதனைத் தாண்டி மனிதத் தத்துவத்திற்கு அப்பால் உள்ள இயற்கையின் சக்திகளை எல்லாம் ஆராய்ந்து, சடப்பொருள்களாக உள்ள பல கருவிகளைக் கண்டறிந்து, அவற்றின் சாதனைகளை ஆக்கப் பணிகளை விட அழிவு வெறிக்கே அதிகம் பயன்படுத்தி வரும் கோர நிலையைப் பார்க்கிறோம்.

ஆனால், ஆயிரக் கணக்கான ஆண்டுகளுக்கு முன்பே, பாரத நாட்டுப் பழம் பெரும் விஞ்ஞானம், 'ஆத்ம ஞானம்' என்ற பெயரால் முழுமையான வளர்ச்சி பெற்று, மனிதனின் உடலுக்குள்ளேயே இயற்கையின் சக்திகளையெல்லாம் கண்டுபிடித்து அவற்றை அகக் கருவிகளைக் கொண்டே ஒழுங்காக இயக்கி, உன்னத நிலைக்கு உயர்த்தி, அந்த உன்னத நிலையில் இறைவனையும் தம் இருதயத்திற்குள்ளேயே இருத்தி, அந்த இறைவனோடு இரண்டறக் கலக்கும் எல்லையிலா ஆனந்தமான, பேரானந்த நிலைக்கு வழி வகுத்துச் சென்றமையையும் அத்துறையில் தாங்கள் கண்ட அனுபவங்களையும், அறிவுரைகளையும், அறநெறிகளையும், அப்பியாச யோகங்களையும், யுக்தி முறைகளையும் பாடல்களாகப் பாடி வைத்துச் சென்றுள்ள மேலான நிலையையும் பார்க்கிறோம்.

செயற்கரிய செய்த அப்பெரியோரே சித்தர்கள்,. அன்னார் அனுபவத் தொகுப்புகளே அவர்களது பாடல்கள்.

'மண்ணில் பிறந்த இவ்வுடலும் உயிரும் மரித்துத்தான் ஆக வேண்டும்' என்றால் அம்மரணத்தைச் சிறிது காலத்துக்குத் தள்ளிப் போட இயலாதா? மரணத்தை வென்று இறப்பென்பதே இல்லா நிலையை அடைய முடியாதா? என்ற இந்த இரு வினாக்களுக்கும் 'இயலும்' என்ற விடை அளித்து, அதனை நிறுவிக் காட்டி வெற்றி கண்டவர்கள் சித்தர்கள்.

முதல் வினாவுக்கு விடையாக அவர்கள் அறிந்து இயம்பியவையே தீரா நோயையும் தீர்க்க வல்ல சித்த வைத்தியம்.

இரண்டாம் வினாவுக்குக் கொடுத்த விடையே தியானமும், யோகப் பயிற்சியும், காயகல்பமும் ஆகும்.

இவ்வனைத்துத் தத்துவங்களையும் உள்ளடக்கிய ஒரு சிறந்த நூலாக, 'கருவூரார் பல திரட்டு, என்ற இந்நூல் தலைப்புக்கு ஏற்ப அமைந்து சிறந்திருப்பதைக் காண்கிறோம்.

நூல்பெயர்

"பாடுகிறேன் பல திரட்டு முடிவை எல்லாம்" 1[1]

"பதவியென்ற பல கதம்பத் திரட்டுச் சூத்திரம்" 43

"விபரமுடன் பல திரட்டில் விரித்துச் சொன்னேன்" 298

"சதர்நித்த மேறுவாய் திரட்டு முற்றே" 298

"கருவூர் நாயனார் பல கலம்[ப]கத் திரட்டு எழுதி

"முடிந்தது முற்றும்"

என அமைந்து கிடக்கும் நூலின் அகச்சான்றுகளால் நூல் தலைப்பு பல செய்திகளையும் திரட்டிக் கூறும் பல திரட்டு என்பது தெற்றெனப் புலனாகின்றது.

தலைப்புப் பொருத்தம்

1. செய்முறைகள்: உலோக இரசவர்க்க முறை, மூலிகை முறை
2. காய கல்பம்
3. வைத்தியம்
4. இரசவாதம்
5. அட்ட கற்பம்
6. அட்டமா கர்மம்
7. யோகம்
8. தியானம்

---

1. எண்கள் பாடல் எண்களைக் குறிக்கும்.

எனும் அனைத்தினையும் இந்நூலில் கலந்து ஒரு தொகுப்பாக அமைத்துள்ள நிலையைக் காண்கிறோம். பல செய்திகளையும் திரட்டிக் கூறும் இதற்குப் 'பல திரட்டு' எனப் பொருத்தமான தலைப்பு அமைந்திருப்பதைக் காண முடிகிறது.

பாடுபொருள்

உலோக, இரசவர்க்க முறைகள்

மருந்து தயாரிக்கும் முறைகள் இந்நூலில் பரவலாக விளக்கப் படுகின்றன. அவை நுணுகிய முறையில் சிறப்பான விளக்கம் பெற்றவையாகவும் திகழ்கின்றன.

எந்த அளவு மருந்து எடுத்துக் கொள்ள வேண்டும் என்று ஒவ்வோரிடத்திலும் ஒவ்வோர் அளவு முறை கூறிச் சிறப்பாகத் தெளிவுபடுத்தியுள்ளமையைக் காண்கிறோம்.

'பணந் தூக்கி' 7

'பணந் தானொன்று' 13

'பணந்தா னூட்டி' 9

'பணமாறு, பணந்தானாலு' 22

'பணவிடைதான்' 23

'படிதா னொன்று 15

'ஒரு படிதான்' 20

'படியுமொன்று' 50

'கழஞ்சியொன்று' 10,

'கழஞ்சி மூன்று' 51

'ஒருமா வாங்கி' 104

'சேரை வாங்கி' 56

'பலமரைதான்' 38

'குன்றி குன்றி' 151

'மஞ்சாடி கையில் தேய்த்து' 118

'வெருகடிதான்' 214

என இவ்வாறாக அளவுகள் கூறப்படுகின்றன.

எரிப்பு முறைகள்

எச்சட்டியில் அல்லது பாத்திரத்தில், எவ்வாறு, எத்தனை சீலை மண் செய்து, எப்படி மூடி, சிமிழ் அதன் அகத்து வைப்பதாயின் எங்ஙனம் வைத்து, எத்தீ கொண்டு எத்தனை சாமம் வரை எரித்து, மருந்தைக் கிளறுவதாயின் எது கொண்டு கிளறி என்பது வரை திட்டவட்டமாகத் தெளிவுறுத்தப்பட்டுள்ளது.

'மண்சட்டி' 10

'கண்சட்டி' 24

'ஆனைக்கண் சட்டி' 29

'புத்தோடு' 28

'பீங்கானில்' 18

'தாம்புரக் கிண்ணி' 105

'அயக்கிண்ணி' 10

என இவ்வாறாகப் பயன்படுத்தும் பாத்திர வகைகளும்,

97, 99, 103, 115, 126 ஆம் பாடல்களில் சீலை மண் செய்து சட்டியினுள் காற்றுப்புகா வண்ணம் காக்கும் முறைகளும்,

'நிம்பக் குச்சால்' 18

'கரண்டி கொண்டு நுரையை யெல்லாம்' 52

'கஞ்சத்தால் கரண்டி' 120

என எம்மருந்துகளை எக்கரண்டி கொண்டு கிண்ட வேண்டும் என்பதும் கையினால் தொட நேரின் என்ன ஆகும் ('கை பட்டால் வெந்து போகும் 57) என்பதும் புடமாயின் எத்தனை எரு என்பதும் ('அஞ்செருவில்புடம்' 12) எத்தனைபுடம் என்பதும் (128, 129 ஆம் பாக்கள்) என்ன புடம் என்பதும் ('காடையொரு புடம் 17) அக்கினியாயின் எவ்வக்கினி ('தீபாக்கினி' 111, 'கமலவன்னி யெரித்தி டாயே' 55) என்பதும், எத்தனை சாமம் எரிக்க வேண்டும் ('ஒரு சாம மெரித்திடாயே' 10, 'சாமமேழுங் கூசாம லெரித்திடவே' 20) என்பதும் மருந்து எந்நிறத்தில் வரும் பொழுது இறக்க வேண்டும் என்பதும்,

'இறுக்கி யப்பா சாதிலிங்கம் போலே' 143

'தங்கம்போ லுருகி நிற்கும்' 147

'செம்பருத்தம் பூப்போலாகும்' 58

'சிவக்குங் காணே' 150

மருந்தினை எதனுடன், எத்தனை நாள் உட்கொள்ள வேண்டும், உண்ண என்ன பலன் கிட்டும் என்பதும், (8, 11, 58, 59, 151 ஆம் பாடல்கள் காண்க) விபரமாக விளக்கப் பெற்றுள்ளன.

சிறுபான்மை, மருந்துச் சரக்குகளை (ஆட்டுதல் 23, 145 ஆம் பாடல்கள்), கடைதல் (52ஆம் பாடல்), வறுத்தல் (296 ஆம் பாடல்), அவித்தல் (பாடல் எண் 101) போன்ற முறைகளில் செய்ய வேண்டும் என்பதும் இயம்பப்பட்டுள்ளது.

சில இடங்களில் சரக்குகளை ரவியில் வைத்து உலர்த்தும் முறைகளும் உரைக்கப்பட்டுள்ளன (பாடல் எண்கள் 51, 55, 88, 132).

மூலிகை முறைகள்

இந்நூலில் அறுபத்து நான்கு மூலிகைகள் பற்றிய குறிப்புகளும், அவற்றைப் பயன்படுத்தும் முறைகளும், பயன்களும் விரிவாக இடம் பெற்றுள்ளன.

சில மூலிகைகள் பற்றிய அடையாளங்கள் (பாடல் எண்கள் 125, 214) இயம்பப்பட்டுள்ளன.

மூலிகைகள் உள்ள இடம், மூலிகையிற் பறிக்க வேண்டிய பகுதி, பறிக்க வேண்டிய காலம், பறிக்குமுன் செய்ய வேண்டிய முறைகள் ஆகியவற்றுக்கு மிகுந்த முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது.

எந்த இடத்தில் உள்ள மூலிகையைப் பறிக்க வேண்டும் என்னும் போது, தனித்து நிற்கும் மூலிகை (218), புற்று மேல் நிற்கக் கூடிய மூலிகை (24, 31, 35) ஆகிய இரண்டும் சிறப்பாகச் சுட்டப்படுதலைக் காண முடிகிறது.

மூலிகையின் பறிக்க வேண்டிய பகுதிகளாகச் சமூலம், மூலம், வேர் (பாடல் எண்ணுக்குச் சொல்லகராதி காண்க) ஆகியவை குறிப்பாக விளக்கப்படுகின்றன.

வேரில் வடதிசை செல்லும் வேர் (25, 29, 81), ஆணிவேர் (91, 184) ஆகியவற்றைப் பறிக்க வேண்டும் எனச் சிறப்பாகச் சுட்டப் பட்டுள்ளன.

மூலிகையை எந்த நாளில்[2] பறிக்க வேண்டும்? பறிக்குமுன் எந்நாளில்[3] காப்புக் கட்டவேண்டும்? எவ்வெவற்றைப்[4] பலிகொடுத்து, எவ்வாறு தூப, தீபங்கள்[5] காட்டி நைவேத்தியம் செய்து பிடுங்க வேண்டும் என விளக்கமாக உரைக்கப்பட்டுள்ளன.

சோதிடமும், நாள், கோள், பலி தருதல் ஆகியவற்றில் இருந்த மிகுதியான நம்பிக்கைகளும் புலனாகின்றன.

மூலிகைகள் மை, இரசவாதம், காயகல்பம், தீராவினை நோய்களைத் தீர்க்கும் அருமருந்து என்ற இவற்றுக்குப் பயன்படுவதன்றி, வசியம், மோகனம், பேதனம், மாரணம், தம்பனம், உச்சாடனம், ஆகர்ஷணம், வித்துவேசனம் என்ற அட்டகர்மத்துக்கும் எவ்விதம் பயன்படுகின்றன என்பதும் விரிவாகப் பேசப்பட்டுள்ளன (183 முதல் 250 வரை உள்ள பாடல்கள்).

சீதேவி, செங்கழுநீர் முதல் மருதாணி வரை அறுபத்து நான்கு மூலிகைகள் அறுபத்து நான்கு சித்துகள் செய்யப் பயன்படும் முறைகள் விளக்கப்பட்டுள்ளன.

எஞ்சிய இறுதி ஐம்பது பாடல்களில் 250 முதல் 292 வரை அட்ட கற்பம் (இருத்தற்கு ஏற்படுத்தப்பட்ட இடங்கள் எட்டு) பற்றிய செய்திகள் இயம்பப்பட்டுள்ளன. மந்திரம், பூசை முறைகளுக்கு இவற்றுள் முக்கியத்துவம் தரப்பட்டுள்ளது. அகோரம், வாமம், சாதினை, உற்பனம், சத்தியோசாதம், அனாகதம், நிசாதம், ஈசானம் ஆகிய எட்டுக் கற்பங்கள் விரிவாக விளக்கப்பட்டுள்ளன.

பாடப்பட்டுள்ள முறை

எண்சீர் விருத்த யாப்பில், எளிமையான பேச்சு வழக்கு நடையில், செய்முறைகள், முன்னால் உள்ள ஒருவருக்கும் பலருக்கும் விரித்துக் கூறும் முறையில், முன்னிலை நிலையில் பாடப்பட்டுள்ளன.

---

2. 208, 221, 222, 225.
3. 205, 222, 224, 247.
4. 218, 219, 222, 225, 226, 236, 241, 249.
5. 80, 209, 237.

அப்பா! அப்பனே! மைந்தா! மகனே! மக்களே! என விளித்துக் கூறும் போக்கு அமைந்துள்ளது.

ஒவ்வொரு பாடலின் இறுதி வரியில் உள்ள சொல், அடுத்த பாடலின் தொடக்கமாக அமையும் அந்தாதி அமைப்பு, நூல் முழுவதும் தொடர்ச்சியாக ஆளப்பட்டுள்ளது.

செய்முறைகளைத் தொடர்ச்சியாகவும், விரிவாகவும் மனத்தில் பதியுமாறும் எடுத்தியம்ப இந்த யாப்பு முறை எளிதானதாகையால் எடுத்தாளப்பட்டுள்ளது.

கவிஞரின் தன்மைநிலைக் கூற்றுகள் ஆங்காங்கு விரவிக் காணப்படுகின்றன. தனது கருத்து,[6] நாதாக்கள் கருத்து,[7] போகர் கருத்து[8] (இவரது குரு) 'முன் நால்வருக்குப் பகர்ந்த கருத்து,'[9] சுந்தரர்க்குச் சட்டை முனி அருளிச் செய்த கருத்து,[10] கற்பித்தபடி சொன்ன கருத்து[11] என ஒவ்வோர் கருத்தும் யாருடையது எனத் தெளிவுபடுத்தித் தனக்கும் அது உடன்பாடாகையால் அவற்றை எடுத்தியம்பியுள்ளதாகக் கூறும் போக்குக் காணப்படுகின்றது.

'எனது இந்த நூலில் அனைத்துக் கருத்துகளும் உள்ளன. பொய்யான பல நூல் தேடி அலையாமல் இந்த ஒரு நூல் கண்டு அனைத்தையும் தெரிந்து கொள்வாயாக' என இயம்பும் போக்கையும் ஆங்காங்கு காண முடிகின்றது (67, 292). இந்நூலைப் பொய்யென்று கூறுவோர் நரகில் உழல்வர் என்று சபித்தும் நூற்பெருமையை நிலைநாட்டியுள்ளார் (69).

நாதாக்கள் வெளியில் கூறாது மறைத்தவற்றையெல்லாம் நான் வெளியாக்கிச் சொல்லி விட்டேன் என்றும் சிற்சில இடங்களில் குறிப்பிட்டுச் சென்றுள்ளார் (276, 293, 297). சான்றாக, இவரது இந்நூலிலேயே பரிபாஷையாக உள்ள சொற்களையும் அவற்றின் உண்மைப் பெயர்களையும் கூறி விடுவித்துள்ள முறையைக் குறிப்பிடலாம் (21, 140, 183, 198).

மொத்தம் எழுநூற்றுப் பதினெட்டு நூற்களை இவ்வாசிரியர் பாடினார் என்றும், அனைத்துச் செய்திகளையும் தொகுத்து, வகுத்து

6. 295.
7. 65, 254.
8. 92.
9. 93.
10. 61.
11. 292.

விரித்துக் கூறும் இது பல திரட்டு என்றும் பாடல் எண்கள் 70, 298 மூலம் அறிய முடிகின்றது.

பல செய்திகளின் தொகுப்பு ஆனாலும் அமைப்பு முறையில் ஓர் ஒழுங்கு காணப்படுகின்றது.

மை விபரம், உலோக, இரசவர்க்க முறை, மூலிகை முறை, அட்டகர்மம், அட்டகற்பம், பூசை விதி என்ற முறையில் செய்திகள் தரப்பட்டுள்ளன. இவற்றினுள்ளேயே கற்பம், யோகம், மருத்துவம் ஆகியனவும் பரவலாகச் சுட்டிக் காட்டப்பட்டுச் செல்கின்ற நிலைமையை உணர்கிறோம்.

ஆனால் சிற்சில இடங்களில் வைப்பு முறையில் பிறழ்வு காணப்படுவதையும் அறிய முடிகிறது.

சான்றாக, சாரநீரைப் பயன்படுத்தல் பற்றி 116 ஆம் பாடலிலும் அதன் செய்முறை பற்றி 127 ஆம் பாடலிலும் விளக்கியுள்ள முறையையும், பூசை செய்யுமாறு 145 ஆம் பாடலிலும் பூசை விதிமுறைகள் பற்றி 153 ஆம் பாடலிலும் குறிப்பிட்டுள்ள முறைகளை எடுத்துக்காட்டலாம்.

நடையமைதி

பேச்சு வழக்கும் எழுத்து வழக்கும் பின்னிப் பிணைந்துள்ள நடையில் பாடல்கள் பாடப்பட்டுள்ளன. சொல்லியதைக் கேட்டு. அதன்படி பின்னர் எழுதி வைத்தமை போன்று யாப்புடன் பிரிக்க இயலாதபடி பேச்சு வழக்குச் சொற்கள் மலிந்து கிடக்கின்றன. நூலில் உள்ள ஒவ்வொரு பாடலிலும் இதற்குச் சான்று காணலாம்.

எதுகை, மோனைக்காக ஆளப்பட்டுள்ள முதற்சொற்கள் பல இடங்களில் பொருளற்று இருப்பினும்,[12] சில இடங்களில்[13] பாடலுடன் தொடர்புடையனவாய்ப் பொருள் தரும் சொற்களாகவும் திகழ்கின்றன.[14] சில இடங்களில் மாறுபாடான பொருள் தருவனவாகவும் உள்ளன.

---

12. கேளப்பா, ஆளப்பா, கோளப்பா, வாளப்பா 153.
13. ஊற்றி யென்னும் நூல், நேற்றியென்னும் பொடி 205
14. ஆழ்ந்திருக்கும் குடதிசையில், தாழ்ந்திருக்கும் வடபுறத்தில் 154

தமிழாக்கம்

வடசொற்களையும் வடவெழுத்துகளையும் தமிழ்ப்படுத்தி எழுதியுள்ள போக்கைப் பரவலாகக் காணமுடிகிறது.

க்ஷணம்-செணம் 53, 168
ரிஷபம்-ரியம்பம் 153
சம்ஹார-சம்மார 154
வசனம்-வயனம் 157
பரீட்சித்தாரோ-பரிசித்தாரோ 164
ருத்திராட்சம்-ருத்திராச்சம் 178
வித்துவேஷணம்-வித்துவேசனம் 179
ஜலம்-செலம் 198
உபசரித்து-உவசரித்து 198
விஷங்கள்-விசங்கள் 201
பாஷை-பாசை 1
வஸ்து-வத்து 41

என்ற இச்சொற்களைச் சான்றாகக் காட்டலாம்.

சொல்வழக்கு

நூல் இயற்றப்பட்ட காலகட்டத்துச் சமுதாயத்தில் வழங்கி வந்த சொல்வழக்குகள் அப்படியே எடுத்தாளப்பட்டுள்ளன.

எண்ணெய் என்பதனை,

நிம்ப நெய் 37, 197, 211, 226
தேங்காய் நெய் 93, 221
கபிலை நெய் 84

என வழங்கி வந்துள்ளமை தெரிகிறது.

கோணி 15
சல்லிசு 106
மர்த்தித்தல் 12, 17, 18, 76, 120
கெல்லி 127, 228
செருப்புத்தொட்டு 79
பிறக்கி 1

ரெங்கு 119
சுரணை (226)
சில் 129, 146
உண்டை 21, 35, 84, 85
அசடு 167
துவாலை 199
சீனி 203
பீங்கான் 12, 18, 111, 123, 296
சில்லி 127
சிரட்டை 41
சீப்பு 43
கிண்ணி 93
சடைத்து 165
செத்தை 56
குச்சு 18

என்ற இச்சொற்களைக் குறிப்பிடலாம்.

உவமைகள்

பாடல்களில் ஆங்காங்கு எளிமையான உவமைகள் எடுத்தாளப்பட்டுள்ளன.

'இறைத்திட்ட கூவம் போல்' 4
'முத்துப் போல்' 4
'தயிர் போலே' 5
'முருக்கம் பூப்போல்' 10
'எருமையுட வெண்ணையைப் போல்' 23
'பெருங்கடலி லலையைப் போலே' 46
'கள்ளியுட நீர் போலே' 56
'செம்பருத்தம் பூப்போலாகும்' 58
'இறகுபோல் தட்டி' 96
'இரத்தம் போலாம்'
'நீலத்தி னிரசம்போலாம்' 125
'சாதிலிங்கம் போலே' 143
'பசித்திருந்த புலிப்போலே' 144

'செண்பக விரைபோலே' 145
'தங்கம்போ லுருகி' 147
'அருணன் போலாம்' 151
'வயிரம் போல' 173
'கந்தையென நாறுகிற கரந்தை' 214
'இராவணன் முன் மலையெடுத்தாப் போலே' 277

என்ற இத்தகு அனைவரும் எளிதில் அறிந்து கொள்ளக்கூடிய, அன்றாட வாழ்வில் காண்கின்ற பொருட்களை உவமைகளாய் எடுத்தாண்டு செய்முறை விளக்கங்களுக்கு மேலும் சிறப்புச் சேர்த்துள்ள தன்மைகளையும் காண்கிறோம்.

சமுதாய, சமய நம்பிக்கைகள்

காயத்தை வலுவாக்க யோகத்துடன், காயகல்பம் செய்யும் முறைகளும் சேர்ந்தே வளர்ந்துள்ளன. காயகல்பம் செய்வதற்கான ஒரு படியாக இரசவாதத்தைக் கண்டறிந்திருக்கின்றனர்.

மட்டமான உலோகத்தை எந்த ஒரு பொருள் உயர் உலோகமாக மாற்றுகிறதோ அது ஓய்ந்து விழப்போகும் இவ்வுடலையும் உறுதிப்படுத்தி வலுவாக்கும் எனக் கண்டறிந்து அதற்கான முயற்சிகளை மேற்கொண்டிருக்கின்றனர். அன்னார் முயற்சிகளின் இறுதிப் படியே அவர்களால் அறியப்பட்ட காயகல்பம்.

ஆனால் காயத்தை வலுப்பெறச் செய்வதற்கன்றி மட்டமான உலோகத்தைத் தங்கமாக மாற்றுவதற்கென்று மட்டும் தவறான முயற்சியில் செயல்களை மேற்கொண்டதால் முதல் தவறு முற்றும் தவறாகப் பலர் தோல்வியைத் தழுவியிருக்கின்றனர். இக்கீழான ஆசை கூடாது என இந்நூலாசிரியர் பல இடங்களில் சுட்டிச் சென்றுள்ளார்.

பேய், பிசாசுகள், சத்துருவை அழித்தல், பெண்டிரை வசியப்படுத்துதல், மக்களை, மிருகங்களை வசீகரித்தல், மையிட்டு நடந்த, நடக்கும் நிகழ்ச்சிகளை அறிதல், புதையல் எடுக்கும் முறைகள், பிரம்மசரியம் அல்லது இல்லறத்தில் இருந்து கொண்டே யோகம் செய்து வீடு பேறடையலாம் என்ற நம்பிக்கை, நீரில் மிதத்தல், தீயில் நடத்தல், தெய்வங்கள் கண்முன் தோன்றுமாறு செய்தல் ஆகிய வித்தைகள் போன்ற பல செய்திகள் சமுதாய நிலையைத் தெளிவாகக் காட்டி நிற்கும் சான்றுகளாகத் திகழ்கின்றன.

சமயநிலை என்று காணும்பொழுது சித்தர்கள் அனைவரும் வாலையைத் (சக்தியின் வடிவம்) தெய்வமாக ஏற்றுக் கொண்டுள்ளது போலவே இந்நூலாசிரியராகிய கருவூராரும் போற்றிப் பேசியுள்ளதைப் பல இடங்களில் காண்கிறோம். முன் 250 பாடல்கள் வரை கூறிய செய்திகள் எல்லாம் சக்தி மார்க்கமே என்றும், எஞ்சிய சிறுபகுதி மட்டுமே சிவமார்க்கம் என்றும் பிரித்து வகைப்படுத்தி உரைத்துள்ள முறையையும் பார்க்கிறோம்.

வாலை பலஇடங்களில்[15] பல பெயர்களால் சுட்டப்படுகிறாள்.

பிற்காலத்து நாட்டுப்புறப் பாடல்களில் சிறப்பிடம் பெற்றுள்ள இசக்கியும் (நீலி) (269), அய்யன் (239), காளி (154, 239), துர்க்கை (239) போன்ற தெய்வங்களும் பேசப்படுகின்றன.

மேலும் ஈசன், நடராசன், பிரசாத சுந்தரர், பார்வதி, பிரமன், மால், கரிமுகன், அட்டசத்தி, அட்டதிக்குப் பாலகர்கள் ஆகிய தெய்வங்களும் சுட்டப்பட்டுள்ளன.

---

15. 31, 44, 52, 66, 14, 146, 275, 298.

கருவூரார் பல திரட்டு

1. (பாடுகி)றேன் பலதிரட்டு முடிவை யெல்லாம்
பதறாமல் சிதறாமல் பண்பாய் மக்காள்
பாடுகிறேன் சாத்திரமுஞ் சூத்திரமு மணைந்து
பாசையெல்லாம் பிறக்கியொரு கோர்வை யாகப்
பாடுகிறேன் கருக்கிடையுங் குருக்கிடையு மொன்றாய்ப்
பருவமுட னொருமித்துப் பாரு பாரு
பாடுகிறேன் வேதாந்த முடிவை யெல்லாம்
பரையரனுங் க(ே)ண)ச[1]குகன் பதத்தைப் பாத்தே

பொ. சு:

"இந்நூலில் பல செய்திகளின் முடிவுகளையும், பொறுக்கி யெடுத்த (பிறக்கி) பரிபாடைச் சொற்களைச் சாத்திர, சூத்திரத்துக்கு ஏற்றவாறும், கருக்கிடை, குருக்கிடை என்ற இரண்டினையும் ஒன்றாகவும், வேதாந்தம் கூறும் முடிவுகளையும், பதற்றமின்றிச் சிதறி விடாமல் பண்புடன் பாடுகின்றேன். இதனை ஒருமித்த உள்ளப் பக்குவத்துடன் பார்க்க வேண்டும். இதற்குப் பரையும், சிவனும், கணேசன், முருகன் ஆகியோரும் காப்பாகும்" என்கிறார்.

சொ. வி:

சாத்திரம் திருமந்திரம் நாடி சாத்திரம்.
குருநாடி சாத்திரம்
அகத்தியர் பூரண சூத்திரம்
கோரக்கர் சூத்திரம்[2]

எனச் சாத்திரம், சூத்திரம் என்ற இரு வகைத் தன்மைத்தான முடிவுகளை வைத்திய நூற்களில் பார்க்கிறோம். இவ்விரு தன்மைகளும் நிரம்பியதாக இந்நூலைப் படைக்கிறேன் என்பது இவ்வரியின் பொருளாகும்.

---

1. செ. 1 இல் கண்டு திருத்தப்பட்டது.

2. இந்நான்கும் முறையே 8198, 8462, 8088, 115599 என்ற எண்கள், கொண்ட தி - நிலையச் சுவடிகளாகும்.

சூத்திரம் – "சில் வகை எழுத்தில் பல்வகைப் பொருளும் செறிந்து விளங்க அமைத்து முடிக்கப்படும் யாப்பு" - என்பதாம்.

பாஷை – பாஷை; பாடை அதாவது பரிபாஷை எனப்படும் குழூஉக்குறி.

கருக்கிடை என்பது ஆலோசனையாகும். ஒரு மருந்தினை இன்னின்னவாறு இவ்விவற்றைக் கொண்டு செய்க எனச் செப்புவதாகும்.

குருக்கிடை – குரு + இடை. இடை என்பது எடையாகும். குருக்கிடை என்பது செய்முறை. கருவால் முடிக்கப்படுவது குருவாகும்.

பரை – "நாதம் என்பதன் தன்மை வடிவினளாக விளங்குபவள் 'பரை' என்ற சக்தியாவாள். அந்தச் சக்தி மூலாதாரச் சக்கரத்தில் எந்த விதமான பகுத்தறிவுக்கும், ஞான விசாரங்களுக்கும், புத்தி யுத்திகளுக்கும் புலனாகாமல் சோதி மயமாக விளங்குகிறாள்.[3]"

2. பாத்திடவே நந்தீசர் மூல மூர்த்தி
பண்பான அகத்தீசர் சட்டை நாதர்
கோத்திடவே பதஞ்சலியுங் கூகைக் கண்ணர்
கோரக்கர் கமலமுனி சண்டி கேசர்
கூத்திடவே இடைக்காடர் சிவாய சித்தர்
கொங்கணையர் பாதத்தைப் போக நாதர்
காத்திடவே மச்சமுனி புண்ணாக் கீசர்[4]
(காலா)ங்கி சுந்தரருங் காப்புத் தானே.

பொ. கு:

நந்தீசர் முதல் சுந்தரர் ஈறாக உள்ள இப்பதினெண் சித்தர்களும் தன் நூலுக்குக் காப்பாக வேண்டும் என வேண்டப்பட்டுள்ளது.

சித்தர் பரம்பரையின் வரிசைமுறை பிறழ்ந்து உரைக்கப் பட்டுள்ளது. நந்தி, அகத்தியர், திருமூலர் என அமையாமையும், பிற்காலச் சித்தரான இடைக்காடர் பெயர், போகர், காலாங்கி ஆகியோருக்கு முன்னர் உரைக்கப்பட்டுள்ளமையும் கொண்டு இதனை உணர முடிகின்றது.

---

3. அரு. இராமநாதன் - பதிப்பாசிரியர், தேவி பாகவதம், ப. 11

4. பா. பே. புடினாக் கீசர், செ. 1.

தென்னகத்தைச் சேர்ந்த சுத்த மார்க்கத்தைப் பின்பற்றிய 'மகேசுர சித்தர்' எனப்படும் பதினெண்மர் பெயர்களை இடத்துக்கு இடம் வேறாகச் சொல்கின்றனர். அறுபதுக்கு மேற்பட்ட சித்தர் குழாத்திலிருந்து அவரவர்க்குத் தேர்ந்தவாறு பதினெண்மரைக் குறிப்பிடுவர்."[5]

3. **தானென்ற சரிகையிலே[6] நின்று தேறித்**
தாங்கிநின்ற கிரிகையிலே சாரப் ப(ண்ணித்)
.தேனென்ற கிரிகைமுத்தி யுரைத்து தானால்
தேவியுட யோகத்தே சேர்க்குஞ் சேர்க்கும்
மானென்ற யோகத்தில் (சேர்த்து) தானால்
மயங்காதே ஞானமென்ற வரையைக் காணும்
ஊனென்ற சடத்துக்கு எடுத்த வாறு
ஒகோகோ சரிதையி(னை உரை)த்தி டாயே.

பொ. சு:

அனைத்துச் சித்துகளும் கைவரப் பெறும் ஞானத்தை அடைதல் எப்பொழுது என்பதும், எவ்வாறு என்பதும் இப்பாடலில் இயம்பப்பட்டுள்ளது.

சரியை - கிரியை - யோகம் - ஞானம் என்ற முறையில் ஞானத்தை அடையும் வழி தெளிவுறுத்தப்பட்டுள்ளது. அதாவது சரியையில் நின்று தேறி, கிரிகையில் சார்ந்து அக்கிரியை முத்தியை உரைக்குமெனில் இறைவியின் யோகத்தில் சேர்க்கும். யோகத்தில் சேர்ந்தால் ஞான வரையைக் காணலாம் என்பதாம்.

இறுதி வரி உடலுக்கேற்ற வகையில் சில செய்திகளைச் சொல்லப் புகுதலைக் குறிப்பிடுகின்றது.

சொ. வி:

சரிகை – சரியை. அதாவது ஒழுக்கம். கடைப்பிடிக்க வேண்டிய ஒழுங்கு முறைகளைக் குறிப்பதாகும்.

கிரிகை – கிரியை. அதாவது 'இறைவனை ஆகமங்களில் விதித்தவாறு, புறத்தொழிலானும், அகத் தொழிலானும் வழிபடுதல்' என்பதாம்.

---

5. கு. அருணாசலக் கவுண்டர், சித்தர் பாடல்கள்.
6. பா. பே. சரியையிலே, செ. 11., தி.

முத்தி – முற்றி - முழுமை பெறுதலைக் குறிக்கும்.

யோகம் – ஆழ்ந்த தியான நிஷ்டை. இயமம், நியமம், பிரதியாகாரம், ஆசனம், பிராணாயாமம், தாரணை, தியானம், சமாதி என்பன அஷ்டாங்க யோகமாகும்.

ஞானம் – அனைத்தையும் அறியும் அறிவு.

ஊனென்ற சடம் – சதைப்பிண்டமாகிய தேகம். இது இருள், மருள், சுத்த, பிரணவ, ஞானதேகங்கள் என ஐவகைப்படும். இருள் தேகம் ஞான தேகமாகும் முறையைக் கூறப் புகுதலைக் குறிப்பிடுகிறார்.

4. உரைத்திட்ட முப்பூவில் சாரஞ் சேரில்
உகாந்தமென நீர்பொழிந்து ஓடுங் கண்டாய்
உரைத்(திட்ட இந்) நீரில் பூரஞ் சேர்க்க
உப்பாகும் முத்துப்போல் சரக்கெல்லாங் கொல்லும்.
இறைத்திட்ட கூவம்போல் ஊறும் ஊ(றும்)
(இரு)ம்பு முதல் மண்வரைக்கும் உருகி யாடும்
விரைத்திட்ட சுண்ணமுதல் கழங்கு சிங்கி
வெவ்வேறு கிறாவணமுங் (குடோ)ரி தானே.

பொ. சு:

சொல்லப்பட்ட முப்பூவில் சாரம் இணைய, ஊழிக்காலத்தில் ஓடுவது போல நீர் பொழியும். இந்த நீரில் பூரத்தைச் சேர்க்க முத்தினை ஒத்த உப்பு உருவாகும். இது சரக்குகளைக் கட்டக் கூடியதென்றும், இரும்பு முதல் மண் ஈறாக உள்ள அனைத்தையும் உருக்கக் கூடியதென்றும், சுண்ணம், கழங்கு, சிங்கி, கிறாவணம், குடோரி போன்ற பல மருந்துகளை உருவாக்கப் பயன்படுவதென்றும் உரைக்கப்பட்டுள்ளது.

சொ. வி:

முப்பூ – "இரும்பு முதலியவற்றைப் பொன்னாக்கவும் ஓரிலக்கம் ஆண்டுகள் உயிர்வாழச் செய்யவும் வல்ல ஒரு சித்தௌஷதம்".[7]

இந்த ஒளஷதம் எனன என்பது பற்றிச் சித்த வைத்திய நிபுணர்களுக்குள் பலத்த கருத்து வேறுபாடு உள்ளது.

'பூநீறு, கல்லுப்பு, வெடியுப்பு என்ற மூன்று உப்புகளின் கூட்டுச்சேர்க்கையில் கிடைப்பதே 'முப்பூ" என்று சிலரும்,[8]

---

7. கலைக் களஞ்சியம் தரும் விளக்கம்.
8. 'Muppu is a Tamil word which means the union of three salts namely Pooneeru, Kalluppu, Vediyuppu"
   - Dr. A. Shanmuga Velan, Siddhar's Science of Longevity and Kalpa Medicine of India.

"தானென்ற முப்பூவும் உப்புமல்ல" - என்ற 'நந்தீசர் நிகண்டு 300' குறிப்பிடும் தொடரை எடுத்துக்காட்டி, முப்பூ உப்புகளின் சேர்க்கையில் கிடைப்பது அல்ல என்று சிலரும்[9] மாறுபட்டு நிற்பதைக் காண முடிகின்றது.

'ஞானிக்கல் (Philosopher's Stone), 'உயிர் காக்கும் கற்பம்' (Elixir of life) என்ற பெயர்களிட்டு அழைக்கும் 'ஹெர்மஸ்' 'பேசில் வேலைன்டைன்', 'பார்செல்சஸ்' போன்ற மேனாட்டுச் சித்தர் நூல்களிலும் இதன் செய்முறை பற்றிய தெளிவைப் பார்க்க இயலவில்லை.

சுமார் நாற்பதுக்கும்[10] மேற்பட்ட பரிபாசைச் சொற்களால் இதனை அழைக்கின்ற தமிழ்ச் சித்தர்களும் இதன் செய்முறையை ஓராயிரம் பரிபாசைகளால் மறைத்துக் கூறியுள்ளனர்.

இந்நூலாசிரியரும் 'உரைத்திட்ட முப்பூ' எனக் குறிப்பிட்டு, யார் உரைத்தது? எப்படி உரைத்தது? எனத் தெளிவுறுத்தாது சென்றுள்ளமை கவனிக்கத் தக்கதாக உள்ளது.

இறைவனைப் பற்றி விளக்கிக் கூறும் உபநிடதங்கள் 'இது இல்லை இது இல்லை' எனக் கூறிச் சென்று இறுதியில் எது என இயம்பாமலே செல்லும். இதே முறையே இந்த முப்பூ பற்றிய கருத்திலும் பின்பற்றப்பட்டுள்ளதைப் பார்க்கிறோம்.

'இறைவனைக் கண்டவர்கள் விண்டதில்லை விண்டவர்கள் கண்டதில்லை' எனச் சொல்வது போலவே, அகத்தியரும் தனது 'அந்தரங்க தீட்சாவிதி'யில்,

> "விண்டதில்லை கண்டவர்கள் சொல்லார் சொல்லார்
> வீணாகச் சுட்டலைந்து விதி என்பாரே?"

என முப்பூ பற்றிக் கூறியிருப்பதும் நோக்கத்தக்கதாக உள்ளது. "குருவழி அன்றி நூல் மூலம் இதுபற்றி அறிய இயலாது"[11] 'முப்பூ தீக்ஷை' 'போகர் நாயன் முப்பூ ஐம்பது' 'அகத்தீசுர நாயன்

---

9. வி. பலராமய்யா, முப்பூ குரு (Elixir of Life).

10. "ஏகமூலி, சல்லிவேர், உவருப்பு வழலை, அண்டம், பிண்டம், ஆதி அந்தம், மதிரவி, கோஜ பீஜம், ரோமம், சவர்க்காரம். ஏரண்டம், பேரண்டம், சிப்பி, நத்தை, கும்பிடுக்கல், யானைக்கல், வெள்ளைக்கல், பச்சை, மலப்புளி, நாதம், விந்து, தலைப்பிண்டம், சக்தியுப்பு, சிவஉப்பு, கோரை, கிளிஞ்சி, மகாமகரப்பூ, கன்னி, பழச்சார், திகைப்பூடு, இந்திர கோபம், கருங்கோழி, ஜோதி, சுரோணிதம், திகைப்பூச்சி, கல்லுப்பு, குருவண்டு, பூநீறு, பனிக்குடம், கரியுப்பு" என்பதாம்.

11. வி. பலராமய்யா, சாகாக்கலை.

கொங்கணவர் முப்பூ ஐம்பது' (இறுதி இரண்டும் 11559 என்ற எண் கொண்ட திருவனந்தபுரம் சுவடிகள்) போன்ற சுவடிகள் முப்பூ பற்றிச் சிறப்பாக விளக்குகின்றன.

சாரம் – 'நவச்சாரம், எவச்சாரம், ஏகம்பச் சாரம், சத்திசாரம், காசிச்சாரம், உமிலிச்சாரம்' என ஆறுவகை சார வகைகளைப் பதார்த்த குண விளக்கம்[12] குறிப்பிடுகின்றது.

சாரம் என்பது 'அமுரி' என்றும், வைத்திய பரிபாஷையில் அகரம் எனக் குறிக்கப்படுவது இதுவே என்றும், 'அமுரி'தான் மனிதர் மூத்திரம் என்னும் சிறுநீரல்ல' என்றும் திரு. வி. பலராமய்யா கருத்துத் தெரிவிக்கிறார்.

பூரம் – கற்பூரம், ஜப்பான், சைனா, ஸ்வீடன், போர்னியா முதலிய நாடுகளின் கடற்கரையோரங்களில் கற்பூரச் சத்து அடங்கிய மரங்களுள்ளதாகவும், இதனின்று தக்க முறைப்படி கற்பூரம் எடுத்து, பின்னும் வேறு சில சரக்குகளை விகிதப்படி இணைத்துப் பச்சைக்கற்பூரம் தயாரித்து இதனையே சித்தர்கள் முறைப்படி பயன்படுத்தி வந்ததாகவும் தெரிகிறது. போகரது நூற்களில் இதன் செய்முறை விவரிக்கப்பட்டுள்ளது. செய்முறைக்கேற்ப இது மூவகைப் படுவதாக 'பதார்த்த குணபோதினி' தெரிவிக்கிறது. காரசாரத்தின் பஞ்சபூதத்தில் இது ஆகாயத்தில் அடக்கப்பட்டுள்ளது.

5. **கிறாவணமோ செந்தூரங் கோடா கோடி**
காயசித்தி யோகசித்தி ஞானசித்தி
கிறாவண (மோப)ஞ்ச கர்த்தாள் பூவதாச்சு
காணாத கருவையெல்லாங் காட்டி விட்டேன்
கிறாவணமோ இந்நீரும் வெடி(யுப்புநீ) ரும்
கலந்திடவே தயிர்போலே கட்டி யாமே.

பொ. சு:

மேற்கண்ட பாடலில் கூறியவாறு உருவாக்கப் பெறும் கிறாவணம், செந்தூரம் போன்றவை, ஒன்றோ? அவை கோடானு கோடியாகும். காயசித்தி, யோகசித்தி, ஞானசித்தி (மூவகைச்சித்தி) கிட்டக் கூடிய பஞ்ச பூதச் சேர்க்கையாலாகிய பூவினையும் இது வரை யாரும் கூறாத கருவினையும் வெளிப்படையாகக் காட்டி விட்டேன்' என்கிறார். இறுதி வரியில் முந்தைய பாடலின் இரண்டாம் வரியில்

12. சி. கண்ணுசாமி பிள்ளை.

குறிப்பிட்ட நீருடன், வெடியுப்பு நீரினைச் சேர்க்கத் தயிர் போன்று கட்டியாக நிற்கும் பொருளைக் காணலாம்.

சொ. வி:

காயசித்தி – சரீரத்தை நரை திரையின்றி நெடு நாளிருக்கச் செய்யும் சித்தி.

பஞ்ச கர்த்தாள் பூ – ஐம்பூதச் சேர்க்கையால் கிட்டும் முப்பூவினைக் குறிக்கும்.

வெடியுப்பு – இதன் செய்முறையைப் பதார்த்த குண விளக்கம்[13] விவரிக்கின்றது இது பற்றி மட்டும் கூறும் சுவடிகளும்[14] உண்டு.

6. கட்டியென்ற தயிர்தனிலே சரக்கைத் தோய்த்துக்
காட்டுவா யாவிதனில் கட்டிப் போகும்
கொட்டியதை முறித்திடவே தகர்ந்து போகும்
கூசாமல் தயிர்நக. . . தட்டிக்கொண்டு
அட்டியாய் வாதுவந்தால் தங்கத்தை வாங்கி
அப்பனே தடவியங்கே கொடுத்தி டாயே.

பொ. சு:

'கட்டியாய் உறைந்து நிற்கின்ற இத்தயிரில் சரக்கைத் தோய்த்தெடுத்து ஆவியில் காட்டிட எளிதாகக் கட்டும். அதனைக் கொட்டி முறிக்கத் தகர்ந்து போகும். வாதத்துக்குத் தங்கத்தை இத்தயிரில் தடவிக் கொடுக்கத் தக்க பலன் கிட்டும்" என்றார்.

சொ. வி:

சரக்கு – மருந்துச் சரக்குகள். பொதுவாக உடல் வைத்தியத்துக்குப் பயன்படும் அனைத்து மூலிகை, இரசாயனப் பொருட்களும் அடங்கும்.

கட்டிப்போகும் – சில மருந்துப் பொருட்கள் புடமிட்டு எரிக்கப்படும் பொழுது நெருப்பில் புகைந்து ஒன்றுமில்லாது போதல் உண்டு. இத்தயிரில் தோய்த்தெடுத்த பின் அவ்வாறு போய்விடாது தங்கி நிற்கும் என்பதாம்.

---

13. பதிப்பாளர், இரத்தின நாயகர், பக். 17, 18.

14. வெடி சாஸ்திரம், சுவடி எண். 3243, தி. வெளிவராதது.

7. (கொடுத்)திடவே அயமாகுந் தூளாய்ப் போகும்
கூசாமல் ஆரென்ன பாடு பட்டு
அடுத்து வந்து பணிந்துண்ணக் காத்(திருப்பாய்)
(ஆ)கட்டும் பதறாதே என்று சொல்லிக்
கொடுத்திடுவாய் கோசமுமோ பணந்தான் தூக்கிக்
கூட்டுருக்கு முன்போலே தங்(கமாகும்)
(ப)டுத்திடுமே மற்றமுறை கருக்கா ணாது
பார்மகனே ஆமென்று பத்திப் பரந்தாரே.

பொ. சு:

மேற்கூறியவாறு அத்தயிரில் தோய்க்கப்படும் தங்கம் இரும்பாக மாறித் தூளாகப் போய்விடும். இதனுடன் சாதிக்காய் ஒரு பணத்தின் எடை அளவு சேர்த்து உருக்க முன்போல் தங்கமாக ஆகிவிடும். இது தவிர மற்ற முறையில் சாத்தியமாகாது என்றும் உரைக்கப்பட்டுள்ளது.

சொ. வி:

கோசம் – *சாதிக்காய்.*

பணந்தான் தூக்கி – *ஒரு பணத்தின் எடை அளவு நிறுத்து என்பதாம். ஒரு பணம் என்பது 1/8 ரூபாய். பண்டு ஒரு ரூபாயில் 1/8 அளவுள்ள வெள்ளிப் பணம் நாட்டில் வழங்கி வந்தது. அதன் எடையே பண எடை ஒருபண எடை என்பது 12 கிராம்கள் ஆகும். அதாவது 4 குன்றிமணி அல்லது அரைக்கால் வராகன் எடையுள்ள பொன்னிறையாகும். சென்னையில் 15 தம்பிடிக்கும், திருச்சியில் 24 தம்பிடிக்கும், தஞ்சை, இராமநாதபுரங்களில் 30 தம்பிடிக்கும், நெல்லையில் 40 தம்பிடிக்கும் திருவிதாங்கூரில் 4 சக்கரத்துக்கும் ஒத்ததாய் வெள்ளியாலமைந்ததும், 80 தம்பிடிக்கும், அல்லது 1¼ ரூபாய்க்கும் ஒத்ததாகப் பொன்னாலமைந்ததும் மற்றும் சில இடங்களில் வேறுபட வழங்கி வந்ததுமான பழைய சிறு நாணயம்.*

8. ஆமப்பா ஐம்பூவால் வ(ரைகள)றும்
ஆகாரங் கடக்கலாம் அரனுஞ் சொல்வார்
ஓமப்பா இதினோடே வல்லதுு சேரில்
ஒன்றான திருநடனத் து(ண்மை) காணும்
வேமப்பா பட்சமொன்று கொண்டா யானால்
மேலான நந்தியைப்போல் வீற்றி ருப்பார்
நா(ம)ப்பா இப்படியே பா(ர்)த்துத் தேர்ந்தோம்
நாதாக்கள் இக்கருவைச் சொல்லார் சொல்லார்.

பொ. சு:

மேற்கூறிய பாடலில் உள்ளவாறு கிடைக்கும் தங்கத்தினை உட்கொள்ள, நாடோறும் உணவு உண்ண வேண்டிய அவசியம் இல்லை. இதனோடு வல்லது சேர்த்துத் திதி கொண்ட காலத்தில் (பதினைந்து நாட்கள் என்றும் கொள்ளலாம்) உண்ண மேலான தன்மையை உடைய நந்தியைப்போல் வீற்றிருக்கலாம் என்கிறார்.

இத்துடன் இந்த முறை தானாகச் செய்து பார்த்து அறிந்தது என்றும், நாதாக்கள் இக்கருவை வெளியில் சொல்ல மாட்டார்கள் என்றும் உரைக்கிறார்.

சொ. வி:

வல்லது சேரில் – வல்லது என எதைக் குறிப்பிடுகிறார் என்பது தெரியவில்லை. 'வலிமை தருபவை' எனக் கொள்ள இடமுள்ளது.

நந்தி – சித்த வைத்தியத்தின் மூல குரு. இவர் வழிவந்தவர் நந்தி வர்க்க அடியார்கள் எனக் குறிக்கப்படுவர்.

9. **சொல்லார்க ளுள்கருவை நூல்கள் தோறும்**
சொல்லிவிட்டே னென்னூலில் மறைத்தி டாமல்
வெல்வாரோ மனமாய்கை யாவ ரேனும்
வெல்லுபவ னாரென்றால் சுழியில் நின்றோன்
செல்லாது அயனிட்ட வெழுத்தங் கேதான்
செல்லுவது ஆர்க்கென்றால் பாசத் தோர்க்குக்
கொல்லாது இக்கருத்தா னிருவகைக்கு முண்டு
கோன்காணான் தான்கோனாய் வளர்ந்து பாரே.

பொ. சு:

'ஒரு குரு முடிக்க ஆகும் பல கருக்களைக் கூறிக்கொண்டே வருபவர்கள், அதற்கெனத் தேவைப்படும் முக்கியமான கருவைக் கூறமாட்டார்கள். கூறினும், அது பரிபாசையாக இதுவோ, அதுவோ என மயங்குமாறு இயம்பப்பட்டிருக்கும். அறிவு ஒன்றைக் கூற உணர்வு ஒன்றைக் கூற மயக்கம் மென்மேலும் வலுப்பெறும். இம்மன மயக்கத்தை ஒழித்து, உண்மைக் கருவை உணர்ந்து குரு முடிப்பவன் யார் என்றால், யோகப் பயிற்சியால் உடல், மனத்தை ஒரு நிலைப்படுத்தியவனும், உலக உயிர்கள் மாட்டு அளவிறந்த அன்பும் உடையவனே ஆவான் என்கிறார்.

'இறுதியில் இக்கரு இரு வகைப்படும் என்றும், தக்க குருவினை அறியாதவன், தானே செய்து பார்த்து அறிந்து குருவாக வளர வேண்டும் என்றும் உரைக்கின்றார்.

சொ. வி:

சுழியில் நின்றோன் – இது மூலாதாரம் முதல் (மலவாயான குதஸ்தானம்) தலையிலுள்ள பிரம்ம கபாலம் வரை திரிந்து கொண்டிருக்கும் நாடி சுழி என்பது சுழுமுனை. அதாவது பிரம்ம நாடி (மூலநாடி) ஸுஷம் னாநாடி,[15] என்றும் சொல்வர். வாசி என்ற மூச்சினை அடக்கி ஆண்டு, யோக சக்தியினால் உடலில் உள்ள மூலாதாரம், கொப்பூழ், இதயம், இரைப்பையின் நடு, கழுத்து, தலை உச்சி என்ற ஆறு இடங்களில் மனத்தை முறையாக நாட்டிக் குண்டலினி சக்தியை எழுப்பி, அமிர்த கலசத்தைத் திறந்து, உள்நாக்கால் அதைச் சுவைத்துச் சாகா நிலையடைபவரே சுழியில் நின்றவராகும்.

'மாங்காய்ப் பாலுண்டு மலைமே லிருப்பார்க்குத்
தேங்காய்ப்பா லேதுக்கடி!'

எனக் குதம்பைச் சித்தர் பாடியதும்,

'உச்சியில் பிச்சை எடுத்தல்' எனச் சித்தர்கள் குறிப்பிட்டதும் இதனையே ஆகும்.

பாசத்தோர்க்கு – உலக உயிர்கள் மீது அன்புகொண்டு அவர்கள் நன்மையை உள்ளத்தில் கொண்டு, அவர்களுக்கெனக் காரியம் செய்யப் புகுபவனே காரிய சித்தி அடைய இயலும். தமக்கென முயலா நோன்றாள் பிறர்க்கென வாழுநர் அன்றிச் சுயநல வாதிகளுக்கு இது சிறிதும் சாத்தியப்படாது எனத் திடமாக உரைக்கிறார்.

10. பாரப்பா முன்தயிருக் குள்ளே தானும்
பாச்சிடுவாய் பூரணந்தான் கழஞ்சி யொன்று
வாரப்பா அயக்கிண்ணிக் குள்ளா கத்தான்
மண்சட்டி (ரெ)ண்டங்கே வாங்கிக் கொண்டு

15. "The adept further endeavours to keep the Kundalini in Suzhumunai, and to make it rise to the top of the head, that being its final goal where it is represented in the secretion produced in this process of obstructing the cavum by turning the tongue" A. Subramania Ayyar, 'The Poetry and the philosophy of the Tamil Sidhars'.

சேரப்பா ரெண்டுபடி கல்லுப் பிட்டுச்
சிறப்பாகக் கிண்ணியுட வாயை மூடி
ஆரப்பா சட்டிக்குள் வைத்து மூடி
அப்பனே ஒருசாம மெரித்தி டாயே.

பொ. சு:

'ஒரு அயக் கிண்ணத்தினுள் ஐந்தாம் பாடலில் கூறிய தயிரினையும், ஒரு கழஞ்சு பூரணத்தையும் விட்டு மூடி, மண்சட்டி ஒன்றில் இரண்டுபடி கல்லுப்பினை இட்டு, அயக்கிண்ணத்தை அதனுள் வைத்து, அதனை ஒத்த மற்றொரு சட்டி கொண்டு அச்சட்டியை நன்றாக மூடி ஒரு சாமம் எரிக்க வேண்டும் என்கிறார்.

சொ. வி:

கழஞ்சி – கழஞ்சு. நிறுத்தலளவையுள் ஒன்று. நான்கரை கிராம் எடை ஆகும்.

கல்லுப்பு – கடலுக்குள் தானாகவே உப்பு உறைந்து பாறை காணப்படும். இதுவே கல்லுப்பு எனப் போகர் குறிக்கிறார்.[16] இதில் சாதாரண உப்பைப் போல் கசிவு இருக்காது.

கல்லுப் பென்றால் கரைந்திடா நீரினில்
வெல்லு மதேசூத வேதைக ளாகும்"

என 'வள்ளுவர் சிந்தாமணி' குறிப்பிடுவதினின்று இது நீரில் கரையாத தன்மை கொண்டது என்பதும் தெரிகிறது. இதனை, போகர் நிகண்டு 'முனி மூத்ரம்' எனக் குறிப்பிடுகின்றது.

இவ்வுப்பினால் எண் வகைக் குன்மம், சூதகவலி, வாதவலி நீங்கும் என்றும், கருப்பம் உண்டாகும் என்றும் 'பதார்த்த குண போதினி'[17] தெரிவிக்கின்றது. இதற்குச் சத்துரு, மித்துரு பதார்த்த குண விளக்கத்தில் தெளிவாக உரைக்கப்பட்டுள்ளது. பஞ்ச பூதத்தில் இது பிருதிவியுள் அடக்கப்பட்டுள்ளது.

கல்லுப்பு ஆண் சரக்கு. இதற்குப் பெண் சரக்கு பழைய புளி. இது விந்து. இதற்கு நாதம் லிங்கமாகும்.

ஒரு சாமம் – ஏழரை நாழிகை அதாவது மூன்று மணி நேரம் கொண்டது ஒரு சாமமாகும்.

---

16. பதார்த்த குண விளக்கம், பக். 22.

17. ஆசிரியர். வி. பலராமய்யா.

11. எரித்தாறி யெடுக்கவே மு(ருக்)கம் பூப்போல்
இருக்குமடா என்மகனே ஈசா வீசன்
செரித்திடவே நவலோகந் தன்னிற் சேர்க்கச்
சிவசிவா ஆ(யிர)த்துக் கோடும் பாரு
பரிக்குடனே நாற்பதுனா ளுண்டா யானால்
பாலனாம் பதினாறு பிராய மாகும்
பொரித்திடுவாய் மாயமென்ற பொல்லா வாசைப்
பொறியிட்டால் பொருளேது புலையன் தானே.

பொ. சு:

ஒரு சாமம் எரித்து ஆறிய பின் அயக்கிண்ணிக்குள் வைத்த அக் 'குரு'வினை எடுத்துப் பார்க்க, முருக்கம் பூப்போலச் சிவந்து காணப்படுமென்றும், இதுவே 'ஈசன்' எனச் சித்தர்களால் பரிபாஷையாகக் குறிக்கப்படுவது என்றும், நவலோகத்தில் இதனைச் சேர்க்க ஆயிரத்துக்கு மாற்றுக் காணும் என்றும் இக் 'குரு' வினை நாற்பது நாள் உண்ண, பதினாறு வயதுடையோன் தோற்றத்தை அடையலாம் என்றும் பொருளாசை கொண்டு இதனைச் செய்து பார்க்க முற்படுவோருக்குச் சித்தி கிட்டாது என்றும், அவர் புலையர் என்றும் இயம்புகின்றார்.

சொ. வி:

நவலோகம் – ஒன்பது உலோகங்கள். பொன், இரும்பு, செம்பு, ஈயம், வெள்ளி, பித்தளை, தரா, துத்தநாகம், வெண்கலம் ஆகும். என்பது பதார்த்த குண விளக்க போதினி.[18]

ஆயிரத்துக்கு.......... பிராயமாகும் – எத்தகு மட்டமான உலோகத்துக்கும் இக் 'குரு'வினைக் கொடுக்க ஆயிரம் மாற்றுப் பொன்னாக அது மிளிரும் என்கிறார். மட்டமான உலோகங்களைத் தங்கமாக்கும் இம்மருந்தே உடலையும் தங்கமாக்கிக் காயசித்தி அளிக்கும் என்பதாம்.

மெழுகு

5. தானென்ற சூதமுமோ கழஞ்சு ரெண்டு
தப்பாம லந்திடைக்குக் கெந்தி கெந்தி
கானென்ற முருக்கஞ்சா(று) பீங்கானில் விட்டுக்
கைக்குறமாய் மர்த்திப்பாய் தினம்பத் தப்பா

18. ஆசிரியர். வி. பலராமய்யா.

ஊனென்ற மெழுகாகு மத்த செம்பை
உடைத்துத்தா னிப்பழத்தின் சாறு ஊட்டி
வானென்று பிசறியதைக் குகைக்குள் வைத்து
வளஞ்செய்ய யின்னமுண்டு மார்க்கங் கேளே.

பொ. சு:

ஒரு பீங்கான் கிண்ணத்தில் சூதம், கந்தகம் ஆகிய இரண்டும் இரண்டிரண்டு கழஞ்சு எடுத்துக் கொண்டு, இவற்றில் முருக்கஞ்சாறு விட்டுப் பத்து நாட்களுக்கு விடாமல் ஒரு சேரக் கலக்கி, நன்றாகப் பிசைந்து கொண்டுவர அது மெழுகாகும். (மாத்திரையுமாகாது, லேகியமு மாகாது, பிசுபிசுத்த தன்மையுடையதாதல்).

தூய செம்பில் (அத்தசெம்பு) செம்பழச்சாறு விட்டு ஊட்டி இம்மெழுகினையும் அதனுடன் சேர்த்துப் பிசைந்து குகைக்குள் வைக்க வேண்டும் என்கிறார்.

சொ. வி:

சூதம் – இரசம். அதாவது பாதரசம். 'சிவனார் விந்து' எனச் சித்தர் நூற்களில் பரிபாஷையாகக் கூறப்படுவது இதுவே![19] இதற்கு நாதம்-கந்தகம். சத்துரு - பூநீர், கர்ப்பூரம், நிமிளை, வெடியுப்பு, இரும்பு, காந்தம், குதிரைப்புல், சத்திசாரம், கெவுரி வெள்ளை சிங்கி முதலியனவாகும்.[20]

கெந்தி – கந்தகம். கெந்தி - 'இ' - எனப் பெண் வடிவம் குறிக்கும் எழுத்து இணைக்கப்பட்டுள்ளது. கந்தகம் வாணகந்தகம், பச்சை கந்தகம், பருப்பு கந்தகம், கறட்டு கந்தகம் எனப் பல வகைப்படும். மணமுள்ள பொருளாகும். நெல்லிக்காய்க் கந்தகமே உள்ளுக்குக் கொடுக்கப்படும். அதிக நாற்றமும் துர்குணங்களும் அடங்கி இருக்கும். இதற்கு முறிப்பாகப் பசு நெய் இருவேளை தரவேண்டும்.[21] கந்தகத்துடன் பாதரசம், உப்பு இணைய அதுவே முப்பூவாகும் என மேம்பாட்டுச் சித்தரான 'பாரசெல்சஸ்' குறிப்பிடுகின்றார்.

குகை – உலோகங்களை உருக்கி வார்ப்பதற்கான கலம். அதாவது சிமிழ்.

---

19. வி. பலராமய்யா, வாதவைத்தியத்துக்காதி (முதற்பாகம்).
20. கல்யாணராமன், சித்தர் காரசார ரசாயன விஞ்ஞானம்.
21. வி. பலராமய்யா, சாகாக் கலை.

கடப்பிலை வங்கம்

13. கேளப்பா யிம்மெழுகு பணந்தா னொன்று
கெடியான தாம்புரமோ முப்ப தாகும்
ஆளப்பா உருக்கிடவே மாத்தெட் டாகும்
அருமைமெத்த யிக்கருவை யாருங் காணார்
கோளப்பா குமுறுகடப் பிலையுங்[22] கூட்டிக்
குளிரவே யாட்டியதைக் குகைதான் செய்து
வாளப்பா வங்கமது திரும்ப வாங்கி
மைந்தனேமுன் குகைசெய்(ய) வழியும் பாரே.

பொ. சு:

முற்பாடலில் குறிப்பிட்ட 'மெழுகு ஒரு பண எடையும், தாமிரம் அதாவது செம்பு முப்பது பண எடையும் சேர்த்து உருக்கிட எட்டுமாத்துக் காணும். இதனுடன் கடம்பின் இலையைக் கூட்டி, குளிர்ச்சி பெற நன்கு ஆட்டிக் குகை செய்து, வங்கத்தை மீட்டும் வாங்கி உருக்கிட வழியும்' என்கிறார்.

14. வழிந்திருக்கும் வங்கம் விட்டு உருகும்போது
வாளதாரந் தீமுருகல் லிங்கங் காரம்
வழிந்திருக்கும் வங்கமது உருகும் போது
மைந்தனே முன்மருந்து பொடித்துத் தூவு
வழிந்திருக்கும் வங்கமது மேலிருக்கு மானால்
வரிசையாய் மேதியிட நீரில் சாய்க்க
வழிந்திருக்கும் வங்கமது வெள்ளி யாகும்
மாத்தேது பதினாறு மதிக்க லாமே.

பொ. சு:

ஈயம் உருகும் பொழுது நேர்வாளம், அரிதாரம், தீமுருகல், லிங்கம், காரம் ஆகியவற்றைப் பொடித்துத் தூவ வேண்டும் என்றும் வங்கம் மேலே வரும் சமயத்தில், எருமையின் சிறுநீரில் மெதுவாக அதனை மட்டும் சாய்த்தெடுக்க, பதினாறு மாற்றுடைய வெள்ளியாக இருக்கும் என்கிறார்.

சொ. வி:

வாளம் - நேர்வாளம். நேபாளத்தில் விளையக் கூடியது. சித்தாமணக்கு போன்ற பருப்பு வகை. கருநிறம் உடையது. பேதிக்குத்

22. பா. பே. அடம்பிலை, செ-II., அடம்பினிலை, தி.

தருவர்.[23] இதனை வெகு ஜாக்கிரதையுடன் சுத்தி செய்து மருந்துகளுடன் கூட்ட வேண்டும் என்றும், பித்தநோய், மதுமேகம், நீரழிவு உள்ளவர்களுக்கு இதனைப் பயன்படுத்தக் கூடாது என்றும் 'பதார்த்த குண போதினி' எச்சரிக்கின்றது. இதற்கு முறிப்பு வசம்பு ஆகும்.

தாரம் - அரிதாரம், தாளகம் என மருத்துவ நூற்களில் குறிப்பிடப்பெறும். சிவந்த அரிதாரம், மடல் அரிதாரம், பொன் அரிதாரம் என இதில் மூவகை உண்டு. சுத்தி செய்யாது பயன்படுத்தினால் பறங்கிப் புண், க்ஷய காசம், குட்டம் ஆகியன உண்டாகும்.

தீமுருகல் - ஒரு மருந்துச் சரக்கு. வெள்ளி உருகும் போது இதனை இட்டுவிட்டால் வெள்ளி கெட்டுப் போகும்.

லிங்கம் - பாஷாணம் அறுபத்து நான்கனுள் ஒன்று. நாதவிந்து சரக்குகளில் நாதத்தில் அடக்கப்பட்டுள்ளது. இதனைக் கட்டுவதற்கு மயிர் மாணிக்கத்தின் மூலம் பயன்படுத்தப்படும்.[24]

காரம் - கல்லுப்பாகும். மொத்த காரசார வகைகள் இருபத்தைந்தாகும். படிகாரம், வெங்காரம், காடிக்காரம், சீனக்காரம் எனச் செய்முறைக் கேற்பப் பல வகைப்பட்டு நிற்கும்.[25]

மேதியிடநீர் - எருமை மூத்திரம். இது ஒரு கிருமி நாசினியாகவும், பலவித நோய்களை நீக்க முறைப்படி பயன்படுத்தக் கூடியது என்றும் தெரிகிறது.[26]

15. **பதினாறாம் வங்கமது துண்டு துண்டாய்ப்**
பார்க்கவே நொறுக்கியதைத் தட்டிக் கொண்டு
கதினாறு நொச்சியிலை[27] குமரி யோடு
காயவைத்துத் தூளாக்கிப் படிதா னொன்று

---

23. டாக்டர் என். சுப்பிரமணியம், 'சித்த வைத்தியத்தின் முன்னேற்றம்', 'The greatness of Siddha System of Medicine'.

24. ஆ. இரா. கண்ணப்பர், மூலிகை மணி.

25. வி. பலராமய்யா, முப்பூகுரு.

26. "உதரநோய் பாண்டோடு ரத்தகா மாலை
விதிர வருசோபை மேகம் - முதிர்கிருமி
யாதியநோ யேகு மடரெருமை மூத்திரத்தால்
மீதிலன லுண்டாகு மே', பதார்த்த குண விளக்கம்.
பக்கம். 204.

27. பா. பே. மனோசிலை, செ. II.

விதியாகத் தகட்டுடனே விரவி யேதான்
விபரமுடன் புடம் போட விள்ளுறேனான்
மதியாமல் கோணியால் பொதிந்து கட்டி
வாழ்வெளியில் புடம்போட வரிசை கேளே.

பொ. சு:

பதினாறு மாற்றுடைய இவ்வங்கத்தைத் துண்டு துண்டாகத் தட்டி நொறுக்கிக் கொண்டு, நொச்சி இலையைக் கற்றாழையுடன் சேர்த்துக் காய வைத்துத் தூளாக்கி, இத்தூள் ஒரு படியை முன் நொறுக்கிய தகட்டுடன் கலந்து, ஒரு சாக்குப் பையில் கட்டி வெட்ட வெளியில் புடம் போட வேண்டும் என்கிறார்.

சொ. வி:

நொச்சி – செடிவகை. வெண்ணொச்சி, கருணொச்சி என இதில் இருவகை உண்டு.

குமரி – சோற்றுக் கற்றாழையைக் குறிக்கும். 'அமரி' எனவும் குறிக்கப்படும்.[28] இதன் சோற்றை முளை மூலத்துக்கு வைத்துக்கட்ட மூலக் கடுப்பு நீங்கும். செங்கற்றாழை என்ற ஒரு வகையும் இதில் உண்டு. இது அதிமூத்திரத்தைச் சுருக்கும். இரும்பைத் தங்கமாக்கும். பத்துமுறைக்கு மேல் நீரில் அலம்பிய பின்னரே கொழகொழப்பு நீங்கும்.

புடம் – தகுந்த, தேவையான அளவு எரு இட்டு எரித்தலாகும். மஹாபுடம், கஜபுடம், வராகபுடம், குக்குட (கோழி) புடம், காடைபுடம், கவுதாரி புடம் என இதில் ஏழு வகை உண்டு என்பர்.

16. கட்டியே கெசபுடமாய்ப் போட்டு வாங்கு
களங்கமில்லை நீறாகுங் கடிய சுண்ணம்
கொட்டியே வாங்கியதை வைத்துக் கொள்ளு
கூறுபதின் வெள்ளிசெம்பு குடவன் கூட
அட்டியன்றி பற்ப விடை சேத்துருக்க
அப்பனே சரிகைவெள்ளி செம்பாம் பாரு
துட்டியன்றி இவ்வெள்ளி கழஞ்சி கூட்டிச்
சொல்லுகிறேன் ரூபாய்தான் கழஞ்சி பத்தே.

---

28. 'மருத்துவ அகராதி, சுவடி எண் 1868, கீழ்த்திசைச் சுவடிகள் ஆவணக்காப்பகம், சென்னை.

பொ. சு:

கெசபுடமாகப் போட்டு வாங்கக் கடினமான சுண்ணம் நீறாகி நிற்கும். இதனுடன் பத்து 'பற்ப (பஸ்பம்) எடையுள்ள? வெள்ளி, செம்பு, பித்தளை ஆகியவற்றைச் சேர்த்து உருக்க, சரிகை வெள்ளி செம்பாகும். இவ்வெள்ளி ஒருகழஞ்சுடன் பத்து கழஞ்சு எடையுள்ள பணமும் சேர்க்க வேண்டும் என்கிறார்.

இதன்பின் செய்ய வேண்டியதை அடுத்த பாடலில் கூறுகிறார்.

சொ. வி:

கெசபுடம் – "பூமியில் ஒரு முழச் சதுரமும், ஒன்றரை முழ ஆழமும் உள்ள குழி தோண்டி, பூமி மட்டத்திற்கு எருவடுக்கி இடையில் சீலை செய்து வைத்துள்ள அகலை வைத்துத், தீயிட்டு ஆறின பின் எடுப்பதாகும்."[29]

ஓர் எரு 5 பலம் எடை கொண்டதாக இருக்கும். (ஒரு பலம் 35 கிராம்.)

கெசபுடத்தில் சுமார் 1000 எரு இருக்கும்.[30]

17. **பத்தாக்கி யுருக்கிடவே மாத்தெட் டாகும்**
பார்பதிக்கு ஈசனங்கே பகர்ந்த வித்தை
வித்தாக்கிப் பணவிடைதான் சூதத் தூட்ட
வெண்ணையால் உமிநீறால் மர்த்திச் சாக்கால்
கொத்தாக்கி யஞ்சுகண்ணுக் குகையில் வைத்துக்
கூசாமல் காடையொரு புடத்தைப் போடு
முத்தா(க்)கி மணியப்பா சாரணைகள் தீ(ர்)ந்தால்
மூதண்டஞ் சுத்திவரும் முடிபு மாமே.

பொ. சு:

முன் கூறியபடி வெள்ளி ஒரு கழஞ்சும், பணம் பத்துக் கழஞ்சும் சேர்த்து உருக்க, எட்டு மாற்றுக் காணும். இதில் ஒரு பண எடை அளவு எடுத்துச் சூதத்தில் ஊட்டி, வெண்ணை, உமிநீரோடு (உமிக் கருக்கு. அதாவது உமிச்சாம்பல்) நன்றாகக் கலக்க வேண்டும். பின்இதனை 'அஞ்சு கண்ணுக் குகை'யில் வைத்துக் காடைபுடமாகப்

29. பதார்த்த குண விளக்கம், பக்கம் 297.

30. வி. பலராமய்யா, வாத வைத்தியத்துக்காதி.

போட்டெடுக்க மணியாகி நிற்கும். இதற்குச் சாரணைகள் தீர்ந்தால் மிகப் பழமையான இப்பிரமாண்டத்தைச் சுத்தி வரும் முடிவு இதுவே என்கிறார்.

சொ. வி:

பார்பதிக்கு ஈசனங்கே பகர்ந்த வித்தை – 'அகத்தியர் அனைத்துலக அன்னை உமையை வணங்கி மானிடர் நோயகற்றும் மருத்துவம் கேட்க, அவள் சிவனை அண்டி உபதேசம் பெற்றதாக வரலாறு'[31]

'தமர் தந்திரம்' என்பது சிவன் பார்வதிக்கு உணர்த்தியதாகச் சொல்லப் பெறும் தொன்மையான நூலாகும்.[32]

சில மருத்துவ நூற்கள் சிவன் பார்வதிக்கும், பார்வதி நந்திக்கும், நந்தியானவர் தன்வந்திரி, அசுவினி தேவர் முதலானவர்க்கும், அசுவினி தேவர் அகத்தியர்க்கும் உரைத்ததாகவும் பகர்கின்றன.[33]

காடையொருபுடம் – 'பூமியில் ஒன்றே கால் சாண் சதுரமும் இதே அளவுள்ள ஆழமும் கொண்ட குழி வெட்டி மூன்று எருவில் புடம் இடுவதாகும்' எனப் பதார்த்த குணவிளக்கம் விளக்குகிறது.

மணி – இரசமணி (Electrum) இரசாயன முறைகளால் முடிக்கப்படுவதால் ஏற்பட்ட பெயராகும். இம்மணி எடை, குணம், மகிமையால் எட்டு வகையாகப் பிரிக்கப்படுகிறது.

இம்மணியை ஆபரணத்தில் செய்து அணியச் சகல நோய்களையும் நீக்கும். பாத்திரமாக வைத்திருக்கப் பகைவர் தரும் விஷத்தை அறிய இயலும்.

புராணத்தில் திருமாலின் கௌத்துவ மணியும், இதிகாசத்தில் இராவணன் ஓர் அரிய மணி அணிந்து எட்டுத் திக்கும் வென்று வந்த செய்தியும் நினைவு கூரத் தக்கனவாக உள்ளன.

பெர்சியா (Persia) சாலியா (Challea) போன்ற நகரங்களில் தோன்றி வளர்ந்த மந்திர சக்தி அனைத்துக்கும் இம்மணியே காரணம் என பாரசெல்சஸ் குறிப்பிடுகின்றார்.[34] மேலும் இவர் ஸ்பெயின்

31. எஸ். கல்யாண ராமன், சித்தர் காரசார ரசாயன விஞ்ஞானம்.
32. டாக்டர் இரா. மாணிக்கவாசகம், சித்தர்கள் கண்ட சிறுநீர் மருத்துவம்.
33. 'மருத்துவ சிந்தாமணி, சுவடி எண். 1868, செ. வெளிவராதது.
"சொல்லிடவே தேவிக்குச் சதா சிவந்தான்
சுருக்கியே தேவி நந்திக்குச் சொல்ல
நல்லிடவே நந்திதன் வந்திரிக்குச் சொல்ல
நலமான தன்வந்திரி அசுவினிக்குச் சொல்ல
அல்லிடவே அசுவினியாந் தேவர் தாமும்
அகத்தியர்க்கு உரைத்திடவே அவர் மற்றும்"
34. வி. பலராமய்யா, அமுத கலசம்.

மாந்திரிகன் இரண்டு பவுண்டு எடையுள்ள மணி வைத்திருந்த தாகவும், இதிலுள்ள எழுத்துகளை மாற்றி அமைப்பதற்கு ஏற்ப, நினைத்தது நடந்ததாகவும், தேவதைகள் தோன்றி மறைந்ததாகவும், இதனைத்தான் நேரில் கண்டதாகவும் குறிப்பிடுகின்றார்.

ஏழு உலோகங்களாலும் (பாரசெல்சஸ் குறிப்பு) பாதரசத்தாலும் இது செய்து முடிக்கப்படும்.

சாரணைகள் தீர்ந்தால் – மூலிகை, மருந்துச் சரக்குகள் தன் மனத்தில் நினைத்ததற்கொப்ப ஆகும் முறையையே இத்தொடர் குறிப்பிடுகின்றது.

சூதக்கட்டு

18. **ஆமப்பா சூதவித்தை சொல்லக் கேளு**
ஆச்சரியம் நிசஞ்சொல்வே னாய்ந்து பாரு
ஓமப்பா பீங்கானில் சூதம் விட்டு
உத்தமனே கொடிவேலிச் சாறு விட்டு
வேமப்பா சாமமொன்று நிம்பக் குச்சால்
விடாமலே ம(ர்)த்திக்க வெண்ணை[35] போலாம்,
தாமப்பா சட்டியிலேமுன் சாறு விட்டுத்
தயவாகக் கொதிப்பித்துப் பின்னுங் கேளு.

பொ. சு:

ஒரு பீங்கான் கிண்ணத்தில் சூதத்தை எடுத்துக் கொண்டு, அதில் கொடிவேலிச் சாறு ஊற்றி ஒரு சாமத்துக்கு வேப்பங்குச்சியால் மர்த்திக்க, அது வெண்ணை போலாகும். ஒரு சட்டியிலே முந்தைய கொடிவேலிச்சாறு விட்டு, வெண்ணை போலுள்ள அதனையும் உடன் சேர்த்து நன்கு கொதிக்க வைக்க வேண்டும் என்கிறார்.

சொ. வி:

கொடிவேலி – 'கொடுவேலி, சித்திரமூலம்' என்றும் அழைக்கப்பெறும். இதில் செங்கொடிவேலி என்ற வகை காய கற்ப மூலிகையாகப் பயன்படுத்தப் பெறும். 'தண்டு சிவப்பாயிருக்கும். இதன் இலையைப் பறித்துக் கசக்கிச் சாறெடுத்துச் சாதத்திலிட்டுப் பிசைந்து சாப்பிட வாலிபராவர். இதன் பட்டை அல்லது தண்டினை எடுத்துச் சாதத்தில் போட்டுக் கிண்டி, உண்டு வர நரைதிரை மாறும். சடலம்

35. பாபே - எண்ணை, செ. II.

பொன்னிறமாகும். கற்பகோடி காலமிருப்பர். யானை பலமுண்டாகும். இவனுடைய மலசலம் பேதிக்கும். அறுசுவை பதார்த்தம் நீக்கிப் பத்தியமாகப் பாலும் சோறும் சாப்பிட வேண்டும்.[36]

வடகரை மலைக்கு வடகீழ் ஒரு நாழிகை தூரத்தில் வியாக்கிர முனி ஆசிரமத்துக்குப் பக்கமாயுள்ள சுனை அருகே இம்மூலிகை கிடைக்கும்".

19. பின்னேது குறோட்டையிலை பிண்ணாக்கி னிலையும்
பேறான சீதேவி சிற்றா முட்டி
மன்னேநீ சாறுவர யிடித்துக் கொண்டு
மயங்காமல் கொதிப்பிக்க மெழுகு மாகும்
அன்னேரங் காரமொரு பணந்தா னூட்டி
அப்பனே உருக்கிடவே மணியு மாகும்
சொன்னேனே வெள்ளிவித்தை இன்னஞ் சொல்வேன்
துய்யவெள்ளைப் பாசாணங் கழஞ்சி பத்தே.

பொ. சு:

முற்பாடலில் கூறியபடி கொதிக்க வைத்த அதனுடன் குறோட்டையிலை, பிண்ணாக்கிலை, சீதேவி, சிற்றாமுட்டி என்ற நான்கினையும் சாறு வருமாறு இடித்துச் சேர்த்துக் கொதிக்க வைக்க மெழுகாகும். மெழுகாகும் பருவத்தில் ஒரு பண எடை அளவு காரம் இட்டு உருக்க மணியாகும் என்கிறார்.

சொ. வி:

குறோட்டை இலை - முக்குறோட்டை என்பதாகும். அமுக்கரா, அசுவகெந்தி, அசுவம், அகவு, காக்கணம், காக்கட்டான் என மருத்துவ நூற்களில் குறிப்பிடப் பெறும். இதில் முக்குறோட்டை என்ற வகை உடல்வன்மை தரும். தாம்பிரத்தைப் பற்பமிட மிக முக்கியமாகப் பயன்படுவதாகும். ஷயநோய் நீங்கும்.

பிண்ணாக்கிலை - வெண்ணிறப் பூப்பூக்கும். தண்டு, இலை இவற்றின் சாறு விழுவிழுப்பான தன்மை கொண்டதாக இருக்கும். செடிவகையைச் சேர்ந்தது.

---

36. பதிப்பாசிரியர்: இராமசாமிக்கோன், கோரக்க மகரிஷி. நாகார்ச்சுனாதி முனிவர்களுக்குத் திருவாய் மலர்ந்தருளிய மலைவளமென்னும் மலை வாகடம்.

சீதேவி – செங்கழுநீர்க் கொடியாகும். நீர்வாழ் இனம். இதன் கிழங்கு புணர்ச்சியால் எழும் வெப்பம், இருமல், சர்வ மேகத்தை நீக்கும். கண் குளிர்ச்சி நல்கும்.

சிற்றாமுட்டி – 'சித்தாமுட்டி' 'குறுந்தொட்டி' என்றும் அழைக்கப்பெறும். செடி வகை. இதன் தைலம் சுளுக்கு நீக்கும். நல்லெண்ணையின் தோஷம் நீக்கிக் கண்ணொளி தரும்.

வெள்ளைப்பாசாணம் – அறுபத்து நான்கு பாஷாண வகையுள் ஒன்று. சீமைச் சுண்ணாம்பு போலிருக்கும். பதார்த்த குண விளக்கம் இதன் குணங்களைத் தெளிவாக விளக்குகின்றது.

பாசாணக் கட்டு

20. பத்தென்னும் பாசாணந் தன்னை வாங்கிப்
பாச்சடா கொம்பினுட பாகற் காய்க்குள்
முத்தான மத்தஞ்சாற் றிருகுகள்ளிச் சாறு
முறையாக ஒருபடிதான் சட்டிக்குள் விட்டுக்
கொத்தாகக் காய வைத்துச் சாமமேழுங்
கூசாம லெரித்திடவே கட்டி நிற்கும்
பித்தாக நினையாதே சூத மூன்று
பேறான பாசாணம் ஆறுங் கூட்டே.

பொ. சு:

பத்துக் கழஞ்சு வெள்ளைப் பாஷாணத்தைக் கொம்பன் பாகற் காய்க்குள் செலுத்தி, ஒரு சட்டியில் வைத்து, அதில் ஊமத்தஞ்சாறு அரைப்படி, திருகு கள்ளிச்சாறு அரைப்படி விட்டுக் காய வைத்து, பின் ஏழு சாமம் எரித்திடக் கட்டி நிற்கும். இதனுடன் மூன்று பண எடை சூதமும், ஆறு பண எடை பாஷாணமும் கூட்ட வேண்டும் என்கின்றார்.

சொ. வி:

கொம்பினுட பாகற்காய் – கொம்பன் பாகல் என்ற பாகற் காய் வகை. காய் நீளமாய் வெளுத்திருக்கும். கறி சமைக்கலாம். பழுபாகல், நாய்ப்பாகல், தரைப்பாகல் என்ற பாகற்காய் வகைகளும் உண்டு.

மத்தஞ்சாறு – ஊமத்தஞ்சாறு ஆகும். "இது கருவூமத்தை மருளூமத்தை, பொன்னூமத்தை என மூவகைப்படும்.[37]

---

37. மூலிகை மணி.

கருவூமத்தை கசப்புக் குணமுடையது. சுக்கிலம், பாதரசத்தைக் கட்டும். உடலுக்கு அழகு தரும்.

மருளூமத்தை குளிர்சுரம், சலக் கோர்வை, அற்பவீரியம், அக்கினி மந்தம், வாததோஷம் நீக்கும்.

பொன்னூமத்தை விரணக் கிராந்தி, நாட்சென்ற கிராணி, அதிசாரம், பித்த விஷ சுரங்கள் பேதி போக்கும்"

வெள்ளூமத்தை என்பதொன்றும் உண்டு. இது வெண்ணிறப் பூப்பூக்கும்.

திருகு கள்ளிச்சாறு - கள்ளி வகையுள் ஒன்று. திருகித் திருகி அமைந்திருத்தலால் ஏற்பட்ட காரணப் பெயர். இது சித்த வைத்தியத்தில் முக்கிய இடம் வகிக்கிறது. கள்ளி வகையைச் சேர்ந்த சிவப்புச் சதுரக்கள்ளி தங்கத்தைச் செம்பாக்கும் குணம் கொண்டது சதுரக் கள்ளிப் பாசாணம், மெழுகு செய்யப் பயன்படும்.

சூத சுத்தி

21. கூட்டப்பா சூதசுத்தி செங்கல் தூளுங்
குறையாத பசுமஞ்சள் சாறும் சுத்தி
நாட்டியே மத்தஞ்சாறு விட்டு ஆட்டி
நயமாகக் குளிகை செய்து செம்புருக்கி
நீட்டியே பத்துக்கு ளொன்று தானும்
நினைவாக முன்னரைத்த உண்டை யாட்டு
மாட்டியே வங்கமது வெள்ளி வெள்ளி
மாத்தேது பதினாறு மாத்து மாமே.

பொ. சு:

சூத சுத்திக்காகச் செங்கல் தூளும் இதன் பின் பசு மஞ்சள் சாறும் சேர்த்துக் கொண்டு, ஊமத்தஞ்சாறு விட்டு ஆட்டி மாத்திரை செய்து வைத்துக்கொள்ள வேண்டும். பின் செம்பினை உருக்கி, பத்துப் பண எடைக்கு ஒன்று வீதம், முன் ஆட்டிக் குளிகையாய் வைத்துள்ள உருண்டையைச் சேர்த்து ஆட்ட, வங்கம் அதாவது செம்பு, பதினாறு மாற்றுடைய வெள்ளியாகும் என்கிறார்.

சொ. வி:

சூதசுத்தி - எல்லா மருந்துச் சரக்குகளுமே நஞ்சு உடையவை. நஞ்சினை நீக்கி, மருந்தைச் சுத்தி செய்து பயன்படுத்தாவிடின், நோய்

குணமாகாதது மட்டுமன்றி, பல தீய விளைவுகளையும் உடலில் உருவாக்கி விடும்.[38] சித்த வைத்தியத்தில் 'சரக்கு சுத்தி' மிக முக்கிய இடத்தைப் பெறுகிறதைப் பார்க்கிறோம்.

பசுமஞ்சள் – மஞ்சளில் ஒரு வகை. பச்சை மஞ்சள் என்று அழைக்கப்பெறும். 'திரி மஞ்சள்' அதாவது மும்மஞ்சளில் ஒன்றாகக் கொள்ளப்படும் சிறப்பு மிக்கது. 'கறி, வரட்டு, கஸ்தூரி, மர, பலா, காஞ்சிரை, காட்டு, குரங்கு, நாக மஞ்சள் எனச் சுமார் பத்துக்கு மேற்பட்ட மஞ்சள் வகை உண்டு"[39] ஒவ்வொரு வகை மஞ்சளும் ஒவ்வொரு சிறப்புக் குணம் கொண்டதாக இருக்கும்.

22. **மாத்தாகும் வீரனுட போக்கைச் சொல்வேன்**
மைந்தனே முன்வெள்ளிச் சாணிப் பாலில்
மாத்தாகுஞ் சாய்த்திடவே நாகந் தன்னில்
மறவாமல் பணமாறு தூக்கு தூக்கு
மாத்தாக உருகையிலே இறக்கி வைத்து
வாழ்பலகை வீரமது பணந்தா னாலு
மாத்தாகுஞ் சூதமங்கே பணந்தா னாலு
வரிசையுடன் கொடுத்ததனை மூடி வையே.

பொ. சு:

வீரம் என்பதன் போக்கைக் கூறப் புகுகின்றார். முன் பாடலில் கூறிய அவ்வெள்ளியினைச் சாணிப் பாலில் சாய்க்க மாற்றாகும் என்கிறார். அடுத்து, துத்தநாகம் ஆறு பண எடை நிறுத்தெடுத்து அது உருகி வரும் பொழுது இறக்கி வைத்து நந்நான்கு பலம் வீரம், சூதத்தினை இட்டு மூடி வைக்க வேண்டும் என்கிறார்.

சொ. வி:

வீரன் – வீரம், அதாவது சவ்வீரம். (Hydrargyri Perchloridum) அதிக வீரியமுள்ளது என்ற காரணத்தால் ஏற்பட்ட பெயராகும். அறுபத்து நான்கு பாஷாண வகையுள் ஒன்று. இதில் ரச சத்துண்டு. இதிலிருந்து பாதரசத்தைப் பிரிக்கலாம். இதனை முறைப்படி சுத்தி செய்து பற்பம், செந்தூரம், சுண்ணமாக்கியே பயன்படுத்த வேண்டும்.

---

38. வாத வைத்தியத்துக்காதி (முதற்பாகம்).

39. மஞ்சளின் மருத்துவ மகிமை.

குன்மம் முதலாகக் கிரந்தி முடிய உள்ள பல வித ரோகங்களை இது குணப்படுத்தும்.[40]

சாணிப்பால் – சாணியை நீர் விட்டுப் பால் வடிவில் கரைத்த கரைசலை இன்றும் சாணிப்பால் என்றே அழைக்கின்றனர். (தென்பாண்டி நாட்டு வழக்கு).

நாகம் – துத்தநாகம், நவலோகத்தில் ஒன்று. இதனை அவிழ்த பாகங்களில் கூட்டுவதற்கு முன் சுமார் ஏழு தடவைக்கு மேல் சுத்தி செய்ய வேண்டும். விரணப்பிரமேகம், அதிசாரம், உட்சூடு, சீத ரத்தக் கழிச்சல், முளைவிரணம், பித்தம் போன்றவற்றை நீக்கும். மிகுபசியைத் தூண்டும்.

வாழ் பலகை வீரம் – பலகை (Slabs) போன்ற அமைப்புடைய தாய், கெட்டியாய், இறுக்கமானதாய் உள்ள வீரம். அமைப்பு, பண்புக்கு இவ்வடைமொழி கொடுக்கப்பட்டுள்ளது.

வரிசையுடன் கொடுத்து – முறைப்படி கொடுத்து. அதாவது வீரத்தினை அடுத்தே சூதத்தைச் சேர்க்க வேண்டும்.

நாக பற்பம்

23. வைத்திடுவா யாறியபின் தூளா யாட்டி
மைந்தனே சூதமொரு கழஞ்சி தூக்கி
மொய்த்திடவே பணவிடைதா னாக பற்பம்
முசியாமல் குழிக்கல்லில் தண்ணீர் விட்டு
எத்திடா தொருசாம மாட்டு ஆட்டு
எருமையுட வெண்ணையைப்போ லிறுகுஞ் சூதம்
பொய்த்ததுதான் போகாது குடகரியி னுள்ளே
பொருந்துருக்க மணியாகுங் கோடி யாடே.

பொ. சு:

மூடிவைத்த அது ஆறிய பின் தூளாக ஆட்டிக் கொண்டு, ஒரு கழஞ்சு சூதமும், நாக பற்பம் ஒரு பண எடையும் சேர்த்து, ஆட்டுக்கல்லில் தண்ணீர் விட்டு ஒரு சாமம் ஆட்ட, எருமையின் வெண்ணை போலச் சூதம் இறுகும். இதனைக் குடகரியில் இட்டு

40. "குன்மமொடு குட்டங் கொடியவனி லத்திரட்சி
துன்மாங் கிசப்பெருக்கஞ் சூலைநோய் - வன்மையுறு
காமியப்புண் ணாதியநோய் கண்டாற்சவ் வீரனெனுஞ்
சாமியினா மத்தையுச் சரி".

பதார்த்த குண விளக்கம், பக்கம் 109.

உருக்க மணியாகும். இவ்வாறு கோடி முறைகள் செய்து விளையாடுவாயாக என்கிறார்.

சொ. வி:

குடகரி – ஊது உலை. மருந்துகளின் தன்மைக்கு ஏற்ப ஒரு துருத்தி முதல் நான்கு துருத்தி வரை வைத்து ஊதுதல் உண்டு.

அஞ்சனக் கட்டு

24. **கோடாத வாலரிட மையைக் கேளு**
குத்தமில்லாக் கட்டுக்கொடி புத்துமேல் நின்றால்
வாடாமல் சமூலமதைப் பிடிங்கி வந்து
வடுப்படாக் கண்சட்டிக் குள்ளே சுட்டுத்
தேடாத ஏரண்டத் தயில மூட்டிச்
சிறுவரிட கையிலிடத் திறக்குங் கைதான்
ஒடாத நிலவாகை நரி இலந்தை
உத்தமனே ஒரிலைத் தாமரையுங் கூட்டே.

பொ. சு:

சிறுவர்களுக்கு இடும் மை பற்றிய விபரமாவது. புற்றின் மேல் நிற்கக் கூடிய கட்டுக் கொடியின் சமூலம் பறித்து, வடுப்படாத கண்சட்டிக்குள் இட்டு அதனைச் சுட்டு விளக்கெண்ணெயில் குழப்பிச் சிறுவர்களின் கைகளில் இடக் கை திறக்கும் என்கிறார்.

“நிலவாகை, நரியிலந்தை, ஓரிலைத் தாமரை ஆகியவற்றைச் சேர்த்துக் கொண்டு' என்ன செய்ய வேண்டும் என்பதை அடுத்த பாடலில் விளக்குகிறார்.

சொ. வி:

மை – மறைவு மை, அஞ்சன மை, பாதாள மை, வசிய மை, மாரண மை, அழைப்பு மை என்பன போன்ற எண்வகை மைகள் உள்ளன. அஷ்டாமாசித்துக்கு இவை பயன்படுவதாக அமையும்.[41]

கட்டுக் கொடி – பெருங்கட்டுக்கொடி, சிறுகட்டுக்கொடி என இருவகை உண்டு. 'முன்னது பெரும்பாடு நோய் நீக்கவும், பின்னது விந்துவைக் கட்டுவதற்கும் மிக முக்கியமாகப் பயன்படுத்தப்படும்' என இதன் குணங்களைப் பதார்த்த குண போதினி விவரிக்கின்றது.

41. வி. பலராமய்யா, அமுத கலசம்.

புத்துமேல் நின்றால் – புற்றின் மீது நிற்கக்கூடிய மூலிகையில் அப்புற்று மண்ணின் தன்மை கலந்திருக்கும். இம்மண்ணின் வளம் பெற்ற அம்மூலிகை சில தனித்தன்மைகளைப் பெற்றிருக்கும். இது கருதியே புற்றின்மேல் நிற்கும் கட்டுக்கொடியைப் பறிக்க வேண்டும் என்கிறார்.

சமூலம் – சஃமூலம். வேருடன் கூடியது. மூலம்-வேர். செடியை வேரோடு எடுத்தல். "வேர்ப்பட்டை, தண்டு, அல்லது, மரப்பட்டை இலைக் கொழுந்து, இலை ஆகியவற்றைச் சமூலம் என்ற சொல் குறிக்கும்' என 'மூலிகை மணி' என்ற நூல் விளக்கம் தருகின்றது.

கண்சட்டி – பலதுளைகள் கொண்ட சட்டியாகும். மைசேர்க்க சமூலம் விரைவில் கருக வேண்டும். அதற்கு இச்சட்டி ஏதுவாக அமைவது கருதிக் குறிப்பிட்டுள்ளார்.

ஏரண்டத் தைலம் – ஆமணக்கெண்ணையாகும். ஆமணக்கில் வெள்ளையாமணக்கு, சிவப்பாமணக்கு, சிற்றாமணக்கு, காட்டாமணக்கு எனப் பலவகை உண்டு. வெள்ளையாமணக்கு வாதத்தை நீக்கவும், சிவப்பாமணக்கு சாதிலிங்கத்துக்கும் சிறப்பாகப் பயன்படுத்தப்படும். சிற்றாமணக்கெண்ணை உடல் குளிர்ச்சி நல்கும். இதன் தைலத்தைக் குளிர்ச்சி கருதிப் பண்டு விளக்கெரிக்கப் பயன்படுத்தினமையின் விளக்கெண்ணை எனப் பெயர் பெற்றது.

நில வாகை – இதன் இலை இலந்தை இலை போன்று இருக்கும். ஆனால் அதனிலும் சற்றுப் பெரியதாக இருக்கும். இதன் காய் சுண்டைக்காய் அளவு இருக்கும். மலையில் வாழும் மூலிகை. விப்புருதிக் கட்டி, சன்னி ஆகியவற்றைக் குணப்படுத்தப் பயன்படுத்தப்படும்.

ஓரிலைத் தாமரை – ஓர் இலை கொண்டதால் ஏற்பட்ட காரணப் பெயராகும். சிறு பூண்டு. ஓரிதழ்த்தாமரை என்றும் அழைக்கப்பெறும். மலைகளில் அதிகம் முளைக்கும். விந்துவைக் கட்டிப் பெருக்குவதல்லாமல் பல ரோகங்களைக் களைந்து மேனிக்கு அழகு தரும். எலுமிச்சங்காயளவு இதனை அரைத்துப் பசும்பாலில் நாற்பத்தெட்டு நாட்கள் உண்ண, தாய்ப்பால் சுரக்கும்.

காட்டு மல்லிகை

25. **கூட்டியே சட்டியிலே கருக்கிக் கொண்டு**
கூசாம லேரண்டத் தயில மூட்டிச்

சாட்டியே பாலரிட கண்ணில் தீட்டக்
காசினியில் மறப்பையெல்லாஞ்[42] சொல்லு வார்கள்
நாட்டியே காட்டுமல்லி வடவேர் வாங்கி
நயமாகக் கருக்கியதைத் தயிலஞ் சேர்த்துப்
போட்டிடுவாய் கண்திறக்கும் பூமி தன்னில்
புதைத்திருந்த புதையலெல்லாஞ் செப்பு வாரே.

பொ. சு:

முன்பாடலில் குறிப்பிட்ட 'அம்மூன்று மூலிகைகளையும் கூட்டிச் சட்டியில் இட்டுக் கருக்கிக் கொண்டு, ஆமணக்கெண்ணை விட்டுக் குழப்பிச் சிறுவர் கண்ணில் தீட்ட, உலகோர் மறந்ததை எல்லாம் வெளிப்படுத்துவார்கள். (அதாவது இறந்த காலச் செய்திகளைக் கண் முன் கண்டது போல விளம்புவார்கள் என்கிறார்). மேலும் காட்டு மல்லியின், அதாவது நீண்ட மரமல்லிகையின் வடவேரைப் பிடுங்கிக் கருக்கித் தயிலஞ் சேர்த்துக் கண்ணிலிடப் பூமியில் புதைந்திருப்பதைக் கண்டறிந்து கூறுவார்கள் என்கிறார்.

அஷ்டமாசித்துள் இரு சித்துகளுக்குத் துணைபுரியும் மறைவு மை, பாதாள மை பற்றி இங்கு இயம்பியுள்ளார்.

சொ. வி:

வடவேர் - வடக்குப் புறம் செல்லும் வேர். இதற்குத் தேவையான, குறிப்பிட்ட சக்தி இருக்குமெனத் தெரிகிறது. 'வடம் போன்ற ஆணிவேர்' என்றும் கொள்ளலாம்.

பொன்னாவரை

26. செப்புகிறே னஞ்சனந்தான் சூட்ச மாகச்
செகத்திலுள்ள மையெல்லாம் பொய்யாப் போகச்
செப்புகிறேன் கருக்கிடுவாய் பொன்னா வரை
சித்தாமணக் கெண்ணை சேர்த்து ஆட்டி
செப்புகிறேன் சிறுவருட கண்ணில் திட்டச்
சிறப்பாகக் கையிலிட்டுப் பாரு பாரு
செப்புகிறேன் ஆரணமுஞ் சாத்திரமுஞ் சொல்வார்
சிவனுமையாள் வீற்றிருக்குந் திறஞ்சொல் வாரே.

---

42. பா. பே. மறைப்பை, செ. 1.

பொ. சு:

'இவ்வுலகிலுள்ள மைகளெல்லாம் பொய்யாய்ப் போகுமாறு சிறந்த மை பற்றி நான் சொல்லுகிறேன். பொன்னாவரையைக் கருக்கிச் சிற்றாமணக்கின் எண்ணை சேர்த்து ஆட்டிச் சிறுவர்களின் கண்ணில் தீட்ட, வேதம், சாத்திரத்தை அப்படியே உரைக்கும் திறம் கைவரப் பெறுவர். அத்துடன் சிவன், பார்வதி வீற்றிருக்கும் திறமும் சொல்வார்கள் என்கிறார்.

சொ. வி:

பொன்னாவரை – ஆவரை இனத்துள் அடங்கும் பேயாவிரை, மஞ்சட் கொன்றை, சூரத்தி நிலாவரை என்றும் இது அழைக்கப்பெறும். மலத்தை இளக்கும். இதன் பொன்னிறப் பூ சரும நோய்கள், தடிப்பு, மேகப் படைகள், வெடிப்பு, தினவு முதலியவற்றை நீக்கக் கூடியது.

ஆரணம் - ஆரணியகம், வேதத்தின் ஒரு பகுதி.

விட்டுணு கிரந்தி

27. **திறமாக முறையின்னஞ் சொல்லக் கேளு**
திருமால்தன் மூலியிலே மூலம் வாங்கித்
திறமாக ஓடுகிற செலத்தில் நின்று
தேவிதனை நினைந்து கொண்டு வேருரைத்துத்
திறமாகக் கொண்டுபோய்க் கண்ணும் நெற்றி
சேந்தக்கரம் புறமுகமுந் தேய்த்துக் கொண்டு
திறமாகப் பார்த்திடவே விட்டுணு லோகச்
சேதியெல்லாம் வகை வகையாய்ச் செப்புவாரே.

பொ. சு:

திருமால் மூலியின் வேரை ஓடுகின்ற நீரில் நின்று கொண்டு, தேவியை நினைந்து உரசிக் கண், நெற்றி, சிவந்த (சேந்த என்பதை சேர்ந்த என்றும் எடுத்துக் கொள்ளலாம்) உள்ளங்கை, புறங்கை, முகம் ஆகியவற்றில் தேய்த்து விட விஷ்ணுலோகச் செய்திகளை விபரமாக உரைப்பர் என்கிறார்.

சொ. வி:

திருமால் தன் மூலி - துளசியாகும். 'கிருட்டிண மூலி', 'விட்டுணுகிரந்தி' எனவும் அழைக்கப்பெறும். இந்தியா முழுவதும்

சுமார் 40க்கும் மேற்பட்ட பெயர்களால் இது வழங்கப்பெறுகின்றது.[43], தமிழ்நாட்டில் நற்துளசி, நிலத்துளசி, கருந்துளசி, செந்துளசி ஆகிய நான்கு வகை முக்கியமானதாகக் கருதப்பெறும்.[44] கருந்துளசியை வைஷ்ணவர்களும், வெண்துளசியைச் சைவர்களும் விசேஷமாக வளர்ப்பார்கள். பூ, காய், இலை, தண்டு ஆகிய அனைத்து உறுப்புகளிலும் ஒரே மணம் அமையப் பெற்றிருக்கும். இது 4448 வியாதிகளையும் நீக்கக்கூடிய தன்மை படைத்தது.

ஓடுகிற செலத்தில் நின்று – ஓடுகின்ற தண்ணீரில் நின்று கொண்டு இதன் வேரை உரசிப் பூச வேண்டும் என உரைக்கப் பெற்றுள்ளது. சாஸ்திரப்படியும், அறிவியல் நோக்குப்படியும் இதனால் சில குறிப்பிடத்தக்க நன்மைகள் விளையக்கூடும் எனத் தெரிகிறது. சில ராகங்களைப் பயில்பவர் அதிகாலை கழுத்தளவு நீரில் நின்று கற்பதும், அந்தணர் இவ்வாறே வேதம் பயில்வதும் நினைவு கூரத்தக்கவை.

தேவி – சக்தியாகும். சித்தர் பரம்பரையில் வந்த அனைவரும் தங்கள் குருவாகப் பராசக்தியைக் கருதியமையைக் காண முடிகின்றது.[45]

அடுக்குச் செவ்வரளி

28. **வாரப்பா அடுக்கடுக்காய் வாழு மந்த**
மலராகுஞ் செவ்வரளிப்[46] பூச்சாறு வாங்கிச்
சேரப்பா புத்தோட்டில் தடவி யேதான்
திரும்பவுமே யதைச்சேர்த்தித் தேய்த்துக் கொண்டு
காரப்பா நல்லெண்ணை செம்பருத்திப் பஞ்சில்
கட்டாகத் திரிபோட்டுத் தீப மேத்தி
பாரப்பா மைவழித்துக் கண்ணிற் றீட்டப்
பாரில்வைத்த புதையல் கையில் பற்றலாமே.

பொ. சு:

அடுக்குச் செவ்வரளியின் பூச்சாற்றினைப் புதிய மண் ஓட்டில் இருமுறை தடவிக் கொள்ள வேண்டும். செம்பருத்திப் பஞ்சில்

43. திருத்துழாய், தேவ துந்துபி, மஞ்சரி, பூதபத்திரி, குல்லை, பிருந்தா, சூரவல்லி, கௌரி என்பவை அவற்றுள் சில.

44. எஸ். ஏ. சூசை ராஜா, வேம்பு, துளசி வைத்தியம்.

45. A.V. Subramanian Ayer, The Poetry and the philosophy of the Tamil Siddhars, "The Supreme Sakthi is the patron and guru of all the Siddhars".

46. பா. பே. செவ்வலரி, செ. II.

திரியிட்டு, நல்லெண்ணை வார்த்துத் தீபமிட்டு, அப்புத்தோட்டில் படுமாறு எரிக்கப் பூசிய சாறு கருகி மையாகும். அந்த மையை வழித்துக் கண்ணில் தீட்டப் பூமியில் வைத்த புதையல்களைக் கைப்பற்றலாம் என்கிறார்.

சொ. வி:

செவ்வரளி – பூவின் நிறத்தால் ஏற்பட்ட பெயராகும். பூக்கள் ஒரு கொத்தாய் இருப்பதால் அடுக்குச் செவ்வரளி என்பர். தங்கரளி என்றும் ஒன்று உண்டு. இது மஞ்சள் நிறப் பூப்பூக்கும்.

புத்தோடு – புதிய மண் ஓட்டினையே பயன்படுத்த வேண்டும் என்கிறார். கண்ணில் இடக் கூடிய மை ஆதலாலும் நினைத்த மை தனிப்பட்ட அதே குணத்துடன் கிடைக்க வேண்டும் ஆதலானும், முன்னரே பயன்படுத்திக் கரி அதில் பட்டிருப்பின் தூய்மை கெட்டுவிடும் ஆதலானும் புதிய ஓட்டினையே பயன்படுத்த வேண்டும் என்கிறார்.

செம்பருத்தி – பருத்தி இனத்தைச் சார்ந்ததாகும். பூவின் நிறத்தால் இதற்கு இப்பெயர் இடப்பட்டுள்ளது. இதன் இலையைப் பறித்துச் சாறு எடுத்துத் தலையில் தேய்த்துக் குளிக்கக் கண்ணுக்கும், உடலுக்கும் குளிர்ச்சி நல்கும். அடுக்குச் செம்பருத்தி, தூக்குச் செம்பருத்தி எனப் பலவகை உண்டு. செம்பருத்தி நூலைப் பூணூல் அணியப் பயன்படுத்துவர்.

பூவரசு

29. **பற்றாகும் பூவரசு வடவேர் வாங்கிப்**
பாங்காகச் சட்டியிலே கருக்கிக் கொண்டு
விற்றாகும் ஏரண்டத் தயில மூட்டி
விழிதனிலே தீட்டிடவே திறக்குங் கண்டாய்
கற்றாழைச் சோற்றூவும் பேய்க்கொம்மட்டி மூலங்
கான்வெள்ளைச் சாரணைப்பூ கப்பத்திரியுங் கூடச்
சற்றாக அரைத்திதனை வழித்துக் கொண்டு
தடவடா ஆனைக்கண் சட்டித் தூரில்

பொ. சு:

பூவரசின் வடவேரை வாங்கிச் சட்டியிலிட்டு நன்கு கருக்கிக் கொண்டு ஆமணக்கெண்ணை சேர்த்துக் குழப்பிக் கண்ணில் தீட்டக் கண் திறக்கும்.

கற்றாழையின் சோறும், பூவும், பேய்க்கொம்மட்டிக் கிழங்கும், காட்டு வெள்ளைச் சாரணையின் பூவும், இலவங்கப் பத்திரியும் சேர்த்து அரைத்து ஆனைக்கண் சட்டியின் தூரில் தடவ வேண்டும் என்கிறார்.

சொ. வி:

பூவரசு - அரச மர வகையைச் சேர்ந்தது. மஞ்சள் நிறப் பூப்பூக்கும்.

கற்றாழைச் சோறு, பூ - கற்றாழையைப் பிளந்து நடுவில் பார்க்க, பசிய நீர்ச்சத்துள்ள கொழ கொழப்பான சதைப்பகுதி காணப்படும். இதனையே சோறு என்பர். சோறு மிகுந்த இக்கற்றாழை சோற்றுக் கற்றாழை என்றே அழைக்கப்பெறும். இதன் பூ வெண்மை நிறமுடைத்து. இதன் சோற்றை முளை மூலத்துக்கு மேல் வைத்துக் கட்ட மூலக் கடுப்பு நீங்கும். வெளி வந்த மூலம் உள்ளே இழுத்துக் கொள்ளும்.

பேய்க் கொம்மட்டி - சிறுகும்மட்டியே ஆகும். பேய்த்தும்மட்டி என்றும் அழைக்கப்பெறும். கொம்மட்டியுள் ஒருவகை. கொடியாக ஓடிப்படரும் இனமாகும். மிகு கசப்புச் சுவை கொண்டது. 'கச்சமுட்டி' எனப் பேச்சு வழக்கில் அழைக்கப்பெறும். ஆற்றுத் தும்மட்டி என்ற ஒரு வகையும் இதில் உண்டு. ஆனைத்தும்மட்டிக் காய் கிரிணிப் பழ அளவு இருக்கும்.

கப்பத்திரி - இலவங்கப்பத்திரியைக் குறிக்கும். தாளிசபத்திரி, சாதிபத்திரி என மற்ற இருவகையும் உண்டு. இந்த இலவங்கப்பத்திரி வாய்க்கசப்பு, பித்த தாகம், இருமல், இரைப்பு, குளிர் சுரம் நீக்கப் பயன்படுத்தப்படும்.

கான் வெள்ளைச் சாரணை - காட்டு வெள்ளைச்சாரணை, வெண்ணிறப் பூப் பூக்கும்.

ஆனைக்கண் சட்டித்தூர் - பெரும் உடல் கொண்ட யானைக்குச் சிறுகண்கள் உள்ளதுபோலச் சிறு சிறு துளைகள் உடைய பெரிய சட்டியின் அடிப்புறம் என்பதாம்.

30. தூரிலே தேய்த்ததனை ஏரண்டத் தெண்ணை
சுகமாக விளக்கிட்டு எரித்தா யானால்
தூரிலே பற்றிநின்ற மையை வாங்கிச்
சொற்பெரிய தைலத்தில் புரட்டிக் கொண்டு

தூரிலே யிருந்துகொண்டு போய்க்கண் ணெற்றி
சொற்பெரிய அங்கையும் புறங்கை மேலும்
தூரிலே பாத்திடவே புத்துத் தேனில்
தோற்றாத பொருளெல்லாந் தோற்றுந் தானே.

பொ. சு:

ஆமணக்கெண்ணை இட்டு அச்சட்டித் தூரில் படுமாறு விளக்கெரிக்க மை பற்றி நிற்கும். அதனை இந்த எண்ணையிலேயே குழப்பிக் கண், நெற்றி, உள்ளங்கை, புறங்கைகளிலே தீட்ட, தோன்றாத பொருள்களெல்லாம் தோன்றும் என்கிறார். அதாவது கண்பார்வை தெளிவாகத் தெரியும் என்று கொள்ளலாம்.

சாரணை யஞ்சனம்

31. தோற்றிடவே புற்றின்மேல் முளைத்து நின்ற
சுருதியென்னுஞ் சாரணையைத் தட்டை யாலே
மாற்றமின்றிச் சுட்டு வந்த கரியெடுத்து
மக்களே ஏரண்டத் தயில மூட்டித்
தோற்றிரமாய் வாலைதனைப் போற்றிக் கொண்டு
சொல்லாதே கரத்திலந்தத் தயிலஞ் சேர்த்துக்
கோத்திரமா மஞ்சனத்தைப் பிறகு சேர்த்துக்
கூசாமல் பாத்திடவே ஓடுங் கையிலே.

பொ. சு:

புற்றின் மீது முளைத்திருக்கும் சிவப்புச் சாரணையின் காய்ந்த தண்டினைக் கொண்டு வந்து சுட்டுக் கரியெடுத்து, ஆமணக் கெண்ணையில் குழப்பிக் கொள்ள வேண்டும். பின் வாலையைத் தொழுது கொண்டு, கையில் சிறிது ஆமணக்குத் தைலம் தேய்த்துக் கொண்டு அதன் பிறகு, மேற்கூறிய மையையும் பூசிப் பார்க்கக் காட்சிகள் கையில் ஓடும் என்கிறார்.

சொ. வி:

சுருதி யென்னுஞ் சாரணை – சிவப்புச் சாரணையாகும். சத்திச் சாரணை எனக் குறிப்பிடப்படுவதும் இதுவேயாகும். இதன் தண்டும், இலையின் பாகங்களும் செந்நிறமாய் இருக்கும்.

. தட்டை – காய்ந்த தண்டுப் பகுதியே தட்டை என அழைக்கப்படுகின்றது.

வாலை – சக்தியின் வடிவமாகும். பாலப்பருவத்து இருது வாகாத பெண். வாலாம்பிகை என்றும் அழைக்கப்பெறும். பத்து வயதுடைய சிறு பெண்ணாகப் பாவித்துத் தங்கள் குருவாக இவளைச் சித்தர்கள் பூசித்திருக்கின்றனர். இதன் வடிவம் விநோதமாகத் தோன்றினும் காரண காரியத்துடன் உருவாக்கப் பட்டுள்ளமையை உணர முடிகின்றது.

அதாவது 'நெற்றியில் சந்திர கோணம். முடி உச்சியில் சூரியன். இது நாதம், விந்து எனும் இருபொருள் குறிப்பதாகும். வாலைப்பெண் கழுத்தில் சுற்றி இருக்கும் பாம்பு தன்னைத் தானே விழுங்குவது போலக் காணப்படும். இது விந்துவை நாதம் உண்ணும் என்னும் தத்துவத்தை விளக்குவதாகும்.[47] இதன் உருவம் முழுக்க முழுக்கப் படிமக் குறியாகும். சித்தி தரும் மூலமருந்தான முப்பூவிற்கும் கன்னிப் பெண், வாலைப் பெண், பத்து வயதுப் பெண், ஞானப்பெண் என்ற பரிபாஷைப் பெயர்கள் இருப்பது நோக்கத் தக்கதாகும்.

32. ஓடுமப்பா முன்னூறு காத தூரம்
　　உண்மை யின்னஞ் சொல்லுகிறோம் நால்வகைக்கும்
ஆடுமப்பா முதலைக்கண் ஆமைக் கண்ணும்
　　அப்பனே எலியாலம் பாலி லாட்டி
நாடுமப்பா ஏரண்டத் தயில மூட்டி
　　நயமாகக் கரத்திலே பூசிப் பாரு
கூடுமப்பா நீநினைத்த கரும மெல்லாங்
　　குறையாது குறையாது குன்றாய் வாழும்.

பொ. சு:

முற்கூறிய பாடலின்படி, கரத்தில் தெரியும் காட்சி முன்னூறு காதத்திற்குள் நடப்பவையாகும் என்கிறார்.

முதலைக் கண், ஆமைக் கண் ஆகிய இரண்டையும் எலியாலம் பாலிலாட்டி ஆமணக்கெண்ணையில் குழப்பிக் கரத்தில் பூச, நினைத்த செயல்களெல்லாம் நிறைவேறும் என்றும் இயம்புகிறார்.

சொ. வி:

காதம் – ஏழரை நாழிகை வழி. அதாவது 10 மைல் தூரமாகும்.

நால்வகைக்கு – இறந்தகாலச் செய்தி தெரிதல், புதையல் தெரிதல், தெய்வலோகம் தெரிதல், கையில் காட்சி தெரிதல் ஆகிய

---

47. முப்பூ குரு.

நான்கு சித்துகளுக்கு உதவும் மை பற்றிக் கூறினார். அஷ்டமாசித்துள் எஞ்சிய மறு நான்கு பற்றி இனிக் கூற உள்ளார்.

முதலைக் கண், ஆமைக் கண் – இவ்விரு இனமும் நீரில் வாழ்பவை. ஆயினும் நிலத்தினும் உயிர் வாழ இயலும், பார்க்க இயலும். இவைகளின் கண்கள் இதற்கெனச் சில விசேஷ அமைப்புகளை உடையவை. அத்துடன் குளிர் இரத்தப் பிராணிகளான இவைகள் நீரினுள்ளேயே இருப்பதால் கண்கள் தகுந்த குளிர்ச்சியைப் பெற்றிருக்கும். இத்தகு சிறப்புகள் கருதியே இவற்றைப் பயன்படுத்துமாறு கூறியுள்ளார் எனக்கொள்ளலாம்.

எலியாலம்பால் – எலியால் என்பது காட்டாமணக்காகும். இதன் இலைப் பகுதிகளைத் தண்டிலிருந்து ஒடிக்க, கைப்பட்ட இடத்தில் ஒருவிதச் சத்துள்ள திரவம் வடியும். இதுவே எலியாலம் பாலாகும்.

நீர்க்காக்காய்

33. வாழவே நீர்க்காக்காயைப் பிடித்து வந்து
மக்களே தண்ணீரில் வேக வைத்து
தாழப்பா நெய்யெடுத்துத் தீப மேற்றச்
சாற்றுகிறேன் செம்பருத்திச் சாறு வாங்கிச்
சூழப்பா புத்தோட்டில் தடவி யாரச்
சுகமாக அஞ்சுதரந் தடவி வைத்துக்
கேளப்பா காக்கைநெய்யி லெரித்து வாங்கிக்
குழப்பியே கண்ணிலிடத் திறக்குங் காணே.

பொ. சு:

நீர்க்காக்கையினைத் தண்ணீரில் வேகவைத்தெடுத்த தைலம் ஊற்றித் தீபமேற்ற வேண்டும். புதிய ஓட்டில் செம்பருத்திச் சாற்றினை உலர, உலர ஐந்து முறை தடவி, மேற்கூறிய தீபத்தால் இதனை எரித்து மையாக்கிக் கண்ணிலிடக் கண்திறக்கும் என்கிறார்.

பேய்ப்புடல், மூக்குறட்டை

34. காணவே பேய்ப்புடலைச் சமூலம் வாங்கிக்
கருக்கியே ஏரண்டத் தைல மூட்டிப்
பூணவே கைதனிலே போட்டுக் கொண்டு
போதமின்றிப் பாத்திடவே தோற்றுங் கண்டாய்

நாண மன்றி மையொன்று மூக்கறட்டை
நயமாகச் சோமவாரங் காப்புக் கட்டிக்
கோணப்பா செவ்வாயில் கோழி யொன்று
கொண்டுவந்து பலிகொடுத்துக் கொள்ளு கொள்ளே

பொ. சு:

பேய்ப்புடலையின் சமூலம் கொண்டு வந்து கருக்கி, ஆமணக்கெண்ணையில் தோய்த்துக் கையிற் பூசிடக் காட்சி திறக்கும் என்கிறார்.

மூக்கறட்டை என்ற மூலிகையைச் சோமவாரத்தில் காப்புக் கட்டி, செவ்வாய்க்கிழமையன்று கோழி ஒன்று பலி கொடுத்துப் பறித்துக் கொள்ள வேண்டும் என்கிறார்.

சொ. வி:

பேய்ப்புடலை – புடலை வகையைச் சேர்ந்தது. கொடியாகப் படரும். புடலையை ஒத்த இலை அமைப்புடையது. ஆனால் கரி சமைக்க உதவும் காய் தராது. ஜுரத்துக்குக் கஷாயமிட்டுத் தர உடனே குணப்படுத்தும்.

மூக்கறட்டை – மூக்குறட்டை, முக்கிரட்டை முக்குறோட்டை, முக்குறட்டை, முக்கொரண்டி என்றும் அழைக்கப்பெறும். 'உடல் வன்மை தரும். தாம்பிரத்தை வெட்டையாக்கி இதே சாற்றில் மும்முறை புடமிட, தாம்பிரம் பற்பமாகும்' என இதன் குணத்தைப் 'பதார்த்த குண போதினி' விவரிக்கின்றது. பரிபாஷையாக 'அப்பளம்' எனக் குறிக்கப்பெறும்.

சோமவாரம் – திங்கட் கிழமை.

காப்புக்கட்டி – ரகைஷ கட்டி. எந்தக் காரியத்தைச் செய்ய முனைந்தாலும் அந்தக் காரியம் கைகூடத் துணை புரியுமாறு கடவுளை வேண்டிக் கட்டும் மஞ்சட் கயிறாகும். 'காப்பு' என்ற பெயரில் ஒரு செடி வகை உண்டு. இதன் பூ வெண்ணிறமாய்ப் பஞ்சுபோல் இருக்கும். தைத்திருநாளான்று அதிகாலை உழவர்கள் தமது நெல்வயல்களின் ஈசான மூலையில் (வடகிழக்கு) இச்செடியினையும், வேப்பிலைக் கொத்துகளையும் ஒரு கட்டாகக் கட்டிப் போடுவதை இன்றும் காணலாம். இதே போல் நெற்கதிர் அறுவடைக்கு முன்தினமும் இவ்வாறு காப்புக் கட்டல் உண்டு என்பதும் அறியத்தக்கது.

'பயிரினங்களுக்கும் உயிருண்டு'[48] என்று தமிழினம் உணர்வு பூர்வமாக நம்பியிருக்கின்றது. 'நாளை நின்னைப் பறித்துப் பயன்படுத்தப் போகிறேன்'[49] - என்பதனை முன் கூட்டியே அதற்கு அறிவிப்புச் செய்தல் போல் இக்காப்புக்கட்டல் வழக்கம் வழி முறையாய் நிகழ்ந்து வந்திருக்கின்றது. இரட்சையாக மஞ்சள் நூலைக் கட்டுதலும் காப்புக் கட்டல் என்றே அழைக்கப் பெறும்.

கோழியொன்று கொண்டுவந்து பெலி கொடுத்து – பேய்ப் புடலையைப் பறிக்கு முன் திங்கட் கிழமை காப்புக் கட்டிச் செவ்வாய்க்கிழமை கோழியினைப் பலி கொடுத்தே பறிக்க வேண்டும் என்கிறார். 'இரத்தம் சிந்தி உன்னை அடைகிறேன்' என அதன் கண்முன் நிரூபித்துக் காட்டல் போல் இம்முறை செயல்படுத்தப் பட்டுள்ளது எனலாம்.

ஆடுதின்னாப் பாளை

35. பெலிகொடுத்துப் பிடிங்கியதை யரைத்து நன்றாய்ப்
பேறாக நிழலிலே யுல(ர்)த்தி மைந்தா
கெலியெடுத்த செம்பனையை முக்கால் சுற்றிக்
கிரகித்துக் காச்சியதைப்[50] பிழிந்து கொண்டு
ஒலியெடுத்து உண்டை யைத்தா னிதிலுரைத்து
உள்ளங்கை முகத்திடத் திறக்குங் கைதான்
பெலியெடுத்த புத்தின்மே லாடு தின்னாப்
பாளைநின்றால் சமூலமுமே பிடிங்கிக் கொள்ளே.

பொ. சு:

பலி கொடுத்துப் பிடுங்கிய மூக்கறட்டை மூலிகையை நன்றாக அரைத்து நிழலிலே உலர்த்தி உருண்டை செய்து வைத்துக் கொள்ள வேண்டும். செம்பனையை மூன்று தரம் வலம் வந்து பறித்துக் காய்ச்சிச் சாறு பிழிந்து, இதில் முன் உலர்த்தி வைத்த உருண்டையை உரைத்து, உள்ளங்கை முகத்தில் தடவக் கை திறக்கும் என்கிறார். அடுத்து, பலி கொடுத்துப் புற்றின் மேல் இருக்கும் ஆடுதின்னாப் பாளையின் சமூலத்தைப் பறித்துக் கொள்ள வேண்டும் என்கிறார்.

---

48. அறிவு பூர்வமாக ஜெகதீஸ் சந்திர போஸ் 19ஆம் நூற்றாண்டில் நிரூபித்தார்.
49. "பண்டைக்காலத்தில் அகத்தியர் போன்ற சித்தர்கள் மூலிகைகளுடன் பேசியதாக நூற்கள் குறிப்பிடுகின்றன. இருபதாம் நூற்றாண்டில் வாழ்ந்த செடிகொடிச் சித்தர் 'லூதர்பர்பாய்க் (அமெரிக்கர்) மூலிகைகளுடன் பேசுவதைக் கண்டதாக நண்பர்கள் குறித்துள்ளனர்." ஆ. இரா. கண்ணப்பர், மூலிகை மணி.
50. பா. பே. கசக்கியதை, செ. I.

சொ. வி:

நிழலிலே உலர்த்தி - நிழலில் உலர்த்துவது பல பயன்கள் கருதியாகும். ஒரேயடியாகக் காய்ந்து கருகிப் போகாது. குளுமைத் தன்மையைச் சிறிதும் இழக்காது. சத்துகள் வெளியேறி விடாது காப்பாற்றப்படும். பக்குவத்துக்கு ஏற்றபடி, சீராக, மெதுவாய் உலரும்.

உள்ளங்கை முகம் - மணிக்கட்டிலிருந்து விரல்கள் வரை 'புறங்கைக்கு உட்புறமாய் உள்ள அனைத்தும் உள்ளங்கையே. நடு உள்ளங்கையில்' - என்பதைத் தெளிவுபடுத்த 'உள்ளங்கை முகம்' எனக் குறிப்பிட்டுள்ள நயம் போற்றத்தக்கதாக உள்ளது.

ஆடுதின்னாப்பாளை - 'அதல மூலி' 'பாதாள மூலி'[51] - என மருத்துவ நூற்களில் குறிக்கப்பட்டுள்ளது. 'புழுக்கொல்லிப்பூடு' ஆகும். ஆடுகளால் மிகவும் விரும்பித் தின்னப்படுவது பாலாட்டாங் குழையே ஆகும். அவ்வினத்தைச் சார்ந்த இதனை மட்டும் ஆடகள் தின்னாத காரணத்தால் இப்பெயர் எழுந்தது. முள்ளிருக்கும். குத்துச்செடியாய் வளரும்.

பொன்னான்காணி, சிறுகீரை

36. **கொள்ளடா சட்டியிலே கருக்கிக் கொண்டு**
கூசாம லேரண்டத் தயில மூட்டி
அள்ளடா கையிலிடு பாரு பாரு
அருசனமு மஞ்சனமு மடுத்துக் காணும்;
விள்ளுவே னின்னமொன்று பொன்னான் காணி
விரைவினுடன் முன்போலே கருக்கிப் பாரு
துள்ளடா சிறுகீரை வேர்கருக்கிச்
சொன்னமுறை முன்போலே காணு முண்மை.

பொ. கு:

பிடுங்கிய அவ்வாடுதின்னாப் பாளையின் சமூலத்தைச் 'சட்டியிலே கருக்கி' ஆமணக்கெண்ணை ஊட்டிக் கையிலிட்டுப் பார்க்க, மஞ்சளும் மையும் அடுத்துத் தோன்றும் என்கிறார். அறுவகைச் சமய மக்களையும் இனம் பிரித்து அறிய இயலும் மை கிட்டும் என்றும் பொருள் கொள்ளலாம்.

இதேபோல் 'பொன்னான் காணி' சிறுகீரை வேர் கருக்கி முன் கூறிய முறைபோல் செய்து பார்க்க அவ்வாறே தோன்றும் என்கிறார்.

---

51. சுவடி எண் 1868, மருத்துவ அகராதி, செ.

சொ. வி:

அருசனம் – அரிசனம், மஞ்சள், அதாவது மஞ்சள் நிறம், மை நிறம் ஆகியவை கலந்த நிறம் தோன்றும் என்பதாம்.

பொன்னான் காணி – பொன்னாங்கண்ணி எனவும் அழைக்கப்படும். உடலுக்குப் பல நலமும் அளிக்கும் கீரை வகையில் தலையாய இடம் வகிப்பது. இதன் பூ மஞ்சள் நிறமாக இருக்கும்.

சிறுகீரை – கீரை வகையில் ஒன்று. இலையின் வடிவத் தன்மை கருதி அமைந்த காரணப் பெயராகும். 'மூர்த்தி சிறியதானாலும் கீர்த்தி பெரிது போல' இதன் குணம் அளவிட இயலாது. எளிதில் செரிக்கக் கூடியது. சிறந்த மலமிலக்கி!

வெள்ளெருக்கு

37. **உண்மையின்னஞ் சொல்லுகிறேன் வெள்ளெருக்கு மூலம்**
உத்தமனே கரிப்பானி லரைத்துக் கொண்டு
வண்மையென்ன புத்தோட்டில் வத்த வத்த
வரிசையா யடிக்கடிதான் தடவி வைத்துப்
பெண்மை யெ(ன்)ன நாலுதிறந் தடவி யாற்றிப்[53]
பேரான செம்பருத்தித் திரி திரித்து
வெண்மையெ(ன்)ன நிம்பநெய் விட்டுத் தீப
விளக்கேற்றி மைகூட்டிக் குழைத்து வையே.

பொ. கு:

வெள்ளெருக்கின் வேரினைக் கரிப்பான் சாற்றில் அரைத்துப் புதிய ஓட்டின் பின்புறம் உலர, உலர நன்கு தடவி வைக்க வேண்டும். செம்பருத்திப் பஞ்சில் திரி செய்து நான்கு முறை மேற்படி சாற்றில் தோய்த்தெடுத்து, வேப்பெண்ணெய் விட்டு ஏற்றிய விளக்கால் புத்தோட்டில் பூசிய சாற்றினை எரித்து மைசேர்த்துக் கொள்ள வேண்டும்.

சொ. வி:

வெள்ளெருக்கு – எருக்கு வகையுள் ஒன்று. பலவித நோய்களுக்காகும் சிறந்த மூலிகை. இச்சிறப்புத் தன்மை கருதியே இறைவன் திரு முடியில் வைத்துப் போற்றப்படும் பேற்றினையும் இது பெற்றுள்ளது.[54] மல்லிகை போன்று வெண்ணிறப் பூப்பூக்கும்.

53. பா. பே: 'பெண்மயிலா ருதிரந்தன்னைத் தடவியாற்றி', செ. I.

54. சிவனுக்கு உரியது. "வெள்ளெருக்கஞ் சடைமுடியான்" என்று கூறும் கம்பராமாயணம்.

கரிப்பான் – கையாந்தகரை, கரிசாலை, கரிசலாங்கண்ணி, பிருங்கா எனப் பல பெயர்களால் இது அழைக்கப்படுகின்றது. காய சித்தி நல்கும் உயர்ந்த மூலிகையாகும். உடலுக்குப் பொன் வண்ணத்தையும் யாளியை ஒத்த வலிமையையும் அளிக்கக் கூடியது.

இதில் மஞ்சள் நிறப் பூக்கள் கொண்ட பொற்றலை அல்லது மஞ்சள் கரிசலாங்கண்ணி என்ற ஒருவகையும் உண்டு. செந்தூரங்கள் செய்ய இதன் சாறு பயன்படுத்தப்படும்.[55] சோகை, பாண்டு, காமாலை, குன்மக்கட்டி இவற்றை இச்செந்தூரங்கள் குணப்படுத்தும். இதன் சூரணத்தை உண்ணப் புத்தி தெளிவுண்டாகும்; ரத்தம் விருத்தியாகும். மண்டூரம், அயம், அயக்காந்தம் இவைகளை இச்சாற்றினால் அரைத்து ஐந்து புடமிடச் செந்தூரிக்கும்.

நிம்ப நெய் – வேப்பெண்ணையாகும். வேம்பின் விதையினின்றும் இந்த எண்ணை தயாரிக்கப்படும். வேப்பமரத்தின் அனைத்துப் பாகங்களும் மருந்துக்குப் பயன்படுத்தக் கூடியவை. அனைத்து நோய்களுக்கும் பலவித முறைகளில் பய்ன்படுத்தப் படுவதும் ஆகும். சர்வரோக நிவாரணி. இத்தன்மை கருதியே 'மாரியம்மன்' என்ற தனிப்பட்ட ஒரு தெய்வத்துக்குரியதாக இதனை இந்து சமயத்தார் உயர்த்தி வைத்துள்ளனர். இதன் பட்டைக் கஷாயம் மதுமேகத்தை ஒழித்துக் காயத்தை வலுவடையச் செய்யும். விஷக்கடி, அம்மைநோய், சயரோகம், சுவாச காசம், இளைப்பு, ஊதுமந்தம், அஜீரண சுரம், இன்புளுயென்சா எனும் விஷக் காய்ச்சல், வயிற்று உப்பிசம், பித்த மயக்கம், நாய்க்கடி எனப் பலவித நோய்களைக் குணப்படுத்தும் ஆற்றல் மிக்கதாகும்.[56] இவ்வாற்றல் கருதியே இது மரங்களிலேயே உயர்ந்தது எனச் சாத்திரங்கள் இயம்புகின்றன.

இதில் மலைவேம்பு, சிவனார் வேம்பு, நிலவேம்பு எனப் பல வகைகள் உண்டு.

38. **குழைத்திடுவாய் வேப்பெண்ணை கொண்டு நீயும்**
கூசாம லெலியாலம் பருப்பு னாலு
குழைத்திதனை மையோடே குழம்பிக் கொண்டு
கூசாமல் கையிலிட்டுப் பாரு பாரு
அழைத்துடைய அசமுகிர்த ளாடுதின்னாப் பாளை
அப்பனே கவுதும்பை கீழ்காய் நெல்லி

---

55. வி. பலராமய்யா, பதார்த்த குண போதினி.

56. எஸ். ஏ. சூசை ராஜா, வேம்பு, துளசி வைத்தியம்.

வளைத்திடுவாய் சத்திசா ரணையு மேனி
மைந்தனே முக்குறட்டை பேய்ப்பு டாலே.

பொ. சு:

முன் பாடலில் கூறிய மையினை வேப்பெண்ணையில் குழைத்துக் கொண்டு, காட்டாமணக்கின் பருப்பு நான்கினை உடைத்து நொறுக்கி, இந்த மையுடன் சேர்த்துக் கையிலிட்டுப் பார்க்க வேண்டும்.

அடுத்து, ஆடுதின்னாப்பாளை, கவிழ்தும்பை, கீழ்காய் நெல்லி, சத்தி சாரணை, குப்பைமேனி, முக்குறட்டை, பேய்ப்புடல் ஆகியவற்றைச் சேகரித்துக் கொள்ள வேண்டும்' என்கிறார்கள். செய்ய வேண்டுவதை இனி வரும் பாடல்களில் கூறுகின்றார்.

சொ. வி:

அசமுகிர்த னாடு தின்னாப் பாளை – அசம் - ஆடு. உகிர்தன் - நகத்தை உடையது. ஆடு தின்னாதபடி கூரிய முட்களை உடையதாதலின் இவ்வடைமொழி தரப்பட்டது எனலாம்.

கவுதும்பை – கவிழ்தும்பை; தும்பை வகையுள் ஒன்று. இலை கவிழ்ந்த நிலையில் இருப்பதால் இப்பெயர் ஏற்பட்டது. பெருந்தும்பை, சிறு தும்பை என்ற வகைகளும் இவ்வினத்தில் உண்டு.

கீழ்காய் நெல்லி – சித்த வைத்தியத்தில் ஒரு சிறந்த இடத்தை வகிக்கும் மூலிகை வகையாகும். 'கீவாநெல்லி' எனப் பேச்சு வழக்கில் அழைக்கப்பெறும். இதன் இலையை வெள்ளாட்டின் பாலில் அரைத்து, அதிகாலையில் ஏழு நாட்கள் கொடுத்துவர, மஞ்சட்காமாலை நோயை வியக்கத்தக்க முறையில் குணப்படுத்தும். தேகத்தின் வெப்பம் தணித்துக் குளிர்ச்சி நல்கும். பித்தம் தீர்க்கும்.

மேனி – குப்பை மேனி, பொதுவாக, குப்பைகள் உள்ள இடங்களில் இது செழித்து வளர்வதால் இடம் நோக்கி இப்பெயர் இடப்பெற்றுள்ளது. இதன் இலைகளின் அருகில் மணிகள் போன்ற அமைப்புகளுடன் அரும்புகள் காணப்படும். 'குப்பைமணி' என்பதே குப்பைமேனி ஆனது. இதன் இலையை நன்கு அரைத்து உடலில் பூசி வரச் சொறி, சிரங்கு, படை முதலியவற்றை அறவே நீக்கித் தோலுக்குப் பளபளப்பு நல்கும்.

39. **புடலோடு காட்டுமல்லி யிவையெல் லாந்தான்**
பேர்சமனாய்ச் சமூலமுநீ கொண்டு வந்து

விடலோடு சட்டியிலே கருக்கிக் கொண்டு
மென்மையுள ஏரண்டத் தயில மூட்டிக்
கடலோடு கையிலிட்டுப் பாரு சொன்னேன்
காரணமாம் கொடிநெட்டி மூலம் வாங்கி
முடலோடு வெண்காக்கி லுகித மாகு
முற்றதொரு கவுதும்பை யமுக்கி ராவேர்.

பொ. சு:

முன்பாடலில் கூறியவற்றுடன் காட்டு மல்லிகையையும் சேர்த்து அரைத்துச் சமூலத்தையும் சமமாகச் சட்டியிலே கருக்கி, ஆமணக்கந் தைலம் சேர்த்துக் குழப்பிக் கையிலிட்டுப் பார்க்க வேண்டும் என்கிறார்.

பின்னும் கொடி நெட்டியின் மூலம், வெண்காக்கட்டான், கவிழ்தும்பை, அமுக்குராவேர் ஆகியவற்றைப் பறித்து வைத்துக் கொள்ள வேண்டும் என்கிறார்.

சொ. வி:

காட்டு மல்லி – காட்டு மல்லிகை. மல்லிகையை ஒத்த இலை, பூ அமைப்புடையதாயினும் அதன் பூ ஒத்த மணம் இல்லாதது. புதர்க் காடுகளில் நன்கு வளரக் கூடியதாகையால் இப்பெயர் வந்தது.

கொடிநெட்டி – நெட்டிலிங்கமாகும். இது படர்கொடி வகையைச் சேர்ந்தது.

வெண்காக்கம் – வெண் காக்கட்டான் என்ற மூலிகையாகும். வெண் காக்கணான், காக்கணான் வெள்ளை, காக்கணன், கரிசன்னி, சங்கு புஷ்பி என்றும் அழைக்கப்பெறும். வெண்ணிறப் பூப்பூக்கும் குழந்தைகளுக்கான மருந்துகளில் மிகுதியாகப் பயன்படுத்தப்படும். மாத்திரைகள், எண்ணெய்களில் சேர்ப்பர். சுரம், கண்ணோய் நீக்கும். மலத்தைக் கழிக்கும். கருங்காக்கட்டான் என்ற ஒரு வகையும் இதில் உண்டு.

உகிதம் – உசிதம்?

அமுக்குரா – முக்குறட்டை என்பதே ஆகும். அசுவம், அகவு எனவும் மருத்துவ நூற்களில் குறிப்பிடப்பெறும்.

40. வேரான பேயத்தி யிவையெல் லாந்தான்
விபரமுடன் சட்டியிலே கரிக்கிக் கொண்டு

வார(ர)க எரண்டத் தயில மூட்டி
மையாகக் கையிலிடத் திறக்குங் கண்டாய்
பாரில்நின்று வெள்ளெருக்கைச் சமூலம் வாங்கிப்
பருவமுட னிப்படித்தான் மையைக் கூட்டிப்
பூராய மாகவே கையில் தீட்டப்
பொருள்களென்ற பொருளெல்லாம் பொருந்துந் தானே.

பொ. சு:

முன் பாடலில் கூறியவற்றுடன் பேயத்தி வேரினையும் (காட்டத்தி) சேர்த்து முறைப்படி சட்டியிலே கருக்கி ஏரண்டத் தயிலம் இட்டுக் கையில் போடக் காட்சி திறக்கும் என்கிறார்.

இதுபோல் வெள்ளெருக்கின் சமூலத்தைக் கொண்டு வந்து, பக்குவமாய் மை சேர்த்துக் கையில் பூசிப் பார்த்தாலும் உலகில் பொருள்கள் என்று தோன்றும் அனைத்துத் தோற்றத்தையும் காண இயலும் என்கிறார்.

41. பொருந்துதற்கு வெள்ளெருக்கிற் சேர்க்கு மெண்ணை
பிரிசமுடன் நல்லெண்ணை மற்றொன் றாகா
பொருந்துதற்குச் சிரட்டையிலே மையைத் தேய்த்துப்
பேராமல் பாத்திருக்கப் பெரு(மை) கேளே
பொருந்துதற்குத் தேவிதனைப் போற்ற வேணும்
பேய்மக்காள் தேவியென்றா லஞ்சனா தேவி
பொருந்துதற்கு அவளுக்குப் பிரிய மேது
பேசாத வத்துவிலே பிரியம் பாரு.

பொ. சு:

வெள்ளெருக்கில் சேர்த்த மையினை ஒரு சிரட்டையில் எடுத்துக் கொண்டு, நல்லெண்ணை கலந்த வெள்ளெருக்கந் தைலத்தால் குழப்பிப் பயன்படுத்த வேண்டும் என்கிறார். மை வகைகள் பொருந்திவர, எந்த மையினைப் பயன்படுத்தும் போதும் அஞ்சனா தேவியை வணங்க வேண்டும் என்கிறார்.

சொ. வி:

பிரிசம் – பிரியம், அதாவது விருப்பம்.

சிரட்டை – கொட்டாங்கச்சி எனப்படும் தேங்காய் ஓடு.

அஞ்சனாதேவி – அம்பிகை நிறம் கறுப்பு ஆதலால், அஞ்சனாதேவி என்றால் மை போன்ற தேவியாகிய பரை என்பதாம்.

வத்து – வஸ்து. அதாவது பொருள்.

சாபந் தீ(ர்)ந்தது

42. பாரப்பா யுகங்களிலே பதினெட் டாகும்
பாங்கான கலியுகத்தில் காட்சி யாகும்
பாரப்பா கலியுகத்தில் சித்தி முத்தி
பார்த்தவுடன் பலிக்குமடா வுரைப்பு வேணும்
பாரப்பா நூற்கெல்லாஞ் சாப முண்டு
பரையுமன்று என்னூற்குச் சாபந் தீர்த்தாள்
பாரப்பா இதுவெல்லாஞ் சத்தியமே யாகும்
பாத்திடுவாய் பூரணத்தின் பதவி தானே.

பொ. சு:

யுகங்கள் மொத்தம் பதினெட்டாகும். இது கலியுகம். இக்கலியுகத்தில் சித்திகள் எளிதில் கைகூடும். நூல்கள் அனைத்திற்கும் சாபம் உண்டு. ஆனால் பராபரத்தாய் எனது இந்த நூலுக்கு அன்றே சாபம் இல்லாது தீர்த்து விட்டாள். இந்நூலுள் கூறுபவை அனைத்தும் சத்தியமான வார்த்தைகளாகும். சித்திகளின் முழுப்பயனையும் இதன் மூலம் அடைவாயாக என்கிறார்.

சொ. வி:

யுகங்களிலே பதினெட்டாகும் – யுகங்கள் பதினெட்டு; புராணங்கள் பதினெட்டு; சித்தர்கள் பதினெட்டு; தேவாசுரப் போர் பதினெட்டு ஆண்டுகள் நடந்தது; இராம, இராவண யுத்தம் பதினெட்டு மாதங்கள் நடந்தது; மகாபாரதப் போர் 18 நாட்கள் நடந்தது என இவ்வாறு கூறுவது ஒரு மரபாகப் போற்றப்பட்டு வந்துள்ளது.

கலியுகம் – கிருத, திரேதா, துவாபர, கலியுகம் என்ற சதுர் யுகத்தில் நான்காவது யுகமாகத் தற்பொழுது நடைபெற்று வரும் யுகம் குறிக்கப்படுகிறது. இக்கலியுகம் 1000 தேவ வருடமும், சந்தி, சந்தியம்சத்தில் 200 தேவ வருடமும் கொண்டதாகும். மனிதர்களின் 365 வருடம் கொண்டது ஒரு தேவ வருடமாகும்.[57]

பாரப்பா கலியுகத்தில் சித்தி முத்தி பார்த்தவுடன் பலிக்குமடா – கலியுகத்தில் அதர்மம் தலைவிரித்தாடுதலால் சிறு தருமம் செய்தவனும் மிகப் பெரும் பலனை அடைவான் எனப் புராணங்கள் இயம்புகின்றன. "கலியுகத்தில் எவனாவது ஒருவன்

57. வாசு பிரசுரம், ஸ்ரீ விஷ்ணு புராணம்.

அற்பமான தரும யத்தனம் செய்வானாகில், கிருத யுகத்தில் மாபெரும் தவம் செய்து அடையும் புண்ணியத்தை அவன் அடைவான்" என ஸ்ரீவிஷ்ணு புராணம் இயம்புகின்றது.

நூற்கெல்லாம் சாபமுண்டு – ஒரு நூல் அரங்கேறிய பின்னும் சில சூழ்நிலைகள் காரணமாய், மக்கள் மத்தியில் பரவாமல் நின்றுவிடும் தன்மையை நூலுக்குள்ள சாபம் எனக் குறிப்பிடுகின்றார். கம்பராமாயணம் இருநூறு வருட காலம் இருட்டடிப்பு செய்யப்பட்டிருந்தமை நினைவு கூரத் தக்கது.

பூரணத்தின் பதவி – சித்திகளால் கிட்டும் முக்தி நிலையைக் குறிப்பிடுகின்றார்.

43. **பதவியென்ற பலகதம்பத் திரட்டுச் சூத்திரம்**
பாத்திடுவாய் தப்பாமல் பலித்துக் கொள்ளும்
உதவி செய்வார் வானோரும் பூவுள்ளோரும்
உனைப்போற்றி நிற்பார்கள் சத்தி யாவாய்
சிதவில்லை யென்றெண்ணும் பிராண யோகஞ்
சிக்கினால் போகரென்று சொல்ல லாகும்
மதவிலே போட்டிருந்து சீப்பு விட்டால்
வாரிவரும் விரைந்துண்டு வாழ லாமே.

பொ. சு:

'பல கதம்பத் திரட்டுச் சூத்திரம்' என்ற நூலைப் பார்த்துச் செய்யும் அனைத்தும் தப்பாமல் பலிக்கும். வானோர் உதவி செய்வார்; பூவிலுள்ளோர் போற்றி நிற்பார்கள். நீயே சக்தியாவாய். பிராணயோகம் கையில் சிக்கி விட்டால் அனைத்து இன்பத்தையும் அடைந்த போகரும் நீயேயாவாய். மதகிலே சேமித்து வைத்த நீர் சீப்பினைத் (சீப்பு நீரை அடைத்துத் திறக்க உதவும் ஓர் அமைப்பு) திறந்துவிட அனைத்தையும் வாரிக் கொண்டு வருவது போல் அமிர்தம் பொங்கிவரும். விரைவாக அவற்றை உண்டு இனிதாக வாழலாம் என்கிறார்.

சொ. வி:

பிராணயோகம் – 'பிராணாயாமம்' என்றும் கூறலாம். உடல் சக்தி, மனோ சக்தி என்று இருப்பது போல, 'பிராண சக்தி' என்ற ஒரு மூன்றாவது சக்தி உடலில் இயங்குவதாக யோகிகள் கருதுகின்றனர்.[58] 'பிராணாயாமம்' அல்லது 'பிராணயோகம்' எனும்

58. மூலிகை மணி.

பயிற்சியின் மூலம் பிராண சக்தியை அடையலாம் என்பது அவர்களின் நம்பிக்கை. யோக வழியில் நான்காவது படி இது.[59] பிராணனை அடக்கி ஆள்வதே உண்மைப் பிராணயோகம். எங்கெங்கு சலனங்கள், மாறுபாடுகள் தோன்றுகின்றனவோ அங்கெல்லாம் பிராணன் உழைத்து வருவதை அறியலாம்.

இப்பயிற்சியால் தத்தளித்து ஓடும் மனம் நிதானம் பெற்று அடங்கும், கோப, தாபாதி, ஷடவர்க்கங்கள் அமைதிபெற்று இச்சைக்கு உள்ளடங்கி ஒழியும். ரத்தம் மிகுந்த தூய்மை பெறும். நரம்புகள், நரம்பு வலைகள், சக்கரங்கள் அடக்கமும், சாந்தியும் பெறும். மூச்சு முழுமை அடையும். துள்ளித் துடிக்கும். நாடி ஒழுங்கு முறையுடன் அமைதியாகச் செல்லும். சாந்தி உயரும். சத்வ குணங்கள் மேலிடும். சகல ஆரோக்கியமும் கிட்டும்.

'கற்பமுண்டு கொண்டு பிராணயோகம் செய்ய வேண்டும். கற்பமுண்ணாது, பிராணயோகம் மட்டும் செய்பவன் செத்தே போவான்' என அகத்திய முனி கூறுகிறார்.[60]

"செப்புகிறேன் பிராணாயம் சித்தி யாகச்
சிவன்சொன்ன கற்பமுன்னே தின்றிட்டால் சித்தி
ஒப்புகிறேன் கற்பத்தை விட்டு நீயும்
யுகம் வரைக்கும் பிராணயம் பண்ணினாலும்
தப்புகிறேன் என்றல்லோ சீவன் தப்பிப்போகும்."

என்கிறார்.

44. வாழலாம் பதினெட்டு யுகங்கள் தோறும்
வாலைதனை யறிந்தாக்கால் மயக்கந் தீரும்
ஆளலாம் ஊருக்கே தீத மெல்லாம்
அப்போவல்லோ வீடாளு மடிக்கீழ் நிற்கும்
கோளலா மலவரையில் நின்று கொண்டு
குறியழித்து நெறியழித்துக் கொல்லும் கொல்லும்
நாளெல்லாங் கத்தியே பொரு ளுரைத்தேன்
நாடாத வஞ்சனைசெய் நாட்டத் தோர்க்கே

பொ. சு:

வாலையினை அறிந்து அமிர்தம் உண்டுவிட பதினெட்டு யுகங்கள் வாழலாம். ஊருக்கு அதீதமாய அனைத்தையும் ஆளலாம்.

---

59. யோகாசார்யா ஸ்ரீ சுந்தரம், ஆனந்த ரகஸ்யம்.
60. வி. பலராமய்யா, முப்பூ குரு.

அப்போது வீட்டுலகம் நம் காலடியின்கீழ் வந்து நிற்கும். மும்மலங்களாகிய எல்லையில் அல்லது மலையில் (வரை) நின்றால் அது கொள்கையை, வழியை அழித்துக் கொல்லும். இவ்வரிய உண்மைகளைக் கள்ளமுள்ள மனத்தோர்க்காகச் சத்தமிட்டு நா வறளக் கூறி நாளை வீணாக்கி விட்டேன் என்கிறார்.

45. நாட்டமென்ற சந்திரனாம் பாலை யுண்டால்
நல்வினையுந் தீவினையும் நாச மாகும்
கோட்டமென்ன வேடமென்ன சடைதா னென்ன
கோலோடு கோலென்ன குறிதா னென்ன
வாட்டமின்றிச் சீஷரென்ன குருமூர்த்த மென்ன
வாய்மூடு மவுனமென்ன மார்க்க மென்ன
பாட்டாகு வேதமென்ன சாத்திரந்தா னென்ன
பலவிதமா யிறந்தார்கள் பாசத் தோரே.

பொ. சு:

கோயில்கள், அங்கு சென்று வணங்க சடை, முடி வளர்த்துக் கொள்ளும் வேடங்கள்; சீடர், குரு, மௌன விரதங்கள், பாடல் வடிவிலுள்ள வேதங்கள், சாத்திரங்கள் என்று பல்வேறு மார்க்கங்களைக் கடைப்பிடித்து உலக உயிர்கள் மீது உண்மையான பற்றுள்ளோர்களும் சந்திரனாம் பாலை உண்ண நல்வினை, தீவினை அழித்து நலப்படலாம் என்ற உண்மையான பாதையை உணர்ந்து கொள்ளாது வீணாக உயிர் துறந்தனரே என வருந்துகிறார்.

சொ. வி:

சந்திரானாம் பால் – சோமப்பால் அல்லது சோமபானம், அமிர்த பானம், ஆகாச பானம் என்றும் அழைக்கப் பெறும்.

'இவ்வமிர்தம் ஒரு செடியிலிருந்து எடுக்கப்படுவதாகவும், இதனை உட்கொள்வோருக்கு மரணம் என்பதே கிடையாது என்றும் ரிக்வேதத்தில் விளக்கப்பட்டுள்ளது, இவ்வேதத்தில் குறிப்பிடப்படும் அங்க அடையாளங்களுடன் கூடிய ஒரு செடியை வடநாட்டில் மருத்துவர்கள் கண்டறிந்து ஆய்வு செய்து வருகின்றனர்.'[61]

சோமபானம் என்பது உடலை அமிலமாக்கிச் சாகாத் தன்மை அளிப்பது என்றும், தேவர்களுக்கும் கிட்டாத இவ்வமிர்தம்

---

61. வி. பலராமய்யாவின் அமுத கலசம் (Bowl of Nectar) என்ற நூலிலிருந்து திரட்டிய கருத்துகள்.

மானிடருக்குக் கிடைக்கக் கூடியது என்றும் சித்தர் நூற்கள் வலியுறுத்துகின்றன.[62]

இதனை ஏசுநாதர் Water of Life' என்றும், இதனை அருந்துபவன் மரணமிலாப் பெரு வாழ்வு அடைவான் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

பல்வேறு ஔஷதிகளைப் போட்டுத் தேவர்களும், அசுரர்களும் பாற்கடல் கடைந்து அமிர்தம் எடுத்த புராணச் செய்தியும், மணிமேகலை பெற்ற அமுதசுரபியும் இவ்விடத்தில் நினைவு கூரத்தக்கவையாக உள்ளன.

'ஆழிகடைந்து அமுதம் ஆக்கறியார் அச்சலத்தில்
ஊழிபரன் உப்பெடுத்து ஊட்டறியார்
ஏழுசட்டை வாங்கி ரசம் கட்டறியார்
வாதிகள்தாம் வையகத்தில் தூங்கிவிழு வாரெனவே சொல்.'

என்ற 'யூகி முனி' பாடலும் இங்கு எண்ணிப் பார்க்கத் தக்கதாக உள்ளது.

46. பாசமுட னிருந்தாலும் பெரியோர் செய்கை
பதறார்கள் சிதறார்கள் பதியில் நிற்பார்
நேசமுடன் பரத்தோடே யொன்றிக் கொண்டு
நெடுங்காலம் வாழ்ந்திருப்பார் புவன மீதே
காசமற்ற கண்ணுடையோ ரவர்தா னப்பா
காணார்கள் கெதி கெட்ட கசடரென்றும்
ஓசையுற்ற பெருங்கடலி லலையைப் போலே
ஓயாமல் பிறந்திறந்தே யுழல்வார் தாமே.

பொ. சு:

உலக உயிர்கள் மீது மாறா அன்பு கொண்டவர்களாயினும், எடுத்த ஒரு காரியத்தைச் சிறிதும் பதறாமல், சிதறாமல் செய்து முடித்து ஒரு நிலையில் நிற்பதே பெரியோர் தன்மையாக இருந்தது. புவிமாந்தர் மீது பாசம் கொண்டவராயினும், பரம் பொருளுடனும் நேசத்துடன் ஒன்றி, இப்புவியில் நெடுங்காலம் அவர்கள்

62. சில மூலிகைகளிலிருந்து வாழ்வைப் பெருக்கும் அமிர்தம் தயாரிக்க மேனாட்டார் முயற்சி செய்து வருகின்றனர். திபெத்தில் வசிக்கும் லாமாக்கள் ஒருவித அமிர்தம் உண்டு 200 வயது வரை சாகாமல் இருப்பதையும் அறிய வருகிறோம்.

வாழ்ந்திருந்தார்கள். பிரகாசமற்ற நோக்குடையாரும், கசடர்களும் என்றும் இந்நிலையின் தன்மையை அறிந்து கொள்ள முடியாது. முடியாத அவர்கள் பெரிய கடலின் அலையைப் போன்று எப்பொழுதும் பிறந்தும் இறந்தும் உழன்று கொண்டே இருக்க வேண்டியதுதான் என்கிறார்.

சொ. வி:

காசம் – பிரகாசம். முதல் குறைந்து வந்தது. காசம் என்பது கண்ணோய் வகையுள் ஒன்று. இதனை வைத்தும் பொருள் கொள்ளலாம்.

தாளகம் வெள்ளி வித்தை

47. தானென்ற தாளகத்தின் போக்கைச் சொல்வேன்
தப்பாது தாளகமோ கழஞ்சி மூன்று
தேனென்ற சூதமுமோ கழஞ்சி மூன்று
செப்பும்வெள்ளைப் பாசாணங் கழஞ்சி மூன்று
வேனென்ற வெங்காரங் கழஞ்சி மூன்று
வியனாக விதுனாலு மெருக்கம் பாலில்
தீனென்ற விருசாமம் வெண்ணை போலத்
திறமாக அரைத்ததனை வழித்துக் கொள்ளே.

பொ. சு:

தாளகத்தின் போக்கினை இனிக் கூறுகிறார். தாளகம், சூதம், வெள்ளைப் பாஷாணம், வெங்காரம் என்ற நான்கும் முறையே மும்மூன்று கழஞ்சு எடுத்துக் கொண்டு, எருக்கம்பால் விட்டு இரண்டு சாமங்கள் வெண்ணை போல அரைத்து வழித்து வைத்துக் கொள்ள வேண்டும்.

சொ. வி:

தாளகம் – அரிதாரமாகும் ' Trisulphuret of Arsenic' என்று ஆங்கிலத்தில் அழைக்கப் பெறும். 'மால்தேவி', 'அரிப்பெண்' எனப் பரிபாசையாகக் குறிக்கப்பெறும். இது ஒரு இயற்கைச் சரக்கு. தாளத்தினால் குஷ்டரோகம், சயகாச சுவாசம், பறங்கிப்புண், மண்டை ரோகம் ஆகியன நீங்கும்.[63]

---

63. "தாளகத்தின் பேருரைக்கத் தாலுகவு னோய்குட்ட
நீளக்கு ளிக்காய்ச்ச னீர்க்கபங்க ளாகங்கொள்
துட்டப் பறங்கிப்புண் சூழுகண் மண்டைநோய்
கிட்டப் படுமோ கிளத்து"
பதார்த்த குண விளக்கம், பக்கம். 125

முறையோடு சுத்தி செய்யாது பயன்படுத்த மேற்சொன்ன நோய்கள் உடலில் உற்பவிக்கும். நோயின் தரம், மருந்தின் அளவு அறிந்து கொடுக்க வேண்டும். இல்லாவிடில் நோய் அப்பொழுது தீர்ந்தாலும், பின்னால், பலவித கண்டுகொள்ள முடியாத நோய்களுக்கு நோயாளி உட்பட்டு விடுவான்.

மருந்தின் பக்குவமின்மையினாலாவது, மிதமிஞ்சிய அளவினாலாவது, துர்க்குணம் தலைகாட்டத் துவங்கி விட்டால் காலதாமதமின்றி இதற்கு முறிவாகச் சுண்ணாம்புத் தெளிவுநீர், ஆவாரம்பூ, சீரகம், காசினிவிதை இவற்றின் கியாழங்களைக் கொடுத்து விட வேண்டும் என்றும் பதார்த்தகுண விளக்கம் (பக்கம் 31) தெளிவு படுத்துகின்றது.

தாளகம் எனப்படும் இவ்வரிதாரத்தில் சிவந்த அரிதாரம், மடல் அரிதாரம், பொன் அரிதாரம் என மூன்று வகை உண்டு.

மடல் அரிதாரத்தால் ஈளை, இருமல், கோழை, மலச்சிக்கல், கரப்பான் ஆகியன நீங்கும். பொன்னரிதாரத்தினால் மந்தார காசம், வாதசுரம், க்ஷயம், செய்யான் விஷம், குட்டம் ஆகியன நீங்கும்.

வெள்ளைப் பாசாணம் – பாஷாண வகையுள் ஒன்று. சீமைச் சுண்ணாம்பைப் போலிருக்கும். நீர்பட்டால் உள்ளுக்கு இழுத்துக் கொள்ளும். நெருப்பிலிட்டால் புகைந்து போகும். இது தற்காலத்தில் கிடைப்பது மிக அரிது.

இதனை நீர் விட்டு அரைத்துக் கடிவாயில் பூச, பாம்பு சன்னிவிடம் இறங்கும். முறைப்படி உண்டால் கபசுரம், திரிதோஷபாதம், துஷ்டபீநசம், வாய்ப்புண், சீழ்ப்புண் ஆகியன நீங்கும்.

இதற்கு முறிவாக ஆட்டுத் தோலைச் சுட்டெடுத்த சாம்பலை நீரில் கலக்கி வடிகட்டிக் கொடுக்க வேண்டும். இல்லாவிடின் பாகல் இலை, அவுரி இலை, மிளகு இவைகளைக் கியாழமிட்டுக் கொடுக்க வேண்டும்.

வெங்காரம் (Sodi Biboros)

திபெத், நேபாளம், ஐரோப்பா, பெரு தேசத்து ஏரிகளில் இறுகிக் கற்களாகப் பார்க்க அழுக்கு நிறமாகக் காணப்படும். சுத்தி செய்ய பளிங்கு நிறமாக ஆகும். இது நீரில் கரையும்; சாராயத்தில் கரையாது. இதனை வாயிலிட இனிப்போடு துவர்ப்பாக இருக்கும். சித்தர்கள் இதற்குச் சமமாக வைப்பு வைத்து வெங்காரம் தனியாகத்

தயாரிப்பதும் உண்டு. போகர் நூற்களில் இம்முறைகள் விவரிக்கப்பட்டுள்ளன.[64]

வெங்காரத்தினால் சொறி, அஷ்டகுன்மம், தினவு, இரத்த மூலம், ஒழுக்குக் கிராணி, பக்கவாதம், தந்தநோய், நாளவழியைத் தடுக்கின்ற மூத்திர கிரிச்சரங்கள், கபாதிக்கம், புழு, பாம்பு விஷம், சந்நிபாதம் ஆகியன நீங்கும்.

எருக்கம்பால் - எருக்கஞ் செடியின் இலைகளைக் கணுவிலிருந்து ஒடித்துப் பார்க்க, அதனின்று பாலின் நிறத்தை ஒத்த, அதனினும் சிறிது கெட்டியான பால் வடியும். இதுவே எருக்கம் பால் ஆகும்.

48. அரைத்தப்பா திருகுகள்ளிப் பாலை வாங்கி
அப்பனே சட்டியிலே விட்டுக் கொண்டு
அரைத்ததொரு சீலையிலே மருந்தைக் கூட்டி
அசைவுபெறத் தோலாந்திர மாகத் தூக்கி
அரைத்தந்தப் பால்வத்த எரித்து வாங்கு
ஆச்சரியஞ் செம்புபத்துக் கொன்று தூக்கு
அரைத்தசெம்பு வெள்ளியா முருக்கிப் பாரு
ஆகாகா சரிகை வெள்ளி ஆகுந்தானே

பொ. சு:

அரைத்த அம்மருந்தினை ஒரு சீலையில் கட்டித் தொங்கவிட வேண்டும். அதன் கீழ் ஒரு சட்டியில் திருகுகள்ளிப்பாலை ஊற்றி வைத்து, அந்தப் பால் வற்று மட்டும் எரிக்க வேண்டும். பால் ஆவியாகி மருந்துடன் கலக்கும். கலந்த அம்மருந்தினைப் பத்துப் பணஎடைச் செம்புக்கு ஒரு பணஎடை அளவாக விட்டு உருக்கிப் பார்க்க, அச்செம்பு சரிகை வெள்ளியாகும் என்கிறார்.

சொ. வி:

சீலை - சேலை என்று இன்று அழைக்கப்படும் மகளிர் ஆடையே. இங்கு சிறு அளவுடைய துணியைக் குறிக்கும்.

தோலாந்திரம் - துலா எந்திரம் என்பதே தோலாந்திரமாக ஆகியுள்ளது. தராசுத்தட்டுப் போல் உயரக்கட்டித் தொங்கவிடல் என்பதாம்.

---

64. கருத்துகள் - பதார்த்த குண விளக்கம், பதார்த்த குண சிந்தாமணியிலிருந்து பெறப்பட்டவை.

49. வெள்ளிபோல் வழலைதனைச் சுண்ண மாக்க
வெடியுப்பு நீர்தனிலே சவுக்கா ரத்தை
அள்ளியள்ளித் தெளித்து நன்றாய் ரவியில் வைக்க
அப்படியே பட்சமொன்று தினமும் வைக்கக்
கள்ளியுட நீர்போலே எண்ணை கக்கும்
கருப்பெல்லாம் வெளுப்பாகும் எண்ணை தானும்
உள்ளபடி திரும்பதனைக் கலவத்திட்டு[65]
ஒருசாம மமுரியினால் ஆட்டு ஆட்டே[66]

பொ. சு:

வெள்ளி போன்று வழலையைச் சுண்ணமாக்குவதற்கு, வெடியுப்பு நீரில் சவுக்காரத்தை அள்ளியள்ளி நன்றாகத் தெளித்து, பதினைந்து நாட்கள் சூரியனின் ஒளிபட வைக்க வேண்டும். அது கள்ளியின் நீர் போல எண்ணை கக்கிக் கருப்பெல்லாம் நீங்கி வெளுத்த நிறமாய் ஆகும். அந்த எண்ணையினை ஒரு கலவத்திலிட்டு அமுரியினால் ஒரு சாமம் வரை ஆட்டி எடுக்க வேண்டும் என்கிறார்

சொ. வி:

வழலை – 'சுண்ணக்கல்' (Calcium - Carbonate) ஆகும். சுண்ணாம்பு, சவுட்டுப்பு, சவுக்காரம், உவர்நீர் என்றும் வழங்கப்பெறும். இதனைப் பூநீறு (Soda - Carbonate) உற்பத்தியாகும் இடத்தில், மார்கழி மாதம் பௌர்ணமிக்குப் பின் பள்ளந்தோண்டி, அடியில் சோதித்துப் பார்க்க, உருண்டை வடிவமாக இக்கற்கள் கிடைக்கும். இதனை 'அண்டக்கல்', 'எட்டாம் மாதத்துப் பிண்டம்' என்ற பரிபாசைச் சொற்களால் குறிப்பர். உருண்டை வடிவத்துடன் சிறிது நீளமாகப் பளுவாக, பளிங்கு நிறத்துடன் உள்ளவையே சிறந்த கற்கள். ஒழுங்கற்ற வடிவத்துடன், தட்டையாகத் துவாரம் விழுந்து இருக்குமாயின், அதன் சத்து ஒரு காலத்தில் வெளியேறிவிட்டது என அறிந்து கொள்ள வேண்டும்.

இவ்வழலையைச் சுண்ணம் ஆக்கும் முறையே இப்பாடலில் கூறப்பட்டுள்ளது.

வெடியுப்பு – 'Potassium Nitras' ஆகும். களர் நிலங்களில் மழை பெய்து, அம்மண் சூரிய ஒளியில் உலர்ந்தபின், அதனை நெருப்பில் போட்டுப் பார்க்கச் சிடுசிடுப்போடு எரிவது கண்டு, அம்மண்ணைத்

65. பா.பே: "உள்ளிபோ லானபின்பு கலவத் திட்டு' செ. I.I.

66. "ஒரு சாம மம்மியிலே ஆட்டு ஆட்டே". செ. I.

தக்க சமயத்தில் வாரி எடுத்துத் தகுந்த முறைகளால் சுத்தி செய்து வெடியுப்பினைத் தயார் செயவர் என்று பதார்த்த குணவிளக்கம் (பக்கம 17-18) விவரிக்கின்றது.

வெடியுப்பு ஆண்சரக்காகும். இதற்குப் பெண் சரக்கு படிகமாகும்.

வெடியுப்பு பஞ்ச பூத வகையில் தேயுவில் அடங்கும். இது நாதம். இதற்கு விந்து சவுக்காரமாகும். வெடியுப்பினைக் கம்பிஉப்பு என்றும் கூறுவர்.

வெடியுப்பு தயாரிப்பு முறைகள் பற்றியும், பயன்படுத்தும் முறை பற்றியும் அதன்பயன் பற்றியும் விளம்பும் தனிப்பட்ட சுவடிகளும் உண்டு.[67]

சவுக்காரம் - 'Sapo Mollis' எனப்படுவதாகும். இது பூநீறு, சுண்ணாம்பு, எண்ணெய் முதலியவற்றின் கூட்டுறவாலானதாகும்.

இதன் பயன்பற்றி,

'கார்மேகத் துர்ப்படையும் கட்டிக் கரப்பனுடன்
சார்மேக ஊறற் றழும்பலறும் - சேர்மேகத்
தொட்டி வரும்நகத்தி னூற லகற்றிவிடும்
கட்டிச் சவுக்காரங் காண்"

என்ற பாடல் தெளிவுப்படுத்துகின்றது. இதன் பல்வேறு பயன்கள் பற்றிப் பதார்த்த குணவிளக்கம் (பக்கம் 107-108) தெளிவாக விவரிக்கின்றது.

கலவம் - கலுவம் எனப் பேச்சு வழக்கில் அழைக்கப்பட்ட மருந்தரைக்கும் கலமாகும்.

அமுரி - சிறுநீர்,[68] சிவநீர்,[69] சிவாம்பு, சிவத்தனீர்,[70] சடலநீர், அமரி என்று பல சொற்களால் வழங்கப்படும் அனைத்தும் மனித மூத்திரத்தையே குறிக்கும் என்பர்.

'அமுரி என்பது சிறுநீர் அல்ல. அது அமிர்தத்தையே குறிக்கும்' என்பது வி. பலராமய்யா[71] போன்றோரின் கருத்தாகவும் உள்ளது.

---

67. சுவடி எண். 3243, வெடி சாஸ்திரம், தி.
68. தொகுத்தவர். ஸ்ரீ சுவாமிபூமானந்தா, 'சர்வரோக நிவாரணி'.
69. 'தெளிதரும் இந்தச் சிவநீர் பருகில்
ஒளிதரு மோராண்டில் ஊனமொன் றில்லை'
திருமூலர் திருமந்திரம், 'அமுரிதாரணை'.
70. 'நூறு மிளகு நுகருஞ் சிவத்தனீர்'.
71. முப்பூ குரு.

இது பற்றிய கருத்து வேறுபாடு சித்தர்களுக்குள்ளேயே இருந்திருப்பதனை அவர்களுடைய பாடல்கள் தெளிவாகக் காட்டுகின்றன.

முப்பு அல்லது முப்பூ எது எனக் குறிப்பிடும் பொழுது 'ஞான வெட்டியான் 1500' என்ற நூல்,

"பூர்வத்தி லுதித்த கடல் கல்லுப் பாகும்
பூநீ ருப்பதுவு *மமுரியுப்*பும்
வானீ ரறிந்த முப்பொருளும்"

முப்புவாகும் எனக் கூறி அமுரியுப்பு என்பது மனித மூத்திரமாம் சிறுநீர் உப்பு எனத் தெளிவுபடுத்துகின்றது.

பதார்த்த குணவிளக்கமும் (பக்கங்கள் 11-14) சித்தர் பாடல்களை எடுத்துக் காட்டி விளக்கி, எவ்வாறு அமுரியைத் தூய்மைப்படுத்தி அதினின்று அமுரி உப்பைத் தயாரிப்பது என்பது குறித்து விளக்குகின்றது.

நந்தீசர் நிகண்டு 300 என்ற நூலோ 'அமுரி என்பதனை மூத்திரம் எனத் தவறாகக் கருதியதால் சவுக்காரம், வழலை' ஆகியன கெட்டுப் போய் விட்டனவே' என அலறுகின்றது.[72] செய்து பார்த்துத் தோல்வி கண்ட உண்மை இதில் வெளிப்பட்டிருப்பதை அறிகிறோம்.

சிறுநீரகத்திலுள்ள இரத்தக் குழாய்கள் மூலம் இரத்தம் போகும் பொழுது அதிலுள்ள கழிவுப் பொருட்கள் சிறுநீரகங்களால் உறிஞ்சப்பட்டுச் சிறுநீராக வெளிப்படுகின்றது. பொதுவாகச் சிறுநீர் இளம்பழுப்பு நிறமும், சிறிதே அமிலக் கலவையும் கொண்டதாக இருக்கும். தண்ணீரைக் காட்டிலும் பளுவானது. இதன் சராசரி ஒப்படர்த்தி 1.022 ஆகும். இதில் நீர், யூரியா, யூரிக் அமிலம், கரியற்ற உப்புகள் ஆகியன அடங்கி இருக்கும். இந்த உப்புகளில் முக்கியமானவை சோடியம், பொட்டாசியம், அமோனியம், கால்சியம், மக்னீசியம் ஆகியனவாகும்.

உடல் தனக்குத் தேவையற்றது எனக்கருதியே இதனை வெளியேற்றுகிறது. திரும்ப அதனை உடலுக்குள் புகுத்தும் பொழுது

---

72. "பாருமே .... சவுக்காரத்தின்
பதிவான பூநீரை அளந்து விட்டு
நேருமே மூத்திரத்தை யூற்றச் சொல்லி
நினவரமா எண்ணெய்விட்டுச் செய்யச் சொல்லிக்
காருமே கன்னத்தில் தாளிக்கச் சொல்லிக்
களிபெறவே மறைவாகச் சொல்லிப் போட்டார்.
நாருமே சவுக்காரம் கெட்டுப் போச்சு!
நலமான வழலையென்ற நாமம் போச்சே!"

ஏராளமான சுத்திகள் செய்து முறைப்படி பயன்படுத்த வேண்டும். இதற்கெனப் பல்வேறு முறைகளைச் சித்தர் பாடல்கள் தெளிவுபடுத்துகின்றன.

பசு, எருமை, கழுதை, ஒட்டகம், யானை இவற்றின் சிறுநீரிலும், என்னென்ன சத்துகள் உள்ளன; அவற்றை எவ்வெவ்வாறு பயன்படுத்தினால் என்னென்ன நன்மை கிட்டும் என்பதனையும் தெளிவாக ஆராய்ந்து அன்னார் விளக்கிக் கூறியுள்ளனர்.

ஒருவரின் நோயினை அறிய 8வகை[73] முறைகளைக் கடைப்பிடித்த சித்தர்கள் அதில் ஒன்றாகச் சிறுநீரையும் அறிவித்துள்ளனர்.

இதன் நிறம், நிறை, மணம், நுரை அளவு ஆகியன கொண்டு நோயின் தீவிரத்தை எளிதாகக் கணிப்பர். 'தேரையர் நீர்க்குறி வைத்தியம்' என்ற நூல் இம்முறைகளைத் தெளிவுபட விளக்குகிறது.[74]

சிலவகைப் படை, அரிப்பு, சொறி, கட்டிகள், கடிப்புகள், விஷகடிகள் ஆகியவற்றை நீக்க, இன்றும் சிறுநீரைக் கிராமப்புறங்களில் எளிய மக்கள் பயன்படுத்தி வருவதைக் காண்கிறோம்.

ஆக, அனைத்தையும் கொண்டு பார்க்கும் பொழுது, உடலிலிருந்து வெளியேற்றப்படும் கழிவுப் பொருளாயினும், அதனை முறைப்படி பயன்படுத்தச் சில நோய்களைக் குணப்படுத்த இயலும் என்பதும், சுத்தி செய்யும் முறைகளில் சிறிதும் கவனக் குறைவு கூடாது என்பதும், தகுந்த மருந்துகளுடன் கலந்தே தவிரத் தனியாக[75] இதனை மட்டும் பயன்படுத்தல் கூடாது என்பதும் தெரிய வருகின்றது.

---

73. கண், நாக்கு, உடல் மலம், சிறுநீர், ஒலி, நாடி, தீண்டுதல் ஆகியவற்றின் மூலம் நோயின் தன்மை அறிவர்.

74. நோயாளியின் சிறுநீரை ஒரு பாத்திரத்தில் பிடித்து அதில் ஒரு துளி நல்லெண்ணை விட்டுப் பார்த்து, அதன் வடிவு கொண்டு நோய் கணித்தல்.

75. 1975 முதல் 78 வரை இருந்த கால கட்டத்தில் 'தன் சிறுநீரைத் தானே அருந்துதல்' என்பது குறித்த நூல்கள் பரவலாக வெளிவந்தன. இதற்குப் பலத்த அரசியல் பின்னணியும் இருந்தது. சித்தர்கள் குறித்த 'ஆகாய கங்கை', 'சோமப்பால்' 'அமிர்தம்' என்பன அமுரி எனப்படும் இச்சிறுநீரே என அந்நூற்கள் ஆணித்தரமாகப் பறைசாற்றியுள்ளன. இவை இயேசுநாதர் குறிப்பிட்ட 'Water of Life' இன் 'Water' இச்சிறுநீரே என்று இயம்பி, 'ஒருவன் தன் சிறுநீரை ஓராண்டு பருகிவர, காயகல்பம் உண்ட பலனை அடையலாம்; சித்தர்கள் சொன்ன மேலான சித்தி இதுவே' என்கின்றன. இவை அனைத்தும் தவறான போக்குகள். சிறுநீர் காய கல்பம் ஆகாது. சிறுநீரில் சில உப்புச் சத்துகள் இருப்பது உண்மை. முறைப்படி சுத்திசெய்து சில மருந்துகளுக்கு இதனைச் சித்தர்கள் பயன்படுத்தினர்.

50. ஆட்டியே வழித்ததனைப் பாண்டத்துள் வைத்து
அப்பனே அமுரியதில் பதக்கு விட்டுக்
கூட்டியே பெருவாயன் பாலும் நீருங்
குறையாமற் குறுணியதற் குள்ளே விட்டுக்
காட்டில்வாழ் கழுதைவண்டு சிவந்த புள்ளி[76]
கடுகவதில் முப்பதுதான் கசக்கிச் சேரு
மூட்டுமே கருநாபிச் சரக்கை யெல்லாம்
முப்பது பணவிடைதான் பொடித்துப் போடே.

பொ. சு:

ஆட்டி வழித்ததனை ஒரு பாத்திரத்தில் வைத்துக் கொண்டு, பதக்கு அமுரி விட்டு, குறுணி கழுதைப் பாலும், சிறுநீரும் ஊற்றி, காட்டில் வாழுகின்ற கழுதை வண்டு முப்பது பண எடையும், கருநாபிச் சரக்கு முப்பது பண எடையும் பொடித்துப் போட வேண்டும் என்கிறார்.

சொ. வி:

பதக்கு - இரண்டு குறுணி அதாவது, பதினாறுபடி கொண்டதோர் முகத்தலளவு.

பெருவாயன் பாலும், நீரும் - கழுதைப் பாலும், சிறுநீரும் என்பது பொருளாகும்.

கழுதைப்பால் மிகு மதுரமுடையது. வாதநோய், கரப்பான்புண் தழுதளை ரோகம், உள்வித்திரிதிக் கட்டி, ஒட்டுக் கிரந்தி, சீழ்ப்பிரமேகம், சொறி, சிரங்கு, அற்புதவிரணம், கருங்கிரந்தி, சித்தப்பிரமை, பித்த தோஷம், கபநோய் முதலியவற்றை நீக்கும். இதனைத் தனியாக, அல்லது அவிழ்தங்களுக்கு அனுபானமாகக் கொடுக்கலாம்.[77]

கழுதை மூத்திரத்தைத் தனியாகக் கொடுப்பது கிடையாது. இளஞ்சூடாகக் காய்ச்சி, வடிகட்டிச் சில தைலபாகங்களுடன் சேர்த்துக் கொடுக்க,

"வேசரிநீ ரால்வெப்பம் வீரியநஷ் டங்குட்டம்
காச மிரைப்புவிஷங் காற்கிருமி-வீசிடு புண்

76. பா. பே: சிவந்தவுள்ளி, செ. II.

77. பதார்த்த குண விளக்கம், பக்கம், 220.

மேகபஸ் மாரம் வெடியக்க ரங்கிரந்தி
போகு மின்னுஞ் சேய்ப்பிணியும் போம்"

குறுணி – எட்டுப்படி கொண்ட ஒரு தானிய அளவு. ஒரு மரக்கால் என அழைக்கப்படும்.

கழுதைவண்டு – நெருஞ்சி வகையுள் ஒன்று. மலையில் மட்டுமே வளரக் கூடியது. காய் அதிகம் இராது. ஓரிரு காய் மட்டுமே இருக்கும். வண்டு வடிவில் அவையும் உருண்டையாய்ச் சுருண்டு காணப்படும். பின்னங்கால் சற்று உயர்ந்திருப்பதால் கழுதை போன்று நடைபயிலும் கழுதை வண்டினை ஒத்திருப்பதால் இப்பெயரால் அழைக்கப்படுகிறது.

கருநாபிச் சரக்கு – கடைச்சரக்கு வகையாகும். பச்சை, கருமை, வெள்ளை நாபிச் சரக்குகள் உண்டு. கருநாபிச் சரக்கு மிகு வீரியமுள்ளது. விஷமுடையதானதால் சுத்தி செய்து மருந்துகளுடன் சேர்க்க வேண்டும். குஷ்டம், குன்மம், கிருமி ரோகம் ஆகியவற்றை நீக்கும்.

51. போட்டப்பா பலமொன்று கல்லுச் சுண்ணம்
புகழவே யெருக்கம்பால் படியு மொன்று
நாட்டப்பா கள்ளிப்பால் மத்தஞ் சாறு
நல்லாவி னீரினுடன் மேதி நீரும்
மூட்டப்பா சவ்வீரங் கழஞ்சி மூன்று
முறையான சூடனுமோ பலந்தான் மூன்று
ஊட்டப்பா கெந்தியொரு பலந்தான் போடு
உற்பனமாய் மூன்றுநாள் ரவியில் வையே.

பொ. சு:

முன் பாடலில் கூறியவற்றுடன் கல்லுச் சுண்ணம் ஒரு பலமும், எருக்கம்பால் ஒரு படியும், கள்ளிப்பால், ஊமத்தஞ் சாறு, பசுவின் மூத்திரம், எருமை மூத்திரம் ஆகியவையும், சவ்வீரம், சூடம் ஆகியவை மூன்று கழஞ்சும், கந்தகம் ஒரு பலமும் இட்டு, மூன்று நாட்கள் சூரிய ஒளியில் வைக்க வேண்டும் என்கிறார்.

சொ. வி:

கல்லுச் சுண்ணம் – (Clax-Burnt) வெற்றிலை போடப் பயன்படுத்தும் சுண்ணாம்பாகும். இதனை முறைப்படி கொடுக்க, பேதி, வாதகிரிச்சுரம், பூரான்கடி முதலிய பல விஷங்கள், காயங்களா லொழுகும் இரத்தம், நெருப்புச் சுட்ட புண், சிரங்கு, தினவு,

மண்டைப்புற்று, தலைநோய், சன்னி ஆகியன நீங்கும். இதன் குணமும் பயன்படுத்தும் முறையும் பதார்த்த குண விளக்கத்தில் (பக்கம் 90-91) விவரிக்கப்பட்டுள்ளது.

ஆவின் நீர் – பசுவின் மூத்திரம், கௌமியம், கோமியம், கோசலம் என்றும் கூறப்படும்.

இதனை மூன்று மடிப்புள்ள சீலையில் வடிகட்டி வேளைக்கு ஒரு அவுன்ஸ் வீதம், தினம் இருவேளை கொடுத்து வரப் பெருவயிறு, காமாலை, நீர்ப்பாண்டு, குன்மம், மகோதரம் ஆகியவை குணமாகும்.[78] அந்தந்த நோய்க்கு உரிய கியாழங்களுடன் கூட்டிக் கொடுக்க வேண்டும்.

நமட்டுச் சிரங்கு, கரப்பான் முதலியவற்றிற்குச் சிறிது பசுவின் சாணத்துடன் கரைத்து மேலே பூசிச் சிறிது நேரம் சென்ற பின் அலம்பி விடக் குணமாகும்.

சூடன் – சூடம் - கர்ப்பூரத்திலிருந்து தயாரிக்கப்படும் ஒரு பொருளாகும். எளிதில் தீப்பற்றுதல் இதன் சிறப்புத் தன்மையாகும்.

52. **வைத்ததொரு நீரை எடுத்துக் கொண்டு**
மாயியுட முன்வைத்து வணங்கி நன்றாய்
மைத்தயிர் மத்தாலே கடைந்து மைந்தா
வாங்கிடுவாய் கரண்டிகொண்டு நுரையை யெல்லாம்
மொய்த்ததொரு பாண்டத்தில் வாங்கு வாங்கு
மூவஞ்சு தினங்கடைவாய் முசியா மல்தான்
எத்தந்த நீரெல்லாம் வற்றி னாக்கால்
இறுகுமடா நேர்வாளம் இரட்டி சேரே.

பொ. கு:

முன்பாடலில் குறிப்பிட்ட அந்நீரை எடுத்து, மாயியின் முன் வைத்து வணங்கித் தயிர் மத்தாலே நன்கு கடைந்து நுரையை யெல்லாம் கரண்டியினால் வழித்தெடுக்க வேண்டும். பதினைந்து நாட்கள் இவ்வாறு தொடர்ந்து செய்ய நீர் வற்றி இறுகும். அப்போது அதன் எடைக்கு இரு மடங்கு அளவு நேர்வாளம் சேர்க்க வேண்டும் என்கிறார்.

---

78. 'விடபாண்டு சோபைபல வீக்கஞ் சகல
விடமுதிர மாலையென மெத்தப் - புடவிதனிற்
பேசலக்க னோடுதந்தப் பீடையும கன்றிடுமே
கோசலத்தா லாரணங்கே கூறு"
- பதார்த்த குணவிளக்கம், பக்கம், 523.

சொ. வி:

மாயி – மகமாயி. சக்தியின் வடிவம். இங்கு துர்க்கையைக் குறிக்கும்.

முசியாமல் – சளைக்காமல், களைத்துப் போகாமல் என்பதாம்.

53. சேரப்பா ஆட்டியே நித்தத்துள்ளே
சிறப்பாகக் கலந்தேதா னமுரி கேளு
சேரப்பா குறுணிவிட்டுக் கடைவாய் பின்னும்
சேந்திருந்த வெண்ணையுடன் திரட்டிக் கொண்டு
சேரப்பா சரக்குகளில் தடவி வாட்டச்
செணத்திலே கட்டிப்போங் காரங் கூட்டு
சேரப்பா குடகரியி லாட்டு ஆட்டு
தேவிக்கு யிம்மார்க்கஞ் சிவன்சொன் னாரே.

பொ. சு:

நேர்வாளம் இரண்டு பங்கு சேர்த்து, ஆட்டிய அதனுடன் குறுணி அமுரி விட்டு நன்கு கடைய வேண்டும். கடைய, சிவந்த நிறமுடைய வெண்ணை (சேர்ந்திருந்த வெண்ணை?) கிடைக்கும். இதனை மருத்துச் சரக்குகளில் தடவி வாட்ட, விரைவில் அவை கட்டும். அவ்வெண்ணையுடன் காரம் கூட்டி ஊது உலையில் இட்டு ஆட்டிக் கொள்ள வேண்டும் என்கிறார். இது 'தேவிக்குச் சிவன் சொன்ன மார்க்கம்' என்றும் குறிப்பிடுகிறார்.

சொ. வி:

செணம் – 'க்ஷணம்' என சமஸ்கிருதத்திலும் 'கணம்' எனத் தமிழிலும் அழைக்கப்படும் மிகக் குறைந்த கால அளவைக் குறிக்கும்.

54. மார்க்கமென்ன வெண்ணையோடு சவாது சேர்க்க
மணியாகும் புழுகூட்டில் நீரு மாகும்.
மார்க்கமப்பா மணிமுதலாய்க் கல்லுச் சுண்ணம்
மகத்தான கருவிதுதான். பூரஞ் சேரில்
மார்க்கமந்தக் கடைந்த பின்பு நீருக்குள்ளே
மகலோக முறவே போட்டா யானால்
மார்க்கமன்றி யூறல்போம் வெண்ணை சேர்த்து
மறுத்துருக்கத் தெரியாமல் தடவி வையே.

பொ. சு:

முன்பாடலில் குறிப்பிட்ட அவ்வெண்ணையுடன் சவ்வாது சேர்க்க மணியாகும். புழுகு ஊட்டினால் நீராகும். பூரம் ஊட்ட இரசமணி முதலாகக் கல்சுண்ணம் ஈறாக உள்ள அனைத்தினையும் செய்ய உதவும் மகத்தான கருவாகும் என்கிறார். (அதில் புழுகு ஊட்ட நீர் வடிவு கிட்டும்.) அந்நீரினுள் உலோகத்தை ஊறப் போட்டால் அவ்வுலோகத்தின் ஊறல் நீங்கி விடும். பின் அதனை உருக்கு முன் குறிப்பிட்ட அவ்வெண்ணையைத் தடவி வைக்க வேண்டும் என்கிறார்.

சொ. வி:

சவாது – சவ்வாது. (Viverra civetta odorous Secretion) மணப்பொருள் உஷ்ண வீரிய குணம் கொண்டது. சுரம், தலைவலி சல பீநசம், தேகக் குடைச்சல், குத்தல் ஆகியவற்றை நீக்கும்.

புழுகு – (Viverra civetta odorous Secretion) ஒருவகைப் பூனையின் மலம். வாசனைத் திரவியம். 'புனுகு' என்றும் அழைக்கப்படும். உஷ்ணவீரியச் சரக்கு. மந்தவாதம், பித்தகபம், விஷம் ஆகியவற்றை நீக்கும். தேகத்திற்கு ஒளியும், நிறையாயுளும் தரவல்லது.

ஊறல் – உலோகம் ஊறிப் பொரிந்து, உதிர்ந்து வருதலைக் குறிக்கும்.

55. **தடவியதைக் காரமிட்டு வுருக்கி வாங்கு**
தப்பாது எண்மாத்துச் சத்தீ பீசம்
படபடெனப் பாராதே வழலை மார்க்கம்
பாங்காக வெண்ணையா(ல்) பொதிந்து பூசி
அடவாக மூன்றுநாள் ரவியில் போட்டு
அதன் பிறகு கல்சுண்ணப் பொடியிலூட்டி
இடமாகச் சட்டியினால் மூடி வைத்து
எழுகடிகை கமலவன்னி எரித்தி டாயே.

பொ. சு:

வெண்ணை தடவிய அவ்வுலோகத்தைக் காரமிட்டு உருக்கி வாங்க எட்டு மாத்துச் சத்தீபீசமாகும். வழலை மார்க்கத்தைப் படபடெனப் பார்க்கலாகாது. பக்குவமாக வெண்ணையில் பொதிந்து பூசி மூன்று நாள் வெய்யிலில் வைத்து அதன் பின் கல்சுண்ணப்

பொடியிலூட்டிச் சட்டியில் வைத்து ஒரு சட்டியால் அதனை மூடி வைத்துக் கமலவன்னியால் எரிக்க வேண்டும் என்கிறார்.

சொ. வி:

சத்திபீசம் – கந்தகம்.

எழு கடிகை – ஏழு நாழிகை. அதாவது இந்திய நேரப்படி 4 மணித்துளிகள் ஆகும்.

கமலவன்னி – இரண்டு விரற்கடை கனமுள்ள இரு விறகுகள் கொண்டு எரிக்க, அச்சுடர் சட்டியின் அடியில் தாமரை புஷ்பம் போல் பரவிநிற்றல் கமலவன்னி ஆகும்.

56. எரித்திடவே நீறியது வெள்ளி போலாம்
இதினாலே கோடிவே ரின்னங் காணும்
தரித்திடவே வினைநோய்கள் மூன்றுதானும்
சத்தபூத மத்தபூதப் பேய்கள் தானும்
மரித்திடுமே செத்தையினில் தீயைப் போலே
வாச்சரியஞ் சூதமொரு சேரை வாங்கிப்
பரித்திருந்த கழஞ்சியொன்று வெண்ணை தூக்கிப்
பண்பாகக் கலவத்தி லாட்டு ஆட்டு.

பொ. சு:

எரித்த அது நீறி வெள்ளி போல் ஆகும். இதனால் கோடி முறைகள் காணலாம். தீவினையால் வரும் குஷ்டம், பாண்டு, நீரிழிவு ஆகிய மூன்று நோய்களும், பூத, பேய் வகைகளும் தீயில் பட்ட செத்தைபோல் அழிந்துபடும்.

இதனுடன் சூதம் ஒரு சேரும் மேற்குறிப்பிட்ட வெண்ணை ஒரு கழஞ்சும் சேர்த்துக் கலவத்தில் ஆட்டிக் கொள்ள வேண்டும் என்கிறார்.

சொ. வி:

செத்தை – காய்ந்த சுள்ளித் துணுக்கு , வைக்கோல் குப்பைகளைக் குறிக்கும் பேச்சு வழக்குச் சொல்லாகும்.

சேர் – எட்டுப்பலம் கொண்ட ஒரு நிறுத்தலளவை.

57. ஆட்டியே குகைக்குள்ளே சார·மூட்டி
அசையாம லுருக்கிடவே மணியாய் நிற்கும்

நீட்டியே சாரணைதா னெட்டுந் தீந்தால்
நிசமாச் சடத்தோடே உயரத் தூக்கும்
கூட்டியே கடைந்துவெண்ணை எடுக்கும் போதுங்
கூசாமல். கைபட்டால் வெந்து போகும்
ஊட்டுவாய் கரண்டியினால் தடவி னாலும்
உறத்தடவு ரவியிலெலாங் கட்டுந் தானே.

பொ. சு:

ஆட்டிய அதனைக் குகையிலிட்டுச் சாரம் ஊட்டி உருக்க மணியாக நிற்கும். சாரணைகள் எட்டும் இதற்கு அடங்கினால் இதுவே இவ்வுடலை உயரத் தூக்கும் காயகல்பம் என அறிக. இவ்வெண்ணையைக் கடைந்தெடுக்கும்போது கரண்டியினாலன்றிக் கையினால் எடுக்கக்கூடாது. கைபட்டால் கை வெந்து போய் விடும். கரண்டியாலேயே எடுத்துத் தடவிச் சூரிய ஒளியில் வைக்கக் கட்டும் என்கிறார்.

சொ. வி:

சாரணைதா னெட்டுந் தீந்தால் – அஷ்டமூலம் என்று கூறப்படும் எட்டு மூலிகைகளும் இதற்குக் கட்டுப்படல் என்பதாம்.

58. எல்லாரும் வழலைதனைச் சுண்ண மாக்க
இயன்றபடி சொன்னார்கள் வெவ்வே றாக
வல்லவனாங் கொங்கணையர் முடிவு கண்டார்
மகத்தான பொருளருளும் வகையைச் சொன்னார்
சொல்லாத ரசமணியை உப்பில் வைத்து
கொடுங்கனலி லோர்சாம மெரித்து வாங்கு
சொல்லாத செம்பருத்தம் பூப்போ லாகும்
சுகமாக எட்டுநாள் பாலில் கொள்ளே.

பொ. சு:

வழலையைச் சுண்ணமாக்கும் முறையை ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமாகச் சொல்லி வைத்தார்கள். கொங்கணர் இதற்கு முடிவு கண்டு மகத்தான பொருள் கிட்டும் வகையைத் தெளிவாகச் சொன்னார்.

'இரச மணியை உப்பில் வைத்துக் கொடுங்கனலில் ஒரு சாமம் எரித்து வாங்க, அது செம்பருத்தம் பூப்போலாகும். இதனை எட்டு நாள் பாலிற் கொள்ள வேண்டும்' எனக் கொங்கணர் கூறிய முறையைக் கூறுகிறார்.

சொ. வி:

கொடுங் கனலில் – 'காடாக்கினி' என அழைக்கப்படும். இரு விரற்கடை கனமுள்ள நான்கு விறகுகள் கொண்டு எரிக்க, அச்சுடரானது அடுப்பில் வைத்த சட்டியின் மேற்பாகம் வரையில் சூழ்ந்திருப்பதாகும்.

59. **கொள்ளவே நரைபோகும் திரையும் போகும்**
குலைந்துநின்ற தந்தமெல்லா மிறுகி நிற்கும்
விள்ளவே கண்சிவக்கும் மேனி வாடும்
மேனகையுந் திலோத்தமையும் மேவு வார்கள்
துள்ளியே சுக்கிலந்தான் மேலே ஏறும்
சுகபோகஞ் செய்தாலும் விந்து வீழா
அள்ளாது குறையாது முப்பாழ் தாண்டும்
அமரருக்குங் கிடையாத அதீத மாமே.

பொ. சு:

உட்கொள்ளவே நரை, திரை நீங்கும். விழும் நிலையில் இருக்கும் பற்களும் உறுதிப்பட்டு நிற்கும். இரத்த நாளங்களிலும் மிகுதியாக இரத்தம் பாய்வதால் கண் சிவக்கும். வீண் சதை மறைந்து, உடல் ஒரு கட்டுக்குள் வரும். அக்கட்டுடல் கண்டு மயங்கி, தேவமாதர்களான மேனகையும் திலோத்தமையும் அன்னாரைத் தழுவ நினைப்பார்கள். விந்து வெளியேறல் தடுக்கப்படும். சுகபோகம் செய்தபோதும் சுக்கிலம் வெளியேறிச் சத்து வீணாக்குதல் நடைபெறாது. வானுலகத் தேவர்களுக்கும் கிட்டாத இதனை உண்ண, முப்பாழ் கடந்து வாழலாம் என்கிறார்.

சொ. வி:

நரை போகும் திரையும் போகும் – கருமுடி வெண்முடி ஆதலை 'நரை' என்றும் மேற் தோலில் சுருக்கம் காணுதலைத் 'திரை' என்றும் கூறுவர். நரை, திரை விழுதல் வயோதிகத்தின் அறிகுறிகள். வயோதிகம் மரணத்தின் இறுதி வாயில். மரணத்தின் கோரப் பிடியிலிருந்து தப்பிக்க வயோதிகம் அடையாதிருத்தல் அவசியமான ஒன்றாகும். இம்மருந்தினால் அதனைச் சாதிக்கலாம் என்கிறார்.

தந்தமெல்லா மிறுகி நிற்கும் – மனிதனின் உணவு, உடை, இருப்பிடம் என்ற மூன்று அத்தியாவசியத் தேவைகளில் உயிர் வாழ மிகத் தேவையான உணவு முதல் இடத்தைப் பெறுகின்றது. உணவினை உடலினுள் செலுத்தும் பற்கள் ஒரு மனிதனின் உடலில்

முக்கிய இடம் பெறுகின்றன. வயதாக, ஆக இவற்றின் கடின உழைப்பின் காரணமாக அதிகம் பாதிக்கப்படுபவை இவையே. ஈறுகள்-பற்கள் பிடிப்பு தளர்ந்து, மேற்சிப்பிகள் உதிர்ந்து, ஈறிலிருந்து பற்களுக்குச் செல்லும் இரத்தப் போக்குகள் தடைப்பட்டுப் பற்கள் ஆட்டம் கண்டு, தன் நிலையினின்று கழன்று விழுந்து விடும். பின் உணவை, மென்று தின்ன இயலாத காரணத்தால் செரிப்பது கடினமாகி மலம் உடலில் தேங்கும். 'மலச்சிக்கல் பலவித நோய்களுக்கும் காரணம்' என்ற விஞ்ஞானக் கருத்துப்படி உடல் நோய்களின் இருப்பிடமாகி விரைவில் அழிந்துபடும். ஆக, மரணத்தின் ஒரு முக்கிய காரண கர்த்தாவான பற்கள் விழுதலை இம்மருந்தினால் தடுத்து விடலாம் என்கிறார்.

மேனகையும் திலோத்தமையும் – இந்திரன் சபையில் நடனமாடும் இவ்விரு தேவமாதர்களும் ஈரேழு உலகப் பெண்களினும் மிக்க அழகு படைத்தவர்கள் எனப் புராணங்கள் இயம்புகின்றன. பிரமதேவன் உலகில் உள்ள அழகிய பொருட்களிலெல்லாம் திலம் அதாவது, எள் அளவு எடுத்து இணைத்துத் திலோத்தமையைப் படைத்ததாக மகாபாரதம் கூறுகிறது.

சுக்கிலம் – (Sperm) விந்து, விந்தணு, இந்திரியம், ஜீவசத்து, உயிர்த்துளி என்ற பல பெயர்களால் அழைக்கப்பெறும். உலக உற்பத்தியின் பொருட்டுத் தக்க வயதில் ஆணுறுப்பில் உற்பத்தி செய்யப்படும். சுமார் 80 துளி இரத்தம் சேர்ந்து ஒரு விந்தணுவாக உருவாகும். புணர்ச்சியின் போது ஆயிரக்கணக்கில் வெளியேறும் இவை பெண்ணின் சுரோணிதத்துடன் கலந்து உட்செல்லும். இவற்றுள் ஏதாவது ஒரு விந்தணு பெண்ணின் அண்டத்துட் சென்று கருத்தரிக்கச் செய்யும்.

சுகபோகஞ் செய்தாலும் விந்து விழா – போகத்தின் போது விந்து வெளியேறுதல் இயற்கை. விந்து வெளியேற்றம் சத்திழப்பாகும். கூறப்பட்ட இம்மருந்து போகத்தின் போதும் விந்திழப்பைத் தடுத்துச் சக்தியைச் சேமிக்க உதவும் என்பதாம்.

திலம்

60. **ஆமப்பா வெண்ணையிலே தேனைத் தேய்த்து**
ஆதளையின் பால்கூட்டி அடவாய்த் தேய்த்து
ஒமப்பா திலதமிடத் தன்னைக் காணார்
ஒங்கிநின்ற உருமாற்றம் ஒருவர் காணார்
போமப்பா யெண்டிசையுங் கால்வேகங் கொண்டு
வேமப்பா அண்டரண்டம் வழலை பட்டால்
வேதாந்தப் பஞ்சகர்த்தா வெனச்சொன் னாரே.

பொ. சு:

முன் குறிப்பிட்டுள்ள வெண்ணையில் தேன், ஆதளையின் பால் ஆகியவை விட்டுக் கலந்து தேய்த்துத் திலகமாய் இட, தூல உடல் மறைந்து சூக்கும உடல் பெறும் திறன் பெறுவர். இம்மாற்றம் ஒருவர் கண்ணுக்கும் புலனாகாது. காற்று வேகத்தில் இப்பூவுலகின் எட்டுத் திக்குகளில் எங்கு வேண்டுமாயினும் சென்று, மறைந்து கிடப்பது அனைத்தையும் தெளிவாகக் காணலாம். மேலும், அண்டரண்டம் வழலையின் பாற்படப் பஞ்ச பூதத்தின் மூலமுதல் இதுவே எனச் சொன்னார்கள் அல்லவா என்கிறார்.

சொ. வி:

ஆதளை - ஆதாளை என்றும் அழைக்கப்பெறும். இதன் இலைகளைக் கணுக்களிலிருந்து அகற்றும் பொழுது ஒருவித வெண்ணிறத் திரவம் வடியும். இதுவே 'ஆதாளம் பால்' என அழைக்கப் பெறுவதாகும்.

அண்டரண்டம் வழலை பட்டால் - முப்பூ இணைப்பு முறையைக் குறிக்கின்றது.

61. சொன்னதொரு சூதச்செந் தூரந் தன்னைச்
சொல்லுகிறேன் வேதமுகச் சுருதி யெல்லாம்
சொன்னதொரு அயத்திலே தடவிப் போடு
சோர்வன்றி நூற்றுக்கு ஒன்றே தூக்கு
சொன்னதொரு மாத்தேது பயிற்றுப் பத்து
சுந்தரர்க்குச் சட்டைமுனி அருளிச் செய்தார்
சொன்னதொரு செம்பிலே நூற்றுக் கொன்று
சுட்டிடவே இருநூறு மாற்று மாமே.

பொ. சு:

முன்னர்க் குறிப்பிட்டுள்ள சூதத்தின் செந்தூரத்தை நூறு பண எடை அயத்துக்கு ஒரு பண எடை வீதம் நிறுத்து உருக்க நூறு மாற்றுக் காணும் என்கிறார். இது சுந்தரர்க்குச் சட்டைமுனி அருளிய செய்முறை என்றும் உரைக்கிறார். இதே அளவு எடை எடுத்துச் செம்பில் உருக்கிப் பார்க்க இருநூறு மாற்றுக் காணும் என்றும் இயம்புகின்றார்.

62. மாற்றாக வெள்ளியிலே நூற்றுக் கொன்று
வைத்திருக்க நானூறு மாற்றுக் காணும்

மாற்றாகுங் குடவனிலே அஞ்ஞூற்றுக் கொன்று
வைத்திருக்க நானூறு மாற்றுக் காணும்
மாற்றாகுங் கஞ்சத்தில் முப்பதுக் கொன்று
வைத்திருக்கப் பயித்தஞ்சு மாற்று மாகும்
மாற்றாகுந் திராவிலே எண்பதுக்கு ஒன்று
மாற்றிடவே மாற்றேது ஐம்ப தாமே.

பொ. சு:

முன் கூறியதுபோல், வெள்ளியிலும் நூற்றுக்கொன்று இட, நானூறு மாற்றுக் காணும், பித்தளையில் ஐநூறுக்கு ஒன்று இட, நானூறு மாற்றுக் காணும். கஞ்சத்தில் முப்பதுக்கு ஒன்று இட, ஐம்பது மாற்றுக் காணும் என்கிறார்.

சொ. வி:

திரா – 'தரா' ஆகும். எட்டுப்பாகம் செம்பும், ஐந்து பாகம் காரீயமும் கலந்த ஓர் உலோகம்.

*"சூலையொடு மேகத்தைத் தோன்றாம லோட்டிவிடு
மேலைவரு காலை விலக்குங்கா – ணால
வராமே வியவல்கு லாரணங்கே வெட்டைத்
தராவெனு முலோகமது தான்"*

-பதார்த்த குணவிளக்கம், பக்கம் 119.

என இதன் நோய் நீக்கும் தன்மைகள் உரைக்கப்பட்டுள்ளன.

63. ஆமப்பா சவுக்காரச் சுண்ணந் தன்னை
ஆகார உமிநீறால் துருசுக் கப்பி
ஓமப்பா ரவியிலிடு சுண்ண மாமே
உண்மையென்ன குழலிலே அடைத்துக் கொண்டு
தாமப்பா சரக்குகளில் தடவிக் கேளு
தண்ணீரா யுருக்கிடவே மணியாய் நிற்கும்
வேமப்பா நவலோகந் தன்னி லூட்ட
வேதையென்ன பதினெட்டு மாற்று மாகும்
சோமப்பால் வழிந்தொழுகும் கேசரியைக் கண்டால்
சொற்பெரிய பதினெட்டுச் சித்த ராமே.

பொ. சு:

சவுக்காரச் சுண்ணத்தை நெல் உமிநீறு கொண்டு துருசுக்கு அப்பி, வெயிலில் உலர வைக்கச் சுண்ணமாகும். இதனை ஒரு குழலில்

அடைத்து வைத்துக் கொண்டு, மருந்துச் சரக்குகளில் தடவித் தண்ணீர் போல உருகுமாறு வாட்டி எடுக்க, அவை மணியாகி நிற்கும். நவலோகங்களில் தடவி வாட்டப் பதினெட்டு மாற்றாகும். சோமப்பால் வழிந்தொழுகும் இக்கேசரியைக் கண்டு விட்டால், சொல்லால் விளக்க இயலாத பெருமைகளை உடைய பதினெட்டுச் சித்தர்களில் ஒருவராக ஆகிவிடலாம் என்கிறார்.

சொ. வி:

சவுக்காரச் சுண்ணம் – பூநீறு, சுண்ணாம்பு, எண்ணை முதலியவற்றின் கூட்டுறவால் ஆனதாகும். இன்று துணிகளை வெளுக்கப் பயன்படுத்தும் சாதாரணச் சோப்பு சவக்காரம் எனப்படும். சவுக்காரக் கட்டி கரும்படை, சிரங்கு, கட்டி, கரப்பான், மேகவூறல், நகச்சுற்று ஆகியவற்றை அறவே அகற்றும் தன்மை கொண்டது.

ஆகார உமிநீறு – அன்றாட உணவாகப் பயன்படும் நெல்லின் மேல்தோடான உமியினைக் கருக்கியதால் கிடைத்த சாம்பலாகும்.

துருசு – மயில் துத்தம் ஆகும்.

வேதை – ஒன்றை மற்றொன்றாக மாற்றுதல் என்பதாம்.

64. பதினெட்டுப் பேர்சித்தர் பேறு பெற்றார்
பாடினதோர் சாஸ்திரமும் பாரு பாரு
பதினெட்டுப் பேரிலே சட்டை நாதர்
பாங்கான திருமூலர் கொங்கணையர்
பதினெட்டுச் சாதி யிலுஞ் சஞ்சரிப்பார்
பாரப்பா மூன்றுபேர் நாலு மொன்றாய்
பதியெட்டும் பசுவெட்டும் சுழுத்தி சேரு
பால்தேனும் பழமும்போல் சுவையு மாமே.

பொ. சு:

பேறுபெற்ற பதினெட்டுச் சித்தர்கள் பாடிய சாத்திரங்களைப் பார்ப்பாயாக. பதினெட்டுப் பேரில் சட்டைநாதர், திருமூலர், கொங்கணையர் ஆகிய மூவரும் பதினெட்டுச் சாதியிலும் நால்வராகச் (93ஆம் பாடலின் சொ.வி. காண்க.) சஞ்சரிப்பார்கள். பதியெட்டு, பசு எட்டு இணைய, தேன் கலந்த பாலும், பழமும் உண்ட சுவையை அனுபவிக்கலாம் என்கிறார்.

65. பதினெட்டுச் சாதியிலும் முடிவில் நிற்கப்
பலசாதி எழுவகையும் முடிவில் நிற்கும்

விதிவிட்டு ஈராறு சமயம் விட்டு
விரவிநின்ற பஞ்சகர்த்தர் வீடும் விட்டுப்
பதிவிட்டுப் பசுவிட்டுப் பாசம் விட்டுப்
பற்றிநின்ற கர்ணமென்ற பார்வை விட்டுக்
கதிவிட்டுக் கெதிவிட்டு காட்சி விட்டுக்
கலப்பார்கள் நாதாக்கள் கருத்துத் தானே.

பொ. சு:

பதினெட்டுச் சாதியின் முடிவில், ஏழுவகைப் பல சாதிகளும் முடிவாகி நிற்கும். பன்னிரு சமயம் விட்டுப் பரந்து நிற்கும் பஞ்ச பூதக் கட்டுகளும் விட்டுப் பதிவிட்டுப் பசுவிட்டுப் பாசம்விட்டு, கேட்டல், காண்டல் முதலிய ஐம்புல இன்பம் விட்டு, கதி, கெதி, காட்சி ஆகிய அனைத்தையும் விட்டுப் பரம்பொருளில் நாதாக்கள் கலப்பார்கள் என்கிறார்.

சொ. வி:

பல சாதி எழுவகை *– ஏழு உலகத்திலும் உள்ள பல்வேறு சாதிப் பிரிவுகளிலடங்கிய மக்கள் என்பதாகும். இச்சாதி பேதங்களைக் கடந்தவர்கள் நாதாக்கள் என்பதாம்.*

பஞ்சகர்த்தர் *– பஞ்ச கிருத்தியமாகிய ஐந்தொழிலுக்குத் தலைவர். (ஆக்கல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல்).*

கதிவிட்டுக் கெதிவிட்டு *– வழி, புகலிடம் விட்டு எனக் கொள்ளலாம்.*

66. நாதாக்க ளிருந்திடத்தே நாதன் வாழ்வான்
நால்வேத மாறுசாத்திரம் நாடிப் போற்றும்
வேதாந்த மறிந்தோரைப் பெரியோ ரையா
மேதினியில் வாழ்க்கையிலே வீற்றி ருப்பார்
வாதாகி யவருடனே பேச வேண்டாம்
மனதுநொந்தால் நீறாகு மிந்திரனார் வாழ்வும்
போதாந்த பானமப்பா மாயி பாதம்
பூசித்தோ ருலுகேழுக் கேத்தந் தானே.

பொ. சு:

நாதாக்கள் நாதனைத் தேடிச் செல்ல மாட்டார்கள். நாதாக்கள் உள்ள இடத்துக்கே, நாதன் தானாக வந்து வாழ்வான். நான்கு

வேதங்கள், ஆறு சாத்திரங்கள் அனைத்தும் அவர்களைப் போற்றி நிற்கும். வாதத் திறமையைக் காட்டுவதற்காக அவர்களுடன் பேசக் கூடாது. அன்னார் மனம் நொந்தால் இந்திரனார் வாழ்வும் நீறாகிப் போய்விடும். அறிவு மிகு பானமாம் மாயியின் பாதத்தைப் பூசித்தோர்கள் உலகேழும் போற்ற வாழ்வார்கள் என்கிறார்.

சொ. வி:

நால்வேதம் – ரிக், யஜுர், சாம, அதர்வண வேதங்களாகும்.

உலகேழு – 'அதல, விதல, நிதல, தசாதல, மகாதல, சுதல, பாதாள லோகங்களாம்'. (ஸ்ரீ விஷ்ணு புராணம், வாசு பிரசுரம்).

67. **ஏத்தமெத்த வுசத்தி மெத்த வறிவுண்டாகில்**
என்னூலைப் பார்த்தவர்கள் திறமோ மெத்த
ஏத்தமடா ஆகாச பான முண்டால்
எட்டெட்டுஞ் சித்தியா மிறையோ டொன்றும்
ஏத்தமென்ன நாதாக்கள் பாடு னூல்தான்
என்மகனே சித்தாந்த மிதுக்கொவ் வாது
ஏத்தமுண்டு மூலமதி லுறங்கிக் கொண்டால்
இவர்கள்தான் பிறப்பார்க ளிறப்பார் தானே.

பொ. சு:

எனது இந்த நூலைப் பார்த்தவர்கள் ஏற்றம் பெருகி, அறிவு மிகப் பெற்றுத் திறம் அடைவார்கள். ஆகாசபானம் உண்டால் அறுபத்து நான்கு சித்திகளும் கைவரப் பெற்று இறைவனோடு ஒன்றலாம். நாதாக்கள் பாடிய சித்தாந்த நூல்களினின்று இது வேறுபட்டது. (நாதாக்கள் பாடிய நூல், சித்தாந்தமாகிய இதற்கு ஒவ்வாது என்றும் பொருள் கொள்ளலாம்). மூலாதாரத்தில் குண்டலினி சக்தியை உறங்குமாறு விட்டுக் கொண்டிருந்தால் சாதாரண மக்களைப் போல் என்றும் பிறந்து, இறந்து உழல வேண்டியதுதான் என்பதாம்.

சொ. வி:

மூலம் – மூலாத்தாரம் ஆகும். மலவாயான குதஸ்தானம் என்று கருதுகின்றனர். 'வயிற்றின் அடிக்கீழ் எருவாய், கருவாய் என்னும் இரண்டுக்கும் நடுவே, முக்கோண வடிவினதான ஒரு எலும்பினைப் பற்றிக் கொண்டு காணப்படும் இடமே மூலமாகும்.'[79]

79. மறைமலையடிகள், சைவ சித்தாந்த ஞான போதம்.

68. இறவாம லிருக்கவென்றால் சத்தி பாதம்
இறைஞ்சினால் தமரோடே ஏற்று விப்பாள்
மறவாதே பானத்தைச் சதாநித்தம் கொள்ளு
வானல்கிரி ஊனோடே வந்து தூக்கும்
உறவாகத் தூக்கு மந்நல் கிரியோடே
ஊடலாஞ் சகலசித்து முண்மை யாகும்
துறவாதே பசுவான மடையர்க் கெல்லாம்
துறந்தாக்கால் சுத்தப்பாழ் பொய்யு மாமே.

பொ. சு:

இறவாமல் இருக்க, சக்தி பாதத்தை ஏற்றி இறைஞ்சத் தம்மவர்களுடன் வீற்றிருக்க அருள்வாள். மறக்காமல் பானத்தை நாடோறும் உட்கொள்ள, வானல்கிரி இத்தூல சரீரத்தோடு வந்து தூக்கும். அதாவது முக்தி அடைதலாம். அந்நல்ல மலையில் ஊடுருவ அனைத்து சித்துகளும் கைவரப் பெற்றுச் சிறப்படையலாம். பாசம் நீங்காத பசுக்களாகிய அறிவற்றோருக்கு இதனைத் திறந்து சொன்னால் தூய்மையான பாழ்வெளி பொய்யாகவே தோன்றும் என்கிறார்.

சொ. வி:

வானல்கிரி – மேலான ஒரு தன்மை, உயர்ந்த நல்ல மலையாக உருவகப்படுத்தப்பட்டுள்ளது.

69. பொய்யென்று இந்நூலைச் சொன்னோ ரெல்லாம்
புலையராய் ரவிகோடி நரகில் வீழ்வார்
மெய்யென்று சத்தியமாய்ப் பணிந்தோர்க் கெல்லாம்
விண்ணுலகில் பரத்தோடே மேவிப் போவார்
உய்ய மென்ற நல்லோர்கள் வாழ்ந்திருக்கும்
ஊரிலே யொருநாளுந் தீங்கொன் றில்லை
சைவமென்ற கிரிகையிலே இருந்து கொண்டு
சமயமெனு மீராறுந் தள்ளிப் பாரே.

பொ. சு:

பொய்யென்று இந்த நூலைச் சொல்பவர்கள் கோடி சூரிய காலத்துக்கு நரகில் புலையர் போல் உழல்வார்கள். மெய்யென்று பணிந்து போற்றுபவர்கள் மேலுலகில் பரம்பொருளுடன் இணைந்து வாழ்ந்து இன்பம் பெறுவார்கள். நல்லவர்கள் வாழும் ஊரில் ஒரு நாளும் தீங்கு வராது. சைவ சமயத்தில் இருந்து கொண்டு, பன்னிரு சமயமும் தள்ளி இதனைப் பார்ப்பாயாக என்பதாம்.

சொ. வி:

பொய்யென்று....... வீழ்வார் - பொதுவாக, கல்வெட்டு, செப்பேடு, சுவடிகளின் இறுதியில், இத்தகு சாபங்களைக் காண இயலும்.

70. பாரென்றா லென்னூலைச் சித்த ரெல்லாம்
பார்த்தவர்க்குப் பரிசமுதல் நிசந்தான் வேதை
நேரென்ற என்னூல்தான் தொகையே தென்றால்
நீகேளு எழுநூற்றிப் பதினெட் டாகும்
சீரென்ற அருளோடு பொருளு மாகத்
திரட்டுமுதல் பலகலம்பச் சூத்திரமு மாகப்
பாரென்ற பாசமுறுங் குண்டலியைக் கண்டால்
பதறாதே தொழில் முறையைப் பாடுறேனே.

பொ. சு:

இந்நூலைப் பார்த்தவர்க்குச் செய்முறைகள் அனைத்தும் கை கூடி வரும். எனது இப்பலகலம்பகச் (கதம்ப?) சூத்திரத் திரட்டுடன் நூற்களின் மொத்தத் தொகை எழுநூற்றுப் பதினெட்டாகும். இவ்வுலகப் பாசத்தை அறுக்கும் குண்டலினி சக்தியைக் கண்டு விட்டால் பதறிச் செய்யும் காரியங்கள் வேறு ஒன்றுமில்லை. இனித் தொடர்ந்து செய்முறைகளைப் பாடுகிறேன் என்கிறார்.

சொ. வி:

பரிசம் - பரீக்ஷம். பரீட்சித்துப் பார்த்தலாகும்.

வேதை - ஒன்றை மற்றொன்றாக வேதித்தல் அதாவது, மாற்றுதல் என்பதாம்.

குண்டலி - குண்டலினி சக்தியாகும். இது மூலாதாரத்தில் பாம்பு வடிவில் உறங்கிக் கொண்டிருக்கும். அஷ்டாங்க யோகப் பயிற்சியால் இதனை விழிக்கச் செய்து மேல் எழுப்பி, சகஸ்ராரத்தை மோதச் செய்து, அமிர்தமாக மாற்றி உண்பர் எனத் தெரிகிறது. குண்டலினி என்பது விந்துவே என்றும் பாம்பாக உருவகப்படுத்துவது ஆண்குறியே என்றும் கருதுகின்றனர்.

பாசாணக் கட்டு

71. பாடுகிறேன் பாசாணப் போக்கைக் கேளு
பருவெள்ளைப் பாசாணங் கழஞ்சு தூக்கிப்

பாடுகிறேன் பழச்சாத்தா லாட்டி யாட்டிப்
பாங்காக எருரெண்டில் புடத்தைப் போடு
பாடுகிறே னிப்படியே மூன்றுபுடம் போட்டால்
பாச்சப்பா செம்புதனில் பத்துக் கொன்றாய்ப்
பாடுகிறேன் வெள்ளியப்பா பதினா றாகும்
பருவமுடன் புளியிலையைச் செம்பில் பூசே.

பொ. சு:

ஒரு கழஞ்சு வெள்ளைப் பாஷாணத்தை நிறுத்து எடுத்துக் கொண்டு, எலுமிச்சம்பழச் சாற்றில் நன்றாக ஆட்டி, இரண்டு எருவில் மூன்று முறை புடம் போடவேண்டும். பின்னர் இதனைப் பத்துப்பங்கு செம்புக்கு ஒரு பங்கு அளவில் இட, பதினாறு மாற்றுடைய வெள்ளியாக மாறும் என்கிறார். இச்செம்பு வெள்ளியில் புளியிலையை அரைத்துப் பூசவேண்டும் என்றும் இயம்புகின்றார்.

சொ. வி:

பழச்சாத்தால் – 'எலுமிச்சம் பழச் சாற்றால்' என்பதாம். சித்த வைத்திய நூல்களில் பழச்சாறு என்பது இதனையே குறிக்கும்.

72. **பூசியே பழச்சாத்தி லரைத்துக் கொண்டு**
புரளாம லீரஞ்சு புடத்தில் போட்டு
நேசமுடன் குடவனிலே ரெண்டுக் கொன்று
நீட்டியே மாற்றேழு நினவாய்ப் பாரு
ஆசன்றித் தங்கத்தைச் செம்பே யாக்க
அறையிறேன் சூதமொன்று கெந்தி யொன்று
மாசிமால் தாரமொன்று (க)ளங்க மொன்று
மாறாத சாமமொன்று துருசு கேளே.

பொ. சு:

புளியிலை பூசிய அச்செம்பைப் பழச்சாறு விட்டு அரைத்துக் கொண்டு, பத்துப்புடம் இட்டுப் பித்தளையில் இரண்டு பங்குக் கொன்று இட, ஏழு மாற்றுக் காணும். இனி, குற்றம் சிறிதும் இன்றித் தங்கத்தைச் செம்பாக்கும் முறையைக் கூறுகிறேன். சூதம், கெந்தகம், அரிதாரம், (மால்தாரம்) களங்கம், சாரம் ஆகியவற்றை ஒவ்வொரு கழஞ்சு எடுத்துக் கொள்ள வேண்டும் என்கிறார்.

73. கேளப்பா வகையாறில் கண்டர்ப் பத்து
கெடியாக அஞ்சுவகைக் கன்பத் தஞ்சு
கேளப்பா பணவிடைதா னறுபத் தஞ்சில்
கிருபையுடன் சதிர்க்கள்ளிப் பாலி லாட்டிக்
கேளப்பா வேலுபோ(லு)ரு(ட்டி)க் கொண்டு
கெட்டியா யரிசியிடைத் துருசி லூட்டு
கேளப்பா தங்கமது செம்பே யாகும்
கிருபையுட னிச்செம்பைத் தங்கத்தி லூட்டிக்
கேளப்பா பணவிடைதான் பலத்திற் சேர்க்கக்
கெட்டி கெட்டி மாத்தேது அன்பதாமே.

பொ. சு:

ஐந்துவகைக் கண்டர் (மயில் துத்தம்) பத்து, ஐம்பது கழஞ்சு எடுத்துக் கொண்டு, அறுபத்தைந்து பணத்தைச் சேர்த்துச் சதுரக்கள்ளிப் பாலில் ஆட்டி, வேல் போன்ற வடிவில் உருட்டி, இதில் அரிசி எடை அளவு எடுத்துத் துருசில் ஊட்டத் தங்கம் செம்பாகும் என்கிறார். இந்தச் செம்பைத் தங்கத்தில் சேர்த்துப் பண எடை அளவு பலத்தில்? (பழம்? - எலுமிச்சம் பழம்) ஊட்ட ஐம்பது மாற்றாகும்' என்றும் உரைக்கிறார்.

சொ. வி:

துருசு - மயில்துத்தம். "Cupri Sulphas" ஆகும். இதனைச் சுண்ணம், செந்தூரமாக்கி, இதர சரக்குகளுடன் கூட்டிப் பல அவிழ்தங்களாக்கி உண்ண, வாதாதி தோஷ விரணம், அவமந்த குய்ய விரணம், கண்ணோவு, வாதசீதசுரம் ஆகியன நீங்கும். இதனைத் தசதீட்சை செய்து தூய்மைப்படுத்தியே பயன்படுத்த வேண்டும்.

74. அன்பதாங் குடவனிலே முப்பதுக்கு ஒன்று
ஆச்சரியஞ் செம்பிலே இருபதுக்கு ஒன்று
வன்பதாம் வெள்ளியிலே நாற்பதுக்கு ஒன்று
மாயாத இரும்பிலே பதினஞ்சுக் கொன்று
என்பதாஞ் சூதத்தில் பதினாறுக் கொன்று
இருவகைசே ரீயத்தி லெழுபதுக் கொன்று
இன்பமா யுருக்கிடவே சரிமாத் தாகும்
இக்களங்கைச் சிமிழிலே வைத்திருப்பர் வல்லோர்.

பொ. சு:

வேல் போல் உருட்டி வைத்தஅதனைப் பித்தளையில் முப்பது பணஎடைக்கு ஒரு பணஎடை அளவு, செம்பிலே இருபதுக்கு ஒன்று, வெள்ளியிலே நாற்பதுக்கு ஒன்று, இரும்பிலே பதினைந்துக்கு ஒன்று, சூதத்தில் பதினாறுக்கு ஒன்று, ஈயத்தில் எழுபதுக்கு ஒன்று என்ற முறையில் சேர்த்து உருக்கச் சரிமாற்றாகும். இவ்வாறு மாற்றுகின்ற இதன் மதிப்பறிந்து இக்களங்கை வல்லவர்கள் சிமிழில் பத்திரமாக வைத்திருப்பர் என்கிறார்.

தம்பனம்

75. வல்லார்க ளாகமத்தின் முறைதா னென்ன
மக்களே நால்வகைக்கு மார்க்கஞ் சொல்வார்
சொல்லாத கருவையெல்லாந் திறந்து போட்டேன்
செப்பிறேன் தம்பனத்தைச் செப்பு றேனே
சொல்லாத இலவம்வேர் குடைந்து கொண்டு
சொற்பெரிய கரண்டிதனைக் கீழே வைத்துக்
கொல்லாத சூதம்விட்டு இலவம் நீருங்
கூடவே முருக்கிலைச்சாறு[80] சரியா யூத்தே.

பொ. சு:

வல்லவர்கள் ஆகம முறைப்படி நான்கு வகைக்கு மட்டும் வழிகள் கூறுவார்கள். ஆனால் நானோ, இதுவரை யாரும் வெளியில் சொல்லாத கருக்கள் அனைத்தையும் அனைவரும் கண்டறியுமாறு திறந்து சொல்லி விட்டேன்.

இனி, தம்பனம் பற்றிக் கூறுகிறேன். இலவம் வேரைக் குடைந்து ஒரு கரண்டியில் இட்டு, அதனுள் சூதம், இலவஞ்சாறு, முருக்கிலைச் சாறு ஆகியவற்றை விட வேண்டும் என்கிறார்.

சொ. வி:

சொல்லாத கருவையெல்லாந் திறந்து போட்டேன் – பொதுவாகச் சித்த வைத்திய நூற்கள் அனைத்திலும் இத்தகு ஓர் உறுதி மொழியைக் காண முடிகின்றது. இதுவரை யாரும் சொல்லாத கருக்களை நான் வெளிப்படையாய்க் கூறிவிட்டேன் என்பார்கள். ஆனால், வெளிப்படையாய்க் கூறப்பட்ட அதுவே புரியாத பரிபாஷைகள் நிறைந்ததாக நமக்குத் தோன்றும்.

---

80. பா. பே. முருங்கை, செ. II.

தம்பனம் - புணர்ச்சியின் போதும் விந்துவினை வெளியேற்றாமல் ஸ்தம்பிக்க வைத்திருப்பதே 'தம்பனம்' ஆகும். உலக உற்பத்தியின் பொருட்டுத் தக்க பருவத்தில் ஆண் விதைப்பைகளில் இவ்விந்துகள் ஏராளமாக உற்பத்தி செய்யப்படுகின்றன. இவற்றைச் சீரான முறையில் வெளியேற்ற வாய்ப்புகள் கிட்டாவிடின், மண்டையடி, சிலவித மேக நோய்கள், மனநோய்கள் ஆகியன உண்டாகி உடல், உளத்தை நலிவடையச் செய்யும்.

உணவு அன்னரசமாகி இரத்தத்துடன் கலக்க மூன்றரை மணி நேரமாகும். அன்னரசம் இரத்தமாக மாறும் தருணத்தில் பல தினவுகளும், கனவுகளும் தோன்றும். காலை மூன்று மணி முதலே அக்கனவுகள் முகிழ்க்கும். அப்பொழுது விந்தழிவு உண்டாகும்.[81]

ஆக, வலிய விந்துவைக் கட்டுதலும், மிகையாக விந்திழத்தலும் உடலை, உள்ளத்தை நலிவடையச் செய்யும் என்பது தெளிவு. ஆனால் யோகிகள் விந்துவை முறைப்படி கட்டி, யோகசக்தியின் மூலம் மேலே எழுப்பி, ஆறு ஆதாரங்களைக் கடக்க வைத்து, ஆயிரம் இதழ்த் தாமரையில் மோத வைத்து, அமிர்தமாக மாற்றி உண்டு, ஆயிரக் கணக்கான ஆண்டுகள் அசையாமல் ஓரிடத்தில் இருந்து தவம் செய்தனர் என்ற உண்மையை உணர்கிறோம். ஆகவே, உடல் கட்டுக் கோப்பிற்கும், உயிர் நீண்ட காலம் வாழ்வதற்கும் உணவின்றி யோக நிலையில் இருப்பதற்கும், தம்பனம் பற்றிய அறிவு அன்னாருக்கு மிகவும் தேவைப்பட்டது. சித்த வைத்திய நூல்களில் இத்தம்பனம் முக்கிய இடம் பெறுகின்றது. போகர் முறைகள் எளியவையாகவும், வெற்றிகரமானவையாகவும் உள்ளன. 'போகர்' என்ற இவர் பெயரே தக்க சான்று. இந்நூலாசிரியர் இவர் முறைகளைப்[82] பாராட்டிப் பேசுவதையும் காண முடிகின்றது.

முருக்கிலைச்சாறு - முள்முருக்கஞ்சாறு ஆகும். இதில் வெள்ளைப் பூப்பூக்கும் மரத்தின் பட்டை, இலை வகையே உயர்ந்தது. குஷ்டம், சரும நோய் உள்ளவர்கள் இதன் இலைகள் மூன்று எடுத்து அரைத்து, அதிகாலையில் பச்சைத் தண்ணீரில் குளித்து விட்டுப் பத்து நாட்கள் உண்டு, உப்பில்லாப் பத்தியம் இருக்க, மேகவியாதிகள் அனைத்தும் குணமாகும் என இதன் குணம் கூறும் 'பதார்த்த குண போதினி' தெரிவிக்கிறது.

---

81. கவியோகி சுத்தானந்த பாரதியார், சோதனையும், சாதனையும்.

82. பாடல் எண் 92. 'பாங்காகு மிந்தமுறை போகர் மார்க்கம்'.

76. ஊத்தியே கொதிக்க வைக்கக் குளிகையாகும்
உத்தமனே வாயிலிடத் தம்பனையு மாகும்
மாத்தமின்றி இன்னமொன்று காந்தந் தன்னை
வகையாக மூன்றுதர முருக்கிச் சாய்த்து
ஏத்தமுடன் கழஞ்சிஒன்று மத்தூஞ் சாத்தில்
எட்டுநா ளூறியபின் னியல்பாய் வாங்கி
வாத்திடுவாய் கழஞ்சி கொண்டு சூதத்தெண்ணை
மர்த்திக்கக் கரத்தில் வைத்துக் குளிகையாமே.

பொ. சு:

முன்பாடலில் கூறிய மருந்துச் சரக்குகள் இட்ட கரண்டியை நெருப்பில் காட்டிக் கொதிக்க வைத்து எடுக்கக் குளிகையாகும் இக்குளிகையை வாயிலிடத் தம்பனையாகும்.

இது தவிர, இன்னுமொரு தம்பனமுறை கூறுகிறார். காந்தத்தை (அயக்காந்தம்) மும்முறை உருக்கிச் சாய்த்து இதில் ஒரு கழஞ்சு எடுத்து, ஊமத்தஞ் சாற்றில் எட்டுநாள் ஊற வைத்து, ஒரு கழஞ்சு சூதத்தெண்ணை விட்டுக் கையில் வைத்து நன்கு மசிக்கக் குளிகையாகும் என்கிறார்.

77. குளிகைதனைச் சீலையிலே கட்டிக் கொண்டு
கூசாமல் வாயிலிடத் தம்பனையு மாகும்
குளிகைதான் பலவகைக்கு மாகுங் கண்டாய்
கூறுவோ மின்னமொன்று கூட்டிச் சொல்வோம்
குளிகையென்ன தாமரையும் பூவுந் தாதும்
கூறுடனே காக்கணான் வெள்ளை யப்பா
குளிகையாந் தேனிலே ஆட்டிக் கொண்டு
கொப்பூழிலே தடவியே கூடு கூடே.

பொ. சு:

முற்கூறிய குளிகையை அணிந்திருக்கும் ஆடையிலே முடிச்சிட்டுக் கட்டிக் கொண்டு, வாயிலும் இடத் தம்பனையாகும். இக்குளிகை தம்பனைக்கு மட்டும் இன்றி, இன்னும் பல வகைக்கும் பயன்படும் என்கிறார்.

தம்பனத்துக்குதவும் மற்றுமொரு குளிகை செய்யும் விதம் கூறுகிறார். தாமரைப் பூவினை அதன் தாதுடனும், வெள்ளைக்காக்கணானுடனும் சேர்த்துத் தேனிலே ஆட்டிக் கொண்டு, கொப்பூழில் தடவிக் கூடத் தம்பிக்கும் என்கிறார்.

78\. கூடவே அப்பையிலை கசக்கிக் கொண்டு
குஞ்சியிலே மேல்நோக்கித் தடவிப் பின்னும்
கூடவே தம்பிக்கு மிந்திர கோபங்
குழலிலே பொடியாக்கி அடைத்துக் கொண்டு
கூடவே வேண்டினால் திரியி லூட்டிக்
கொளுத்திடுவாய் நெய்யேது சித்தே ரண்டங்
கூடவே தீபமங்கே எரியு மட்டுங்
குறையாது வீரியந்தான் கூடு கூடே.

பொ. கு:

அப்பையிலையை இலிங்கத்தில் (குஞ்சி - கூந்தல் என்றும் கொள்ளலாம்) மேல் நோக்கித் தடவிக் கொண்டு கூடினால் தம்பிக்கும் என்கிறார்.

இந்திரகோபத்தைப் பொடி செய்து, குழலில் அடைத்து வைத்துக் கொள்ள வேண்டும். இதனைத் திரியில் ஊட்டிச் சிற்றாமணக்கெண்ணை விட்டுத் தீபமேற்றிப் புணர, அத்தீபம் எரியுமட்டும் வீரியம் குறையாது என்றும் உரைக்கிறார்.

சொ. வி:

அப்பையிலை – சிறு கிளா இலையே ஆகும். இதன் இலை முள்ளுடன் கூடியது.

இந்திர கோபம் – "Mutella Occidentalis" எனப்படும் இந்திரகோபப் பூச்சியாகும். பட்டுப்பூச்சி, சந்திரபீஜம், தம்பலப் பூச்சி, ஈயல் என்றும் இது அழைக்கப்பெறும். மழைக்காலத்தை அடுத்து, காடுகளில் சிவப்பு நிறப் பட்டுத் தோலுடன் எங்கும் ஊர்ந்து திரியும் இதனைச் சிறுபாணாற்றுப்படை[83] போன்ற சங்க இலக்கிய நூல்களும் குறிப்பிட்டு விவரிக்கும் சிறப்பினைப் பார்க்கிறோம். இதனைக் கொண்டு தயாரிக்கப்படும் பற்பம் என்னென்ன நோய் நீக்கும் எனப் பதார்த்த குணவிளக்கம்[84] விவரித்துள்ளது.

முப்பூவின் பரிபாஷைப் பெயர்களில் ஒன்று இந்திரகோபம் என்பதாகும். 'இந்திரகோபம்' ஒரு மூலிகை வகை என்றும், பலசரக்கு

83\. 'கொல்லை நெடுவழி கோபம் ஊரவும்', வரி 168.

84\. 'கருமேகந் தாதுநட்டங் கக்குகபம் போக்குந்
தருமேநற் காயசித்தி தன்னை - வருமேக
சாலமுறை வாரளகத் தையலே நன்மாரிக்
காலமுறை யீயலது காண்', பாகம். 196.

மருந்துக்கடைகளில் விற்பனைக்குக் கிடைக்கக் கூடியது என்றும் 'சித்தர் காரசார இரசாயனம்' என்ற நூல் விவரிக்கின்றது.

79. தானென்ற திருகுகள்ளிப் பாலை வாங்கித்
தப்பாம லேழுதுளி கரத்தில் விட்டு
ஊனென்று மத்தித்துக் காலில் தண்டில்
உறவாகத் தடவியே செருப்புத் தொட்டு
வேனென்ற நிலத்திலே கால்பா வாமல்
விந்தையாய்ப் போயங்கே கலவி செய்வாய்
தேனுண்டு புணரயிலே மாதுக் கேதான்
செயல்கெட்டு மயல்கெட்டுத் திறமுங் கெட்டுக்
கோனென்று பணிந்தாக்கால் செருப்பை வாங்கிக்
கூசாம லமுத்திடப் **போகிக்குந் தானே.**

பொ. சு:

திருகுகள்ளிப்பால் ஏழுதுளி கையில் விட்டு நன்கு மசித்து, கால், இலிங்கம், (தண்டு - முழங்காலுக்கும், கணைக்காலுக்கும் இடையிலுள்ள பாகம் என்றும் கொள்ளலாம்) ஆகியவற்றில் பூசிக் கொண்டு கால் தலையில் படாது செருப்பிட்டுச் சென்று, செருப்பை அங்குக் கழற்றி விட்டுக் கூடப் பெண்ணுக்கு இன்ப மயக்கம் தோன்றிப் போகிக்கும்' என்கிறார்.

சொ. வி:

வேனென்ற நிலத்திலே கால்பா வாமல் – 'வெப்பம் மிகுந்த பூமியில் கால் படாமல்' என்பதாம். காலில் பூசப்பட்டுள்ள திருகு கள்ளிப்பால் பூமிச் சூட்டின் காரணமாகத் தன் சக்தியை இழந்துவிடும் ஆதலால் நிலத்தில் கால் படாது செல்ல வேண்டும் என்பதாம்.

போகிக்குந் தானே – கலவியின் போது ஆண் விந்து பெண் சுரோணிதத்துடன் கலக்கும் பொழுதே இருவருக்கும் 'உச்சநிலை உணர்வு', எனும் அதி இன்பம் கிட்டும்.[85]

ஆனால் தம்பன முறை காரணமாக விந்து வெளியேறிச் சுரோணிதத்துடன் கலக்காது இருந்தும், கள்ளிப்பாலின் சக்தி காரணமாய் மேற்கூறிய அதிஇன்பமும் போகத்தின் போது கிட்டும் என்பதாம்.

---

85. ந. சுப்புரெட்டியாரின் 'இல்லற நெறி' என்ற நூலினின்று பெற்ற கருத்து.

80. போகியர்த் தம்பனந்தா னின்னஞ் சொல்வேன்
புகழ்சத்திச் சாரணைக்குக் காப்புக் கட்டிப்
பாகமுடன் செவ்வாயில் பெலி கொடுத்துப்
பண்பாக மறுசெவ்வாய்க் காசு வைத்து
ஓரமுட னடைக்காயும் வெள்ளிலையும் வைத்து
முறையோடே நெய்வேத்தியமுந் தூப தீபம்
ஆகமத்தில் வழுவாமல் வேர்பி டிங்கி
அப்பனே வகையாகக் குளிச மாடே.

பொ. சு:

போக உணர்வு மிக்கோருக்கான தம்பனத்தை இன்னும் சொல்கிறேன். சிவப்புச் சாரணைக்குக் காப்புக் கட்டி, செவ்வாய்க் கிழமையன்று பலி கொடுத்து, மறு செவ்வாயன்று காசு காணிக்கையாக இட்டு, பாக்கு, வெற்றிலை வைத்து வணங்கி, நைவேத்தியம் செய்து, தூப, தீபம் காட்டி, ஆகம முறையில் கூறியதற்குச் சிறிதும் வழுவாமல் அதன் வேரினைப் பிடுங்கி வந்து குளிசமாட (குளிசமாடுதல் - மூலிகைகள் நன்றாகப் பயன் தருவதற்கு மந்திர பூர்வமாகச் செய்யும் இரட்சை) வேண்டும் என இயம்புகின்றார்.

சொ. வி:

பாகமுடன்......... தூப தீபம் - உயிர்காக்கும் மூலிகைகளைத் தெய்வமாகக் கருதிய முறை புலனாகின்றது.

தெய்வத்துக்கு ஓர் உயிரைப் பலி கொடுக்கும் வழக்கம் பண்டு தொட்டே இருந்து வந்திருக்கிறது.

நினைத்த காரியம் முடிந்தால் தன் தலையையே அறுத்துப் பலி தருவதாக நேர்ந்து கொண்டு, அவ்வாறே செய்த வீரர்களைக் கல்வெட்டுகளும், நடுகற்களும்[86] சுட்டிக் காட்டுகின்றன.

ஆகமத்தில் வழுவாமல் - ஆகமங்களில் கூறியபடி மூலிகையைப் பறிக்க வேண்டும் என்பதாம். மூலிகையை "ஓம் மூலி மூலி மஹாமூலி சிவன் சத்தி நிற்கச் சுவாகா" என்று ஒன்பது தரம்

86. "ஸ்ரீகம்ப பருமற்கு யாண்டு இருபதாவது
பட்டை பொத்தனுக்கு ஒக்கொண்ட நாகன்
ஒக்கதிந்தன் பட்டை பொத்தன் மேதவம்
புரிந்ததென்று படாரிக்கு நவகண்டங் குடுத்துக்
குன்றகத் தலை அறுத்துப் பிடலிகைமேல் வைத்தானுக்கு'
கல்வெட்டியல், பக்கம். 154.

செபித்து, சுண்டு விரல்கள் இரண்டும், நகங்கள் பத்தும் மூலிகை மீது படாமல் ஒவ்வொரு இதழாய்ப் புஷ்பங் கொய்வது போலப் பறிக்க வேண்டும்." எனப் 'பச்சிலை விளக்கம் எனும் பசுமூலிகை அகராதி'[87] குறிப்பிடுவது நோக்கத்தக்கதாக உள்ளது. வேர் பிடுங்கும்பொழுது ஆணிவேர் அறாமல் பிடுங்க வேண்டும் என்றும் அறிகிறோம்.

81. ஆடியே பின்னரையில் கட்டிக் கொண்டு
ஆமட்டும் புணர்ந்திடுவாய் ஆண்மை யாகும்
தேடியே சீதேவி மூலிக் கேதான்
சிறுகண்ணி நூலாலே காப்புக் கட்டி
நாடியே வடவேரைப் பிடுங்கி வந்து
நயமாக அரைமுன்னே குளிச மாடி
பாடியே புணர்ந்திடுவாய் இன்னஞ் சொல்வேன்
பால்வெள்ளைக் காக்கணம்வேர் கர்ப்பூரங் கூட்டி
ஊடுவாய் தண்டின்மேலே பனத்தைச் செய்து
ஊடல்செய்வாய் விடுகாம லுறைக்குங் காணே.

பொ. சு:

குளிசமாடிய அதனை இடுப்பின் பின்புறம் கட்டிக் கொண்டு கூட, ஆண்மை குறையாது என்கிறார். இதுபோல் சிறுகண்ணி நூலால் காப்புக் கட்டிச் சீதேவி மூலிகையின் வடபுறமுள்ள வேரினைப் பிடுங்கிக் குளிசமாடி முன் அரையில் கட்டியும் கூடத் தம்பனமாகும்.

இது தவிர, வெள்ளைக் காக்கணம் வேருடன் கற்பூரங் கூட்டி இலிங்கத்தில் பூசிக் கொண்டு புணர்ந்தாலும் விந்து வெளியேற்றம் தடுக்கப்படும் என்று இயம்புகிறார்.

சொ. வி:

சீதேவி மூலி – 'செங்கழுநீர்க் கொடி' ஆகும். சங்க இலக்கியங்களிலேயே இடம் பிடித்துள்ள சிறப்பு மிக்கது. இதன் கிழங்கு, புணர்ச்சியினால் எழும் வெப்பம்,இருமல், சர்வமேகத்தையும் நீக்கும். கண்களுக்குக் குளிர்ச்சி நல்கும். நல்லெண்ணையுடன் சேர்த்துத் தலைக்குக் குளிக்கலாம்.

சிறுகண்ணி – தாமரையே ஆகும். தாமரைத் தண்டில் நூல் எடுத்துக் காப்புக் கட்ட வேண்டும் என்கிறார். 'சிறு முடிச்சுகளை உடைய நூல்' என்றும் பொருள் கொள்ளலாம்.

பனம் – தம்பனம்?

---

87. ஆசிரியர், தேவேந்திரநாத பண்டிதர்.

பறட்டை இலை, பேய்க் கொம்மட்டி

82. உரைத்திடவே பறட்டையிலை ஆவின் பாலில்
உள்ளுக்குக் கொண்டிடவே தம்பிக்கும் மைந்தா
மறைத்திருக்கு முதுதண்டின் மேலே கேளு
மகுத்தான பேய்க்கும்மட்டிப் பழந்தா னொன்று
குறைத்திடுவாய் தூறிலே பணவட் டத்தில்
குடைந்திடுவாய் அதற்குள் வைக்க மருந்துகேளு
பொறைத்துடைய வெண்காரம் வராகன் வாங்கிப்
பொரித்தந்தக் காய்க்குள்வைக்கப் பொங்குந் தானே.

பொ. கு:

பறட்டை இலையைப் பசுவின் பால் விட்டு அரைத்து உள்ளுக்குக் கொண்டிடத் தம்பிக்கும் என்கிறார். அடுத்துத் தண்டில் பூசச் செய்முறை கூறுகிறார்.

பேய்க்கும்மட்டிப் பழத்தின் அடிப்பாகத்தில் பணத்தின் சுற்றளவில் வட்டமாய்த் துளை செய்து அதனுள் வெங்காரம் ஒரு வராகன் எடை வாங்கிப் பொரித்து இடவேண்டும் என்கிறார்.

செய்ய வேண்டியதனை அடுத்து வரும் பாடலில் விவரிக்கிறார்.

சொ. வி:

பறட்டை இலை - முயல் கற்றாழை போன்று இருக்கும். இலைகள் முயலின் காதுகள் போன்று விடைத்து நிமிர்ந்து காணப்படும்.

வராகன் - மூன்றரை ரூபாய் மதிப்புள்ளதும், பன்றி முத்திரை கொண்டதுமான ஒருவகைப் பொன் நாணயம்.

83. பொங்குமடா ரவியில்வைத்துப் பாரு பாரு
புகழா(க)த் துணியிலே வைத்துப் பின்னை
அங்கேதான் புணரவே காய்க சக்கி
அப்பனே லிங்கத்தில் பூசிக் கொண்டு
கங்கணமாய்ச் சேர்ந்திடவே தம்பிக்கு மெத்த
சுக்கிலமென்றவள் சொன்னால் மோரைக் கொள்வாய்
இங்கிதமாய்ப் போகிக்கு மிருவருக்கு மப்பா
இன்னமந்தக் காயொன்று சற்றே கீறே.

பொ. கு:

மருந்து இட்ட அப்பழத்தை வெயிலில் உலர விட்டுப் பின் ஒரு துணியில் எடுத்து வைத்துச் சாறு வர நன்கு கசக்கி, அச்சாற்றினை இலிங்கத்தில் பூசிப் புணரத் தம்பித்து, இருவருக்கும் மிகு இன்பமும் கிட்டும் என்கிறார்.

புணர்வின் போது கச்சிசமாக, அதாவது மிகக்கடினமாக உள்ளது என மங்கை கூறினால் நீ புளித்த மோரை உட்கொள்வாயாக என்றும் இயம்புகிறார்.

பின்னும், முற்கூறிய பேய்க் கும்மட்டிக் காயைக் கீறிச் செய்ய வேண்டியதை அடுத்த பாடலில் விளக்கிச் சொல்கிறார்.

சொ. வி:

கங்கணம் – திருகு வைத்துப் பூட்டும் ஒரு வகைக் கைவளை.

84. **கீறியே விரைபோக்கி யதற்குள் வைக்கக்**
கேள்மருந்து தேன்கொடுக்கி னிலைகாய் தன்னைக்
கீறியே துணியிலே ஏழுகாய்க்குக்
கிள்ளி வைத்து மூடியே புடத்தைப் போடு
கீறியே காய்கருக்கி எடுத்துக் கொண்டு
கெட்டியா யாட்டியே மெழுகு போலே
கீறியே உண்டைசெய்து அடைத்துக் கொண்டு
கெர்ச்சிக்க வேணுமென்றால் கேளு கேளே.

பொ. கு:

துணியிலே ஏழு பேய்க்கும்மட்டிக் காய்களை வைத்துக் கீறி விதைகளை எல்லாம் வெளியே எடுத்து விட்டுத் தேள் கொடுக்கின் இலை, காய் இவற்றை உள்ளிட்டுப் புடம் போட்டு, காய் கருகிய பின் எடுத்துக் கெட்டியாய் மெழுகு போல் ஆட்டி உருண்டை செய்து பத்திரப்படுத்த வேண்டும் என்கிறார்.

சொ. வி:

தேள்கொடுக்கு – இதன் காய்கள் தேள்கொடுக்கு போல் அமைந்திருப்பதால் உண்டான காரணப் பெயராகும்.

இதில் சிறுதேட்கொடுக்கு, பெருந்தேட்கொடுக்கு என இருவகை உண்டு. இதுவும் இலை அமைப்பால் ஏற்பட்ட காரணப் பெயரே ஆகும்.

பெருந்தேட்கொடுக்கு ரசதாதுவைப் பற்றிய அணுக்கிருமி, விரணக் கிரந்தி, மேகப்புண், கடுங்கிரந்தி ஆகியவற்றை நீக்கும்.

சிறுதேட் கொடுக்கு நமைச் சிரங்கு, விரணக் கரப்பான், சீழ் வீக்கம், கொருக்கு மாந்தம், ஒழுங்குப் பிரமேகம், பித்த வெள்ளை, அஸ்திசுரம் ஆகியவை தீர்க்கும்.

கெர்ச்சிக்க – ஸ்தம்பிக்க?

கோவையிலை, சங்கம் வேர்

85. வேணு மென்றா லுண்டையிலே ஒன்றெடுத்து
மென்றுண்ணத் தம்பிக்கு(ம்) மாற்றங் கேளு
பூணுகின்ற கோவையிலை கசக்கிச் சாற்றைப்
பூசடா வுள்ளங்கை தன்னி லேதான்
நாணுமே சங்கம்வேர்ப் பட்டை நாழி
நயமாகக் குறுவைநெல்லுப் படிதான் மூன்று
தோணுமே பட்டைதனை இடித்துக் தூளாய்ச்
சுகமாக நெல்லுடனே விரவி வையே.

பொ. சு:

தேவைப்படும் பொழுது முன் கூறிய உருண்டை ஒன்றினை எடுத்து மென்று உண்ணத் தம்பிக்கும். இதற்கு முறிவாக, கோவையிலையைக் கசக்கி உள்ளங் கையில் பூசவேண்டும் என்கிறார்.

அடுத்து, ஒருபடி சங்கம் வேர்ப் பட்டையினை இடித்துக், குறுவை நெல் மூன்று படியுடன் கலந்து வைக்க வேண்டும்.

சொ. வி:

கோவையிலை – இது பார்ப்பதற்கு நாய்ப்பாகல் இலையை ஒத்துக் காணப்படும். இதன் சிவந்த பழம் இலக்கியங்களில் இதழ்களுக்கு உவமையாக இடம் பெற்றுள்ளமையைப் பெரும்பான்மையாகக் காணலாம்.

சங்கம் வேர் – இது கபச்சுரம், கோழை, உட்சுரம், கிரந்தி ஆகியவற்றைக் குணப்படுத்தும். 'சங்கிலை' என அழைக்கப்படும் இதன் இலை நுனியில் சிறுமுட்களைக் கொண்டிருக்கும். தண்டிலும் முள் இருக்கும்.

சிறுகுழந்தைகளுக்குப் பிறந்தவுடன் நோய்த்தடுப்பாக இதன் இலையை அரைத்துப் புகட்டுவர். வயிற்றுப் போக்கினை நிறுத்த வெள்ளைப் பூண்டினுடன் இதன் இலையைச் சேர்த்தரைத்துத் தருவர்.

86. வைத்திடுவாய் நீர்விட்டுப் பிசைந்து கொண்டு
வாகாக வேகவைத்து இறக்கி மைந்தா
நொய்த்ததொரு ஆவிதான் போகா முன்னே
நொறுங்கவே குத்தினா லிடியா தப்பா
அய்த்தந்த அரிசிதனை வைத்துக் கொண்டு
அடவாகப் பத்தரிசி எடுத்துக் கொண்டு
கொய்த்திடவே முருங்கையுட கொழுந்துங் கூட்டிக்
கொள்ளடா சக்கரையில் பின்பு தானே.

பொ. சு:

கலந்து வைத்த மேற்கூறிய சங்கம்பட்டை, குறுவை நெல்லை நீர் விட்டு நன்கு பிசைந்து, பக்குவமாய் வேக வைத்து இறக்கி, ஆவி போகா முன் நொறுங்குமாறு இடிக்க, நொறுங்கிப் போகாது அரிசியாய் நிற்கும். அவ்வரிசியில் பத்து எடுத்து முருங்கைக் கொழுந்து, சர்க்கரை ஆகியவற்றைச் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்கிறார்.

குன்றி, வாலுழுவை

87. பின்புதின்னத் தம்பனையா மின்னங் கேளு
பேரான குன்றிதனை இடித்துத் தூளாய்
அன்பாக அமுரி விட்டு அரைத்துருட்டி
ஆமணக்கி னிலைதனிலே பொதிந்து கொண்டு
இன்புடனே கலத்தில்வைத்து ரவியில் மூட்டு
என்மகனே சாய்த்துவைக்கத் தயில மூறும்
அன்புபெறு மண்டியிலே[88] வாலுழுவை வைத்து
அதுரெண்டுங் காடியிலே அரைத்துக் கொள்ளே.

பொ. சு:

சேர்த்த அதனை உண்ணத் தம்பிக்கும் என்கிறார்.

குன்றியினைத் தூளாக இடித்து, அமுரி ஊற்றி நன்கு அரைத்து உருண்டை சேர்த்து, ஆமணக்கின் இலையிலே பொதிந்து ஒரு பாத்திரத்தில் இட்டு, வெயிலில் சாய்வாக வைக்கத் தயிலம் ஊறும். இத்தயிலத்துடன் அடி மண்டியையும், வாலுழுவையையும் சேர்த்துக் காடியிலே அரைத்துக் கொள்ள வேண்டும் என்கிறார்.

---

88. பா. பே. பிரண்டையிலே. தி.

சொ. வி:

குன்றி - தரையில் படரும் ஒரு கொடி வகையாகும். இதன் காய் கருப்பு, சிவப்பாய்க் காணப்படும். இது இலக்கியத்திலும்[89] இடம் பெற்றுள்ள சிறப்புமிக்க மூலிகையாகும். இதில் கருங்குன்றி, செங்குன்றி, வெண்குன்றி என மூவகை உண்டு. மருத்துவ அகராதியில் 'ஆட்டி' என இதன் மருத்துவப் பெயர் குறிப்பிடப்படுகிறது.

வாலுழுவை - கொடி வகை. 'Celastrus paniculata' என்பது இதன் அறிவியற் பெயராகும். மருந்துக் கடைகளில் விற்பனைக்குக் கிடைக்கக் கூடியது. இது வயிற்றுக்கடுப்பு, கிராணி பேதி, ரத்தபேதி ஆகியவற்றை நீக்கும் மருந்தாகப் பயன்படும்.

காடி - இது அன்னரசத்தை, அதாவது சோறு வடிக்காது' அக்கஞ்சியினை நன்கு புளிக்க வைப்பதால் கிடைக்கக் கூடியதாகும்.

88. **அரைத்ததனைக் கலத்திலே தடவிக் கொண்டு**
அப்பனே ரவியில் வைக்கத் தயிலமூறும்
இறைத்தூறும் ரெண்டுவகைத் தயிலந் தன்னை
எடுத்துவைக்க மேல்மருந்தை இயம்பக் கேளே
நிரைத்துவருங் கோதும்பையுடன்[90] தண்ணீர் மீட்டான்
நிசம்பெரிய கிழங்குமண லட்டிக் கூட[91]
உரைத்திடுவாய் பூனைக்கால் விரையு மப்பா
ஒரொன்று பலமரைதா னரைத் துருட்டே.

பொ. கு:

அரைத்த அதனை ஒரு பாத்திரத்தில் தடவி, மறுபடியும் வெயிலில் வைக்கத் தயிலம் ஊறும். முன்பாடலில் கூறியபடி சேர்த்த தயிலத்துடனும், இந்தத் தயிலத்துடனும், கோதும்பை, மணலுடன் வேக வைத்த தண்ணீர் விட்டான் கிழங்கு, பூனைக்கால் விதை ஆகியவை ஒவ்வொன்றும் அரைப்பலம் எடுத்து அரைத்து உருண்டை செய்ய வேண்டும் என இயம்புகிறார்.

சொ. வி:

தண்ணீர்மீட்டான் - தண்ணீர்விட்டான் என்று அழைக்கப் பெறும். மருத்துவ நூற்களில் 'சதாவரி' எனக் குறிக்கப்படும் இதன்

---

89. "புறங்குன்றி கண்டனைய ரேனும் அகங்குன்றி
மூக்கிற் கரியார் உடைத்து" - குறள். 277.

90. பா. பே. தும்பையுடன் செ. I.

91. பா. பே. மண் சிட்டி தானும், தி.

கிழங்கு வெகுமூத்திரம், உட்சூடு, வெள்ளை, புகிதனசுரம் ஆகியவற்றை நீக்கும் தன்மை படைத்தது எனப் பதார்த்த குண போதினி விவரிக்கின்றது.

பூனைக்கால் விரை – பூனைக்காலினை ஒத்து இதன் விதை அமைந்திருப்பதால் உண்டான காரணப் பெயராகும்.[92] வெருகடி எனச் சித்த வைத்திய நூற்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. கடைச் சரக்கு. தாது புஷ்டி நல்கும்.

தயில மாத்து, முள்ளெலவு வேர்

89. **உருட்டியே சக்கரையுங் கூட்டிக் கொண்டு**
உண்டிடுவாய் பாக்களவு ஆவின் பாலில்
உருட்டிநீ கலக்கியே[93] கொண்டு விட்டால்
ஒரு தினத்தி லாயிரம்பெண்[94] ணூடல் செய்வாய்
உருட்டியே முளித்தாலும் போகி யாது
உள்ளபடி மாத்ததற்கு உரைக்கக் கேளு
உருட்டியே முள்ளெலவம் வேர்த்தூள் தேனில்
உள்ளுக்குத் தின்றிடவே விடுகுந் தானே.

பொ. சு:

அவ்வுருண்டையில் பாக்களவு எடுத்துப் பசும்பாலில் கலக்கி உட்கொண்டு விட்டால் ஒரு நாளைக்கு ஆயிரம் பெண்களுடன் சேரும் ஆண்மை பெறலாம் என்கிறார். உருட்டிய அவ்வுருண்டை உலர்ந்து (முளித்தல்) விட்டால் போகியாது. ஆயினும் உண்மையான மாற்றாக இன்னொன்றையும் உரைக்கிறார்.

முள்ளெலவம் வேரினைத் தூள் செய்து தேனில் குழப்பி உண்ண வேண்டும் என்கிறார்.

சொ. வி:

ஒருதினத்தி லாயிரம்பெண்ணூடல் செய்வாய் – ஒரே நாளில் ஆயிரம் பெண்களுடன் கலக்கும் ஆண்மை வீரியம் கிட்டும் என்பதாம். 'ஆயிரம்' என்ற எண்ணிக்கை மிகைப்படுத்தப்பட்ட எண்ணாகத் தோன்றினும் பல பெண்களுடன் என்ற அளவில் எடுத்துக் கொள்ளலாம்.

---

92. Dr. Subbiramaniam, The greatness of the siddha system of medicine.
93. பா. பே. 'கால்படியில்', செ. I.
94. பா. பே. நூறு பெண்ணை மருவலாமே, செ. I. தி.

மிகுதியான கலவி உடலின் ஆரோக்கியத்துக்குகந்ததல்ல. சுக்கிலத்தை வீணாக்குவோன் ரோகியாவதல்லாமல் மூளையின் வல்லமைகேட்டு, ஞாபக சக்தியை இழப்பான். புத்திர உற்பத்தியின் பொருட்டல்லாது சிற்றின்ப நோக்கத்துடன் கூடுதலைப் புராணங்களும், இலக்கியங்களும் வெறுத்தொதுக்குகின்றன. காலவரையறைகளையும்[95] உரைத்துள்ளன.

இப்பாடலில் குறிப்பிடப்பட்டுள்ள மருந்தினால் ஆயிரம் பெண்களுடன் ஊடல் செயினும் சுக்கில வீரியம் கூடி, உடல் வலிமையும், பொலிவும் பெறும் என்பது தெளிவாகின்றது.

ஆயிரம் பெண்ணூடல் என்றது கூடலின் முதற்படி ஊடல் ஆனதால் கூடலை ஊடல் என்றே குறிப்பிட்டுள்ளார் எனலாம்.

முள்ளௌலவம் – முள்ளிலையே ஆகும்.

வெள்ளைத் தாமரை, காத்தொட்டி, ஓரிலைத் தாமரை

90. விடுகாது இன்னமொரு தொழிலைக் கேளு
வெண்டாமரை மணியைத் தேனி லாட்டி
அடவாக லிங்கத்தில் தடவி யேதான்
ஆறவிட்டுப் புணர்ந்திடவே அசையா தப்பா
நடவாகக் காத்தொட்டி வேர்ந றுக்கி
நாபியின்கீழ்ப் படுக்கையிலே போட்டு வைத்தால்
வடுவாடு மோரிலைத் தாமரை யைத்தான்
வாழ்கோழி பெலிகொடுத்து வாங்கிக் கொள்ளே.

பொ. கு:

தம்பனத்துக்குரிய இன்னம் ஒரு முறை கூறுகிறார்.

வெள்ளைத் தாமரை விதையினைத் தேனில் ஆட்டி இலிங்கத்தில் பூசி, அது உலர்ந்தபின் கூட, விந்து விழாது என்கிறார்.

இதுபோல் காத்தொட்டி வேரினை நறுக்கிப் படுக்கையில் கொப்பூழின் கீழே போட்டும் சேரலாம் என்கிறார்.

அடுத்து ஓரிலைத் தாமரை தம்பனத்துக்குப் பயன்படும் முறையை இயம்புகின்றார்.

95. "மதிக்கொருகால் பேதையரை நுகர்வோம்."
"பெண் கடமை திங்களுக்கோர் காலன்றி மருவோம்".
"பகற் புணரோம்".
"சுகப்புணர்ச்சி யன்னசிரணத் தருணஞ் செய்யோம்".

இதனைக் கோழியைப் பலி கொடுத்துப் பறிக்க வேண்டும் என்கிறார்.

சொ. வி:

காத்தொட்டி – 'ஆதொண்டை' எனவும் அழைக்கப்படும். இதனைச் சூரணித்துத் தர, பீனசம், மண்டைக் குடைச்சல், தொண்டைக் கபம் ஆகியன தொலையும், இதன் வேர் விரியன் விஷத்தை இறக்கும்.

கரும்பூனைவால் கருஞ்சாரை

91. பெலிகொடுத்த ஆணிவேர் பிடிங்கிக் கொண்டு
பெலமாக அரையிலே முன்னே கட்டி
ஒலிவெடுத்துப் போகாது விந்து தானும்
உற்பனமாய்ச் சிரசிலையும் வைத்துக் கொள்ளே
பலியெடுக்குங் கரும்பூனை வாலு மாகும்
பண்பான கருஞ்சாரை எலும்பு மாகும்
வலிவெடுத்த மாதர்கட்கு விந்து தானும்
வாங்குமடா மேல்நோக்கி வாங்குந் தானே.

பொ. சு:

கோழியுடன் கரும்பூனை வால், கருஞ்சாரை எலும்பு ஆகியவற்றையும் பலி கொடுத்து, ஓரிலைத் தாமரையின் ஆணி வேரைப் பிடுங்கி இடுப்பில் கட்டிக் கொண்டு, தலையிலும் அரைத்து வைத்துக் கொள்ள விந்து விழாது என்கிறார்.

சொ. வி:

கருஞ்சாரை எலும்பு – கருஞ்சாரைப் பாம்பின் எலும்பாகும். சாரைப் பாம்பு வகையில் 'மஞ்சள் சாரை' என்ற ஒன்றும் உண்டு. சாரைப் பாம்பு விஷமற்ற பாம்புகள் வகையைச் சேர்ந்தது.

92. வாங்குமடா சுக்கிலத்தை மேலே ஏத்தி
மன்மதனும் ரதியும்போல் வாழ்வார் வாழ்வார்
பாங்காகு மிந்தமுறை போகர் மார்க்கம்
பாரடா பதினாலு உலகு தோறுங்
காங்கிசையாய் மாதர்களைப் பாத்தா யானால்
கைவசமா யந்நேரங் கலக்கச் சொல்வார்
ஏங்காதே இளையாதே இல்லத் தோடே
இயல்பாகச் சயோகத் திருந்து பாரே.

பொ. சு:

சுக்கிலத்தை மேல் நோக்கி வாங்கும். ஆயினும் மன்மதனும், ரதியும் போல் அவர்கள் இன்பம் காண்பார்கள். இந்த முறை போகர் கூறியது என்கிறார்.

இவ்வோரிலைத் தாமரை மருந்தால் விந்து மென்மேலும் ஊறிப்பெருக, உடல் நல்ல வலிவும் ஒளியும் பெறும். இத்தேகப் பொலிவு காணும் பதினாலுலகப் பெண்டிரும் தம்முடன் கூடுமாறு வலிய அழைப்பார்கள். ஆனால் இல்லத்தரசியுடன் இன்பமாக (சையோகம்-புணர்ச்சி, கலக்கை) இருப்பாயாக என நவில்கிறார்.

சொ. வி:

பதினாலுஉலகு - சுவர்க்கம், பூலோகம், புவர்லோகம், ஜனலோகம், தபோலோகம், மகாலோகம், சத்தியலோகம் ஆகிய மேலுலகமும் அதலம், விதலம், சுதலம், இரசாதலம், தராதலம், மகாதலம், பாதாளம் என்ற கீழுலகம் ஆகிய 14 உலகங்களை அபிதான சிந்தாமணி குறிக்கிறது.

நாகசுத்தி, நாக கற்பம்

93. **பார்த்திடவே நாகத்தின் சுத்தி கேளு**
பண்பாமுன் னால்வருக்கும் பகர்ந்த வாறு
பார்த்திடவே நாகமோ பலந்தா னஞ்சு
பதறாமல் தேங்காய்நெய் விட்டு ருக்கிப்
பார்த்திடவே கிண்ணிசெய்து தாக்கக் கேளு
பண்பாகச் சட்டியிலே உப்பை விட்டுப்
பார்த்திடவே உப்பிலே கிண்ணி வைத்துப்
பார்மகனே விரல்கிடைதான் தெரியக் கேளே.

பொ. சு:

துத்தநாகத்தினைச் சுத்தி செய்யும் முறைகளை முன்பு நான்கு பேர்களுக்குக் கூறியவாறு இங்கு கூறுகிறேன் என விளம்புகிறார்.

ஐந்து பலம் துத்தநாகத்தைத் தேங்காயெண்ணை விட்டு உருக்கிக் கிண்ணம்போல் செய்துகொள்ள வேண்டும். ஒரு சட்டியில் உப்பிட்டு, அக்கிண்ணத்தை நடுவில் வைக்க வேண்டும். சட்டிக்கும், கிண்ணத்திற்கும் உள்ள இடைவெளி விரற்கடை அளவு இருக்க வேண்டும் என்றும் விவரிக்கிறார்.

சொ. வி:

முன்னால்வருக்கும் பகர்ந்தவாறு – முன்பு நான்கு சீடர்களுக்கு உரைத்துள்ளார் எனத் தெரிகிறது. அவர்கள் இன்னார் என்பது விளங்கவில்லை.

அல்லது பொதுவாக, உலக வழக்கில் 'நாலு பேருக்குச் சொல்லியது' எனக் கூறுவது போல் இங்கு உரைத்துள்ளார் எனக் கொள்ளவும் இடமுள்ளது.

94. கேளப்பா சுத்துமந்த உப்பைப் போட்டுக்
கிஞ்சுதமாம் பெருவாயன் நீரை வாங்கிக்
கேளப்பா சுருக்கிடவே கட்டிப் போகுங்
கிருபையுட னுப்பாகும் படிநீர் குத்தில்
கேளப்பா கிண்ணிநிற முப்பே யானல்
கெட்டி கெட்டி நாகமங்கே பற்பமாகும்
கேளப்பா இக்கருவால் போக்குக் கோடி
கேசரமாம் போகத்திற் கிட்டுந் தானே.

பொ. சு:

முற்கூறிய அதற்கு ஒரு படி கழுதை மூத்திரத்தால் சுருக்குக் கொடுக்க அது கட்டிப் போகும். கிண்ணி நிறம் உப்பாக மாறும் பக்குவத்தில் நாகம் பற்பமாகி விட்டது எனத் தெரிந்து கொள்ளலாம். இக்கருவால் கோடி முறைகள் செய்து கேசரமாம் போகத்தை அடையலாம் என்கிறார்.

சொ. வி:

கேசரம் – தலையில் அமைந்துள்ளதாக யோகியர் கருதும் சகஸ்ராரம் எனப்படும் ஆயிரம் இதழ்த் தாமரை.

95. போகத்திற் கூட்டிவிக்கும் நாக நீற்றைப்
பொறையோடே பணவிடைதான் கரத்தில் வைத்து
நீதத்தில் தாம்புரத்தி லமுதத் தாலே
லேபித்து உருக்கிடவே தங்க மாகும்
காதத்தில் சூதத்தைக் கண்டு விட்டால்
காலனுட மீம்பட்ட சீவ னாகும்
வேதத்தின் முறையிதுதா னீசன் சொல்லும்
விருதுபெற்ற பெரியோர்கள் வித்தை தானே.

பொ. சு:

இன்பம் சேர்க்கும் அந்நாக நீற்றைப் பண எடை அளவு கரத்தில் வைத்து, தாமிரத்தின் அமிர்தத்தால் லேபித்து (Plastering) உருக்கத் தங்கமாகும் என்கிறார்.

இவ்விதச் சூதத்தைக் கண்டுவிட்டால் எமனிடமிருந்து மீண்டு விட்ட உயிர் ஆகலாம். சிவன் சொன்ன, விருதுபெற்ற பெரியோர்கள் கண்ட வித்தை இதுதான் என்றும் உரைக்கிறார்.

சொ. வி:

தாம்புரத்தில் அமுதம் - தாமிரப்பால் ஆகலாம். தாமிரம் பால் போன்ற வடிவில் உள்ள தன்மை.

அயச்செம்பு

96. **வித்தாகு மயச்செம்பை இன்னங் கேளு**
மென்மைபெற்ற மணலிரும்பை இறகுபோல் தட்டி
அத்துவயம் பலமஞ்சை எடுத்துக் கொண்டு
அடவாகச் சிவந்தபுளி நரளை மூலம்
கொத்தாருங் கொங்கை நல்லாள் பாலி லாட்டிக்
கூசாம லயச்சல்லி பிசறிக் கொண்டு
உத்தமனே பட்சமொன்று ஊற வைத்து
ஊறினால் பார்த்ததனை எடுத்துக் கொள்ளே.

பொ. சு:

இப்பாடலில் அயச்செம்பு பற்றிக் கூறுகிறார். மணலிரும்பு (மணல் கலந்த இரும்பு) ஐந்து பலம் இறகு போல் மெலிதாகத் தட்டிக் கொள்ள வேண்டும். சிவந்தபுளி நரளையின் கிழங்கை முலைப்பாலில் நன்கு ஆட்டி, முன் தட்டி வைத்த அயச்சல்லிகளுடன் கலந்து பிசறிப் பதினைந்து நாட்களுக்கு ஊறவைக்க வேண்டும். பக்குவமாய் ஊறிய பின் பார்த்து எடுத்துக் கொள்ள வேண்டும் என்கிறார்.

சொ. வி:

சிவந்தபுளிநரளை மூலம் - கொடிவகை. கணுவில் ஓரிலை இருக்கும். இதன் கிழங்கு செம்பின் களிம்பை நீக்கப் பயன்படும். வெளி முளை மூலத்தை அறுக்கும் தன்மை படைத்தது. இதனை உணவில் சேர்த்துச் சாப்பிடலாம்.

கொங்கை நல்லாள் பால் - (Mother's Milk) அமிர்தப்பால், பாலாமிர்தம், தாய்ப்பால் எனவும் குறிப்பிடப்பெறும். இது

எழுவகைத் தோஷங்கள், வெப்பம், சந்நிபாதம், வாதபித்தம், கபசுரங்கள், திரிதோஷம், வாதகிரிச்சுரம், நாவறட்சி ஆகியவைகளை நீக்கும்.[96] ஔஷத அனுபானத்திற்கும் கலிக்கத்திற்கும் பெரிதும் பயன்படுத்தப்படும். உஷ்ணதேகிகட்குத் தர உஷ்ணத்தைச் சரிப்படுத்தும். சீதள தேகிகட்குக் கொடுக்கும் போது சீதளத்தை நீக்கி உஷ்ணத்தைப் பிறப்பிக்கும் குணம் கொண்டது.

97. எடுத்தப்பா வச்சிரத்தால் குகை பிடித்து
இதமாகச் சுட்டெடுத்து அதற்குள் ளேதான்
பகுத்திடுவாய் இலையரைத்துக் குகைக்குள் நீயும்
பாங்காக அயச்சல்லி தன்னை வைத்து
மடுத்ததொரு மருந்தாலே குகைவாய் மூடி
மறாமல் சீலைசெய்து உலையின் மீதே
கொடுத்திடுவாய் துருத்தி கொண்டு ஊதுநீர்போல்
கூசாமல் உருக்கிடவே செம்பு மாமே.

பொ. சு:

எடுத்த அதனை வச்சிரத்தால் குகை பிடித்து இதமாகச் சுட்டெடுத்து நரளையிலை அரைத்து, அயச்சல்லியில் பூசிக் குகைக்குள் வைத்து, சேர்த்த அம்மருந்தாலேயே குகைவாயை மூடி மறவாமல் சீலை செய்து, உலையில் துருத்தி கொண்டு ஊதி நீர் போல் உருக்கிடச் செம்பாகும்.

அயச் செம்புச் சிமிழில் செந்தூரம்

98. செம்பாகு மயச்செம்பு வராக னொன்று
சேத்துருக்க வெள்ளியப்பா வராகன் ரெண்டு
செம்பாகு மிச்செம்பால் சிமிழ டத்துச்
சேர்த்திடுவாய் மூடியொடு தாயுங் கூடச்
செம்பாகுஞ் சிமிழிலே மருந்தைக் கேளு
செப்புகிறேன் நாகமோர் கழஞ்சி யொன்று

---

96. "தன்னியமென் றோதிற் சருவதோ ஷங்களும்போம்
உன்னிய தாப மொழியுங்காண் - சந்நியோடு
வாதசுரம் பித்தசுரம் வன்கபச்சு ரந்தணியுங்
கோதில் வலிமையுண்டாங் கூறு."
"இருந்தோஷம் போக்கு மிகற்கிரிச்சந் தீர்க்கும்
அறுந்து மருந்தினனு பானம் - பொருந்தும்
அஞ்சனத்திற் காகு மறல்வறட்சி நீங்கிவிடும்
பஞ்சினடி மாதர்முலைப் பால்".
- பதார்த்த குணவிளக்கம், பக்கம். 275.

செம்பாகுந் தகடடித்து லிங்கஞ் சூதஞ்
சேர்கழஞ்சி யதைத்திடவே மருந்து கேளே.

பொ. சு:

செம்பாக மாறிய இதனுடன் அயச்செம்பு ஒரு வராகன் சேர்த்து உருக்க வெள்ளியாகும். இவ்வெள்ளி இரு வராகன் எடுத்து, செம்பினால் ஆகிய செம்பு மூடியுள்ள செப்பில் போட்டுத் துத்தநாகம், லிங்கம், சூதம் ஆகியவையும் ஒவ்வோர் கழஞ்சு இட வேண்டும் என்கிறார்.

99. மருந்தேது மிளகுதாக் கரளிச் சாறு[97]
வாழெருக்கம் பருப்பினுட சாறுந் தேனும்
விருந்துட்டி யாட்டியே வழித்துக் கொண்டு
வியனாகத் தகட்டிலே பொதிந்து கொண்டு
வருந்தாமல் சிமிழிலே வைத்தடைத்து மூடி
மைந்தனே சீலைமண்ணுஞ் செய்த பின்னும்
இருந்துருக்க ஆவரையின் கரியி னாலே
என்மகனே அருணன்போல் சிவக்குந் தானே.

பொ. சு:

முன்பாடலில் கூறிய சிமிழில் இட்ட மருந்துடன் மிளகு கலந்த அரளிச்சாறு, எருக்கம் பருப்பின் சாறு, தேன் ஆகியவற்றையும் இட்டுக் குழப்பித் துத்தநாகத் தகட்டில் பொதிந்து, சிமிழை மூடிச் சீலைமண் செய்து ஆவரையின் கரியினால் தீயிட்டு எரித்து உருக்கச் சூரியன் போல் சிவந்து வரும் என்கிறார்.

100. சிவந்ததொரு செந்தூர மோரு வாங்கிச்
சேர்த்திடுவாய் வெள்ளியொரு கழஞ்சி தன்னில்
சிவந்ததொரு மாத்தேது யீரெட் டாகும்
தீர்க்கமுடன் வங்கத்தில் கழஞ்சி வாங்கிச்
சிவந்ததொரு செந்தூரம் பணந்தா னூட்டில்
தெளிவென்ன வெட்டரைதான் செப்ப மாட்டேன்
சிவந்ததொரு செந்தூரங் காணி கொள்ளத்
தேகமென்ன தேவனிட தேக மாமே.

---

97. பா. பே. தக்காளிச்சாறு, செ. II.

பொ. கு:

சிவந்து நிற்கும் இச்செந்தூரத்தின் மோரினை வாங்கி, ஒரு கழஞ்சு வெள்ளியில் சேர்க்கப் பதினாறு மாற்றுக் காணும். ஒரு கழஞ்சு வங்கத்தில் ஒரு பண எடை அளவு சேர்க்க, எட்டரை மாற்றுக் காணும். ஒரு காணி (80 இல் 1 பங்கு 1/80) உட்கொள்ள உடல் தேவனுடையது போல் பொன்னிறம் பெறும்; சாவு அணுகாது என்கிறார்.

எட்டிவிரைத் தயிலம், அங்கோலம்

101. தேவனா மீரெட்டு வயசு மாவான்
செப்பமுட னிருபதுநாள் தின்றா யானால்
தேவனா மெட்டிவிரை கரிப்பான் சாற்றில்
திறமாக மூன்றுதிர மவித்துக் கொண்டு
தேவனாந் தேனிலே யுரைத்துக் கொண்டு
சீனத்தி லேபிக்கத் தம்பனையு மாகுந்
தேவனா மங்கோல் பழச்சாறு கொண்டு
திரிதிரித்துத் தம்பிக்க லபிக்குந் தானே.

பொ. கு:

காணி அளவு அச்செந்தூரத்தை உட்கொள்ள என்றும் பதினாறு வயதுடைய இளமைத் தோற்றத்தை அடைவான்.

எட்டிவிதை, கரிப்பான் சாறு இவற்றில் மூன்று முறை முறையாக (திரம் - தரம்) அவித்துத் தேனிலே குழைத்துச் சீனக்காரத்தில் லேபிக்கத் தம்பனையாகும். அங்கோல் பழச்சாறு கொண்டு திரிதிரித்தாலும் தம்பனமாகும் என்று உரைக்கிறார்.

சொ. வி:

எட்டி விரை – *எட்டிவிதை. இது காஞ்சிரம், விடமுட்டி என்றும் அழைக்கப்பெறும். மிகக் கசப்புடையது. கசப்பின் எல்லையைக் குறிக்க எட்டிக் காயைக் குறிப்பிடுவர். சன்னிக்கு இதன் சூரணம் முக்கியமாகப் பயன்படுத்தப்படும். எட்டிமரம் அடர்ந்த காடுகளில் வளரக்கூடியது.*

சீனம் – *சீனக்காரம்* (Alumen). *படிக்காரம் எனப்படுவதும் இதுவே. இத்தாலிய தேசத்திலும், பீஹார், நேபால், கச்சி போன்ற இடங்களிலும் எரிமலைகளினடிவாரத்தில் படிக்காரச் சத்து அடங்கிய கற்கள் கிடைக்கும். இவற்றைத் தூள்செய்து முறைப்படி*

நீர் விட்டுக் காய்ச்சி உறைய வைத்துத் தூய்மையான படிக்காரத்தைப் பெறுவர். இது துவர்ப்புடன் கூடிய புளிப்புச்சத்து உடையது.

சீனக்காரம் பெண் சரக்கு. இதற்கு ஆண் சரக்கு வெடியுப்பு.

"சீனமெனுங் காரமது சீறிவரு பல்லரணை
யானைக்கால் கண்ணோ யனிலமொடு – மாநிலத்திற்
றுன்மாங் கிசம்வாய்வு தோலாத வுள்ளழலை
குன்மமிவை போக்குங் குறி"

என இது நீக்கும் நோய்களை விவரிக்கிறது பதார்த்த குணவிளக்கம்.

அங்கோல் பழச்சாறு – 'சமுத்திராப்பழம்' என அழைக்கப்படும் பழமே ஆகும். இது உருண்டை வடிவமானதாகக் கடுக்காய் நிறத்துடன் காணப்படும்.

வெள்ளி வித்தை

102. தானென்ற வெள்ளிவித்தை சொல்லக் கேளு
தயவாகச் சூதமொரு கழஞ்சி மூன்று
வேனென்ற வெள்ளையப்பா கழஞ்சி மூன்று
விபரமுட னவச்சாரங் கழஞ்சி மூன்று
ஏனென்ற எருக்கம்பால் கொண்டு நீயும்
இயல்பாக மூன்றுமொன்றா யாட்டி யாட்டித்
தீனென்ற வெழு கழஞ்சி செம்பினாலே
சிமிழடித்து மூடியுடன் சிறக்கச் செய்யே.

பொ. சு:

இப்பாடலில் வெள்ளி வித்தை பற்றிக் கூறுகிறார். சூதம், வெள்ளைப் பாசாணம், நவச்சாரம் ஆகிய மூன்றும், ஒவ்வொன்றிலும் மும்மூன்று கழஞ்சு எடுத்து, எருக்கம்பாலில் நன்கு ஆட்டிக்கொள்ள வேண்டும். ஏழு கழஞ்சு செம்பினால் மூடியுடைய சிமிழ் ஒன்று செய்ய வேண்டும் என்கிறார்.

103. செய்தப்பா சிமிழிலே மருந்தை வைத்துச்
செப்பமுடன் சட்டியிலே மணலை யிட்டுச்
செய்ததொரு சீலைமண்ணைச் செய்து பின்பு
சீராகச் சட்டிக்குள் சிமிழை வைத்துச்
செய்ததொரு மேல்சட்டி கொண்டு மூடித்
தீர்க்கமுடன் மண்செய்து சந்து பேணிச்

செய்ததொரு யெரிப்பேது தீப மப்பா[98]
சிமிழிலே செந்தூரம் பற்றுந் தானே.

பொ. சு:

செய்த அச்செம்புச் சிமிழில், முன் பாடலில் கூறிய மருந்தை இடவேண்டும். ஒரு சட்டியில் மணலைப் போட்டுச் சீலைமண் செய்து, அதனுள் சிமிழை முறைப்படி வைத்து, மற்றொரு பொருத்தமான சட்டி கொண்டு அதனை மூடி, மண் பூசிச் சந்து பேணித் தீபாக்கினியாக எரிக்கச் சிமிழில் செந்தூரம் பற்றும் என்று விளக்குகிறார்.

சொ. வி:

சீலை மண் – எரிப்பின்போது சட்டியில் வைத்த மருந்துப் பொருட்கள் புகைந்து ஆவியாகப் போய்விடாது காக்கச் சட்டியை அதே அளவுடைய சட்டி கொண்டு மூடி இடைப்பட்ட சந்தினையும் துணியால் சுற்றி அதன்மேல் மண்ணும் பூசி அடைப்பர். இதுவே 'சீலைமண்' எனப்படும். ஒரு துணி முதல் ஏழுவரை துணி சுற்றி மண் பூசல் உண்டு. எண்ணிக்கைக்கு ஏற்ப ஐந்து சீலைமண், ஏழு சீலை மண் என இனம் பிரித்துக் கூறுவர்.

தீபம் – தீபாக்கினியாகும். இரண்டு விரற்கடை கனமுள்ள ஒரு விறகைக் கொண்டு தீபத்திற்கு ஒப்பாகச் சுடர் சட்டியின் மையத்தில் தாக்கும்படி எரித்தல் ஆகும்.

104. **பற்றிநின்ற செந்தூர மொருமா வாங்கிப்**
பார்மகனே வெள்ளீயம் கழஞ்சி கூட்டு
பற்றிநின்று ஊதிடவே வெள்ளி யாகும்
பாரப்பா வெள்ளி வித்தை யிதுதானப்பா
பத்தியுடன் கெந்திரசங் கொண்டு நீயும்
பாவித்து உத்தாமணி பாரு நீயும்
பத்தியே யிச்சாத்தி லரைத்துக் கொண்டு
பண்பாக அடுப்பிலே ஒடு வையே.

பொ. சு:

பற்றிநின்ற அச்செந்தூரம் ஒரு மா வாங்கி, அதனுடன் ஒரு கழஞ்சு வெள்ளீயம் சேர்த்து ஊதிட வெள்ளியாகும். இதுவே வெள்ளிவித்தை என்பதாம்.

---

98. பா. பே. கமலவன்னி, செ. I.

அடுத்து, கந்தகரசங் கொண்டு உத்தாமணியினை நன்கு அரைத்துக் கொள்ள வேண்டும். அடுப்பில் ஓர் ஓட்டினை வைக்க வேண்டும்.

சொ. வி:

ஒருமா – மாகாணி அதாவது, பதினாறில் ஒரு பங்கு.

உத்தாமணி – வேலிப்பருத்தி ஆகும். உத்தமக்கண்ணி, உத்தம மாகாணி என்றும் அழைக்கப்பெறும்.

105. ஒடுவைத்து அதின்மேலே மருந்தை வைத்து
உசிதமாய்த் தாம்பூரக் கிண்ணி வைத்து
ஒடுவைத்து மேலேதான் சீலை செய்து
ஒகோகோ மணலிட்டு மறைத்து மூடி
ஒடு வைத்துத் தீயெரிக்கக் கிண்ணிக் குள்ளே
உத்துப்பார் மையதற்குள் பற்றி நிற்கும்
ஒடு வைத்துச் செந்தூரம் வழித்துக் கொண்டு
உறவாக வயச்சல்லி யூட்டக் கேளே.

பொ. சு:

அயச்சல்லியுடன் வெண்காரம் மிகுதியாகவும், முன்பாடலில் குறிப்பிட்ட செந்தூரம் ஒரு மா அளவும் சேர்த்து தும்பையிலைச் சாறுகொண்டு குழைத்து உருக்கிடச் செம்பாகும் என்கிறார்.

இந்தச் செம்பு மூன்று பண எடையில், வெள்ளி ஒருபண எடை கூட்டி உருக்கப் பதினைந்து மாற்றாகும். இம்முறை எளிமையானது; ஊன்றிப் பார்ப்பாயாக என உரைக்கிறார்.

சொ. வி:

சல்லிசாப்பா – 'சல்லிசு' என்பது 'தாராளமாக' மலிவாக என்ற பொருளில் இன்றும் வழங்கி வரும் தென் பாண்டி நாட்டுப் பேச்சு வழக்குச் சொல்லாகும்.

லிங்கக் களங்கம்

107. பாரப்பா ஆலங்கிளைப் பில்லாமணக்கு நீரால்
பருவமுடன் லிங்கத்தில் பொதிந்து பூசிச்
சேரப்பா வேரண்டப் பிடத்தைப் போடு
செந்தூரங் கறுப்பாக யிருக்கும் பின்னும்

ஆரப்பா முன்மருந்தைப் பூசக் கேளு
அப்பனே குகையில்வைத்து உருக்கி வாங்கு
காரப்பா களங்காகும் லிங்கந் தானும்
கலங்காமல் அத்தசெம்பு கழஞ்சி மூன்றே.

பொ. சு:

ஆலங்கிளை, புல்லாமணக்கம் நீர் (சாறு) ஆகியவற்றைப் பக்குவமுடன் லிங்கத்தில் பொதிந்து பூசி ஏரண்டப் புடம் போட வேண்டும். கிட்டும் செந்தூரம் கறுப்பாக இருக்கும். இதில் மேலும் முன் கூறிய மருந்து சேர்த்துக் குகையில் வைத்து உருக்கி வாங்க லிங்கம் களங்காகும் என்கிறார்.

சொ. வி:

பில்லாமணக்கு *– புல்லாமணக்கு, குத்துச்செடி, புல்போல இலை இருக்கும். வசிய மூலி. காப்புக்கட்டிப் பிடுங்குவர்.*

லிங்கம் *– 'சாதிலிங்கம்'. 'இங்குலிகம்' என மருத்துவ அகராதி குறிப்பிடுகிறது. இதனைக் கட்ட மயிர்மாணிக்கத்தின் சமூலம், ஈசுர மூலி ஆகியவை பயன்படுத்தப்படும். லிங்கத்தினின்று செந்தூரம், களங்கம், (குளிகை) மெழுகு ஆகியவற்றை முறைப்படி தயாரித்துப் பயன்படுத்துவர்.*

ஏரண்டப்புடம் *– மருந்தின் அளவுக்கு ஏற்பப் போடுதலே ஆகும்.*

அத்தசெம்பு *– தூய்மையான, அதாவது பிற உலோகக் கலப்பற்ற சுத்தச் செம்பு என்பதாம். கேழ்வரகு மாவுடன் பிற எதுவும் கலக்காது காய்ச்சப்படும் கூழுக்கு 'அத்தக் கூழ்' என்று இன்றும் பேச்சு வழக்கில் பெயர் உள்ளதைக் காண்கிறோம்.*

108. அத்தசெம்பு மூன்றிடைக்குக் களங்க மொன்று
அடவாக உருக்கிடவே நொறுங்கும் பின்னை
வித்திடுவாய் வெள்ளியதில் மூன்று கூட்டு
வியனான செம்பொன்று குடுத்து வாங்க
பத்தரையா மாத்தடா தங்கந் தங்கம்
பகர்ந்திடுவோ மின்னமொன்று பாக மாக
உத்தமமா முருக்கினுட பட்டை தன்னை
உணர்வாகத் தயிலம்வைத்தே யிறுத்துக் கொள்ளே.

பொ. சு:

எடுத்த அத்தசெம்பு மூன்று கழஞ்சுக்கு ஒரு களங்கம் என்ற அளவில் சேர்த்து உருக்க நொறுங்கும். இதனுடன் வெள்ளி மூன்று பங்கும் செம்பு ஒரு பங்கும் சேர்த்து உருக்கி வாங்கப் பத்தரை மாற்றுடைய தங்கமாகும் என்கிறார். அடுத்து வேறு ஒரு முறை பற்றிக் கூறுகிறார்.

முருக்கின் பட்டையில் தயிலம் சேர்த்து இறுத்து வைத்துக் கொள்ள வேண்டும் என உரைக்கிறார்.

109. தயிலமது கொண்டுநீ சுருக்குக் கேளு
சாதிலிங்கங் கழஞ்சியஞ்சில் சுருக்குப் போடு
தயிலமது செந்தூர மதுவாகும் லிங்கஞ்
சத்வேதை சித்வேதைச் சத்த வேதைத்
தயிலமென்ன சிறுகீரை முசுட்டை வேரும்
சரியாக ஆட்டியே குகை பிடித்துத்
தயிலமாஞ் சூதமதிற் கழஞ்சி யஞ்சே
தானடைத்து மருந்தாலே மூடு மூடே.

பொ. சு:

முன்பாடலில் கூறிய தயிலம் கொண்டு சாதிலிங்கம் ஐந்து கழஞ்சுக்குச் சுருக்குக் கொடுத்துச் செந்தூரமாக்கிக் (செந்நிறமுள்ள பஸ்மவகை) கொள்ள வேண்டும். சிறுகீரை, முசுட்டை வேர், ஆகியவை சம அளவு எடுத்து ஆட்டிக் குகை பிடித்துச் சூதம் ஐந்து கழஞ்சும் அடைத்து மருந்தால் மூட வேண்டும்.

சொ. வி:

முசுட்டைவேர் – "Ipomoea Candicans" என்பது இதன் அறிவியற் பெயராகும். கொடி வகையைச் சேர்ந்தது. கைப்பு, கார்ப்புச் சுவை கொண்டது. வாதமடக்கி; வாத ஹரகாரி; மலமிளக்கி; மலகாரி. வளி வெள்ளை, நீர்த் தினவு, படை, சிறு சிரங்கு இவைகளை நீக்கும். (சாம்பசிவம் பிள்ளை அகராதி).

110. மூடியே சீலைசெய்து உமியோட் டுள்ளே
முறையாகக் கரியிட்டே யுருக்க மைந்தா
ஆடியே யுருகியது மணியாய் நிற்கும்
அப்பனே யெருக்கம்வே ரமுக்கு ராய்வேர்

தேடியே விருகன்வேர் பிராயின் வேரும்
செப்பமுடன் புளிநரளைக் கிழங்கு கூட்டி
ஊடியே சமனரைத்துக் கரண்டிக் குள்ளே
உத்தமனே சூதம்விட்டு உருக்கக் கேளே.

பொ. சு:

மூடிச் சீலை செய்து, உமி நிறைந்த ஓட்டில் கரியிட்டு, நெருப்பூட்டி உருக்க மணியாகி நிற்கும்.

எருக்கம் வேர், அமுக்குரா வேர், விருகன் வேர், பிராயின் வேர் இவற்றுடன் புளிநரளைக் கிழங்கும் முறைப்படி கூட்டி அரைத்துக் கரண்டியில் இட்டுச் சூதம் விட்டு உருக்க வேண்டும் எனவும் உரைக்கிறார்.

சொ. வி:

விருகன்வேர் – 'விருவெட்டை வேர்' என்றும் அழைக்கப் பெறும். இது குத்துச் செடியாய் வளரும். இலைகள் வாகை இலை போன்ற அமைப்புக் கொண்டதாக இருக்கும்.

பிராயின்வேர் – விராயின் வேர் ஆகும். இது மலையில் வளரும் வகையுள் ஒன்று.

வெள்ளி முறை

111. உருக்கிறன் வெள்ளி முறை சொல்லக் கேளு
உத்ததொரு பீங்கான்தான் கழஞ்சி பத்து
இருக்கவே யதற்குள்ளே சூதந் தாய்தான்
என்மைந்தா கழஞ்சிபத்து இயல்பாய் விட்டு
பெருக்கவே சட்டியிலே மணலை யிட்டுப்
பீங்கானைப் புதைத் தேதான் தீயெரிப்பாய்
திருக்கான தீபாக் கினியைக் கொண்டு
தின்பழத்தின் சாறாலே சுருக்கிப் போடே.[99]

பொ. சு:

பத்து கழஞ்சு எடையுள்ள ஒரு பீங்கான் கிண்ணத்தில் பத்து கழஞ்சு சூதம் விட வேண்டும்.

---

99. பா. பே. 'திறமாகச் சாமமொன்று சுருக்குப் போடே', செ. I., தி.

ஒரு சட்டியில் மணலிட்டு அதில் அப்பீங்கான் கிண்ணத்தைப் புதைத்து வைத்துத் தீபாக்கினியாக எரிக்க வேண்டும். சூதத்திற்கு எலுமிச்சம் பழச்சாற்றால் சுருக்குக் கொடுக்க வேண்டும் என உரைக்கிறார்.

112. சுருக்கிடவே பீங்கானி லிரதந் தானும்
கவறுமடா வெரித்திடுநீ சூட்ச மாகச்
சுருக்கிட்ட பீங்கானை வாங்கி நன்றாய்த்
தூளாக யிடித்துக்கேள் குழலில் பாச்சிச்
சுருக்காகத் தாம்புரமோ கழஞ்சி மூன்று
சூட்டப்பா யிப்படியே கழஞ்சி யூட்டே.

பொ. சு:

சுருக்குக் கொடுத்துப் பீங்கானில் உள்ள இரசம் வற்றிப் போகு மட்டும் கவனமாக எரிக்க வேண்டும். பின் அப்பீங்கானை வாங்கித் தூளாக இடித்து ஒரு குழலில் வைத்து, அதனுடன் தாமிரம் மூன்று கழஞ்சு சேர்க்க வேண்டும் என உரைக்கிறார்.

113. ஊட்டியே வுருக்கிவெள்ளைச் சாரணையின் வேரை
உற்பனமாய்க் கழஞ்சியொன்று பொடித்துச் சேர்க்கக்
கூடியதோர் வெள்ளியா மாத்தே தென்றாற்
குறையாது பதினாறு கூர்ந்து பாரு
நாட்டுவாய் சங்கினுட கொழுந்து வாங்கி
நயமாகப் பழச்சாத்தி லரைத்து நன்றாய்த்[100]
தீட்டுவாய் நாகத்தில் தெரியா மல்தான்
சீலைசெய்து ஏழுபிடந் திறக்கப் போடே.

பொ. சு:

தாமிரம் சேர்த்த அதனை உருக்கி, வெள்ளைச் சாரணையின் வேரை இடித்துப் பொடி செய்து ஒரு கழஞ்சு சேர்க்கப் பதினாறு மாற்றுடைய வெள்ளியாகும் என்கிறார்.

அடுத்து, துத்தநாகத்தைக் கட்டும் விதம் பற்றி நவில்கிறார்.

சங்கிலையின் கொழுந்தினை, அதாவது மலர்ந்தும், மலராதும் இருக்கின்ற நுனி இலைகளைப் பறித்து, எலுமிச்சஞ் சாறு விட்டு

100. பா. பே. 'நாட்டியே சங்குகளிற் பழச்சா(று) விட்டு நன்றாக நாகத்தைப் பொதிந்து போடே' செ. I.

நன்கு அரைத்துத் துத்தநாகத்தில் மேற்பூச்சாக மெலிதாகப் பூசிச் சீலை செய்து ஏழுபுடம் போட்டு எடுக்க வேண்டும் என இயம்புகிறார்.

சொ. வி:

உற்பனம் - விரைவில் அறிதல். இங்கு முடிவை விரைவில் அறிந்து கொள்வதற்காக என்பதாம்.

114. **திறமான வெள்ளியுமோ மூன்றுக் குள்ளே**
சேர்த்திடுவாய் தாம்பிரமோ ஏழு சேரு
திறமா(ன) நாகமதில் மூன்று சேரு
சேர்த்துருக்க இருமூன்று மாத்து மாகும்
திறமாகக் கெந்தியோ கழஞ்சி யொன்று
செய்சூதங் கழஞ்சியொன்று நாக மொன்று
திறமாகக் கள்ளிப்பால் விட்டுக் கொண்டு
சேர்த்துநன்றா யொருசாமம் ஆட்டு ஆட்டே.

பொ. சு:

பின்னர் அதனுடன் மூன்று கழஞ்சு வெள்ளியும், ஏழு கழஞ்சு தாமிரமும், மூன்று கழஞ்சு துத்தநாகமும் சேர்த்து உருக்க, ஆறு மாற்றுக் காணும் என்கிறார்.

இதனுடன் கந்தகம், சூதம், துத்தநாகம் ஆகியவை ஒவ்வொரு கழஞ்சு சேர்த்துக் கள்ளிப்பால் விட்டு ஒரு சாமம் நன்கு ஆட்டிக் கொள்ள வேண்டும் எனவும் இயம்புகின்றார்.

115. **ஆட்டியே முக்குறட்டை இலை யரைத்து**
அடவாகக் குகைபிடித்து ஆற வைத்து
ஆட்டியே மருந்ததனைக் குகைக்குள் வைத்து
அப்பனே சீலைசெய்து புடத்திற் போடு
ஆட்டியே வாங்கிடவே கட்டிப் போகும்
ஆச்சரிய மேழுவெள்ளி செம்பு மூன்று
ஆட்டியே களங்கொன்று சேர்த்து ருக்கு
ஆகாகா எழுமாத்துக் காணுந் தானே.

பொ. சு:

ஆட்டிய அதனுடன் முக்குறட்டை இலையும் அரைத்துச் சேர்த்துக் குகைபிடித்துப்பின் ஆறவைத்து, முன்கூறிய மருந்துச் சரக்கனைத்தையும் குகைக்குள் வைத்துச் சீலைசெய்து புடம் போட்டு

எடுக்கக் கட்டி நிற்கும். இதனுடன் ஏழு கழஞ்சு வெள்ளி, மூன்று கழஞ்சு செம்பு, களங்கம் ஒரு கழஞ்சு ஆகியன சேர்த்து உருக்க ஏழு மாற்றுக் காணும் என உரைக்கிறார்.

116. **தானென்ற தாளகத்தின் மெழுகு கேளு**
தயவாகப் பத்திர தாளகமும் பத்து
தானென்ற வெடியுப்பு நாலாங் கரச்சல்
தப்பாமல் தராயிடை பொடித்துக் கொண்டு
தானென்ற சட்டியிலே போட்டு வைத்துச்
சட்டிநடுக் கண்டருமோ சட்டி யொன்று
தானென்று வைத்ததின்மேல் பொடியைத் தூவி
தப்பாமல் பண்டமஞ்சு வாங்கி வந்து
தானென்று வெண்கருவை யுடைத்து விட்டுச்
சங்கையுடன் மூன்றுனா ளிப்படியே செய்யே.

பொ. சு:

இப்பாடலில் தாளக மெழுகு பற்றிக் கூறுகின்றார்.

பத்திர தாளகம் பத்துப் பண எடையும், வெடியுப்பு, நாலாங் கரச்சல் ஆகியவை தரா எடை அளவும் பொடித்து ஒரு சட்டியிலே போடவேண்டும். அச்சட்டிக் கழுத்து நடுவில் மற்றொரு சட்டி வைக்க வேண்டும். அதில் முன் கூறிய பொடியைத் தூவிப் பண்டம் ஐந்து வாங்கி, அதில் வெண்கருவை உடைத்து ஊற்ற வேண்டும். செய்ய வேண்டியதைத் தொடர்ந்து அடுத்த பாடலில் உரைக்கிறார்.

சொ. வி:

தராயிடை – எட்டுப் பாகம் செம்பு + ஐந்து பாகம் காரீயம் கலந்ததே தரா எனும் உலோகம் ஆதலின் எட்டுப்பாகம் வெடியுப்பு, ஐந்து பாகம் நாலாங்கரச்சல் இடுமாறு கூறினார் எனக் கொள்ளலாம்.

பண்ட மஞ்சு – 'பஞ்ச மூலம்' எனக் கூறப்படும். 'சுக்கு, மிளகு, திப்பிலி, சித்திரமூலம், செவிரம்', என்பனவாகும்.

சங்கை – வழக்கம். வெண்கருவை உடைத்து ஊற்றலை மூன்று நாளும் தவறாது செய்ய வேண்டும் என்பதாம்.

117. **செய்திடுவாய் மூன்றுநாள் ரவியில் வைக்கச்**
செப்பமுள்ள கண்டருமோ கவசத் துள்ளே
செய்திடுவாய் கல்சுண்ணம் பொடித்துப் போட்டுச்
சேரப்பா சட்டிக்குள் கண்டர் தன்னைச்

செய்தப்பா மேலுமந்தப் பொடியைப் போட்டுத்
தீயெரிப்பாய் கடிகை,ரெண்டு கண்டர் நீறுஞ்
செய்தப்பா கவசமொடு ஒத நீத்தைத்
திறமாகச் சாரநீர் தன்னில் நீத்தே.

பொ. கு:

முன்கூறிய மருந்துச் சரக்குகளை மூன்று நாள் வெயிலில் வைக்க வேண்டும். பின் கவசமிட்ட மயில்துத்தத்தை முன் உள்ள சட்டிக்குள் இறக்கிச் சேர்த்து, கல்சுண்ணம் பொடித்துத் தூவ வேண்டும். இருகடிகை தீயெரிக்கக் கண்டர் நீறும். கிட்டும் ஓதநீத்தைச் சாரநீர் (நவச்சார நீராகலாம்) கொண்டு நீத்த வேண்டும் என உரைக்கிறார்.

இப்பாடலில் எத்தனை எரு, அல்லது விறகு இட்டுத் தீயெரிக்க வேண்டும் என இயம்பவில்லை. மருந்து அளவுக்கு ஏற்ப எரிக்கும் முறைமை, பொதுவாக வைத்தியர்கள் அறிந்தது எனக் கருதி விட்டிருக்கலாம்.

சொ. வி:

கடிகைரெண்டு – இரண்டு நாழிகை என்பதாம். இந்திய நேரப்படி இருபத்து நான்கு மணித்துளிகள் கொண்டது ஒரு நாழிகையாகும்.

118. நீத்தவே மெழுகாகும் மெழுகு தன்னை
நிச்சயமாய் மஞ்சாடி கையில் தேய்த்து
மாத்தமன்றி செம்பருத்தம் பூவை வாங்கி
வகையாகக் கசக்கியே கஞ்சத்தில் விட்டு
ஏத்தமுடன் பூவின்சா ராயந் தன்னை
இதமாக விட்டேதான் பிழிந்து போட்டு
நாத்தமுள்ள மதுவோடே பழச்சாறு விட்டு
நெண்டையுந்தான் சமனாகச் சேர்த்தி டாயே.

பொ. கு:

நீற்றி எடுக்கவே மெழுகாகும். இம்மெழுகில் ஒரு மஞ்சாடி எடுத்துக் கையில் தேய்த்துக் கொண்டு, செம்பருத்தம் பூவைக் கசக்கி வெண்கலத்தில் (கஞ்சம்) விட்டுப் பின்னும் செம்பருத்தம் பூத்தேனையும், எலுமிச்சஞ் சாற்றினையும், இதற்குச் சமமாக நண்டுக்கல்லையும் சேர்க்க வேண்டும் என இயம்புகிறார்.

சொ. வி:

மஞ்சாடி - இரண்டு குன்றி மணிகளின் எடை கொண்ட மஞ்சாடி வித்து.

நெண்டு - நண்டு. 'நண்டுக்கல்' என்ற ஒரு வகைக் கல்லைக் குறிக்கும். (பதார்த்த குண விளக்கம்) 'ந'வுக்கு மோனை 'ர' வருமாதலால் 'ரெண்டையுந்தான்' எனக் கொண்டால் 'மது, பழச்சாறு இரண்டும்' எனவும் கொள்ள இடமுள்ளது.

லிங்க மெழுகு

119. **சேர்த்துவைக்கக் கருவையான் செப்பக் கேளு**
திறமாகச் சட்டிநடுத் துளைத்துப் பின்னும்
மாற்றமின்றிக் கிட்டிண வப்பிரவந் தன்னை
வைத்தந்தச் சட்டியிலே விளிம்பு கூட்டி
ஊத்தமுடன் மெழுகுதொட்டுத் தடவிக் கொண்டு
உறவாகக் கழஞ்சுபத்து லிங்கந் தானும்
போத்தடா ரெங்குதுவும் விராக னொன்றில்
பொதிந்தந்தச் சட்டியிலே பொருந்தி வையே.

பொ. சு:

மெழுகினைச் சேமிக்கும் முறை பற்றிக் கூறப்புகுகிறார்.

ஒரு சட்டியின் நடுவில் துளையிட்டு, அதில் அப்பிரகத்தை வைத்துச் சட்டியில் விளிம்பு கூட்டி மெழுகு தடவிக் கொண்டு, பத்துக் கழஞ்சு லிங்கத்தில் ஒரு வராகன் ரெங்கு பொதிந்து, சட்டியில் பொருத்தமாக வைக்க வேண்டும் எனச் செப்புகிறார்.

தாளக மெழுகினைச் சேமிக்க லிங்க மெழுகாக்குதல் கூறப்பட்டுள்ளது.

சொ. வி:

கிட்டிணவப்பிரவம் - கிருஷ்ணனது நிறம்போல கருநிறமுடைய அப்பிரகம் என்பதாம். அப்பிரகம் என்பது 'காக்கைப் பொன்' என 'தட்சநாயனார் வைத்திய அட்டவணை' குறிப்பிடுகிறது. இதில் மஞ்சள், வெண்ணிற அப்பிரகங்களும் உண்டு. இவை முறையே 'சொர்ண அப்பிரகம்', 'வெள்ளை அப்பிரகம்' எனப்படும். நெல்லூர், அஜாரிபாக், இராஜபுதனம், இந்துஸ்தான் பகுதியில் கிட்டும். பெருவயிறு, அதிமூத்திரம், கண்ணோய் நீக்கும். வீரியவிருத்தி உண்டாகும்.

ரெங்கு - வண்ணம், அழகு என்பதனை இப்பேச்சு வழக்குச் சொல் குறிக்கும். இவ்விடத்தில் 'தங்கம்' என்ற உயர் உலோகமாகும்.

120. வைத்ததொரு சாராயஞ் சுருக்குப் போட
மக்களே கஞ்சத்தால் கரண்டி யாகும்
வைத்ததொரு சுருக்காலே லிங்கந் தானும்
வாழ்வெண்ணை போலவே மயன மாகும்
வைத்ததொரு செம்பிலே நூறு வாங்கி
வாழ்மயன மொன்றீயத் தங்க மாகும்
வைத்ததொரு மெழுகிலே நவபா ஷாணம்
மர்த்திக்க மெழுகாகும் வேதை யாமே.

பொ. சு:

முன் கூறிய அதற்குச் சாராயத்தால் சுருக்குக் கொடுத்து (மருந்துச் சரக்கு புகைந்து போகாது தடுக்க, தக்க ஒன்றினை மாற்றாகத் தருவதாகும்) வெண்கலக் (கஞ்சம்) கரண்டி கொண்டு கிளறி வர லிங்கம் வெண்ணை போன்று ஆகும்.

நூறு பண எடை செம்புக்கு இம்மயனம் ஒரு பண எடை கொடுக்கத் தங்கமாகும் என்கிறார்.

இம்மயனத்தில் நவபாசாணம் இட்டு மர்த்திக்க, வேதித்து லிங்க மெழுகாகும் என்றும் உரைக்கிறார்.

சொ. வி:

மயனம் - மயனத் தைலம். அதாவது ஒருவகை மருந்துத் தைலம்.

செம்பு சுத்தி

121. வேதையென்ற மெழுகிலே யொருமா வாங்கி
வேதித்துக் காசியிலே யுருக்க வேதான்
வேதையென்ன மாத்தப்பா பத்து மாகும்
வெள்ளிபத்தில் செம்பொன்று கூடக் கூட்டு
வேதையென்ன தாம்பிரத்தின் சுத்தி சொல்ல
வெகுசுருக்கு நாயுருவிச் சாம்பல் வாங்கு
வேதையாம் வெகுதெளிவு பொன்னு மாகும்
விள்ளாதே யிச்சாம்பல் ஈசன் தானே.

பொ. சு:

முன் பாடலில் கூறிய அம்மெழுகில் ஒரு மா வாங்கி வேதித்துக் காசில் இட்டு உருக்கப் பத்து மாற்றுக் காணும். பத்துப் பண எடை வெள்ளியில், ஒரு பண எடை செம்பு சேர்த்து உருக்கச் செம்பு பொன்னாகும்.

செம்பினைச் சுத்தி செய்து பயன்படுத்த வேண்டும். சுத்தி செய்ய நாயுருவிச் (மாமுனிசேகரி, கொட்டாவி, கிருஷ்ணபன்னி, நாய்க்குருவி எனவும் அழைக்கப்படும்) சாம்பலைப் பயன்படுத்த வேண்டும். செம்புக்குச் சுத்தி நல்கும் இச்சாம்பல் தான் ஈசனாகும். இதனை யாருக்கும் சொல்லாதே என இயம்புகிறார்.

சொ. வி:

காசி – காசு, பணம் எனக் கூறப்படுவதே ஆகும்.

விள்ளாதே யிச்சாம்பல் யீசன்தானே – இவ்வரி மூலம் நாயுருவிச் சாம்பல் 'ஈசன்' எனப் பரிபாசையாகக் குறிப்பிடப்படுவதே ஆகும் என்பதும், செம்பினைச் சுத்தி செய்யப் பயன்படும் இதுவே, செம்பினைப் பொன்னாக மாற்றும் பணியில் முக்கிய இடம் வகிப்பது என்பதும், இத்தகு முக்கியத்துவம் வாய்ந்த இதனைக் கொண்டு சுத்தி செய்யாது பயன்படுத்தும் பொழுது எதிர்பார்த்த பலன் கிட்டாது என்பதும் தெளிவாகின்றன. பச்சைக் கர்பூரத்திற்கும் 'ஈசன்' எனும் பெயர் உள்ளது இங்குக் குறிப்பிடத்தகுந்தது.

சாரநீர்

122. **சாம்பலொடு கரியுப்பைப் பழச்சாறு விட்டுச்**
சாரித்துத் தகட்டிலே தடவிப் போட்டுச்
சாம்பலொடு ஓடுவைத்துப் புடமே செய்தால்
தப்பாது ஊறல்போய்த் தங்கம் போலாம்
சாம்பலொடு முன்சொன்ன சார நீர்தான்
தயவாக வைக்கிறேன் முறைமை கேளு
சாம்பலொடு உவர்ப்பூவுங் கல்சுண் ணாம்பும்
சமனாகப் படிரெண்டு வகைதான் ரெண்டே.

பொ. சு:

நாயுருவிச் சாம்பல், கரியுப்பு இவற்றுடன் எலுமிச்சம் பழச்சாறுவிட்டுக் குழப்பிச் செம்புத் தகட்டில் தடவி, ஓட்டில் வைத்துப் புடம் போட்டால் ஊறல் நீங்கித் தங்கம் போன்று ஆகும்.

முன்கூறிய (117 ஆம் பாடல்) சாரநீர் பற்றி இனி விளக்குகிறார்.

உவருப்பு, கல் சுண்ணாம்பு ஆகிய இரண்டும் சமமாக ஒரொரு படியாக இரண்டு படி எடுத்துக் கொள்ள வேண்டும்.

சொ. வி:

கரியுப்பு – 'Sodium Chloridum' என அழைக்கப்படுவதே ஆகும். கடல் நீரை உப்பு மண் வளம் நிறைந்த பூமியில் சிறிது சிறிதாகப் பாய்ச்சி வர, ஒழுங்கான பட்டைகள் மிகுந்த சிறு பளிங்குக் கட்டிகளாக இவ்வுப்புக் கிட்டும் எனப் பதார்த்த குண விளக்கம் விவரிக்கின்றது. கரியுப்பினால் அசீரணம், வயிற்றுப்பிசம், வாதாதிக்கம், வாத கபம், நீரடைப்பு ஆகியன நீங்கும்.

123. இரண்டையுந்தான் சிறுநீரில் கரைத்துக் கொண்டு
இயல்பாகக் கிளிஞ்சிதனைப் பொடித்து நன்றாய்
இரண்டென்ன யிந்திடைக்குச் சாரங் கூட்டி
இயல்பாகப் பீங்கானில் வைத்துக் கொண்டு
இரண்டென்ன கரண்டியினால் மூன்று நாள்தான்
இட்டமுடன் வெந்தபின்பு பொரிகா ரத்தை
இரண்டாகச் சாணியிலே சுத்தி செய்து
இட்டடா வுருக்கியதில் கழஞ்சி போடே.

பொ. சு:

உவருப்பு, கல்சுண்ணம் (Clax-Burnt) ஆகிய இரண்டினையும் சிறுநீரில் கரைத்து, அதில் கிளிஞ்சியினை நன்கு பொடித்து, இந்த எடை அளவுக்கு நவச்சாரமும் கூட்டிக் கொண்டு, பீங்கானில் போட்டுக் கரண்டியினால் கிளறி நன்றாக வேக வைக்க வேண்டும். மூன்றாம் நாள் சாணியால் சுத்தி செய்த பொரிகாரத்தை (வெங்காரம் எனப்படுவதும் இதுவே) உருக்கி அதில் சேர்க்க வேண்டும்.

124. போட்டதனை யேயடையாய்த் தட்டிக் கொண்டு
புகழாகப் பனியில்வைக்கச் செய நீராகும்
போட்டதனைப் பொடியாக்கி வைத்துக் கொண்டு
போராட வாயுதங்கள் பிறக்கு மித்தால்
போட்டென்ன யித்தாலே யட்ட சித்தும்
பொன்வெள்ளி குருக்கிடையும் போக்கு மெத்த
போட்டென்ன கல்தா மரையின் செய்தி
புரித்தருத வடையாளம் பிரித்துக் கொள்ளே.

பொ. சு:

சேர்த்த அதனை அடை போலத் தட்டிப் பனியில் வைக்கச் செயநீராகும். பொடியாக்கி வைத்துக் கொண்டால் போர் செய்ய ஆயுதங்கள் கிட்டும். எட்டு வகைச் சித்தும், பொன், வெள்ளி செய்முறைகளும் இதனால் சித்தியாகும் என இயம்புகிறார். கல்தாமரையின் அடையாளத்தைப் பற்றி அடுத்து விளக்கப் புகுகிறார்.

சொ. வி:

செயநீர் - சித்த மருத்துவ முறைகளில் இது முக்கிய அங்கமாகத் திகழுவதாகும். செயநீர் தயாரிக்கும் முறைகளைப் பல மருத்துவ நூல்கள் பல மாதிரியாகத் தெரிவிக்கின்றன.

'சாரங்கள், உப்பு வகைகள் ஆகியவற்றைச் சிலகாலம் பூமிக்குள் அடக்கம் செய்து இச்செய நீரை அடையலாம் (கலைக்களஞ்சியம்) என்பது பொதுவான முறையாகும்.

இந்த நீர் பாஷாணம் முதலிய நெருப்பில் புகைந்து போகும் சரக்குகளுக்குச் சுருக்குக் கொடுக்கப் பயன்படுத்தப்படும். செயநீரால் சுருக்குக் கொடுத்த இரசவகை மருந்துகள் நெருப்புக்குப் புகைந்து போகாமல் கட்டும் எனத் தெரிகிறது. தை, மாசி, பங்குனி ஆகிய மாதங்களில் செயநீர் உருவாக்குதற்குரிய காலம் என 'வாதவைத்தியத்துக்காதி' என்ற நூல் குறிப்பிடுகின்றது.

அட்டசித்து - அட்டமாசித்தி எனப்படும் எட்டுவகைச் சித்துகளும் அடைதலாகும்.

1. அணிமா - அணுவைப் போல் சிறிதாதல். (நுண்மை)
2. மகிமா - மேருவைப் போல் பெரிதாதல். (பருமை)
3. இலகுமா-காற்றுப் போல் இலேசாதல். (மென்மை)
4. கரிமா-பொன் போலப் பளுவாதல். (நிறைவுண்மை)
5. பிராப்தி-எல்லாவற்றையும் ஆளுதல். (ஆட்சியனாதல்)
6. வசித்துவம்-எல்லோரையும் வசப்படுத்துதல். (கவர்ச்சி)

7. பிராகாமியம்-கூடுவிட்டுக் கூடு பாய்தல்.
(விண்டன்மை)

8. ஈசத்துவம்-விரும்பியதனை எல்லாம் செய்து முடித்து அனுபவித்தல்.
(விரும்பியதெய்தல்)

ஆகிய எட்டுவகைப் பெரும் பேறுகளையும் பெற்றவர்களையே சித்தர் என அழைக்கும் வழக்கம் இருந்திருக்கிறது.

கல்தாமரை – தாமரை இலைபோல அன்றிச் சிறு இலை கொண்டது. பூ சிவப்பு நிறம் உடையது. இதன் சமூல சூர்ணம் சுக்கிலத்தைக் கட்டும். குஷ்டத்தை நீக்கும். இதன் சாற்றில் காரீயத்தை உருக்கிக் காய்ச்சச் செம்பாகும்.[101]

கல்தாமரைச் செந்தூரம்

125. பிரித்துக்கேள் தாமரையி னிலையைப் போலே
பெரிதல்லாச் சிறிதாகப் பூச்சிகப்பு முண்டு
பிரித்துக்கேள் பூக்கசக்கில் இரத்தம் போலாம்
பேறான நீலத்தி னிரசம் போலாம்
பிரித்துக்கே ளிதுரெண்டில் கிடைச்ச தொன்றைப்
பிரிசமுடன் சமூலமுங் கொண்டு வந்து
பிரித்துக்கேள் சாறுதனைப் பிழிந்து கொண்டு
பேர்பெரிய சம்பத்துச் சிலைதா னொன்றே.

பொ. சு:

கல்தாமரை இலை தாமரையின் இலைபோலப் பெரிதாக அன்றிச் சிறிதாக இருக்கும். சிவப்பு நிறமுள்ள பூ கொண்ட வகை உண்டு. இதில் சில பூக்களைக் கசக்க இரத்தம் போன்ற நிறமும், வேறு சில வகைப் பூக்களைக் கசக்க நீல நிறமும் தோன்றும். இதில் எந்த வகை கிடைப்பினும் அவ்வகைக் கல்தாமரையைச் சமூலமாய்க் கொண்டு வந்து சாறு பிழிய வேண்டும். ஒரு துணியையும் (சம்பத்துச் சீலை என, உடையைச் செல்வமாகக் கருதுவதால் இயம்பினார்) எடுத்துக்கொள்ள வேண்டும் என இயம்புகிறார்.

126. சீலையிட்டுச் சூதத்தைப் பொடித்துக் கொண்டு
சேர்த்திடவே வகை சொல்லுந் தீர்க்கமாக

---

101. பதார்த்த குண போதினி.

சீலையென்ன வயக்கிண்ணிக் குள்ளே மைந்தா
சிந்தினா தம்விட்டுச் சட்டிக்குள் வைத்துச்
சீலையென்னும் மணலிட்டுச் சாத்தைத் தானும்
சிறக்கவே சுருக்கிடுவாய் சாமமொன் றாக
சீலைபோல கமலவன்னி எரித்து வாங்கிச்
செய்சூத மணியாகத் திரளுந் தானே.

பொ. சு:

எடுத்த அத்துணியில் சூதத்தைப் பொடி செய்து, ஒரு அயக்கிண்ணத்துள் போட்டு நாதமும் விட்டு, மனோசிலை எனும் உலோக மணலிட்ட ஒரு சட்டிக்குள் வைத்து ஒரு சாமம் வரை கமலவன்னியாக எரித்து வாங்கச் சூதம் மணியாகத் திரண்டு நிற்கும் என்கிறார்.

சொ. வி:

நாதம் – கந்தகம். 'எரியும் தன்மையினால் நாதத்தை உண்டாக்கும் காரணத்தால் இட்ட பரிபாசைப் பெயராகும்'. (சித்தர் காரசார இரசாயன விஞ்ஞானம்).

சீலையென்னும் மணலிட்டு – மனோசீலை எனும் மனோசிலையைக் குறிக்கும். "Arsenicum Rubrum" என்று விஞ்ஞானப் பெயரால் அழைக்கப்பெறும். பயன்படுத்தும் முறை பற்றியும் இது நீக்கும் நோய்கள் பற்றியும் பதார்த்த குண விளக்கம் விளக்கமாகக் கூறுகிறது.[102]

127. காணப்பா திரண்டரச மெடுத்துக் கொண்டு
கலந்திடுவாய் வெள்ளியிலே நூற்றுக் கொன்று
பூணப்பா கலந்துகொண்டு தாமரையின் நீரால்
பொருந்தவே சிலைகூடக் கூட்டிக் கொண்டு
ஊணப்பா குழிகெல்லி மெழுகி நன்றாய்
உள்குழித்து வலிந்திருந்த சூதம் வைத்து
தோணப்பா மருந்துவைத்து மூடிக் கொண்டு
சுகமாகச் சில்லியிட்டுச் சீலை செய்யே.

---

102. "குட்டங் கொடியரணங் கூறுந் திமிர்படையும்
வட்ட மிடுங்கிரந்தி வன்மையெலாம் - விட்டுப்போம்
காய்ச்சல் நடுக்கல் கள்ளியிரைப் புச்சிலந்தி
பேச்சறுமனோசிலையைப் பேண்".

பொ. கு:

திரண்ட அந்த இரசத்தில் நூறுபண எடை வெள்ளிக்கு ஒன்று என்ற விகிதத்தில் கலக்க வேண்டும். கலந்த அதனுடன், முன் குறிப்பிட்ட (125ஆம் பாடல்) கல்தாமரையின் சாறு, மனோசிலை ஆகியவற்றைக் குழப்பி நடுவில் குழி செய்து மெழுகி, சூதத்தை அதனுள் விட்டு மருந்து (அடுத்த பாடலில் என்ன மருந்து என விளக்கியுள்ளார்) கொண்டு மூடி, அதன்மேல் ஓர் ஓட்டுத் துண்டையும் ஓட்டுச்சில்) கொண்டு மூடிச் சீலைமண் செய்ய வேண்டும் என உரைக்கிறார்.

128. **செய்திடுவாய் புடமேது வெகுவீ ராறு[103]**
சிறக்கவே குகைஎரித்துக் கொண்டு நீயும்
செய்தடா நின்பளத்தின் சாறு[104] வாங்கிச்
சேர்த்ததற்குள் மருந்துவைக்கச் செப்பக் கேளு
செய்தடா கெந்திதனை யித்தா லாட்டித்
திரும்பவதைக் குகைக்குள்ளே சேத்துச் சேத்து
செய்யடா செந்தூர மாக வேதான்
திறமாக முறையோடே செலுத்தி டாயே.

பொ. கு:

சீலை செய்தபின் அதனைப் பன்னிரண்டு புடமிட்டு எரித்து, கல்தாமரையின் நின்பளம் சாறு கொண்டு ஆட்டிய கந்தகத்தைக் குகைக்குள் வைத்துச் சிறிது சிறிதாகச் சேர்த்துச் செந்தூரமாக்க வேண்டும் என்கிறார்.

129. **செலுத்தியே கல்தா மரையி னாலே**
சிக்கெனவே ஆட்டியதைக் குகைமே லிட்டு
உலுத்தான சில்லிட்டுச் சீலை செய்து
உறவாக வஞ்செருவில் புடத்தைப் போடு
வலுத்தேதான் புடமேழு கெந்தி கூட்டி
மாறாமல் புடம்போடு செந்தூர மாகும்
கொலுத்தரசி யாகுமடா சகத்திரத்துக் கொன்று
கொடுத்துருக்க நூத்தெட்டு மாற்று மாமே.

---

103. பா. பே. 'வெரு வீராறு',' தி.

104. பா. பே. 'பழச்சாற்றில்', தி.

பொ. சு:

செந்தூரமாக்கும் முறையைப் பின்னும் தெளிவாக விளக்குகிறார். முன் பாடல்களில் (125 முதல் 128 வரை) கூறியதையே கூறுகிறார்.

ஆனால் கல்தாமரையின் சாறு விட்டுச் சிக்கெனக் கெட்டியாக ஆட்ட வேண்டும் என்றும், ஐந்தெருவில் (ஐந்து எரும்ட்டை அல்லது ஐந்து விராட்டி) ஏழுபுடம் போட வேண்டும் என்றும், கந்தகம் கூட்டிச் செந்தூரமாக ஆகும் வரை புடம் போட வேண்டும் என்றும் விளக்குகிறார்.

கிட்டும் இச்செந்தூரத்தை ஆயிரத்துக்கொரு பங்கு எனக் கொடுத்துருக்க, நூற்றெட்டு மாற்றுக் காணும் எனவும் இயம்புகிறார்.

கிளிஞ்சிச் சாரநீர்

130. ஆமப்பா முன்சொன்ன கிளிஞ்சித் தூளில்
அப்படியே நவச்சாரம் நேராய்ச் சேர்த்து
ஓமப்பா வெண்கார மிட்டுக் கொண்டு
உருகையிலே பொடியிட்டுக் கிண்டு கிண்டு
வேமப்பா துருத்தியினா லூதி வாங்கு
வெள்ளையாம் பனியில் வைக்கச் செயநீராகும்
நாமப்பா யிந்நீரில் கோடிவேர் கண்டோம்
நாதாக்க ளிப்படியே நாட்டி னாரே.

பொ. சு:

முன்கூறிய (123ஆம் பாடல்) கிளிஞ்சித் தூளில் நவச்சாரத்தை நேரடியாகச் சேர்த்து, அதனுடன் வெண்காரமும் (வெங்காரம்) இட்டு, இவை உருகும் போது கிளிஞ்சித்தூள் போட்டுக் கிண்டி ஊதுஉலை கொண்டு ஊதி வாங்கி, வெண்பனியில் வைக்கச் செயநீர் கிட்டும். கோடி முறைகளுக்கு ஆகும் இதனை நாதாக்கள் நாட்டிய முறை இதுவே என இயம்புகிறார்.

சொ. வி:

கிளிஞ்சல் - "Ostrea Edulis" எனப்படும். நீர்க்கட்டை உடைக்க முக்கிய மருந்தாக இது பயன்படுத்தப்படும்.[105] பலவித இராசயனக் குணங்கள் கொண்ட இதனை முறைப்படி பல அவிழ்தங்களில் சேர்ப்பர்.

---

105. பதார்த்த குண விளக்கம், பக்கம். 226.

வராகம், காக்கைக் குளிகை

131. நாட்டுவாய் வராகத்தின் சிரசு தன்னில்
நற்சூதங் கழஞ்சிபத்து விட்டு வைத்து[106]
நாட்டுவாய் மண்செய்து சாம மூன்று
நற்பாக மெரித்திடவே திரண்டு நிற்கும்
நாட்டுவாய் காக்கையொன்று கொண்டு வந்து
நாற்கழஞ்சு சூதமதன் வாயி லிட்டு
நாட்டுவாய் புதுப்பானைக் குள்ளே மைந்தா
நற்கள்ளுக் குறுணியதில் நன்றாய் வாரே.

பொ. சு:

பன்றித் தலையினுள்ளே பத்துக் கழஞ்சு சூதத்தை விட்டுச் சீலைமண் செய்து, மூன்று சாமம் எரித்திடக் குளிகையாகத் திரண்டு நிற்கும் என வராகக் குளிகை பற்றி உரைக்கிறார்.

அடுத்து, காக்கைக் குளிகை தயாரிக்கும் முறை பற்றி விளக்குகிறார்.

காக்கையின் வாயில் நாலு கழஞ்சு சூதம் விட வேண்டும். புது மண்பானை ஒன்றில் குறுணி கள் ஊற்றிக் கொள்ள வேண்டும். செய்ய வேண்டியதை அடுத்த பாடலில் தொடர்ந்து இயம்புகிறார்.

132. வார்த்தந்தக் கள்ளுள்ளே காக்கை தன்னை
வைத்தங்கே வாய்மூடிச் சீலை செய்து
பாரப்பா ஆறுதிங்கள் ரவியில் வைத்துப்
பார்சூதங் குளிகையாய் வழியு மப்பா
சேரப்பா ஆறுபல வங்கந் தன்னைச்
செப்பமுட னுருக்கியதில் குளிகை யூட்டி
ஆரப்பா நீர்வாங்கும் பின்னைக் கேளு
அப்பனே கெவுனமா யாடுந்தானே.

பொ. சு:

கள் ஊற்றிய புதுப்பானைக்குள் வாயில் சூதம் இட்ட காக்கையை வைத்துச் சீலைமண் செய்து மூடி, ஆறுமாதங்கள் வெயிலில் வைத்து எடுக்கச் சூதம் குளிகையாய் வழியும். ஆறு பலம் ஈயத்தை உருக்கி, அதில் இக்குளிகையை இட, நீர்ச்சத்து உறிஞ்சப்பட்டுக் கெவுனமாகும்.

---

106. பா. பே. 'நயமாகப் பதினாறு கழஞ்சு சூதம்', செ. I.

சொ. வி:

கெவுனம் – கவுனம். அதாவது ககனம் எனும் ஆகாயம். இங்கு ஆகாயத்தில் பறப்பது போன்ற உணர்வு தரும் குளிகைக்குப் பெயராய் வந்தது.

133. கெவனமாம் வாயிலிட ஆகாசத் தோடும்
கெடியான மலைமண்ணு முருகி யோடும்
கெவனமென யேரண்டி மூலத் தோடே
கெட்டியாய்ச் சிறுதும்பை மூலம் கூட்டு
கெவனமென்ன பொடிசெய்து வைத்துக் கொண்டு
கிண்டுவாய் தாம்புரந்தா னுருகும் போது
கெவுனமா மேதியுட சாணி யுள்ளே
கேளப்பா யிப்படியே யுருக்கிச் சாயே.

பொ. சு:

இக்கெவுனத்தை வாயிலிட ஆகாயத்தில் பறப்பது போன்ற உணர்வு தோன்றும். இதற்குக் கல், மண் ஆகியவையும் உருகி ஓடும்.

இதனுடன் ஆமணக்கம் வேர், சிறுதும்பை வேர் இவற்றைப் பொடி செய்து வைத்துக் கொண்டு தாமிரம் உருகும் போது போட்டுக் கிண்டி, எருமைச் சாணியில் சாய்க்க வேண்டும் என்கிறார்.

ஆகும் மாற்றத்தை அடுத்த பாடலில் இயம்புகின்றார்.

134. சாய்த்திடவே மூன்று தரம் வெள்ளியாகும்
தப்பாது இதுவெல்லாம் சத்திய முண்டு
வாய்த்திடுமே வஸ்துவித்தை எய்தித் தானால்
மால்பிரம ருத்திரர்போல் வாழ லாகும்
ஏத்தரொரு சாதி யப்பா நால்வகைக்கும்
இயல்பாக வேதையென்ன முதல்சா திக்கும்
ஊத்தமுட னாயிரமா மிரண்டாஞ் சாதிக்கு
உண்மையா யெண்ணூறுக் கோடும் பாரே.

பொ. சு:

மூன்று முறை சாய்த்தெடுக்கத் தாமிரம் வெள்ளியாகும். இது எல்லாம் சிறிதும் தப்பாத சத்தியமான வார்த்தைகள் என்கிறார். ஒன்றை மற்றொன்றாக வேதிக்கும் இவ்வஸ்து வித்தை கிட்டி

விட்டால் திருமால், பிரமன், சிவன் ஆகிய மும்மூர்த்தி போல் வாழலாம் என்றும் இயம்புகின்றார். நால்வகைச் சாதியுள் (உலோகத்தின் தரம் பொறுத்து நாலுசாதியாக வகைப்படுத்தி யுள்ளமை தெரிகிறது) முதல் சாதி உலோகத்துக்கு ஆயிரம் மாற்றும், இரண்டாம் சாதிக்கு எண்ணூறு மாற்றும் கிட்டும் என்றும் விளக்குகிறார்.

135. ஒடுமப்பா மூன்றான சாதிக் கேதான்
உண்மையாய் நானூறு மாத்துக் காணும்
ஒடுமப்பா நாலாய சாதிக் கெல்லாம்
ஒகோகோ யிருநூறு மாத்துக் காணும்
ஒடுமப்பா யிதுநாலு மரிது கண்டாய்
உத்தமனே பெரியோர்க்கு லபிக்கு முண்மை
ஒடுமப்பா மாத்தெல்லாம் பத்துக் குள்ளே
உயருமடா கற்பமினி வுரைக்கக் கேளே.

பொ. சு:

'மூன்றாம் சாதி உலோகத்துக்கு நானூறு மாற்றுக் காணும். நான்காம் சாதிக்கு இருநூறு மாற்றுக் கிட்டும். இந்த நான்கு சாதி வகை மாற்றுமே கிட்டுதல் அரிதுதான். ஒருவேளை பெரியோர்களுக்கு இது கிடைக்கக்கூடும். ஆனால் பத்து மாற்று வரை கிட்டுவது சாதாரணமாக இயலக்கூடியது. இனி, காய கற்பம் பற்றி உரைக்கிறேன்' எனச் செப்புகின்றார்.

சாதிக்கு மாற்றுவிபரம்
கற்பமுறைச் செந்தூரம்

136. கேளப்பா முதல்சாதி வஸ்துக் கொண்டால்
கிருபையுட னுகமொன்று யிருந்து வாழ்வான்
கேளப்பா மறுசாதி வஸ்துக் கொண்டால்
கேகரத்தி லாயிரந்தான் வருஷம் வாழ்வான்
கேளப்பா மூன்றுக்கு அஞ்நூ றாக்குங்
கிட்டிவந்த நாலுக்கு நானூ றாகும்
கேளப்பா யிந்தமுறை சித்த ரெல்லாம்
கெட்டிகெட்டி யனந்தயுகங் கிண்டிப் பார்ப்பான்
கேளப்பா யுகமென்றால் துகைதான் சொல்வோம்
கேள்வியன்றி யாயிரந்தா னிருக்க லாமே.

பொ. சு:

முதல் சாதி வஸ்துவை உட்கொண்டால் ஒரு யுகம் வரை இம்மண்டலத்தில் வாழலாம். இதற்கும் அடுத்த இரண்டாம் சாதிப் பொருளை உட்கொண்டால் ஆயிரம் வருட காலம் வாழலாம். மூன்றாம் சாதி வஸ்துவுக்கு ஐந்நூறு வருட காலமும், நான்காம் சாதிக்கு நானூறு வருடம் வரையும் நிலைத்து வாழலாம். இவ்வாறு ஒவ்வொரு சாதி வகை வஸ்துவாகக் கண்டு கண்டே சித்தர்கள் அனந்த யுகம் அதாவது, முடிவில்லாத பல யுகங்கள் வரை வாழும் முறையைச் செய்து பார்ப்பார்கள். யுகம் என்றால் ஒரு தொகைதான். தப்பாமல் ஆயிரம் வருடம் வரை வாழலாம் என உரைக்கிறார்.

137. ஆயிரமா மழியாது சாதி நாலும்
அப்பனே கிடையாட்டா லஞ்சாஞ் சாதி
ஆயிரமாம் பூரணத்தை வாங்கி வந்து
அதிலாட்டிப் புழுகுடனே பூரங் கூட்டி
ஆயிரமாங் கோரோசனையும் விந்துங் கூட்டி
ஆட்டியே அமிர்தமொடு முலைப்பால் விட்டு
ஆயிரமாம் வச்சிரநீர் கூடப் போட்டு
ஆட்டியதைக் கல்லுப்பா லெரித்து வாங்கு.

பொ. சு:

நான்கு சாதி வகையும் ஆயிரம் வருடம் வரை வாழ வழி செய்யும். இந்த நாலும் கிடைக்காவிட்டால் ஐந்தாம் சாதியை எடுத்துக் கொண்டு, பூரணத்தை அதனுடன் ஆட்டி, பின் புழுகு, கற்பூரம், கோரோசனை, விந்து (சூதம் எனப்படும் ரசம்) ஆகியவற்றையும் கூட்டிக் கொண்டு, அமிர்தத்துடன் (அமிர்த பானமாகலாம்) முலைப்பாலும் விட்டு, வச்சிரநீர் கலந்து ஆட்டி, அதனைக் கல்லுப்பால் எரிக்க வேண்டும் என்கிறார்.

ஐந்தாம் சாதியை முந்தைய நான்கு சாதி வகையின் தரத்திற்கு உயர்த்தவே அதனுடன், இப்பாடலில் குறிப்பிடப் பெற்ற மருந்துச் சரக்குகளைச் சேர்த்து ஆட்டி எரிக்க வேண்டும் என இயம்புகிறார்.

138. வாங்கப்பா சாமமொன்று செந்தூர மாகும்
வகையாகத் தேனிலே பணந்தா னுண்ணு
தாங்காம லெட்டுநாள் நரைதிரைகள் மாறும்
சத்துருவு நோய்தானுஞ் சாடிப் போகும்

பாங்காகு மேனியெல்லாம் வயிரம் போலப்
பளபளக்கும் காந்தியைப் போல வென்பார்
ஏங்குவா ரவன்சேர்க்கை கண்ட மாதர்
ஈரேழு உலகத்தோ ரெல்லாந் தானே.

பொ. சு:

ஒரு சாமம் வரை எரித்து வாங்கச் செந்தூரமாகி நிற்கும். இதனை முறைப்படி ஒரு பண எடை அளவு எடுத்துத் தேனில் குழப்பி எட்டு நாட்கள் உண்ண, நரை, திரைகள் நீங்கும். உடலுக்குப் பகைவனாகிய எந்த நோயும் உடனே ஓடிப் போகும் என இயம்புகிறார்.

இத்துடன் உடல் வயிரம் போல உறுதி பெறுவதுடன், மிகு ஒளியும் பெற்றுப் பளபளக்கும் என்றும், இவனது சேர்க்கைக்காக ஈரேழு உலக (மேலேழு, கீழேழு) மாதரும் ஏங்குவர் என்றும் உரைக்கிறார்.

சத்தி பெருமை, சிவவிந்து

139. தானவனாஞ் சத்தியுட பெருமை கேளு
சதாசிவனார் விந்துவென வேதம் சொல்லும்
வானவர்கள் ரிஷிகள் சித்தர் முனிவரெல்லாம்
மனிதரெல்லாம் சத்திவந்த மார்க்க மேது
தேனான சூதமுண்டு சட்டை தள்ளிச்
செப்பரிய கயிலாசத் தேக மானார்
கோனான சூதத்தின் மகிமை யாலே
கூர்ந்துபா ரண்டபகி ரண்ட மாச்சே.

பொ. சு:

இப்பாடலில் 'சூதம்' எனும் இரசத்தினுடைய பெருமை பற்றிக் கூறுகிறார். 'சதாசிவனார் விந்து' என வேதம் குறிப்பிடுவது இதனையே ஆகும் என்கிறார். வானவர்கள், ரிஷிகள், சித்தர், முனிவர், மனிதர் ஆகிய அனைவரும் சக்தி பெற்ற விதம் இதுவே (இவர்களுக்கெல்லாம் சக்தி தந்ததால் 'சத்தி' எனப் பரிபாசையாக அழைக்கப்பட்டது) என்றும், தேன் போன்ற இச்சூதம் உண்டு, பூதஉடல் (தூலதேகம்) நீக்கிக் கயிலாச தேகம் (சூக்கும் உடல்) (கண்ணுக்குப்புலப்படாத, வடிவமற்ற உடல்) அடைந்தார்கள் என்றும், அனைத்துக்கும் மூல முதலான 'இச்சூதத்தின் மகிமையே அண்ட பகிரண்டத்தின் அமைப்புகள் என்றும் இயம்புகின்றார்.

140. ஆச்சப்பா நாதமொடு விந்து சேரில்
அனைத்துயிரு முண்டாகு மெழுவகையின் தோற்றம்
ஒச்சப்பா நாதமென்றால் பூரணமே யாச்சு
உரைக்கரிது விந்துவென்றால் ரசந்தான் மைந்தா
போச்சப்பா ஒன்றைவிட்டு ஒன்றைச் சேர்த்தால்
பொன்னில்லை யோகமில்லை காயசித்து மில்லை
ஏச்சப்பா குளிகையில்லை செந்தூர மில்லை
இயல்பான குருநீறு மில்லை காணே.

பொ. சு:

நாதமொடு விந்து இணைதலே இவ்வுலகப் படைப்பின் தத்துவம். எழுவகை உயிர்களும் (எழு பிறப்பு என்ற நம்பிக்கை ஆதாரமாகக் கொள்ளப்பட்டுள்ளது) இதன் அடிப்படையிலேயே உண்டாகின்றன. நாதம் என்பது பூரணம், அதாவது கந்தகம். விந்து என்பது இரசம், அதாவது பாதரசம்.

இவற்றை அறிந்து இணைக்கும் முறையில் சிறிது தவறு செய்து, ஒன்றுக்குப் பதிலாக இன்னொன்றைச் சேர்த்து விட்டால் பொன், யோகம், காயசித்து, குளிகை, செந்தூரம் என்ற எதுவும் சித்தி அடையாது போய் விடும். மிக மிகச் சாதாரணமான நோய்களுக்குப் பயன்படுத்தப்படும் குருநீறும் கூடக் கிட்டாது போய்விடும் என எச்சரிக்கிறார்.

சொ. வி:

ஆச்சப்பா ......தோற்றம் – சித்த வைத்தியத்தில் சில மருந்துச் சரக்குகளை நாதம் என்றும், சிலவற்றை விந்து என்றும் வகைப்படுத்தி வைத்துள்ளனர். சான்றாக நாதம் என்ற வரிசையில் துருசு, லிங்கம், கெந்தி, இரும்பு, பொரிகாரம், வெடியுப்பு ஆகியன அடங்குதலையும், இவற்றுக்கு விந்துச் சரக்காக முறையே கல்லுப்பு, ரசம், எவச்சாரம், சவ்வீரம், சவுக்காரம் ஆகியன அமைதலையும் குறிப்பிடலாம்.[107]

ஒன்றுக்கொன்று மாறான இவற்றினை இணைக்கும் வழியை அறிந்தவனே சித்தன் ஆகிறான். பஞ்சபூதத்தில் நீரும், நெருப்பும் ஒன்றாகக் கூடி அணைதலைப் போன்றதே இவையும் என்கின்றனர். இது கொண்டே, பஞ்ச பூதத் தன்மைகளுடன் ஒத்த தன்மை

107. வி. பலராமய்யா - வாதவைத்தியத்துக்காதி (முதற் பாகம்) என்ற நூலிலிருந்து இக்கருத்துகள் பெறப்பட்டன.

கொண்டவற்றை அவற்றின்படியே வரிசைப்படுத்தியும் வைத்துள்ளனர்.

காரசார லவணங்கள் பஞ்ச பூதத்தில் அடங்கும் முறை

பிருதிவி(மண்)	- கல்லுப்பு, வளையலுப்பு.
அப்பு(நீர்)	- நவசாரம், சத்திசாரம்.
தேயு(நெருப்பு)	- சவுட்டுப்பு, வெடியுப்பு, சூடன்.
வாயு (காற்று)	- வெண்காரம், துருசு, சீனம்.
ஆகாயம் (விண்)	- பூரம், வழலை[108]

பஞ்ச பூதத்தன்மையும் உடலில் அமைந்துள்ளதனை இன்றைய ஆங்கில மருத்துவமும் (அலோபதி) ஒப்புக் கொண்டுள்ளது. பஞ்ச பூதத் தன்மை கொண்ட இம்மருந்து வகைகளைச் சேர்க்கும் நுணுக்கம் கொண்டவன் இவ்வுலக உயிர்களின் எழுவகைப் பிறப்புகளையும் அறிந்தவனாகிறான் என்கிறார்.

இயல்பான குருநீறு மில்லை காணே

எந்தெந்த மருந்துகளை எந்தெந்த நோய்களுக்கு எந்தப் பக்குவத்தில், எப்பொழுது, எப்படி, ஏன் தரவேண்டும் என்பது குறித்த தெளிந்த அறிவு உள்ளவனே சிறந்த வைத்தியனாக இயலும் என மருத்துவ நூல்கள் புகலுகின்றன.

"சாத்திய நோய்களான, சாதாரண சுரம், உடல்வலி, சளி, கபம், குன்மம், தலைவலி ஆகியவற்றுக்கு எளிய மூலிகைகள், உப்பு வகைகள் இவற்றைப் பயன்படுத்தலே போதுமானது.

இவற்றுக்குப் போய் பாஷாணாதிகள், உலோக பற்பங்கள், செந்தூரங்கள் இவற்றைக் கொடுத்தால் நேர்மாறான, தீர்க்க இயலாத, வேறு பல விளைவுகளை உடலில் உருவாக்கி விடக் கூடும்" [109] என மருத்துவ வல்லார் எச்சரிக்கின்றனர்.

எனவேதான், சித்தமருத்துவத்தில் 'மருந்துகளின் பிரயோகம்' என்பது, என்றும் ஒரு தனி இடம் வகிக்கிறது.

'இயல்பான குருநீறு' என்றது சாத்திய நோய்களுக்குச் சாதாரண எளிய மருத்துவர்களும் கண்டறிந்து தரக்கூடிய மருந்தாகும். ஆனால் இதன் செய்முறையிலும் கூட, ஒன்றுக்குப்

---

108. வி. பலராமய்யா - வாதவைத்தியத்துக்காதி (முதற் பாகம்) என்ற நூலிலிருந்து இக்கருத்துகள் பெறப்பட்டன.

109. பதார்த்த குண போதினியினின்று பெற்ற கருத்துகள்.

பதிலாக ஒன்றினைச் சேர்த்தால் கிட்டாது போய் விடும் என்பதே இவ்விடத்தில் வலியுறுத்தப்படுகின்றது.

141. இல்லையப்பா கிறாவணமுங் குடோரி இல்லை
என்மகனே புகைநீறாந் தீயி நீறும்
இல்லையப்பா வேதையொடு சாரணையு மில்லை
இயல்பான பண்டிதமும் மான்மறையு மில்லை
இல்லையெனச் சூதத்தை எவரா னாலும்
இறுக்கினால் சிவன் வந்து எடுத்தணைப்பார்
இல்லையென்ற மாயிவந்து என்மகனே என்று
ஏத்தியவன் தம்மாரோடே இருத்து வாளே.

பொ. கு:

எதுவெல்லாம் கிட்டாது என்பதைப் பின்னும் விவரிக்கின்றார். ஒன்றுக்குப் பதிலாய் ஒன்றைச் சேர்த்தால், கிறாவணம், குடோரி, புகைநீறு, தீநீறு, வேதை, சாரணை என்ற எந்த மருந்து வகைகளும் கிட்டாது போய் விடும். ஆகவே, மருத்துவத்துறையில் பாண்டித்தியமும், (தேர்ச்சிபெறுதல்) மருந்து நலம் கூறும் பெருமைமிகு நூல்களும் இல்லாது போய்விடும். மருந்து வகைகளின் நுணுக்கம் அறிந்து விந்து (இரசம்) எனப்படும் சூதத்தை எவன் இறுக்கிக் கட்டுகிறானோ அவனைச் சிவன் வந்து எடுத்தணைப்பார். சக்தி 'என் மகனே' என்று கூறிச் சேர்த்தெடுத்துத் தம்மவர்களுடன் இருத்துவாள் என்கிறார்.

சொ. வி:

இல்லையென......இருத்துவாளே

சீதக்கட்டினை அறிந்தவன் அனைத்துச் சித்திகளும் கைவரப் பெறுவான். ஆதலால், 'இறைவனோடு ஒன்றிக் கலத்தல்' என்ற சித்தியின் முத்திநிலை அடைதல் அவனுக்குக் கைகூடி விடும் என்பதாம். பின் இறை வேறு, அவன் வேறு என இல்லாது அவனே இறையாகிறான்.

இதனையே,

"விந்துநிலை தனையறிந்து விந்தைக் கண்டால்
விதமான நாதமது குருவாய்ப் போகும்
அந்தமுள்ள நாதமது குருவாய்ப் போனால்
ஆதியந்த மானகுரு நீயே யாவாய்"[110]

எனச் சித்தர்கள் கூறிச் சென்றனர்.

---

110. சிவயோகி. மா. இரத்தின சபாபதி பிள்ளை. 'காயசித்தி திருமந்திரம் அல்லது சாகாக்கலை', பக்கம். 71.

பூரணச் செந்தூரம்

142. இருத்துவான் சூதத்தை எவ்வண்ண மாலும்
இறுக்கினவன் தேவனடா இடுக்க மில்லை
கருத்துடனே நாகமாம் வெள்ளி யாகும்
காரீயம் வெள்ளீயம் செம்பு மாகும்
வருத்தமுறும் சரக்குவகை எட்டெட் டாலும்
மாயாமல் கட்டினவன் பிரமா வாகும்
எரித்திடுவாய் சூதத்தைப் பூரணத்தி லூட்டி
என்மகனே உப்பில் வைத்து எரித்திடாயே.

பொ. சு:

எந்த முறையிலாவது சூதத்தை இறுக்கிக் கட்டினவன் தேவனாவான். சூதக் கட்டினை அறிந்தவனுக்குத் துத்தநாகம் வெள்ளியாகும். காரீயமும், வெள்ளீயமும் செம்பாக மாறும். இத்தகு உலோகங்களை அறுபத்து நான்கு பாஷாணச் சரக்குகளாலும் புகைந்து போகாமல் கட்டியவன் படைப்புக் கடவுளான பிரமனுக்குச் சமமானவனாவான் என இயம்புகிறார். அடுத்து, தொடர்ந்து செய்முறையை விளக்குகிறார்.

சூதத்தைப் பூரணத்தில் ஊட்டிக் கல்லுப்பால் எரிக்க வேண்டும் என்கிறார்.

சொ. வி:

காரீயம் – "Black lead or Plumbum" எனப்படும். இதனை முறைப்படி கொடுக்கத் தாவரவிஷம், கண்ணேய், வலிவாத குன்மம், குஷ்டம், சுரம் ஆகியவற்றை நீக்கக் கூடியது எனப் பதார்த்த குண விளக்கம் தெரிவிக்கிறது.

சரக்கு வகை எட்டெட்டாலும் – காரசார லவண வகை எனப்படும் பாஷாணச் சரக்குகள் அறுபத்து நான்காலும் என்பதாம்.

அறுபத்து நான்கு எனக் கூறுதலும் மரபு வழியாக வந்ததோ என எண்ண இடம் உள்ளது.

அறுபத்து நான்கு மூலிகைகள்
அறுபத்து நான்கு கலைகள்
அறுபத்து நான்கு சித்தர்கள்
அறுபத்து நான்கு சித்துகள்
அறுபத்து நான்கு திருவிளையாடல்கள்

என்ற கருத்துகளை நோக்க, இவ்வுண்மை புலனாகின்றது. அறுபத்து நான்கு மூலிகைகள், அறுபத்து நான்கு பாசாண வகைகள் கொண்டு, அறுபத்து நான்கு சித்துகள் ஆடல் எனக் கொள்ளலாம்.

எனினும் அறுபத்து நான்கு என்ற இந்த எண்ணும் மூன்று, ஏழு, பதினெட்டு போல மரபு வழிப்பட்டதெனத் தெளிவாக விளங்குகிறது. ஏனெனில் மூலிகை, பாஷாணத்துள் அறுபத்து நான்கினுக்குள் அடங்காத பிறவும் உண்டு.

143. எரித்திடுவாய் கடிகையப்பா இருமூன் றாகும்
இறுக்கி யப்பா சாதிலிங்கம் போலே
தரித்திடுவாய் புருவமை யமத்தத் தாலே
சகலசன பேதனமாய்த் தானே காணும்
பரித்திடுவாய் திங்களொன்று புத்துத் தேனில்
பாலனாம் பதினாறு பிராயம் போல[111]
புரித்திடுவாய் காலனையும் வினைநோ யாறும்
பொய்யல்ல பொய்யல்ல பொசித்திட் டாரே.

பொ. சு:

ஆறு நாழிகை எரித்து வாங்க, சாதிலிங்கம் (பஞ்ச வாசத்துள் ஒன்று. சீமைக்கள்ளி மரம்) லிங்கம் போல இறுகி நிற்கும். அதனை அமிர்தப் பாலில் (வாயமிர்தாய உமிழ் நீர் என்றும் கொள்ளலாம்) குழப்பிப் புருவ மத்தியில் தீட்ட, அனைத்து மக்களையும் வசீகரிக்கலாம். புதுத்தேனில் தோய்த்து ஒரு மாதம் உண்ண, பதினாறு வயதுடைய பாலகன் போல இளமை எய்தலாம்; எமனையும் வெல்லலாம். தீவினையால் வந்த 'கர்ம நோய்கள்' எனப்படும் குட்டம், பாண்டு, காசம், நீரழிவு, பெருநோய், மூலம் ஆகிய ஆறுநோய்களும் அற்றுப் போகும். இவை பொய்யல்ல, பொய்யல்ல என அறைகிறார்.

சொ. வி:

வினைநோயாறு – 'மனித முயற்சியால் தீர்க்க இயலாது போய் விட்ட நோய்கள்' என முடிவு செய்யப்பட்டவைகளைக் 'கர்ம நோய்கள்' எனக் கழறலாயினர்.

சித்த வைத்தியம் மொத்த வியாதிகள் 4448 எனப் பகர்கின்றது.

'வாதம் 84, பித்தம் 48, சேத்துமம் 96, சன்னி 68, பாண்டு 10, குட்டம் 20, கிரந்தி 48, மாலைக்கண் 20, கிராணி 25, – (வாத

111. ஐந்தாம் வரி தி. யிலிருந்து எடுக்கப்பட்டது.

வைத்தியத்துக்காதி) என இன்னும் இத்தகு வகைகள் என முறைப்படுத்தியுள்ளனர். வினைநோய்கள் ஆறும் இதற்குள்ளேயே அடங்கினும், பிற நோய்கள் போல இவற்றுக்குச் சிறந்த மருந்துகள் கண்டறியப்பட்டு முழுக்கக் குணப்படுத்தும் முறைமை அறிவிக்கப் படவில்லை.

இங்குத் தீர்க்க இயலாதவை எனக் கைவிடப்பட்ட அந்த நோய்களும் இதனால் தீரும் என ஆசிரியர் புலப்படுத்துகிறார்.

பொசித்திட்ட - புசித்திட்ட, அதாவது உண்ணல் என்பதாம்.

144. பொசித்திடவே பூரணச் செந்தூரந் தன்னை
போர(ர)ன வேதைமுகம் பிரிப்ப தேது
பசித்திருந்த புலிப்போலே எல்லா முண்ணும்
பாரேது விண்ணேது பறப்போர் சங்கம்
சசித்துடைய லோகமிந்த வாடை பட்டால்
சனவேதை செணவேதை திரிதல் வேதை
வெசித்துடைய செந்தூர மின்ன முண்டு
வெகுசுருக்கு வெகுசுருக்கு வலிந்து வாட்டே.

பொ. சு:

முறைப்படி தயாரித்த இப்பூரணச் செந்தூரத்தை வேதை முகத்தில் மீண்டும் பிரிக்க இயலாது என்றும், பசியுடைய புலியைப் போல எல்லாவற்றையும் தன்னுள் இது ஐக்கியப்படுத்திக் கொள்ளும் என்றும், இதன் தன்மைகளை அறிந்தவர்களுக்குப் பூமி, வானம் என்ற பிரிவு இல்லை (எங்கும் பறப்பர்) என்றும், இதன் காற்றுப்பட்டாலும் எந்த வேதையும் உடனே சித்தியாகும் என்றும் தெரிவிக்கிறார். இன்னமும் இது தொடர்பான செந்தூரங்கள் உண்டு. சுருக்குக் கொடுத்து (விரைவாக என்றும் கொள்ளலாம்) நன்கு வாட்ட வேண்டும் என இயம்புகின்றார்.

சொ. வி:

சனவேதை செணவேதை திரிதல் வேதை - மக்களை (மனிதர் மனங்களை) வேதித்தல், காலத்தை (செணம் - க்ஷணம்) வேதித்தல், சுற்றுதலை வேதித்தல் (இயக்கத்தை நிறுத்தல்) எனக் கொள்ளலாம்.

145. சுருக்கான சூதமுடன் காந்த லோகம்
சொற்பெரிய பூரணமுங் கெந்தி லிங்கம்

மறுக்காத மால்தேவி நாகந் தங்கம்
வன்மையுள்ள புழுகுடனே பூரங் கோபம்
குறுக்காக ஐந்தைந்து கழஞ்சி தூக்கிக்
குறையாமல் முலைப்பாலுந் தேனுங் கூட்டி
சிறுக்காம லொருசாம மாட்டி மைந்தா
செண்ப(க) விரைபோலே வில்லை தட்டே.

பொ. சு:

சுருக்குக் கொடுத்து எடுத்த சூதத்துடன், காந்த லோகமான இரும்பு, பூரணம், கந்தகம், லிங்கம், அரிதாரம், துத்தநாகம், தங்கம், புழுகு, கற்பூரம், இந்திரகோபம் ஆகிய ஒவ்வொன்றும் ஐந்தைந்து கழஞ்சு நிறுத்து எடுத்து, முலைப்பால், தேன் ஆகியவை சேர்த்து ஒரு சாமம் ஆட்டிச் சண்பக விதை போல வில்லை (மாத்திரை) தட்ட வேண்டும் என உரைக்கிறார்.

146. வில்லைதனைக் குப்பிக்கு ளிட்டுப் பின்னும்
விபரமுடன் சில்லிட்டு வாயை மூடி
நல்லநவ நாதத்தைக் குமரிச் சாற்றால்
நயமாக வாட்டியந்தக் குப்பிதனைப் பொதிந்து
வல்லதொரு தாழியிலே கல்லுப் பிட்டு
வைத்ததன்மேல் மணலிட்டுச் சட்டியால் மூடித்
தில்லைநட ராசனுக்கும் மாயி யாட்கும்
தேசிக் கிரமத்தாலே பூசை செய்யே.

பொ. சு:

இவ்வில்லைகளை ஒரு குப்பிக்குள் இட்டு, மண் ஓட்டுச்சில் ஒன்று வைத்து அதன் வாய்ப் புறத்தை அடைத்துச் சுத்தமான புதிய நாதத்தைக் (பூரணம் எனப்படும் கந்தகம்) கற்றாழைச் சாற்றால் வாட்டி, அதில் குப்பியினைப் பொதிந்து, ஓர் அகன்ற பெரிய சட்டியில் கல்லுப்பிட்டு, அதில் குப்பியை வைத்து, அதன் மேல் மணலிட்டுப் பொருத்தமான மற்றொரு சட்டி கொண்டு கீழ்ச்சட்டியை மூடித் தில்லை நடராசனுக்கும், மாயியாளுக்கும் அம்பிகை) உபதேசித்த முறைப்படி பூசை செய்ய வேண்டும் என விவரித்துள்ளார்.

147. பூசைசெய்து சாமமொன்று எரித்து வாங்கு
பொங்கியது தங்கம்போ லுருகி நிற்கும்
நேசிக்கிற பணவிடைதான் முலைப்பால் தன்னில்
நினைவாக மண்டலந்தான் கொள்ளு கொள்ளு

வாசியொடு சத்தியப்பா நடுவே ஓடும்
மகத்தான மதியமுர்தம் வாய்க்குள் சிந்து(ம்)
தேசிபோல் தேசமெங்கும் கெவன மாகும்
சிறுபிள்ளை போலவே வதன மாமே.

பொ. சு:

பூசை செய்து ஒரு சாமத்துக்கு எரிக்கக் குப்பிக்குள் இட்ட மருந்துச் சரக்கு தங்கம் போல் உருகி நிற்பதைக் காணலாம். இதில் ஒரு பண எடை அளவு எடுத்து முலைப்பாலில் கலக்கி, ஒரு மண்டலம் (40 நாட்கள்) உட்கொள்ள வாசி என்ற மூச்சு உயர்ந்து நடுவில் ஓடும். மகத்தான மதியமிர்தம் சோமரசம் வாய்க்குள் சிந்தும். தேசம் முழுதும் கவனத்துக்குக் கொண்டு வரப்படும். முகம் சிறுபிள்ளை போல ஆகும் என உரைக்கிறார்.

சொ. வி:

தேசி – ஒளி. தேசி - ஒளியையுடையவன்.

148. **ஆமப்பா நூறானைப் பலனுண் டாகும்**
அவன்கரத்தால் மலைகுத்தத் தூளாய் வீழும்
ஓமப்பா தேவரெல்லாம் வார்த்தை சொல்வார்
உறவாகுந் தெய்வகன்னி யரம்பை மாதர்
சோமப்பால் உண்டதற்பின் சாவு போச்சு
சொன்னார்க ளிதைமறைத்துக் கோடா கோடி
நாமப்பா இதுவென்றால் சித்தி முத்தி
நலம்பெற்றோ ரமனாருக்குச் சொல்லொ ணாதே.

பொ. சு:

விளையும் மகத்தான மாற்றங்களை மேலும் விவரிக்கின்றார். நூறு யானைகளின் பலம் உண்டாகும். அவனது கரத்தால் குத்த மலையும் தூள் தூளாகும். விண்ணுலகத்துத் தேவர்களும் புகழ்ந்து போற்றுவர். தெய்வ கன்னியரான அரம்பை போன்றவர்களும் உறவாவர். இச்சோமப்பால் உண்டு விட்டால் சாவு அணுகாது. ஆனால் இதனைப் பற்றிய உண்மைகளை மறைத்து மறைத்துக் கூறினார். இதனை வென்றுவிட்டால் சித்தி முத்தியாகும். இதனால் நலம் பெற்றவர்கள் தேவருக்கும் இதனை உரைக்கலாகாது என்கிறார்.

சொ. வி:

அமனார் – அமரர் ஆகலாம். 'ெ' விடப்பட்டு 'ரெமனார்' என இருப்பின் எமதேவன் எனக் கொள்ளலாம்.

149. ஒண்ணாது ஆருக்கு மிந்தமுறை மார்க்கம்
ஏகோகோ நூல்களிலே வுரைத்தோ ரில்லை
ஒண்ணாது செந்தூர திலதந் தீட்ட
ஒருவருக்குந் தெரியாது உருவை மாற்றும்
ஒண்ணாது ஏரண்டத் தயில மூட்டி
உற்பனமாய்ச் செந்தூரந் தன்னில் தீட்டு
ஒண்ணாது மூவுலகில் தோற்ற மெல்லாம்
ஒரு நொடியிற் காணலா முண்மை தானே.

பொ. சு:

மேற் பாடல்களில் குறிப்பிட்ட முறைகள் (செந்தூரத்தால் விளையும் பயன்பாடுகள்) யாருக்கும் தெரியாது. ஏனெனில் இவற்றை நூல்களில் சொல்லி வைத்தாரில்லை என்கிறார்.

இதுபோல் நூல்களில் சொல்லாத பல விஷயங்களை, இந்நூலாசிரியர் தனது இந்த நூலில் வெளிப்படையாக விளக்குகிறார்.

செந்தூரத் திலகம் தீட்டுவது எவ்வாறு என இப்பாடலில் உரைக்கிறார்.

'உருவை மாற்றும் செந்தூரத் திலகம் தீட்டும் முறை யாருக்கும் தெரியாது. குறிப்பிடப்பட்ட பூரணச் செந்தூரத்தில் ஆமணக்கந் தைலம் இட்டுக் குழப்பித் திலகம் தீட்ட, (பூலோகம், மேலோகம், பாதாள லோகம்) மூவுலகத் தோற்றத்தையும் ஒரு நொடியில் ஒருங்கே காணலாம். இது உண்மை' என இயம்புகிறார்.

150. தானென்ற செந்தூர மொருமா வாங்கித்
தாமிரந் தானோர் பலத்தி னூட்டு
தானென்ற மாத்தேது இருநூ றாகும்[112]
தயங்காத நவலோக மொன்பதையு மூட்ட
தானென்ற மாத்தேது முன்னூ றப்பா
தங்கமிதி லிடைக்கிடைதான் சேர்த்து மைந்தா
தானந்த உப்பில்வைத்து எரித்து வாங்கு
சரக்குநஞ்சா மொன்றில்லை சிவக்குங் காணே.

பொ. சு:

இதே செந்தூரம் ஒருமா எடுத்து ஒரு பலம் தாமிரத்தில் ஊட்ட இருநூறு மாற்றுக் காணும். ஒன்பது உலோகத்திலும் கொடுத்துப்

112. பா. பே. 'முன்னூற் றஞ்சு'. செ. 1., தி.

பார்க்க முன்னூறு மாற்றுக் காணும். இச்செந்தூரத்துடன் தங்கம் எடைக்கு எடை சேர்த்துக் கல்லுப்பில் வைத்து எரித்து வாங்கச் சரக்கில் உள்ள நஞ்சு நீங்கிச் சிவக்கும் என்கிறார். இதன் பயனை அடுத்த பாடலில் விளக்குகிறார்.

151. சிவந்ததொரு செந்தூரங் குன்றி குன்றி
தேனிலே எட்டுநாள் தின்னு தின்னு
சிவந்திடுமே தேகமப்பா அருணன் போலாம்
சித்தரெல்லா மிதினாலே சித்தி பெற்றார்
சிவந்ததொரு செந்தூர(ம்) (உ)லோகத் தூட்ட
சிவசிவ ஆயிரத்துக் கோடு(ம்) பாரு
சிவந்திடுமே சரக்குகளில் பரிசித் தாக்கால்
சிணத்திலே சிவப்பாகி மாற்று மாமே.

பொ. சு:

சிவந்து நிற்கும் இச்செந்தூரத்தைக் குன்றி மணியளவு எடுத்துத் தேனிலே குழப்பி எட்டு நாட்கள் உட்கொள்ள, இவ்வுடல் உதயசூரியன் போல் சிவக்கும் என்றும், சித்தர் சித்தி பெற்ற விதம் இதுதான் என்றும், இந்தச் செந்தூரத்தினை எடுத்து உலோகத்தில் கொடுத்துப் பரீட்சித்துப் பார்க்க ஆயிரம் மாற்றுக்கு ஓடும் என்றும், பிற மருந்துச் சரக்குகளுடன் சேர்த்துத் தர அவை ஒரு கணத்தில் சிவந்து மாறும் என்றும் இச்செந்தூரத்தின் மகத்தான பயன்பாட்டினை உரைக்கிறார்.

152. மாற்றான செந்தூரங் கையி லிட்டு[113]
வாய்நீரால் மத்தித்துத் திலதம் தீட்ட
காற்றான கணங்களொடு பூதம் யாவும்
காசிக்குங் கன்னிக்குங் காணப் பண்ணும்
மாற்றாம லகற்றிவிட்டு உலகத் தோர்கள்
வந்துவந்து நூல்தோறும் பார்த்துக் காட்ட
போற்றப்பா என்னூலைப் படித்துக் கொண்டு
போற்றுவாய் பூசைவிதி புகலக் கேளே.

---

113. இப்பாடத்தில் 'குகையிலிட்டு' என இருந்தது. 'கையிலிட்டு' என 'தி'யில் கண்டு, பொருத்தமான பொருளுடையதாய் இருப்பதால் எடுத்துக் கொள்ளப்பட்டது.

பொ. கு:

இச்செந்தூரத்தை உள்ளங் கையில் சிறிது வைத்து உமிழ் நீரால் மசித்துத் திலகம் தீட்ட, பூதகணங்களுடன் காசி முதல் கன்னியாகுமரி வரை உள்ள அனைத்துக் காட்சிகளையும் காண இயலும் என்கிறார்.

இவ்வுலகத்தோர்கள் ஒன்றை அகற்றிவிட்டு ஒன்று என நூல் தோறும் கண்டு இன்னலுறுவர். நீ இந்த நூல் கண்டு அனைத்து விபரங்களையும் தெளிந்துணர்ந்து போற்றுவாயாக என உரைக்கிறார்.

அடுத்து, பூசைவிதி பற்றிப் புகலுகிறேன் என்கிறார்.

பூசை விதி

153. கேளப்பா அட்டயித னீரெட் டாகும்
கிருபையுட(ன்) நடுமய மறையொன் றாகும்
ஆளப்பா கிரகத்தை யிதனிற் சேர்த்து
ஆகாச ரியம்பத்தை நடுவே சேர்த்து
கோளப்பா ரோகணியின் முன்னே ஞானக்
குன்றாகு மனோன்மணியைக் குடி இருத்தி
வாளப்பா மூன்றுவரை வாசல் நாலு
வாகாகச் சூலமதில் சூழப் போடே.

பொ. கு:

குறுக்காக எட்டு, நெடுக்காக எட்டு எனப் பதினாறு கோடிட, நடுமையம் அறை ஒன்று அமையும். கிரகத்தையும், ரிசப ராசியையும் அதில் சேர்த்து, ரோகணி நட்சத்திரத்தின் முன்னே ஞானக் குன்றாகிய வாலை தேவி எனும் மனோன்மணியினைக் குடி வைத்து, மூன்று கட்டம் வரை நாலு வாசல் செய்து அவற்றைச் சூழத் திரிசூலத்தை வரைய வேண்டும் என்கிறார்.

154. சூழ்ந்திருந்த வாசலிலே தேவதைகள் சொல்வோம்
துடியாகக் கீழ்வாசல் துவார பாலர்
வாழ்ந்திருக்கும் ஈசானன் வடுகன் வீரன்
வாகான தென்புறத்தில் தெட்சணா மூர்த்தி
ஆழ்ந்திருக்குங் குடதிசையி லைங்கரனுங் குகனும்
அட்டசத்தி அட்டகெசம் அட்ட பாலர்
தாழ்ந்திருக்கும் வடபுறத்தில் கணங்கள் காளி
சம்மார நாதாக்கள் முனியை நாட்டே.

பொ. சு:

சூழ்ந்த நான்கு வாசல்களிலும் அமர்த்தக்கூடிய தெய்வங்கள் பற்றி இனிக் கூறுகிறேன் என்கிறார்.

கிழக்கு வாசலில் துவாரபாலர், ஈசான மூலையில் (வட கிழக்கு) வடுகன் வீரன், தென்புறத்தில் தட்சணாமூர்த்தி, மேற்கு வாயிலில் விநாயகன், முருகன், அட்ட மாதர் அமைத்து, திக்கு யானைகள், திக்குப் பாலகரும் நிறுத்தி, வடபுறத்தில் கணங்கள் சூழக் காளியையும் அமைத்து, சம்ஹார தெய்வங்கள் முனீஸ்வரனையும் நாட்ட வேண்டும் என இயம்புகிறார்.

சொ. வி:

அட்ட சத்தி – அட்ட மாதர் என்றும் அழைக்கப் பெறுவர்.

1. யோகேஸ்வரி - காமம்.
2. மாகேஸ்வரி - குரோதம்.
3. வைஷ்ணவி - உலோபம்.
4. பிராமணி - மடம்.
5. கௌமாரி - மோகம்.
6. இந்திராணி - மாச்சரியம்.
7. சாமுண்டா - பைசாசம்.
8. வராகி - அசூயை.

ஆகிய குணங்களின் வடிவங்களாகும். இதில் யோகேஸ்வரியை[114] நீக்கி 'சப்தமாதர்' (ஏழு பெண்கள்) என்றும் அழைப்பதுண்டு.


அட்டபாலர் – இந்திரன், அக்கினி, எமன், நிருதி, வருணன், வாயு, குபேரன், ஈசானன் ஆகியோராவார்.

சம்மார நாதாக்கள் – அழிக்கும் தெய்வங்கள் என்பதாம். அழிக்கும் கடவுளான சிவனுடைய பல அவதார நிலைமையாகும். கங்காள மூர்த்தி, கஜாசுர சம்ஹார மூர்த்தி, திரிபுராந்தக மூர்த்தி, சரபேச மூர்த்தி, காலாரி மூர்த்தி, பிரம்ம சிரச்சேத மூர்த்தி, காமாந்தக மூர்த்தி, அந்தகாசுரவத மூர்த்தி ஆகியவையாகும்.

153ஆம் பாடலிலிருந்து இப்பாடல் வரை கூறிய தெய்வங்களை அமைக்கும் 'பூசைவிதி' கீழ்க்காணும் வரைபடத்தில் உள்ளது போல அமையக் கூடும். இன்றைய தமிழகக் கோயில்களில் தெய்வங்களை அமைத்துள்ள முறையோடு இவை ஒத்துப் போவதைத் தெளிவாகக் காண முடிகின்றது.

---

114. R.S. GUPTA "Iconography of the Hindus Buddhists and Jains".



156. **பூசைசெய்து கர்ப்பூரத் தீப மாட்டி**
போக்கோடு தானகத்தில் நின்று கொண்டு
ஆசையெனு மட்சரங்க ளம்பத் தொன்றும்
அடவாக மனத்துள்ளே அபேட் சித்து
ஆசைசெய்யும் வஞ்சகரைச் சேர்த்தி டாமல்
மனமடங்கி நின்றவரை வரித்துக் கொண்டு
நேசமுட னர்ச்சித்து அமிர்தபான முண்டால்
நிச்சயமாந் தேவிவந்து தெரிசிப் பாளே.

பொ. சு:

பூசை செய்து, கற்பூரம் சுற்றித் தீபமேற்றி, நிற்க வேண்டிய இடத்தில் நின்று கொண்டு ஐம்பத்தோரு அட்சரமும் சொல்லி மனத்துள் நிறுத்தித் துதித்து, பேராசை பிடித்த வஞ்ச மனம் படைத்தோரைச் சேர்க்காமல், மனக்கட்டுப்பாடு உடைய பெரியோரை மனத்தில் நிறுத்தி அமிர்தபானம் உண்ண, தேவி தரிசனம் தருவாள் என உரைக்கிறார்.

தீட்சை

157. தெரிசித்தால் தன்னில்வந்து சேர்ப்பாள் சேர்ப்பாள்
சிறுபிள்ளை யாயிருந்த தேவி கண்டாய்
தெரிசித்தா லவளுக்குப் பத்து நாமம்
தீட்சையென்ன நாமத்துக் கொன்றே யாகும்
தெரிசித்தால் தீட்சைக்கு வயன மேது
தசதீட்சை பத்துக்கும் பத்து நாமம்
தெரிசித்தர் பாட்டெல்லா மவளுக்கே யாகும்
சித்தரெல்லாம் வெகுமுகமாய்ப் பாடி னாரே.

பொ. சு:

சிறுபிள்ளையாய் (பத்து வயது) இருக்கும் அத்தேவியைத் (வாலை) தரிசிக்க, அவளுள் அடக்கமாகலாம். அவளுக்குப் பத்துப் பெயர்கள் தீட்சை நாமங்களாகும். தீட்சைக்கு வசனம், வார்த்தைகள் இல்லை. ஆனால் தச தீட்சை பத்துக்கும் பத்து நாமம் கூறித் துதிப்பர். சித்தர் பாடல்கள் அனைத்தும் அவளைப் பற்றியனவே. அவளைத் துதித்துப் பாடுதலையே பெரும் கடமையாக எல்லாச் சித்தர்களும் கைக்கொண்டனர் என இயம்புகிறார்.

சொ. வி:

பத்துநாமம் – *பஞ்சாட்சரத்தை சிவாயநம, வாயசிநம என மாற்றி மாற்றிக் கூறல் போல் புவனை, யாமளை, வாலை, (3 எழுத்து) திரிபுரை (5 எழுத்து) ஆகிய இது போன்ற நாமங்களை மாற்றி மாற்றி இயம்புவதாம்.*

தசதீட்சை – *சில பற்பங்கள் செய்யும் பொழுது தசதீட்சைக்கு அவற்றை உட்படுத்துவர். அப்பொழுது ஒவ்வொரு தீட்சையின் போதும் ஒவ்வொரு நாமம் கூறித் துதிப்பர் என்பதாம். அமுரி உப்பு தயாரிக்கத் தசதீட்சை பயன்படுத்தப்படும் முறையைப் பதார்த்த குண விளக்கம் (பக்கம் 11 முதல் 13) விவரிக்கிறது.*

தெரிசித்தர் . . . பாடினாரே – *வாலையைப் பற்றி மட்டும் பாடும் தனி ஏடுகளும் உண்டு. 9057 வாலை பூசை, 3274 பி. வாலை விருத்தம், 6156. வாலைப்பாட்டு, 8895 சி. வாலைப்பாட்டு - கேரளப் பல்கலைக்கழகச் சுவடிகள் நூலகம்.*

158. பாடினே னிந்தமுறை பார்த்தோ ரெல்லாம்
பாசத்தில் வீழார்கள் தாழார்க ளென்றும்

தேடினேன் நிற்குணத்தை யறிவால் கண்டேன்
சிவனங்கே கொலுவிருந்த திறமுங் கண்டேன்
ஆடினேன் மூன்றெழுத்தைப் பிடித்துக் கொண்டேன்
அப்பனே பானத்தால் தாயைக் கண்டேன்
கூடினேன் பானத்தால் மேலே போனேன்
குருடரையோ அறியாமல் கெடுத்திட் டாரே.

பொ. சு:

பாடிய இந்த முறையைப் பார்த்தவர்களெல்லாம் பாசத்தில் விழமாட்டார்கள். அதனால் தன் நிலையினின்று என்றும் தாழ்ந்தும் போக மாட்டார்கள். உன்னுடைய (வாலை தேவி) குணங்களை அறிவால் தேடி அறிந்து கொண்டேன். சிவபிரான் அங்குக் கொலுவிருந்த திறத்தையும் கண்டுணர்ந்தேன். அ+உ+ம=ஓம் எனும் பிரணவ மந்திரமாகிய ('அ' எனும் அமுரி; 'உ' எனும் உப்பு; 'ம' எனும் இரண்டும் சேர்ந்த பொருள் என்றும் கொள்ளலாம்) அந்த மூன்றெழுத்தைப் பிடித்துக் கொண்டு ஆனந்தக் கூத்தாடினேன். அமிர்த பானத்தால் தாய் மனோன்மணியை அறிந்தேன். அப்பானத்தால் மேலே உயர்ந்தும் சென்றேன். இந்த முறைகளை எல்லாம் தெளிவாக அறிந்து உணர்த்தாததால் குருடரை (ஞானக் கண் இல்லாதவர்) வீணாகக் கெடுத்து விட்டனரே என வருந்துகிறார்.

159. கெடுத்தார்கள் மாய்கைதனை முன்னே விட்டுக்
கிரிகைசே ரண்டங்கள் பதினாறுஞ் செய்து
அடுத்ததொரு ஆணவத்தால் சையோகஞ் செய்து
ஆருக்குஞ் சொரூபியென்ற பேரு முண்டாய்
மடுத்ததொரு காமியத்தால் மறந்து தன்னை
மாண்டார்கள் உலகத்தில் வாமி எல்லாம்
படுத்தென்ன பூரணத்துக் கென்று(ம்) நாதர்
பாழப்பா முத்திசித்தி பாழ்காண் பாரே.

பொ. சு:

மும்மலங்களில் ஒன்றாகிய மாயையை முன் வைத்து அண்டங்கள் (சூத அண்டபற்பம், மூதண்டக்கியாழம் போன்றவை) பதினாறும் செய்ததால் வீணாகிக் கெட்டார்கள்.

ஆணவத்தோடு மோக வசப்பட்டதாலும், பிரதி பயன் எதிர் பார்த்துக் காரியங்கள் செய்ததாலும், இவ்வுலகில் நிலைத்து நிற்க இயலாது மாண்டார்கள். ஆணவம், கன்மம், மாயை எனும் மும்மலம்

நீக்கிய பூரணரே பாழ்வெளியின் பரம இரகசியத்தை அறிய இயலும் எனத் தீர்க்கமாக உரைக்கிறார்.

சொ. வி:

சையோகம் - புணர்ச்சி. இன்பம் கருதியல்லாது என்னால் ஆகாதது எது என்ற ஆணவத்தோடு அதி புணர்ச்சியில் ஈடுபடலால் மேகரோகம் முதலிய நோய்களுக்காட்பட்டு மடிவர் என்பதாம்.

காமியத்தால் - பயனை விரும்பிச் செய்யும் கிரியை.

வாமி - வாமாசாரத்தின்படி நடப்பவன்.

160. முத்தியாம் வாமத்திற் கூடி னோர்க்கு
மூவேழு தலைமுறையும் மோட்ச மெய்தும்
பத்தியா மித்தையல்லோ பிரணாய(ாம) மென்று
பாடினார் நாதாக்கள் பரப்பில் மைந்தா
எத்தினா ரறியாதார் நரகில் வீழ்வார்
இந்தவித மறிந்தவர்கள் பரத்தி லாழ்வார்
தொத்தினார் பாழதனைத் தொட்டோ ரில்லை
தொத்தினவர் சிவயோகிப் பூசை யாமே.

பொ. சு:

முத்தி என்ற வாமத்தில் கூடினோர்களின் மூவேழு தலைமுறையும் மோட்சமெய்தும் பக்தியாகிய இதனையே பிரணாயாமமென்று[115] நாதாக்கள் பாடிச் சென்றனர். இதனையே அறியாதவர்கள் நரகில் வீழ்வார்கள். அறிந்தவர்களோ இறைவனோடு ஒன்றிக் கலப்பார்கள். இலேசாகப் பற்றியவர் (ஒரளவு உண்மைகளை அறிந்தவர்) பாழ் வெளியினைத் தொட்டதில்லை. அவ்வாறு ஒரளவு உண்மைகளை அறிந்து பாழ் வெளியின் இரகசியத்தை உணர்ந்தவரும் யார் என்றால் சிவயோகிப் பூசை செய்தவரே என்கிறார்.

---

115. Pranayamam is the science of breathing. This is the first physical act of all human beings born in this world. The practice of right way of breathing in siddhars science of longevity is known as practice of 'Vasi' vasi in Tamil means breathing. If you repeat the word 'vasi' several times, it will resound as Siva Siva. If its secret as revealed by guru (spiritual Master) could be realaised and acquired by the habit of correct breathing. One will soon find in himself a change for better health and the happiness free from diseases.

- A. V. Subramanian, 'The poetry and the philosophy of Tamil Siddhars.'

சொ. வி:

வாமம் – புறச் சமயம் ஆறனுள் அனைத்துலகும் சக்தியின் பரிணாமம் என்றும், சக்தியுடன் இலயித்தலே முக்தி என்றும் கூறும் மதம்.

161. சிவயோகிச் சித்தருக்கா மிந்த பூசை
செப்பரிய முனிவருக்கு மிந்த பூசை
தவயோக மறிந்தோர்க்கா மிந்த பூசை
சார்வான சைவருக்கா மிந்த பூசை
புவலோக ஞானிகட்கா மிந்த பூசை
பொறையுடைய வேதியர்க்கா மிந்த பூசை
நவலோகந் திறந்தோர்க்கா மிந்த பூசை
நாதாக்கள் பத்தர்செய்யும் பூசை தானே.

பொ. சு:

இப்பூசை முறைகள் யார் யார்க்கு உரியவை என விளக்குகிறார்.

சிவயோகச் சித்தர், முனிவர், தவயோகியர், சைவர், பூலோக ஞானிகள், வேதியர் (ஒன்பது உலோகத்தையும் தன் விருப்பப்படி வேதித்தவர்), நாதாக்கள், பக்தர் ஆகியோர் செய்யும் பூசையாகும் என இயம்புகிறார்.

162. பூசைசெய்து பானத்தைப் பொசித்தோர்க் கெல்லாம்
பொன்றாது தத்துவந்தான் எந்த நாளும்
ஆசையெனு மாமாய்கை அகலப் போகும்
அட்டமா சித்தியெல்லாம் அடிக்குள் தோற்றும்
பாசையென்ற பதினெட்டுந் துலங்கிப் போகும்
பராபரையும் பரனுமங்கே பட்ச மாகும்
மூசைவைத்த மருந்தெல்லாஞ் சித்தி யாகும்
மூச்சடங்கும் பேச்சடங்கும் முத்த னாமே.

பொ. சு:

பூசை செய்து அமிர்த பானத்தைச் சுவைத்தவர்களது அதிகாரம் இவ்வுலகில் எந்நாளும் சாவது இல்லை என்றும், ஆசை எனும் மிகப் பெரிய மாயை அகன்று போய் விடும் என்றும், எட்டு வகைச் சித்தியும் அவர் பாதத்தில் பணிந்து நிற்கும் என்றும், பதினெட்டு வகை மொழியும் (இந்தியாவின் பதினெட்டு மாநில மொழிகள்)

அன்னாருக்கு நன்கு விளங்கும் என்றும், (பரிசுத்த ஆவி பெற்றோர் முன்பு பேசியதாக விவிலியம் கூறும் கருத்து ஒப்புநோக்கத் தக்கது) பரையும், பரனும் எப்போதும் அவர் பக்கத்தில் இருப்பர் என்றும், உருக்குக் கலத்தில் இட்ட எம்மருந்தும் அவர் நினைத்தவாறு ஆகும் என்றும், மூச்சுப் பேச்சு அடங்கிச் சமாதி நிலை அடைந்து முத்தராவர் என்றும் தெளிவுபடுத்துகிறார்.

போகர் கல் சிலையை அழைத்து வந்தது

163. முத்தி தரும் போகருக்குக் கன்னி தேடி
மூவுலகு மாராய்ந்து கண்டி டாமல்
வைத்தார்காண் கொங்கணரை நோக்கிப் பார்த்து
மருவியென்ன வாடித் தம்மில் தம்மில்
பத்தாகும் வெகுகோடி நாடு பார்த்து
பாவையரைக் காணாம லிளைத்தேனென் றெண்ணிக்
கொத்தாக மண்டபத்தில் சிலைதா னொன்று
கூறாகக் கண்டதனை யழையென் றாரே.

பொ. சு:

முக்தி தரும் போகர் என்ற சித்தர் தக்க ஒரு கன்னியை மூவுலகும் தேடிக் காணாது தவித்து, இறுதியில் கொங்கணரைப் பார்த்து இப்பணியைத் தர, அவரும் பத்துக் கோடித் தேசமும் தேடி அலைந்து இறுதியில் ஒரு மண்டபத்தில் அழகிய கற்சிலை ஒன்று கண்டு அதனை அழை எனத் தம்மிடம் கூறினார் என்கிறார்.

இந்நூலாசிரியரான கருவூரார் தன் காலத்தில் நடைபெற்ற ஒரு வரலாற்று நிகழ்ச்சியைத் தன்னுடைய இந்நூலில் நினைவு கூர்கிறார்.

சொ. வி:

போகர் – இவர் பதினெண் சித்தருள் ஒருவர். 'சீன தேசக் குயவர் என்றும், பழனியில் சமாதி அடைந்தார்'[116] என்றும் தெரிய வருகிறது. போக உணர்வு மிகப் பெற்றிருந்தமையின் போகர் என அழைக்கப்பட்டார் என்றும் அறிகிறோம். இவருடைய சிற்பம் இன்றும் தஞ்சைச் சிவன் கோயிலில் காணக்கிடைக்கிறது.

கொங்கணர் – கொங்கணர். கொங்கணையர், கொங்கர் என்றும் குறிக்கப்படுகிறார். 'இவர் கன்னட இடையர் என்றும், திருப்பதி முக்தி பெற்ற இடம்'[117] என்றும் கூறுவர்.

116, 117. சித்தர் பாடல்கள், பதிப்பாசிரியர் அரு. இராமநாதன்.

164. அழையென்று அண்ணர் சொல்லப் பரிசித்தாரோ
அய்யரே அழைக்கிறேன் வாரு மென்று
குழைவொன்று மின்றியே வாவா வென்றேன்
கூர்ந்துவரக் குருமுன்னே விட்டோ மப்பா
விழைவென்ற மோகத்தால் போக நாயன்
மெல்லிழையிற் றோய்ந்தின்பந் துய்த்த போது
விழைவின்றி வயனமின்றி இருக்க அந்த
மார்க்கமென்ன மார்க்கமிது கண்டி லேனே.

பொ. சு:

'கற்சிலையை அழை' என்று கொங்கணர் சொன்னவுடன், நம்மைப் பரீட்சித்துப் பார்க்கிறாரோ என எண்ணிய நான், 'அய்யரே! வாருங்கள். அழைக்கிறேன்' என்று இயம்பி 'வாவா' என்று அழைத்தேன். அது வர, கொண்டு போய் போகநாயர் முன்பு விட்டோம். 'மிகு விருப்பம் எனும் மோகம் மூண்ட போகர், அம்மெல்லிழையாளுடன் இன்பம் துய்த்தபொழுது, எதிர் விருப்பமோ, வாய்ச் சொல்லோ எதுவும் இல்லாதிருக்கக் கண்டு 'இது வந்த வழி என்ன? தெரிவில்லையே ' என வியந்து நின்றார் என்கிறார்.

165. கண்டிலே னென்றவுடன் பதத்தில் வீழ்ந்து
காரிகையை உலகனைத்துந் தேறிப் பார்த்து
மண்டபத்தில் கால்சடைத்து வந்து நின்றோம்
மயங்கிநின்ற நிலைதன்னைக் கொங்கர் பார்த்து
அண்டர்புக ழிச்சிலைதா னழகு மெத்த
அழைத்துப்போ யையர் முன்னே விடுவோமென்றார்
வண்டலரும் பூங்கூந்தல் சிலையை யம்மை
வாவென்றே னேபிறகே வந்த வாறே.

பொ. சு:

'என்ன விபரம் என்று தெரியவில்லையே' எனப் போகர் இயம்பி நின்ற பொழுது, நாங்கள் அவரது பாதத்தில் வீழ்ந்து வணங்கி, காரிகையை உலகனைத்தும் தேர்ந்து பார்த்துக் கால் கடுத்ததால் ஒரு மண்டபத்தில் வந்து நின்றோம். அங்கிருந்த ஒரு சிலை மிக அழகாக இருக்கக் கண்டு, 'இதனை அழைத்துப்போய் நம் குரு முன்னே விடுவோம்' என்றுரைக்க, நானும் வண்டலரும் பூங்கூந்தல் சிலையை வா' என, 'எம் பிறகே அது வந்தது' என விபரம் தெரிவித்தாகக் கூறுகிறார்.

166. வந்ததென்று சொல்லியே பதத்தில் வீழ்ந்து
மதிமயக்க மெங்களுக்கு மெத்த வாச்சு
எந்தனுடைய குருநாதர் நாங்கள் செய்த
இடும்பு மெத்தப் பொறுத்தருளு மெந்தைகோவே
அந்தமுள்ள கல்சிலையைப் பெண்ணென் றிங்கே
அழைத்துவந்தீ ருங்கள்திறம் ஆருக் குண்டாம்
இந்தவகைச் சித்தருக்கு சமர்த்தோ கொஞ்சம்
என்மக்காள் சாபத்தா லதீத மாச்சே.

பொ. சு:

விவரம் அனைத்தையும் தெரிவித்து 'எமது குருவே! நாங்கள் செய்த இத்தீய காரியத்தைப் பொறுத்தருளும்' எனப் பாதத்தில் வீழ, 'கற்சிலையைப் பெண் என்று அழைத்து வந்தீர்கள். இந்தத் திறமை யாருக்கு உண்டு. இந்த வகையில் சித்தருக்கு உள்ள சாமர்த்தியம் கொஞ்சமோ? என் மக்களே! சாபத்தால் எல்லாம் அதீதமாயிற்று' (இயலாததாக ஆயிற்று) எனத் தெரிவித்தார் என்கிறார்.

இப்பாடல்கள் மூலம் (163 முதல் 166 வரை) போகர், கொங்கணர், கருவூரார் ஆகிய மூவரும் ஒரே காலத்தைச் சேர்ந்தவர்கள் என்பதும், போகர் மற்ற இவ்விருவருக்கும் குருவாகத் திகழ்ந்தார் என்பதும் தெரிய வருகின்றது.

அறுபத்து நான்கு சித்துகளில் ஒன்றாகக் 'கல்லுக்கு உயிரூட்டல்' அமையும். சிவபிரான் கல்லானைக்குக் கரும்பு அருத்திய திருவிளையாடற் செய்தி இவ்விடத்தில் நினைவு கூரத் தக்கதாக உள்ளது.

167. அதீதமுநீ ரென்று சொல்லி முத்திட்டு
அம்மம்மா மூலவர்க்கத் தசடு முண்டோ
அதீதமென்ற சிலம்பொலியைக் கண்டோ ருண்டோ
ஆச்சரியங் கொங்கணரும் நீரு மல்லால்
அதீதமுறுங் கயிலாசச் சித்த ருள்ளே
ஆதிகுரு வெந்தனுக்குக் காலாங்கி நாயன்
அதீதமாய்த் துரியத்தி லிருந்து கொண்டு
ஆடினா ரங்கேநீர் சேரென் றாரே.

பொ. சு:

'நீர் செய்த காரியம் செயற்கரியதே' என்று சொல்லி முத்தமிட்டு, 'மூலவர்க்கத்து அடியாருள்ளே மூடர்களும் உண்டோ' எனக் கூறி,

கொங்கணரும், நீரும் அல்லால் அதீதமாகிய சிலம்பொலியைக் கண்டவர் பிறர் உண்டோ' என வியந்து, 'கயிலாசச் சித்தர்களுக்குள்ளே ஆதி குருவாக எனக்குத் திகழ்ந்தவர் காலாங்கி நாயன் ஆவார். துரியத்தில் உள்ள அவரைச் சென்று சேர்வீராக' என உரைத்ததாகத் தெரிவிக்கிறார்.

இப்பாடல் மூலம் போகரது குருவாகத் திகழ்ந்தவர் காலாங்கி நாயன் என அறிகிறோம்.

ஆக, திருமூலர் வழி வந்த மூலவர்க்கத்தடியாருள், காலாங்கி நாயன் > போகர் > கொங்கணர் > கருவூரார் எனச் சித்தர் பரம்பரை அமைவதைத் தெரிந்து கொள்கிறோம்.

தமது குருவாக இருந்தவரைச் சென்று கண்டு ஆசி பெறுமாறு தம் சீடர்களை அனுப்பிய போகரின் குருபக்தியும் இப்பாடலில் தெளிவாகிறது.

சொ. வி:

காலாங்கி நாயன் – சீனதேசத்து ஆசாரி என்றும், காஞ்சியில் முக்தி பெற்றார் என்றும் தெரிகிறது.

துரியம் – ஆன்மா உந்திப் பிரதேசத்தில் பிராணனோடு இலயித்து நிற்க, தன்னையே விஷயீகரிக்கும் ஆன்மநிலை.

168. **சேரென்று சொன்னவுடன் செணத்தி லேகிச்**
சிலம்பலரு மண்டபத்திற் சென்றோஞ் சென்றோம்
ஆரென்று காலாங்கி நாயன் கேட்க
அடிபணிந்து மூலவர்க்கத் தடியா ரென்றோம்
காரசிந்துப் பூவுலகில் சித்த ருள்ளே
கண்டிலோ முங்களிட தீட்ச ணீகம்
சீரென்ற முனிவரோடு ரிஷிகள் கோடி
சிவஞானத் தவசிருந்தோ ரருள்கா ணாரே.

பொ. கு:

போக நாயன் எம்மிருவரையும் பார்த்து, 'அவரைச் சென்று காண்பீராக' என்று கூறியவுடன், ஒரு கணத்தில் சிலம்பலரும் மண்டபம் சென்றடைந்தோம். 'யார்?' என்று காலாங்கி நாயன் கேட்க, அவரது பாதங்களைப் பணிந்து, 'நாங்கள் மூலவர்க்கத்து அடியார்கள்' என' உரைத்தோம். உடன் காலாங்கி நாயன் 'இப்பூவுலகில் உள்ள சித்தர்களுக்குள்ளே உங்களுடைய தீட்சணீகம் போல் உள்ள ஒருவரைக்

கண்டதில்லை. கோடிக்கணக்கான முனிவர்களும், ரிஷிகளும் சிவஞானத் தவம் இருந்தனர். அவர்கள் அனைவருக்கும் அருள் கிட்டியதோ?' என உரைத்ததாக இயம்புகிறார்.

கோடி ரிஷிகள், முனிவர்களுக்குக் கிட்டாத அருள் உமக்குக் கிட்டியது' எனக் கூறிக் கொங்கணர், கருவூராரைக் காலாங்கிநாயன் ஆசீர்வதித்ததாக இப்பாடல் மூலம் அறிகிறோம்.

சொ. வி:

தீட்சணீகம் – தீட்சைகளில் மேம்பட்ட தன்மை. நயன, ஸ்பரிச, மானச, வாசக, சாத்திர, யோக, ஔந்திரி தீட்சைகள் என்ற எழுவகை சைவ சமயச் சடங்குகளில் மேம்பட்டிருத்தலாகும்.

தீட்சணீகம் என்பதனைத் தீட்சண்யம் எனக் கொண்டு 'கூர்ந்த அறிவு' என்றும் பொருள் கொள்ள இடமுள்ளது.

169. அருளாலே போற்றியிவை பிடித்துக் கொண்டு
அப்பனே பொருள்காண வேணும் வேணும்
அருளாலே நின்றதை மனத்தில் வைத்து
ஆசையென்ற மாயையெல்லாம் பிடித்துத் தள்ளி
அருளாலே திரோபவத்தை வேறுகூ றாக்கி
ஆகாத சமயமெல்லாம் விகற்பம் பண்ணி
அருளாலே தத்துவத்தைச் சங்கற்பம் செய்து
அழியாமல் வாழ்ந்திருப்பார் அறிவுள் ளோரே.

பொ. சு:

கருணை என்ற ஒன்றினாலேயே அனைத்தையும் போற்றிப் படித்துக் கொண்டு பொருள் காண வேண்டும் என்றும், அருள் தொடர்பான செய்திகளையே மனத்தில் வைத்து, ஆசை என்ற மாயையை எல்லாம் உள்ளத்தினின்று அகற்றிவிட வேண்டும் என்று அருள் நோக்கத்தோடு திரோபவத்தைக் கூறு செய்து, ஆகாத சமயங்களை வேறாக்கி விட வேண்டும் என்றும், அருளுடன் தத்துவத்தை மனத்தில் உறுதி செய்து அறிவுள்ளவர்கள் அழியாமல் வாழ்ந்திருப்பர் என்றும் எடுத்துரைக்கிறார்.

கருணை என்பது தவிர, வேறு எந்த நோக்கமும் இல்லாது செயல்படுபவரே அறிவுள்ளவர்கள்; அன்னாரே நிலைத்து நிற்க இயலும் என்ற கருத்து இப்பாடலில் வலியுறுத்தப்படுகின்றது.

சொ. வி:

திரோபவம் – பஞ்ச கிருத்தியங்களுளொன்றாய், ஆன்மா தன் கன்மம் முடியும் வரையில், உலகானுபவங்களில் உழன்று மயங்கும்படி உண்மையை மறைத்தலைச் செய்யும் சிவபெருமானது அருட்செயல்.

லிங்கக் கட்டு

170. அறிவாக லிங்கத்தின் கட்டுச் சொல்வோம்
அலையாம லொருசொல்லாய் வேதை மார்க்கம்
நெறியுள்ள கட்டியொன்று குப்பி வைப்பு
நினைவாகத் தூக்கியே சட்டிக் குள்ளே
குறியுள்ள கல்சுண்ணந் தூளா யாட்டிக்
குறையவதிற் கால்வாசி யிட்டுப் பின்னும்
பறியுள்ள லிங்கத்தைக் கிழியாய்க் கட்டி
பாய்ச்சந்தச் சட்டிக்குள் பொடிமே லூட்டே.

பொ. சு:

இப்பாடலில் லிங்கக் கட்டு பற்றி விளக்குகிறார்.

ஒரு குப்பியினுள் லிங்கக் கட்டியினை இட வேண்டும். ஒரு சட்டியில் கல்சுண்ணத்தைப் பொடித்துப் போட்டு, சட்டியில் கால் பாகம் வரை நிரப்ப வேண்டும். பின் அதனுள் லிங்கக் கட்டி வைத்த குப்பியைக் கிழியாகக் கட்டிப் பொதிய வைத்து, மேலே மேலும் கல்சுண்ணப் பொடியிட்டு நிரப்ப வேண்டும் என்கிறார்.

171. ஊட்டியதோர் சாராயம் நிரம்ப விட்டு
உத்தமனே கமலாக்கினி யாகவூட்டு
நாட்டியே வற்றியபின் னெடுத்துப் பாரு
நவமணிபோற் கட்டியது சிவந்து காணும்
சாட்டியே தாளகத்தின் மெழுகு கொண்டு
சாத்தடா அப்பிரகத் தகட்டால் நீயும்
மூட்டடா முன்சொன்ன முறையைப் போலே
முந்திமுந்தி மாத்தெட்டா மிதனைப் பாரே.

பொ. சு:

கல்சுண்ணப் பொடி இட்ட அச்சட்டிக்குள் பின்னும் சாராயம் நிறைய விட்டுக் கமலாக்கினியாக எரிக்க வேண்டும் என்கிறார்.

சாராயம் வற்றிய பின் குப்பிக்குள் உள்ள லிங்கக் கட்டியை எடுத்துப் பார்க்கச் சிவப்பாக நவரத்தினம் போன்று காணப்படும். தாளக மெழுகு பூசிய அப்பிரகத் தகட்டுக்கு இதனைக் கொடுத்துப் பார்க்க எட்டு மாற்றுக் காணும் என இயம்புகிறார்.

172. **பாரென்ற சவ்வீர வைப்புக் கேளு**
பாங்கான கண்டருமோ கழஞ்சி பத்து
நீரென்ற சாரமப்பா இருப தாகும்
நிர்மலமாஞ் சூதமங்கே நாற்ப தாகும்
காரென்ற கல்லுப்பு நாற்ப தாகும்
கட்டான சவுட்டுப்பு நாற்ப தாகும்
[சீரென்ற] சீனமடா பத்துப் பத்து
சேரவே பொடியாக்கிக் குப்பிக் கேத்தே.

பொ. சு:

மயில்துத்தம் பத்து கழஞ்சு, நவசாரம் இருபது கழஞ்சு, சூதம், கல்லுப்பு, சவுட்டுப்பு ஆகிய ஒவ்வொன்றும் நாற்பது கழஞ்சு, படிகாரம் எனும் சீனக்காரம் (Alumen) பத்து கழஞ்சு என்ற வகையில் எடுத்துக்கொண்டு அனைத்தையும் பொடி செய்து குப்பியில் அடைக்க வேண்டும்.

173. **ஏத்தியே மந்தீதான் சாம மொன்று**
எரித்துநீ யாமளை யின்ப மாகப்
போத்தியே மதுவோடே வாம மாகப்
பூசித்துக் குப்பிதனை இறக்கி வைத்து
ஆத்தியே உடைத்தப்பா வயிரம் போல
அப்பனே பளபளக்கு மெடுத்துக் கொண்டு
சாத்தியே நுரைக்கெல்லா மிதனை யூட்டிச்
சாதிப்பாய் சீனவைப்பின் மார்க்கங் கேளே.

பொ. சு:

முன்பாடலில் கூறிய மருந்துச் சரக்குகளை, மந்தாக்கினியாக ஒரு சாமம் எரிக்க வேண்டும்.

பின் யாமளையை மதுவுடன் முறைப்படி பூசை செய்து, குப்பியை இறக்கி, ஆறவிட்டு உடைத்துப் பார்க்க வயிரம் போன்று பளபளப்புடன் காணப்படும். இதனைச் சரக்கு நுரைகளுக்கு ஊட்டிச் சாலிக்க வேண்டும் எனச் செப்புகின்றார். அடுத்து, சீன வைப்பின் வழிமுறைகள் பற்றிக் கூறுகிறேன் என்கிறார்.

சொ. வி:

மந்தீ – மந்தாக்கினி. அதாவது 'வறட்டியைப் பிட்டுப் புடம் போல் அடுக்கித் தீயிட்டு வெந்து செந்தணலாக இருக்கும் தீயில் கவசம் செய்து வைத்துள்ள அகலை வைத்து ஆறியபின் எடுப்பதாகும். அல்லது அடுப்புக் கரியை நெருப்பாக்கிச் செந்தணலாக இருக்கும் சமயம் அதில் கவசம் செய்து வைத்துள்ள அகலை வைத்து ஆறியபின் எடுப்பதாகும்' (பதார்த்த குண விளக்கம், பக்கம். 297).

174. காணிந்த கலியுகத்தின் மகிமை சொல்வோம்
கற்றவரைத் தூஷணித்துத் தான்தா னென்று
பூணிந்த பெண்ணாசை வலையிற் சிக்கிப்
புலையர்முதல் மறையோரைப் புணர்ச்சி செய்து
வீணென்ற ஆணவத்தால் கள்ளை யுண்டு
மேல்வரம்பு கீழ்வரம்பு மிரண்டு மின்றி
நாணென்ற சொல்லத்துத் தெருக்க டோறும்
நாதாந்தப் பொருளெல்லாந் துறந்திட் டாரே.

பொ. கு:

கலியுகத்தின் தன்மைகள் பற்றி இப்பாடலில் விவரிக்கின்றார். சுற்றுணர்ந்த பெரியார்களை இகழ்ந்துரைத்து எதற்கும் 'தான் தான்' என்று முன்னிற்பர். பெண் மோகம் என்ற பெருவலையிற் சிக்கிக் கீழ்நிலையில் உள்ளவர் என மதிப்பிடப் பெறும் புலையர் முதலாக, மேலவர் எனக் கூறப்படும் மறையவர் ஈறாக உள்ளவரைப் புணர்ந்து, வீணான ஆணவத்தோடு கள் உண்டு, மேல்வரம்பு, கீழ்வரம்பு என்ற இரண்டிலும் அடங்காது, தீயவற்றுக்கும், பழி, பாவத்துக்கும் நாணுதல் என்ற சொல்லை விட்டு விட்டு, நாதாக்கள் செப்பிய மேலான பொருளை எல்லாம் துறந்து விட்டனர் எனக் கலியுக அதர்மங்களை விளக்குகின்றார்.

முன்பாடலில் 'சீன வைப்பின் மார்க்கங் காணே' என முடித்தவர் சீன வைப்புப் பற்றிக் கூறாது, 'கலியுக மகிமை' கழறுதல் காண்கிறோம். காலப்போக்கில் படி எடுப்பின் போது அவை குறித்த பாடல்கள் விடப்பட்டிருக்கக் கூடும்.

175. துறந்திட்டா ருலகரென்று சித்த ரெல்லாம்
தோற்றாம லுருமாற்றிக் கொண்டு போனார்
கரந்திட்டார் மதியமுர்தம் உண்ண .வேண்டிக்
கயிலையிலும் மலைதோறும் சமாதி சார்ந்தார்

இறந்திட்டார் லோகத்தைச் சேர்ந்தோ ரெல்லாம்
இறவாமல் வரை கோடி ஏறினார்கள்
பறந்திட்டா ரிதையறிந்து ஞானம் பார்த்துப்
பதிநில்லு அட்ட கர்மப் பாசை கேளே.

பொ. சு:

உலக மக்களின் இத்தகைய நிலைமைகள் கண்ட சித்தர்கள் அன்னார் கண்ணுக்குப் புலப்படாது உருவை மாற்றிக் கொண்டு (சூக்கும உடல் எடுத்து மறைதல்) இவ்வுலகில் நில்லாது சென்று விட்டார்கள். மதியமிர்தம் உண்பதற்காகக் கயிலையையும், அது போன்ற பிற மலைகளையும் சென்றடைந்தார்கள். (இப்பொல்லா உலகத்தில் இருந்து கொண்டே அம்மேலான காரியத்தைச் செய்ய அன்னார் விரும்பினாரில்லை என்பதாம்) எனவே சித்தர்கள் கண்ட பயனைப் பயன்படுத்திக் கொள்ளத் தவறிய உலகத்தவர் அனைவரும் மாண்டு மடிந்து போயினர். சித்தர்களோ இறவாமல் கோடி மலைகள் ஏறிக்கடந்தார்கள்; பறந்தார்கள். இதனை எல்லாம் அறிந்து, அறிவுள்ளது எது எனத் தெளிந்து ஒரு நிலையாய் நிற்பாயாக. இனி 'எட்டுவகைச் செயல்களின் மொழி முறைகளைக் கூறுகிறேன் கேள்' என்கிறார்.

இப்பாடலில் 'அமிர்தம் உண்ட சித்தர்கள் யுகம் யுகமாய் வாழ இயலுமே! அப்படி ஆயின் ஏன் இன்றுவரை அவர்கள், அப்பூத உடலோடு நம் கண்முன் தோன்றவில்லை? என்ற இன்றைய விதண்டாவாதிகளின் கேள்விக்குச் சரியான பதில் அமைந்துள்ள முறையைப் பார்க்கிறோம்.

சொ. வி:

அட்ட கர்மப் பாசை – அட்டகர்மம் என்பது சித்தர்கள் செய்யும் எட்டுவகைச் செயல்களைக் குறிக்கும். அந்த எண்வகைச் செயல்களாவன: - வசியம், மோகனம், தம்பனம், உச்சாடனம், ஆகர்ஷணம், வித்துவேஷணம், பேதனம், மாரணம் ஆகியவைகளாகும். பூரண சித்தருக்கு இவை கை வரப்பெறும்.

அட்ட கர்மம்

176. **கேளப்பா நமசிவாய மென்ற நாட்டங்**
கெட்டி கெட்டி தம்பனையாம் பலகை யாலாம்
நாளப்பா திசைகன்னி தாமரைக்காய் மாலை
நலமான ஆசனந்தான் புலித்தோ லாகும்

வேளப்பா சிவாயநம மோகனமே யாகும்
வெள்ளாவி குபேரதிசை மிளகு மாலை
சூளப்பா ஆசனந்தான் கலைத்தோ லாகும்
சொற்பெரிய சிவாயநம மாரணமு மாமே.

பொ. சு:

தம்பனத்துக்கு உரிய மந்திரம் நமசிவாயம். இருக்கும் பலகை ஆலமரத்தில் செய்யப்பட்டிருக்க வேண்டும். கன்னி (தென்மேற்கு) திசையிலிருந்து கொண்டு தாமரைக்காய் மாலை அணிந்து ஆசனத்தில் புலித்தோலிட்டு அமர்ந்து உச்சாடனம் செய்ய வேண்டும் என்பதாம்.

மோகனத்துக்கு மந்திரம் 'சிவாயநம' என்பதாம். திசை: குபேர திசை (வடக்கு), மாலை மிளகில் ஆயது. ஆசனம் மான் தோல் என்கிறார்.

அடுத்து மாரணத்துக்கு 'சிவாயநம' என்பது மந்திரம் என்கிறார். பிற விவரம் அடுத்த பாடலில் கூறுகிறார்.

177. ஆமப்பா பலகையது அத்தி யாகும்
அக்கினியாந் திசையாகும் நாவி மாலை
வேமப்பா ஆசனந்தான் மான்தோ லென்னும்
விள்ளரிது வயநமசி உச்சாடனமு மாகும்
போமப்பா பலாமரந்தான் வாயு மூலை
பொற்சீந்தி மணியடா வாசனந்தான் பற்பம்
நாமப்பா வென்றவுரு யநமசிவங் கேளு
நன்றான வசியமடா பலகை கேளே.

பொ. சு:

மாரணத்துக்கு இருக்கும் பலகை அத்தி. அக்கினி திசை. (தென்கிழக்கு) நாவி மாலை. (ஊமத்த மாலை) ஆசனம் கலைத் தோல் ஆகும். மாரணம் என்பது அஷ்ட கருமத்துள் ஒருவனை மந்திரத்தால் இறக்கச் செய்யும் வித்தையாகும்.

உச்சாடனத்துக்கு உருவேற்றும் மந்திரம் 'வயநமசி' ஆகும். பலகை பலாமரத்தால் செய்திருக்க வேண்டும். திசை வாயு மூலை. அதாவது வடமேற்கு. பொன் மணிகள் பதித்த ஆசனம்.

வசியத்துக்கு மந்திரம் யநமசிவ. பலகை போன்ற விபரங்களை அடுத்த பாடலில் தெரிவிக்கிறார்.

178. கேளடா கூவிளந்தான் கிழக்கே யாகும்
கெட்டி கெட்டி ருத்திராச்சப் புல்வாய்த் தோல்தான்
கேளடா நமசிவாயந் தன்னைச் சொல்வோம்
கிட்டவர வழைப்பதுதான் வெள்ளை நாவால்
கேளடா பளிங்குமணி திசையீ சானங்
கிருபையுள்ள மரவுரித்தோ லாசனமு மாகும்
கேளடா நமசிவாயம் பேதனமு மாகும்
கெடிதில்லை பலகைமணி எட்டி வித்தே.

பொ. சு:

பலகை வில்வ மரத்தில் செய்யப்பட்டிருத்தல் வேண்டும். திசை கிழக்கு, மாலை உருத்திராச்சம். ஆசனம் மான் தோல்.

இனி பேதனத்துக்கு உரியவை செப்புகிறார்.

பலகை பளிங்கால் ஆனது. ஈசான திசை (வடகிழக்கு). ஆசனம் மரவுரித்தோல். செபிக்கும் மந்திரம் நமசிவாய என்கிறார். பலகை மணியாக எட்டி வித்தினை அமைக்க வேண்டும் என்பதாம். இது வித்து வேசனத்துக்கு உரியது என்பது அடுத்த பாடலால் விளங்கும்.

179. வித்தான திசையப்பா தெச்சணமே யாகும்
வீற்றிருக்கு மாசனந்தான் கம்பிளியே யாகும்
பத்தாகுஞ் சிவாயநம வித்துவே சனமுமாகும்
பரிவான பாதிரிதான் பலகை யாகும்
சத்தான வருணதிசை சங்கு மாலை
சம்பங்கி வேங்கைத்தோ லாசனந்தான் மைந்தா
சித்தாக அஷ்டகற்ப மிப்படியே ஆடச்
சித்தான சித்தரெல்லாம் சுருக்காய்ப் பாரே.

பொ. சு:

வித்துவேசனத்துக்குத் திசை தெட்சணம் (தெற்கு). ஆசனம் கம்பிளி. உருவேற்றும் மந்திரம் சிவாயநம என்பதாகும். (வித்துவேசனம் என்பது நட்பாகியவிடத்து விரோதஞ் செய்விப்பதாகிய செயலாகும்.)

அடுத்து ஆகர்ஷணத்துக்கு உரியது கூறுகிறார்.

வருணதிசை (மேற்கு) சங்கு மாலை; சண்பக மரத்தாலான பலகை; வேங்கைத் தோலாசனம்.

இவ்வாறு சித்தர்கள் அஷ்டகற்பம் (இருத்தற்கு ஏற்படுத்தப் பட்ட இடம்) தெரிவித்துச் சென்றனர். கூர்ந்து பார்ப்பாயாக என்கிறார்.

அஷ்ட கர்மம் விளக்கும் அட்டவணை

176 முதல் 179 முடிய உள்ள இந்நான்கு பாடல்களிலும் விளக்கப்பட்டுள்ளள அஷ்ட கர்மத்தினைக் கீழ்க்கண்டவாறு அட்டவணைப்படுத்தலாம்.

எண்	கர்மம்	மந்திரம்	பலகை	திசை	மாலை	ஆசனம்
1.	தம்பனம்	நமசிவாய	ஆல்	கன்னி (தென் மேற்கு)	தாமரைக் காய் மாலை	புலித்தோல்
2.	மோகனம்	சிவாயநம	—	குபேரதிசை (வடக்கு)	வெள்ளாவி (மிளகு மாலை)	கலைத்தோல்
3.	மாரணம்	சிவாயநம	அத்தி	அக்கினிதிசை (தென் கிழக்கு)	நாவி மாலை (ஊமத்த மாலை)	கலைத்தோல்
4.	உச்சாடனம்	வயநமசி	பலா	வாயுமூலை (வட மேற்கு)	—	பொன்மணி ஆசனம்
5.	வசியம்	யநமசிவ	வில்வம்	கிழக்கு	ருத்திராட்ச மாலை	மான்தோல்
6.	பேதனம்	நமசிவாய	பளிங்கு	ஈசானம் (வட கிழக்கு)	—	மரவுரித்தோல்
7.	வித்துவேசனம்	சிவாயநம	எட்டி	தெச்சணம் (தெற்கு)	—	கம்பிளி
8.	ஆகர்ஷணம்	—	சண்பகம்	வருணதிசை (மேற்கு)	சங்குமாலை	வேங்கைத் தோல்

இப்பாடலில் 'ஆகர்ஷணம்' என்பது வெளிப்படையாகப் பெயர் சுட்டப்படவில்லை. ஆனால் (இயம்பும் மந்திரம் தவிர) அதற்குரிய அனைத்து முறைகளும் கூறப்பட்டுள்ளன.

176 முதல் 179 வரை உள்ள இந்த அட்டகர்ம முறைகளில் எந்தக் கர்மம் கருதி மந்திரத்தை உச்சரிக்கின்றோமோ அதற்கேற்ப, திசை, மாலை, ஆசனம், பலகை ஆகியவை வரையறுத்துக் கூறப்படுகின்றன.

சைவசமயச் சடங்கு முறைகள் மேலோங்கி நின்ற கால கட்டத்தை இவை புலப்படுத்துகின்றன. 'நமசிவாய' என்ற மந்திர உச்சரிப்பிலும் மாறுபாடுகள் இருந்திருக்க வேண்டும் சிவாயநம, வயநமசி என்ற இவற்றை எவ்வாறு வலித்து, மெலித்து, நீட்டி, குறுக்கி உச்சரிக்க வேண்டும் என்பதற்கும் சில முறைகள் பின்பற்றப் பட்டிருக்கக் கூடும். அவை ஆசான் மூலம் சீடர்களுக்கு நேரடியாகப் பயிற்றுவிக்கப் பட்டிருக்கலாம்.

திரும்ப திரும்ப உச்சரிக்கப்படும் ஒரு சொல் தனிச் சக்தி பெற்று, ஆழ்மனத்தில் பதிந்து, அதற்கான கிரியைகளை வெளி உலகில் அதிசயமான முறையில் நிறைவேற்றுகிறது என்பதை இன்றைய மனோதத்துவ நிபுணர்களும் ஒப்புக் கொள்கின்றனர்.

சித்தர்கள் சைவ சமயத்தவர். எனவே தமது மந்திர உச்சரிப்பாக 'நமசிவாய'[119] என்பதைக் கடைப்பிடித்து வந்தனர்.

180. **சுருக்காக யிருக்கவென்றால் கருவைக் கேளு**
தோலிலே சக்கரத்தை வரைந்து கொண்டு
மறுக்காத வசம்புள்ளி கடுகு காயம்
மகத்தான வெந்தயமுங் கருவா லாட்டிக்
குறுக்காத தோலிலே தடவி வாட்டக்
குப்பென்று தீப்பிடித்து வேகுங் கண்டாய்
தறுக்கவே ஈசன் வந்து தரிக்கினாலும்
சண்ணுமடா கர்மவினை சண்ணுந் தானே.

பொ. சு:

176 முதல் 179 வரை உள்ள பாடல்களில் அஷ்ட கர்மம்[120] செய்ய அமரும் முறை பற்றித் தெரிவித்தார். இப்பாடலில், அமர்ந்து மேற்கொண்டு செய்யும் முறை விளக்கப்படுகிறது.

---

119. ஹார்வர்டு பல்கலைக் கழக நிபுணர் பென்சன் 'ஓம்' என்பதற்குப் பதில் 'ஒன்' எனக் கூறி அதே பலனை அடைந்தார். டாக்டர் எம்.எஸ். உதயமூர்த்தி, 'மனமும் பிரார்த்தனையும்'.

120. அஷ்டகர்மம் பற்றித் தெரிவிக்கும் தனி ஏடுகளும் உண்டு. சான்று: 8866 எச். 'அட்ட கர்மம்'. தி.

ஒரு தோலில்? சக்கரம் வரைந்து வசம்பு, வெங்காயம், கடுகு, பெருங்காயம், வெந்தயம் ஆகியவற்றைக் கருவால் (நாத சரக்காகிய சூதமாக இருக்கக் கூடும்) ஆட்டி, அதனை அத்தோலில் தடவி நெருப்பில் இலேசாக வாட்டும்போது, 'குப்'பென்று தீப்பிடித்து அது வேகும். அப்போது ஈசன் வந்து தடுத்தாலும், கெடுத்தாலும் கர்மவினை நீங்கிப் போகும் என்கிறார்.

கோரக்கர் முதலி

181. தானென்ற கோரக்க மூலி தன்னைச்
சடைசடையாய்க் கொண்டுவந்து பாலில் போட்டு
வேனென்று பிழிந்ததனை நிறுத்துக் கொண்டு
வெல்லமதிற் பாதியங்கே பாகு செய்து
ஊனென்ற கசகசா கிராம்பு ஏலம்
உற்பனஞ்சேர் பத்திரியுஞ் சாதிக் காயும்
தேனென்ற உபதேச மன்ன பேதி
சீரொழுகு மதுரமுட னாவி னெய்யில்
சீனென்ற திவ்வளவு(ம்) நாலொன் றாகச்
சிவக்கவே வறுத்திதனைத் தூளா யாட்டே.

பொ. சு:

'கோரக்கர் மூலி' என்ற கஞ்சாவை இலை, தழையுடன் சடை சடையாய்ப் பறித்துக் கொண்டு வந்து, பால் விட்டுக் கசக்கிப் பிழிந்து ஓரளவைக்கு நிறுத்து எடுத்துக் கொள்ள வேண்டும். வெல்லம் அதில் பாதி அளவு எடுத்துப் பாகு செய்து கலந்து கொள்ள வேண்டும். கசகசா, கிராம்பு, (இலவங்கம்) ஏலம், சாதிபத்திரி, சாதிக்காய், அன்னபேதி (Ferri Sulphas), அதிமதுரம் ஆகிய வாசனைச் சரக்குகளில் நாலில் ஒரு பங்கு ஆவின் நெய் எடுத்து அதில் இச்சரக்குகளைச் சிவக்க வறுத்துத் தூளாய் ஆட்டிக் கொள்ள வேண்டும்.

சொ. வி:

கோரக்க மூலி - கோரக்கர் மூலியாகிய கஞ்சா என்ற போதைப் பொருள் எவ்வாறு சித்த மருத்துவத்துக்குப் பயன்படும் என்பதை அறிந்து செயல்படுத்தியவர் கோரக்கர். ஆதலால் கஞ்சா கோரக்கர் முதலி, கோரக்கர் மூலி என்றே அழைக்கப்படலாயிற்று.

182. ஆட்டியந்தப் பொடியெல்லாம் பாகில் தூவி
அகப்பை கொண்டு நன்றாகப் புரளக் கிண்டி

நீட்டியே மயனம்போ லிறக்கி வைத்து
நினைவாக பரணியிலே அடைத்து வைத்து
நாட்டியே தான்றியிடை தேனிற் கொள்ளு
நன்றாகப் பிரணாய முரைத்துப் போகும்
காட்டியே மறைக்குமப்பா திரோதாயி வெள்ளம்
கயையற்ற அஷ்டகர்ம மூலி காணே.

பொ. சு:

ஆட்டி வைத்த அந்தப் பொடி அனைத்தையும், முன் கலந்து வைத்த அப்பாகில் தூவி நன்கு கிண்டி, மயனம் போல் ஆனதும் இறக்கிச் சாடியில் அடைத்துத் தான்றிக் காய் அளவு எடுத்துத் தேனில் குழப்பி உண்ண, பிரணாயம் (பிரணாயாமம்) உரைத்துப் போகும் என்கிறார். இவ்வாறு உரைத்தவர் பின்னும், காட்டி மறைக்கும் திரோதாயி வெள்ளம் என்றும் இயம்புகிறார்.

அடுத்த அட்டகர்ம மூலி பற்றி உரைக்கிறார்.

183. காணவே வசியமுதல் மாரணமு மெட்டு
கலந்து நின்ற மூலிகையின் திறத்தைச் சொல்வோம்
பூணவே யொவ்வொன்று அட்ட மூலி
பொதுப்பேரை வெவ்வேறே பிரித்துக் கேளு
சோணவே சீதேவி செங்கழுநீர் வாங்கிச்
சொல்லுகிறேன் மந்திரத்தைச் சொல்லு றேனே.

பொ. சு:

வசியம் முதல் மாரணம் ஈறாக உள்ள எட்டு கர்மங்களுக்கும் உதவும் மூலிகையின் திறத்தைக் கூறுகிறேன். ஒவ்வொன்றுமே எட்டுக் கர்மத்துக்கு உதவும் மூலிகைகளே. இவை தனித் தனியாய்ப் பயன்படும் முறையை விளக்குகிறேன். சீதேவி எனப்படும் செங்கழுநீர் மூலி (நெய்ச்சட்டிக் கீரை) பற்றிய மந்திரத்தை இயம்புகிறேன் என்கிறார்.

வசியம்

184. மந்திரம் ஓம்ஹ்ரீம் லட்சுமி தேவியென்று
மாறாமல் குருகுருமுன் நினைவாய் நீயே
அந்தமாய்ச் சொல்லியே யாணி வேரை
அறாமல் பிடுங்கியதைத் தாமரையின் நூலால்

எந்திரமாய்த் திரியாக்கி வேருங் கூட்டி
இயல்பாகக் கபிலைநெய்யில் மையைக் கூட்டித்
தந்திரமாய்த் திலதமிட அரச ரெல்லாந்
தாட்சியன்றி வசீகரமா யிருக்குந் தானே.

பொ. சு:

செங்கழுநீர் மூலத்தைப் பறிக்கும் முன்னர் 'ஓம் ஹீம் லட்சுமி தேவி' (சீதேவிக் கொடி ஆனதால்) என்று அதன் முன் நின்று மந்திரம் செபித்து, அதன் ஆணிவேரை அறுத்துவிடாமல் பிடுங்கித் தாமரையின் நூலால் திரிசெய்து, இந்த வேரும் சேர்த்துக் கபிலை (குராற் பசு) நெய்யில் மையாகக் குழப்பித் திலகம் இட்டுக் கொண்டால் மன்னர்கள் உன் வசப்படுவர் என்கிறார்.

சொ. வி:

எந்திரமாய் - மந்திர எழுத்துகள் பொறித்த தகடுகளை இன்றும் எந்திரம் என அழைப்பர். தாமரையின் நூலால் எந்திரம் அமைக்குமாறு இங்குக் குறிப்பிடுகிறார்.

தந்திரமாய் - செய்ய வேண்டிய இன்னும் சில முறைகள் இவ்வார்த்தையில் அடங்கி இருக்கலாம் எனக் கொள்ள இடமுள்ளது.

185. வசீகரமா மதமத்தை மூலம் வாங்க[121]
மந்திரத்தைக் கேள்சொல்வோ(ம்) மைந்தா நீதான்
வசீகரஞ்சேர் கிறீணி வருணி யாரே
மதர்நாமீ சீவி வசியம் பவ்வே
வசீகரங்காண் சக்காயுப் பருவம் நோக்க
வந்துநிற்கும் பருவமதில் சமூலம் வாங்கி
வசீகரமா நிழலுலர்த்தித் தயிலம் வாங்கி
மைந்தனே குப்பியிலே அடைத்தி டாயே.

பொ. சு:

"கிறீணி வருணி யாரே மதர்நாமீ சீவி வசியம் பவ்வே" எனச் சொல்லி மந்திரம் செபித்து சக்காயுப் பருவத்தை? அடுத்து வரும் பருவத்தில் மதமத்தையைச் (பொன்னூமத்தை) சமூலமாய்ப் பறித்து நிழலில் உலர்த்தித் தயிலம் எடுத்துக் குப்பியிலே அடைத்து வைத்துக் கொள்ள வேண்டும் என உரைக்கிறார்.

---

121. 'வசீகரமா மத்தையிலம் வாங்க' என மூலத்தில் முச்சீருடன் இருந்தது 'தி' கண்டு இவ்வாறு திருத்திக் கொள்ளப்பட்டது.

186. அடைத்ததற்கு வகைகேளு பணந்தான் வாங்கி
அதிற்பாதி கர்ப்பூரம் போட்டுத் தேய்த்து
புடைபுடைத்து புருமத்தியி லேதிலதந் தீட்டு
பொதுவறவே நினைத்த பெண்கள் வந்துசேரும்
விடைத்தபுகழ் வெள்ளெருக்குச் சமூலம் வாங்க
வியனருக்க னுதையத்தில் கமல நூலால்
உடைத்திடுவாய் தேங்காயுங் காப்புக் கட்டி
உயர்விஞ்ஞை ஆங்கேங் கணபதியே ஆமே.[122]

பொ. சு:

அடைத்த அத்தயிலத்தில், பணவிடை அளவு எடுத்து, அதில் பாதி அளவு கர்ப்பூரம் போட்டுத் தேய்த்து, புருவ மத்தியில் திலதம் தீட்டப் பெண் வசியம் காணும் என்கிறார்.

இது என்ன வசியத்துக்கு என இயம்பவில்லை. பெண் வசியப் பாடலில் உரைத்தமையின் அதற்குரியதாகவே இதுவும் இருக்கலாம்.

187. ஆமப்பா கருஞ்செம்பை மூலந் தன்னில்
அப்பனே கன்னிநூல் தன்னால் கட்டி
ஓமப்பா சோடசங்கள் செய்த பின்னை
உருவேற்று மந்திரந்தான் ஓம்ஓ மென்று
சாமப்பா சாமாள ரூபி யப்பா[123]
சாம்பவி கிறீங்கிலீங் கிறீஞ் சாதகி
நாமப்பா மூன்றுநாள் சகத்திரத்தில் மூன்று
நன்றாகச் சேவித்தேதான் பிடுங்கி வந்து
போமப்பா நிழலுலர்த்தித் தயிலம் வாங்கி
போட்டிடவே சகலசனம் வசியம் பாரே.

பொ. சு:

கருஞ்செம்பை மூலத்துக்குக் கன்னி நூலால் (தாமரை நூல். கற்றாழைக்கும் கன்னி என்ற பெயருண்டு. 'ஒரு மூலிகைச் செடி' (பதார்த்த குண விளக்கம் பக்கம். 533) காப்புக் கட்டி, சோடசங்களும்

---

122. இப்பாடல் இறுதியில் "காங்கீங் கூங்கேங் கணபதிமகா கொடுத்திடாயே. பூலோக மெல்லாங் கிருபை புரிவதே யென்று சொல்லே" என்ற இருவரிகள் மூலத்தில் இருந்தன. இயைபின்மை கருதி விடப்பட்டன.

123. மூன்று சீர் மட்டுமே இருந்தது கருதி, 'யப்பா' என்பதைப் பொருள் மாறுபடுத்தாத வகையில் இணைத்துக் கொண்டேன்.

செய்து "ஓம் ஓம் சாமள ரூபி (சியாமள ரூபி) சாம்பலி கிறீங்கிலீங் கிறீஞ்சாதகி" என மந்திரம் உருவேற்றி மூன்றாம் நாள் பிடுங்கி வந்து நிழலில் உலர்த்தித் தயிலம் எடுத்துப் பொட்டிட்டுக் கொள்ளச் சகல மக்களும் வசப்படுவர் என்கிறார்.

சொ. வி:

கருஞ்செம்பை மூலம் – கருஞ்செம்பருத்தி, சித்தகத்தி, கருஞ்சித்தகத்தி என்றும் அழைக்கப்படும். நாடு, காடு எங்கும் தன்னிச்சையாக வளரும்.

சோடசம் – சோடசோபசாரமாகும். அதாவது மஞ்சனம், பூ, கந்தம், தூபம், தீபம், நீர், அமுது, தூசு (ஆடை), அடைக்காய், ஆடி (கண்ணாடி), குடை, கவரி, ஆலவட்டம், விசிறி, ஆடல், வாச்சியம் எனும் பதினாறு உபசாரங்கள் செய்தலாகும்.

188. பாரப்பா வெண்குன்றி மூலம் வாங்க
பாங்கான அமாவாசை பூசை செய்து
நேரப்பா மந்திரந்தான் வம்மம் வசவிச
நிறைமிருக வசீகரி ஓமென்று போற்றிப்
பேரப்பா பிடுங்கியதை வாயி லிட்டுப்
பேசவே மிருகவசீ கரங்கள் காணும்
ஆரப்பா பொற்றலைச் சமூலம் வாங்க
ஆச்சரிய மந்திரத்தைக் கேளு கேளே.

பொ. சு:

வெண்குன்றி மூலம் வாங்க அமாவாசை அன்று பூசை செய்து, "வம்மம் வசவிச நிறைமிருக வசீகரி ஓம்" என மந்திரம் செபித்துப் பிடுங்கி வாயிலிட மிருகங்கள் வசப்படும் என்கிறார்.

அடுத்து, பொற்றலைச் சமூலம் (கையாந்தகரை எனும் மஞ்சள் கரிசலாங்கண்ணி ஆகும்) பறிக்க மந்திரம் கூறுகிறேன் என்கிறார்.

சொ. வி:

பேசவே மிருகவசீ கரங்கள் காணும் – நாட்டில் மன்னர், மக்கள், பெண்டிரை வசியப்படுத்தியது போல, காட்டில் மூலிகைகள் தேடி அலையும்போது கொடிய விலங்குகளினின்றும் தம்மைக் காத்துக் கொள்ளச் சித்தர்கள் மிருகங்களை வசியப்படுத்தவும் அறிந்திருந்தனர் எனத் தெரிகிறது.

189. விஞ்சே என்னவொரு வெள்ளிக்காப்புக் கட்டி
வீறாக மறுவெள்ளி வாங்கும் போது
அஞ்சாதே ஓங்கிலீயுஞ் சவ்வு மஹீ
அட்சரத்தை யோதியே குளிச மாடி
மஞ்சாரு முடியில்வைக்க மதன்வசீ கரங்காண்
வகையட்ட மூலிகையும் வசிய மாகும்
நெஞ்சான மோகனமா மூலி தன்னை
நிகழ்த்திறேன் புத்திரரே நிகழ்த்தி றேன்கேள்.

பொ. சு:

ஒரு வெள்ளிக் கிழமை அன்று காப்புக்கட்டி, மறு வெள்ளிக் கிழமை அன்று பொற்றலைக் கையாந்தகரையைப் பறிக்கும் போது 'ஓங் கிலியுஞ் சவ்வுமஹீ' எனும் அட்சரத்தை ஓதிக் குளிசமாடித் தலையில் வைக்க, மன்மதன் வசியமாவான். இவ்வாறு அட்ட மூலிகையும் வசியம் செய்ய உதவும்.

இனி அட்ட கர்மத்துள் இரண்டாவதான மோகனத்துக்கு உரிய மூலிகைகள் பற்றி உரைக்கப் புகுகிறார்.

184 முதல் 189 வரை உள்ள ஆறு பாடல்களில் அரசர், பெண்டிர், மக்கள், மிருகம், மன்மதன் ஆகிய ஐவரை வசப்படுத்தும் செங்கழுநீர் மூலம், பொன்னூமத்தை, வெள்ளெருக்குச் சமூலம், கருஞ்செம்பை மூலம், வெண்குன்றி, பொற்றலைச் சமூலம் ஆகிய ஆறு மூலிகைகளைப் பயன்படுத்தும் விதம் உரைக்கப்பட்டுள்ளது.

மோகனம்

190. நிகழ்த்திறேன் மதமத்தைப் பயிர்தான் செய்து
நினைவாகக் காயாகும் பக்கு வத்தில்
நிகழ்த்திறேன் சிறுநீரா லாட்டி வாங்கி
நினைந்தபெண்ணுக் கீயவே மோகனமு மாகும்
நிகழ்த்திறேன் உமி(ழ்) நீரால் பூவையாட்டி
நீயூட்டு மோகிக்குங் காயை யுந்தான்
நிகழ்த்திறேன் விந்துவிலே யாட்டி யூத்து
நினைத்தோடி மோகிப்பாள் பிரியாள் தானே.

பொ. சு:

மதமத்தையைப் பயிர்செய்து காயாகின்ற பக்குவத்தில் பறித்து, சிறுநீரால் ஆட்டி விரும்பிய பெண்ணுக்குத் தர உன் மீது மோக வசப்படுவாள் என்கிறார்.

உமிழ்நீரால் இந்தப் பூவையும், விந்துவினால் (இரசம் எனும் சூதமாகிய சிவனார் விந்து) காயையும் ஆட்டி ஊற்றினாலும் மோகிப்பாள்; பிரியமாட்டாள் என்கிறார்.

191. **பிரியார்க எிரதத்தில் தோலை யாட்டிப்**
பெண்களுக்கு ஊட்டவே மோக மாகும்
நெறியாகக் கஞ்சாவைப் புருட ரோட்டில்
நேர்சமனாய் மண்ணிட்டுப் பயிரே செய்து
அறியாத மந்திரந்தான் ஐயுங் கிலியும்
அப்பனே சவ்வுடனே கூட்டி யோதிக்
குறியாக விளைந்தபின்பு சமூலம் வாங்கிக்
கொண்டு வந்து சட்டியிலே கருக்கிடாயே.

பொ. சு:

இரசத்தில் மதமத்தையின் தோலை ஆட்டி ஊட்டினாலும் மோகிப்பாள் என்கிறார்.

கஞ்சாவை ஆண் மண்டை ஓட்டில் மண்ணிட்டுப் பயிர்செய்து அறியாத மந்திரங்களாகிய ஐயும் கிலியும் சவ்வுடன் கூட்டி ஓதி, நன்கு விளைந்த பின்பு பிடுங்கி ஒரு சட்டியில் போட்டுக் கருக்கிக் கொள்ள வேண்டும்.

சொ. வி:

அறியாத . . . . யோதி – 'நிறைமொழி' மாந்தர் ஆணையிற்கிளந்த மறைமொழி தானே மந்திரம் என்ப, என்பது திருக்குறள். அதாவது 'முனிவர்கள் கட்டளையிடும் முறையிலே கூறி வைத்திருக்கும் பொருள் நிறைந்திருக்கும் மொழியே மந்திரமாகும்' என்பதாம். இதற்கு ஏற்ப, 'அறியாத மந்திரந்தான் ஐயுங் கிலியும் சவ்வும்' என உரைக்கப்பட்டுள்ளது.

கஞ்சாச் செடி வளர இம்மந்திரம் உச்சரிக்கப்பட வேண்டும் என்கிறார்.

இம்மந்திரத்தை இவற்றுக்குரிய ஒலி அல்லது இசையமைதியுடன் ஒலிக்க, செடி சீராக வளரும் என்பதாம். அன்பான பேச்சு, இனிமையான இசை இவற்றால் செடி கொடிகள் வளரும் முறையை இன்றைய விஞ்ஞான உலகமும் ஏற்றுக் கொண்டுள்ளது.

192. **கருக்கியே திலதமிட சனங்கள் மோகம்**
கரவெள்ளை மதமத்தைத் திலதந் தீட்டிற்

செருக்குமே சனமென்ற மோகந் தானுந்
திறமாக அதனிலையை நீரிற் போட்டுப்
பெருக்கியே குமித்திடவே மோகன மாகும்
பேறாக மந்திரத்தைச் சொல்லக் கேளு
அருக்கியே மஇதான் மத்தம்தோன் மத்திஓம்
ஆம்கிலீஞ் சத்திசன மோகினி யென்னே.

பொ. சு:

கருக்கிய அக்கஞ்சாச் சமூலத்தைத் திலகமாய் இட்டுக்கொள்ள மக்கள் அனைவரும் அவன்மீது மோக வசப்படுவர்.

வெள்ளூமத்தையின் இலையை "மஇதான் மத்தம்தோன் மத்திஓம் ஆம்கிலீஞ் சத்திசன மோகினி" என மந்திரம் உச்சரித்துப் பறித்து, நீரில் ஊறப் போட்டுப் பெருக்கி மைசேர்த்துத் திலகம் இட்டாலும் சன மோகம் உண்டாகும் என்கிறார்.

193. மோகியென்ற மருளூமத்தை ஓம் தேவ
மொழிந்தவுடன் வருகவருக வென்று வாங்கித்
தாகமுடன் கருக்கியதைப் பன்னீர் தன்னில்
தயவாகத் திலதிமிடத் தெய்வ மோகம்
ஆகமுடன் மத்தங்காய் நரியோட் டுள்ளே
அப்பனே பயிர்செய்து ஏழா நாளில்
பாகமுடன் **ஆண்கழச்சிக்** குள்ளே யிட்டுப்
பதனஞ்செய் மந்திரந்தான் கேளு கேளே.

பொ. சு:

ஊமத்தையில் ஒருவகையான மருளூமத்தையினை "ஓம் தேவமோகம் வருக வருக' என்று வாங்கிக் கருக்கிப் பன்னீரில் குழப்பித் திலகமிடத் தெய்வ மோகமாகும். மத்தங்காயினை நரியின் மண்டையோட்டில் பயிர் செய்து, ஏழாம் நாள் ஆண்கழற்சிக்குள்ளே (கொடி வகையைச் சார்ந்த காய்) போட்டுப் பதனஞ் செய்யக் கூறும் மந்திரத்தை அடுத்த பாடலில் உரைக்கிறார்.

ஊமத்தை வகையும், அவற்றின் குணநலன்களும் முன்னரே விவரிக்கப்பட்டுள்ளன. (10-ஆம் பாடல்).

சொ. வி:

ஆண்கழச்சி *– ஆண்கழற்சிக் கொடி. இது வேலி ஓரம், தோட்டங்களில் வளரும், செடியாகிக் கொடி ஓடும் இனம்.*

194. கேளப்பா துங்கதுங்க மிருக மோகி
கெற்சிதஞ்செய் யென்றுசொல்லி வாயி லிட்டு
நாளப்பா பேசிடவே மிருக மோகம்
நயமாக ஆல்விழுதை யருக்க நாளில்
நீளப்பா மகாமோகி நீரா காரம்
. . . . . மோகிசெயே செயே யென்று
தாளப்பா ஒருவெட்டாய்க் கையி லேந்தித்
தயவாகச் சட்டியிலே பற்பம் பண்ணே.

பொ. சு:

"துங்க துங்க மிருகமோகி கெற்சிதஞ்செய்" என்று மந்திரம் சொல்லிப் பதனஞ் செய்த அதனை வாயிலிட்டுப் பேசிட மிருக மோகமாகும்.

ஆல்விழுதை அருக்க நாளில் 'மகாமோகி நீராகாரம் . . . மோகி செயே செயே' என்று கூறி ஒரே வெட்டாக வெட்டிக் கையிலெடுத்துச் சட்டியில் போட்டுப் பற்பம் செய்ய வேண்டும் என உரைக்கிறார்.

195. பற்பத்தைத் திலதமிட அரசர் மோகம்
பண்பான நன்னாரி தன்னைச் சொல்வோம்
சிற்பமுடன் பொங்கலிட்டுக் காப்புக் கட்டித்
தீபமிட்டுப் பெலியிட்டு மந்திரத்தைக் கேளு
சொற்பமுறச் சீலி வடுகனே மோகி
சோதிசன மோகியென்று மூலம் வாங்கி
அற்பமென நினையாமற் குளிச மாடி
ஆச்சரியஞ் சிரசில்வைக்கச் சனமோகங் காணே.

பொ. சு:

பற்பம் செய்த அதனைத் திலகமாய் இட அரசர் மோகம் உண்டாகும்.

அடுத்து நன்னாரி சனமோகத்துக்குப் பயன்படும் விதம் உரைக்கிறார்.

நன்னாரிக்குப் பொங்கலிட்டுக் காப்புக் கட்டித் தீபமிட்டுப் பலியும் கொடுத்து, "சீலி வடுகனே மோகி சோதிசன மோகி" என மந்திரம் உச்சரித்துப் பிடுங்கி அற்பம் என எண்ணாது வகையாகக் குளிசமாடித் தலையில் வைக்க மக்கள் மோகிப்பர் என்கிறார்.

196. காணப்பா காமப்பூத் திரியில் வைத்துக்
காரெள்ளுச் சாற்றினால் மையெ ரித்து
ஊணப்பா புவியிலுள்ள பு(ரு)டரெல்லாம்
ஒகோகோ மோகமா முண்மை யுண்மை
தோணப்பா மோகனத்தைக் கடந்தாய் பின்பு
சொல்லுகிறேன் ஆலமெனுங் கட்டி தன்னை
வீணப்பா என்றுசொன்னால் பொய்யே யாகும்
வெகுசுருக்கு கட்டுக்கொடி சிலீரென் றோதே.

பொ. சு:

மதனகாமப்பூ எனும் கொடிச்சம்பங்கியைத் திரிதிரித்துக் காரெள்ளுச் சாற்றில் (காரெள்ளு என்பது எள்ளில் ஒருவகை. இதன் எண்ணெய் என்பதாம்.) எரித்து மை எடுத்துத் திலகமிடப் புவி மக்களெல்லாம் மோகவசப்படுவர் (அனைவரும் தன்னை விரும்புமாறு செய்தல், தன் இச்சைக்கு அனைவரையும் இணங்குமாறு செய்தல் என்பதாம்) என்கிறார்.

மோகனத்தைக் கடந்தபின் செய்யக் கூடிய இன்னும் சில முறைகளை உரைக்கிறார்.

ஆலங்கட்டி ஒன்றுக்கும் உதவாது என்று சொல்லாதே. கட்டுக் கொடிக்குச் சுருக்குத் தரத் தகுந்த ஒன்றாகும் இது என்கிறார்.

197. சீலி கிலால் பேந்துலால் பேந்து[128]
சிவசிவா யென்றுசொல்லிச் சமூலம் வாங்கி
நீலியென்ற நிம்பநெய் தன்னி லிட்டு
நிம்பநெய் மூலிகையும் வளைய மாடி
பீலியென்ற மூலிகையும் குளிச மாடிப்
பிலமாகச் சிரசுதனில் கட்டிக் கொண்டு
காலியென்ற ஆசனத்துக் கீழே போட்டுக்
கலங்காமல் பாணிநடு விருக்க லாமே.[129]

பொ. சு:

"சீலி கிலால் பேந்துலால் பேந்து சிவசிவா" என மந்திரம் ஓதிக் கட்டுக் கொடியினைச் சமூலமாய்ப் பறித்து, வேப்பெண்ணையில்

128. பா. பே. "சீலி சிலா பந்துசிலார் பந்து', செ. I.

129. "கலங்காத நடுவிருக்கப் பாரே" என இச்சுவடியில் இருந்ததன் பொருள் விளக்கமின்மை கருதி செ. I இன் வரி இணைக்கப்பட்டது.

இட்டு வேப்பிலைக் கொத்தினையும் வளையமாடி (கயிறாகத் திரித்துப் பீலியென்ற மூலிகையையும் (நீர்முள்ளி ஆகும். குளிசமாடிச் சிரசில் வைத்துக் கருங்காலி ஆசனத்தில் அமரத் தண்ணீர் நடுவில் வீற்றிருக்கலாம் என்கிறார்.

198. இருக்கலா மந்தநெய்யில் தீப மேற்றி
என்மகனே மழைதனிலே செல்ல லாகும்
பெருக்கலா மிலையரைத்துச் சிலத்தி லூட்டப்
பிரளாமல் திரண்டுவந்து கட்டி யாகும்
செருக்கலாந் தின்றுவிடில் பசித்தி டாது
சிலத்தம்ப மிதுவென்றும் பாரு பாரு
அருக்குலாம் பாற்குரண்டி வாவு நாளில்
அப்பனே யுவசரித்து மந்திர மோதே.

பொ. கு:

முன்கூறிய மூலிகை நெய்யினால் (நீர்முள்ளி) தீபமேற்றி மழையில் சென்றாலும் அணையாது என்கிறார். மேலும், இதன் இலையை அரைத்து நீரில் கலக்க, கலங்காமல் திரண்டு கொண்டு கட்டியாக வரும் என்றும், தின்றுவிடப் பசி எடுக்காது[130] என்றும் 'சிலத்தம்ப மூலி' என்பது இதுவே என்றும் இயம்புகிறார்.

அடுத்து, பாற்கொரண்டியைப் (வெண்ணிறப் பூப்பூக்கும் வகை) பிடுங்கும் முறை கூறுகிறார். அமாவாசை நாளன்று உபசாரங்கள் செய்து மந்திரம் ஓத வேண்டும் என்கிறார்.

தம்பனம்

199. ஓதடா நீலகண்டி விசை விசைய
உயர்திற அத்திற அகலந் தோபா[131]
வாதடா சேவித்துநீ யாவின் பாலில்
மைந்தனே துவாலையிட வெட்ட றாது
மாதடா விரையரைத்துப் பசும்பாலிற் கொள்ள
மயங்காது சுக்கிலத்தைத் தம்பித்துக் கொள்ளும்
போதடா பிரண்டைதனை மூலம் வாங்கிப்
புகழான மந்திரத்தை யுரைக்கி றேனே.

---

130. "நீர் முள்ளி விரையை அரிசியுடனே கலந்து சோறாக்கி உண்ண ஒரு மாசம் பசியாது" என்ற தி. 8140 இல் உள்ள கருத்து ஒப்புமைக்குரித்து.

131. பா. பே. "உயர்விசைய திரிசூலி கட்டு வென்று"

பொ. கு:

பாற்குரண்டியை, "நீலக்ண்டி விசை விசைய உயர்திற அத்திற அகலந்தோபா" என மந்திரம் ஓதிப் பறித்து ஆவின் பாலில் கலந்து துவாலையில் இட, கிழிக்க வராது. இதன் விதையை அரைத்துப் பசும்பாலில் உட்கொள்ள சுக்கிலம் தம்பனமாகும் அடுத்து, பிரண்டை மூலம் வாங்க மந்திரம் கூறுகிறார்.

200. உரைக்கிறேன் சிலம்பலம் பலம்பநீ[132] காளி
ஓங்கார காளி நமாவென்று போற்றி
உரைக்கிறேன் நிழலுலர்த்தித் தூளா யாட்டி
உயர்ந்துநின்ற குறுவைமா நேராய்க் கூட்டி
உரைக்கிறேன் சலக்கழிச்சல் தின்றால் நிற்கும்
ஒயாத கிராணிவகை யாறுந் தீரும்.
உரைக்கிறேன் நீர்முள்ளிக் குபசாரம் செய்து
உரைதவறா மந்திரத்தைச் சேவிப் பாயே.

பொ. கு:

"சிலம்பலம் பலம்பநீ காளி ஓங்கார காளி நமா" என்று போற்றிப் பறித்து நிழலில் உலர்த்தித் தூளாக ஆட்டிக் குறுவை (மூன்று மாதத்தில் பயிறாகும் ஒரு செந்நெல் வகை) கூட்டிச் சமமாக மாவு உண்ணச் சலக் கழிச்சலும், கிராணி வகையாறும் தீரும் என்கிறார்.

அடுத்து, நீர் முள்ளிக்கு உபசாரம் செய்து பறிக்கும் மந்திரத்தை உரைக்கிறார்.

சொ. வி:

கிராணி வகையாறு – அசீரண பேதி வகையால் ஏற்படும் கிராணி வகைகள் ஆறாகும். அவை பித்தகிராணி, உஷ்ணவாத கிராணி, சிலேட்டும வாத கிராணி, மேக கிராணி, மூலகிராணி,. வாதகிராணி என்பனவாம்.

201. சேவிக்கு மந்திரந்தா னுலைமுகவ நாதா[133]
செய்மோகத் தம்பசெலத் தம்ப நீதான்

---

132. பா. பே. "செலம் தம்பனி நீ" செ. I.

133. பா. பே. "ஓலைமுக நாதா" செ. I.

ஆவிக்குச் சொல்லியே பிடுங்கி வந்து
அரைத்திதனைக் குடித்திடவே விசங்கள் தீரும்
பாவிக்கும் பத்திரத்தை யரைத்துக் கொண்டால்
பாண்டுவிஷ பாகமெல்லாம் பதறி யோடும்
தாவிக்கும் விரையரைத்துக் கொண்டா யானால்
தம்பனமாஞ் சுக்கில சத்தியந் தானே.

பொ. சு:

நீர் முள்ளியை (அச்சகம், அசமம் என மருத்துவ அகராதியில் குறிக்கப்படுகிறது) "உலைமுகவ நாதா செய்மோகத் தம்பசெலத் தம்ப நீதான்" என மந்திரம் கூறிப் பிடுங்கி வந்து, அரைத்துக் குடித்திட விடங்கள் தீரும் என்கிறார். இதன் இலையை அரைத்துக் குடிக்க, பாண்டுநோயும், விஷ வகைகளும் நீங்கும் என்றும் விதையை அரைத்துக் குடிக்க, சுக்கிலம் தம்பிக்கும் என்றும் வகைப்படுத்தி உரைக்கிறார்.

சொ. வி:

அரைத்திதனைக் குடித்திடவே விஷங்கள் தீரும் – என்னென்ன விஷங்கள் தீரும்? எந்த வகை விஷக் கடிக்கு? என்னென்ன இட்டு, எந்தப் பக்குவத்தில் அரைக்க வேண்டும்? எந்த அளவு, எந்த முறையில் உட்கொள்ள வேண்டும் என விளக்கமாகக் கூறப்படவில்லை. பொதுவாகச் சித்த வைத்தியத் துறையில் உள்ளோருக்கு இந்த முறைகள் தெரியும் எனக் கொண்டு விட்டிருக்கக் கூடும்.

நத்தைச் சூரி

202. **சத்தியமாய்ச் சொல்லுகிறேன் நத்தைச் சூரி**
தாரணிக்குள் சாபமில்லை பெரியோர் கொள்வார்
சித்தியென்ற யெட்டுமிதற் குள்ளே யாச்சு
செகமெல்லா மிதன்பெருமை திறமோ காணார்
சுத்தியென்ற சூரிதனைத் தினமுங் கொண்டால்
சொல்லவொண்ணா வாச்சரிய மிறுகுந் தேகம்
சுத்தியென்ற அருக்கனிலே காப்புக் கட்டிச்
சொல்லடா மந்திரத்தைச் சூட்டு றேனே.

பொ. சு:

சில மூலிகைகளுக்குச் சாபம் உண்டு. ஆனால் நத்தைச் சூரிக்கு (செடி வகையைச் சேர்ந்தது) அத்தகு சாபம் ஏதும் இல்லை. எனவே,

இதனைப் பெரியோர்கள் தக்கபடி பயன்படுத்திக் கொள்வார்கள். அட்டமா சித்தி எனப்படும் எட்டு வகைச் சித்தும் இதற்குள் அடக்கம் (எட்டு வகைச் சித்து செய்யவும் இது பயன்படுத்தப்படும் என்பதாம்.) இந்த நத்தைச்சூரிதனை நாடோறும் முறைப்படி உண்ண வியக்கத் தக்கபடி தேகம் இறுகும் என உரைக்கிறார்.

இதற்கு அருக்கன் நாளில் (ஞாயிற்றுக் கிழமை) காப்புக் கட்டிப் பறிக்கு முன் கூறும் மந்திரத்தை உரைக்கிறேன் என்கிறார்.

203. சூட்டுகிறேன் ஓம்வச்சிர ரூபி சூரி
சூரி மகாவீரி சுவாகா வென்று
நாட்டுகிறேன் சமூலமே பிடுங்கி வந்து
நன்றாகச் சூரணஞ்செய் சீனி நேரே
ஊட்டுகிறேன் கலந்துமண் டலந்தான் தின்னு
ஒருநூறு மிருபதுமோ வொருநா ளாகும்
மாட்டுகிறேன் பத்திரத்தை வாயி லிட்டு
மைந்தனே மலைகளெல்லாம் நொறுக்க லாமே.

பொ. சு:

"ஓம் வச்சிர ரூபி சூரி சூரிம காவீரி சுவாகா" என மந்திரம் உச்சரித்து, நத்தச்சூரியைச் சமூலமாய்ப் பறித்துக் கொண்டு வந்து சூரணம் செய்ய வேண்டும். சீனி சம அளவு கலந்து நாற்பது நாட்கள் உண்ண, அன்னாருக்கு நூற்றிருபது நாட்கள் ஒரு நாளாகும். இதன் பத்திரத்தை (இலை) வாயிலிட மலைகளையும் நொறுக்கும் வலிமை பெறலாம் என இயம்புகிறார்.

சொ. வி:

மண்டலம் – 40, 41 அல்லது 45 நாட்கள் கொண்ட கால அளவு.

204. நொறுக்கலாம் விரையெடுத்துத் தினமுங் கொண்டால்
நூறூழி யளவுவரை யிருக்க லாகும்
நொறுக்கலாம் எந்தெந்தத் தொழில்கள் தானும்
நோக்காதே மற்றுமொரு கற்ப மேனும்
நொறுக்கலாஞ் சத்துருவும் வியாதி தானும்
நுணுக்கமே யுலகத்தோர் காணா ரப்பா
நொறுக்கலா மிம்மூலி சிரசில் வைக்க
நோக்காதே தேவதையள் போற்றும் பாரே.

பொ. சு:

இந்த நத்தைச் சூரியின் விதை எடுத்து நாள்தோறும் உட்கொள்ள, நூறாழியளவு வரை வாழலாம். எந்தச் செயலையும் எளிதாகச் செய்து முடித்து விடலாம். இதன் கற்பத்தின் மகிமையை அறிந்தபின் வேறு எந்தக் கற்பமும் கண்டு அலைய வேண்டாம். பகைவரையும், கொடிய நோய்களையும் இதன் மூலம் அழித்து ஒழித்து விடலாம். ஆனால் இதன் நுணுக்க முறைகளை இவ்வுலகத்தோர் தெளிவாக அறிய மாட்டார்கள். இம்மூலிகையைச் சிரசில் வைக்க, தெய்வங்களும் புகழும் சிறப்படையலாம் என விளக்குகிறார்.

205. போற்றியென்ற சத்தி சாரணையை வாங்கப்
பொருந்தியதோர் சங்கரம நாளில் சென்று
ஊற்றியென்னும் நூல்கட்டி மந்திரந்தான்
உரைத்திடவே ஓம்பரமா பரமா னந்தி
மாற்றி மகாசத்தி கமல வல்லி
மாதாவே யென்றுசொல்லிச் சமூலம் வாங்கி
நேற்றியென்னும் பொடியாக்கி நித்தங் கொள்ள
நிலைத்தெந்த ஆயுதமும் தைத்தி டாதே.

பொ. சு:

சத்திசாரணையைச் சங்கரம நாள் அன்று, நூலால் காப்புக் கட்டி, "ஓம் பரமா நந்தி மகாசத்தி கமலவல்லி மாதாவே" என மந்திரம் இயம்பி, சமூலமாய்ப் பறித்துப் பொடி செய்து நாடோறும் உண்டுவர, அவர் உடலில் எந்த ஆயுதமும் ஊடுருவாது (வச்சிரகாயம் கிட்டும் என்பதாம்) என இயம்புகிறார்.

சொ. வி:

சங்கரமநாளில் - பொங்கல் பண்டிகை கொண்டாடும் தை முதல் நாள் சங்கரமநாள் என அகராதி குறிக்கிறது. சூரியன் ஒவ்வொரு ராசியில் சேர்வது சங்கிரமம். சௌரமானக் கணக்குப்படி சூரியன் அந்தந்த ராசியில் சேர்வதை ஒட்டி மாதங்களை மேடம், இடபம், மிதுனம், கடகம், சிம்மம், கன்னி, துலாம், விருச்சிகம், தனு, கும்பம், மீனம் என்றனர். எனவே சங்கிரமம் மாதத்தின் முதல் நாளாகும். அந்த நாளிலும் குறிப்பிட்ட நாழிகையில் சூரியன் அந்த ராசியை அடையும் நேரமே சங்கிரமமாகும்.

206. தைய்யாது யிம்மூலி மேதிப் பாலில்
தான்கொள்ளச் சலதோஷ மெல்லாம் போகும்
பொய்யாத பூமிச் சக்கரையை வாங்கிப்
பூமிதனை வெட்டியே கண்ட போது
மையாருங் கரிமுகற்குப் பூசை பண்ணி
மந்திரந்தான் பாதாள சேஷ பாரத்(து)
எய்யாத ரூபியா மகாநமா வென்று
இயலாவின் பாலிலே கொள்ளு கொள்ளே.

பொ. சு:

சத்தி சாரணை மூலிகையை அரைத்து எருமைப் பாலில் சேர்த்துக் கலக்கி உட்கொள்ள நீர்க்கோர்வை (சலதோஷம்) நீங்கும். ஆவின் பாலுடன் பூமிச்சர்க்கரையும் சேர்த்து இம்மூலிகையை உண்ண, என்ன கிட்டும் என அடுத்த பாடலில் உரைக்கிறார்.

பூமிச்சர்க்கரைக்கு ஆனை முகத்தானைப் பூசை செய்து "பாதாளசேஷ பாரத்(து) ரூபியா மகா நமா" என மந்திரமும் ஓத வேண்டும் என இயம்புகிறார்.

சொ. வி:

பூமிச்சர்க்கரை – பூமிச் சர்க்கரைக் கிழங்கு எனும் முள் முரண்டையாகும்.

207. கொள்ளப்பா சுக்கிலத்தை மேலே யேற்றும்
கோடிபெண்ணைப் புணர்ந்தாலும் விந்து வீழா
தள்ளவே ஆவின்நெய்யில் பக்கங் கொள்ளத்
தசையுலர்ந்த எலும்புருக்கி[134] தீருந் தீரும்
வள்ளலே குதிரைவால் புல்லு மூலம்
வாங்கவே மந்திரந்தான் கேளு கேளு
தள்ளவே சடாய் சடாய் தும்தும்
சடாய் சடாயென்று வேரைக் கொள்ளே.

பொ. சு:

உட்கொள்ளச் சுக்கிலம் மேலே ஏறும். கோடி பெண்டிரைச் சேர்ந்தாலும் விந்து விழாது என்கிறார்.

---

134. பா. பே. "மேகந்", செ. I.

பசு நெய்யில் ஒரு பக்ஷம் (15 நாட்கள்) உட்கொள்ள உடலை உருக்கும் எலும்புருக்கி நோய் தீரும்.

அடுத்து, 'குதிரைவால் புல்லின் வேரினைச் 'சடாய் சடாய் தும்தும் சடாய் சடாய்' என்று மந்திரம் கூறிப் பிடுங்க வேண்டும் என்கிறார்.

சுக்கில தம்பனத்துக்கு உதவும் மூலிகையே எவ்வாறு உடல் நோய்க்கும் பயன்படும் என்ற தன்மை விளக்கப்படுகிறது.

சொ. வி:

குதிரைவால் புல்லு மூலம் - குதிரைவாலிப் புல்லின்வேர் ஆகும். பேச்சு வழக்கில் 'குருதவாலி' என அழைக்கப்படும்.

208. **கல்லியே பலிகொடுத்துக் குளிச மாடிக்**
கட்டவே கர்ப்பமுதற் றம்பித்துப் போகும்
சொல்லியே தம்பனங்க ளெட்டு மூலி
சோருச்சா டனத்தின் மூலி கேளு
வெல்லுமே நரிவெருட்டி யருக்க நாளில்
வேர்வாங்க நூல்கட்டிக் குருநாள் தன்னில்
மல்லுமோர் மந்திரந்தான் சடாய் சடாய்
தும்மசடாய் சடாய்மருட்டித் தூவு தூவே.

பொ. சு:

வேரைப் பறித்துப் பலிகொடுத்துக் குளிசமாடிக் கட்டக் கர்ப்பமும் தம்பித்துப் போகும். தம்பனத்துக்கு எட்டுமூலி உண்டு. இனி உச்சாடன மூலி கேளு என்கிறார். 'ஞாயிற்றுக்கிழமை அன்று நரிவெருட்டி (நரிமிரட்டி, கிலுகிலுப்பை, பேய் விரட்டி என்றும் அழைக்கப் பெறும்) மூலிகைக்குக் காப்புக் கட்டி, வியாழன் அன்று 'சடாய் சடாய் தும்ம சடாய் சடாய்" என மந்திரம் ஓதி, வேர் வாங்க வேண்டும் என்கிறார்.

சொ. வி:

உச்சாடனம் - அஷ்ட கருமத்துள் இருப்பிடத்தை விட்டு ஓட்டுந் தொழில்.

209. **தூவிடவே மிருகங்கள் துட்ட ரெல்லாம்**
தூரத்தில் பறந்தோடும் துஸ்லகா ணாதே

மாவிடவே மான்செவிக் கள்ளி தன்னை
மனமகிழக் கந்தபுஷ்ப தூப தீபம்
தேவிடவே செய்தபின்பு காப்பே வாங்கிச்
செப்புவேன் மந்திரந்தான் அருணை கிரி[135]
ஒவிடைய ஆங்கார சத்தி சத்திதாய்
உச்சாடி யென்று (ஓது) ஓதே.

பொ. சு:

நரிவெருட்டி வேர் பொடித்துத் தூவிட, தீயவர்களும், மிருகங்களும் தொலை தூரத்துக்குப் பறந்தோடிப் போவார்கள்.

அடுத்து, மான்செவிக்கள்ளி (கள்ளியுள் ஒரு வகை. மானின் செவிபோல் அமைந்ததான் வந்த காரணப் பெயர். வறட்சியான பகுதியில் செழித்து வளரும். உச்சாடனத்துக்கு உதவும் முறையை உரைக்கிறார்.

மான்செவிக்கள்ளிக்கு மனமகிழ்வுடன் வாசனை மலர்கள் தூவித் தூபமிட்டுத் தீபம் காட்டிக் காப்புக் கட்டி "அருணைகிரி ஆங்கார சத்தி சத்திதாய் உச்சாடி" என மந்திரம் உச்சரிக்க வேண்டும். செய்ய வேண்டுவதை அடுத்த பாடலில் உரைக்கிறார்.

210. ஒதியே யிதனுடனே சுடலை நீறு
ஒன்றாகக் கிழிகட்டி வைத்து மைந்தா
வாதுசெய்த சத்துருவின் வாசற் கீழே
வைத்திடவே காணாமல் மறைந்து போகும்
தாதியே நாவடக்கம் வாயிற் போட்டால்
தாளாத ஆரணமுரி வேர்வாங்கித் தூனும்
போதுடைய ஓம்கோர கோரரூபி மாயி
பூதோச் சடாய் சடா யென்னே.

பொ. சு:

மந்திரம் ஓதி, இதனுடன் சுடலைச் சாம்பல் இட்டுக் கிழியாகக் கட்டி (துணியில் சிறு மூட்டையாய் முடிச்சிட்டுக் கட்டல்) வாதம் செய்யும் சத்துருவின் வாசலில் வைக்க மறைந்து போவான்.

வாயில் போட நாவடங்கும். (பேசும் சக்தி அடங்கி நாக்கு உள்ளிழுத்துக் கொள்ளல்)

---

135. பா. பே. "ஆகருஷ்ணி" செ. I.

அடுத்து, ஆரணமுரி வேர் வாங்க "ஓம் கோர கோர ரூபி மாயி பூதோச் சடாய் சடாய்" என மந்திரம் இயம்பவேண்டும் என்கிறார்.

211. சடாயுவென மொழிந்தேதான் வேர றாமல்
சன்னமுறு மெருக்கிலையின் பஞ்சி லூட்டி
விடாயுவெனத் திரியாக்கி நிம்ப நெய்யில்
விளக்கேற்றி வைத்திருக்கப் பூத மெல்லாம்
அடாயுவென வோடிப்போந் திக்குக் கெட்டு
அப்பனே யிதுபூத வுச்சாடனமு மாகும்
வடாயுவென வெண்சுண்டிக்குக் காப்புக் கட்டி
மந்திரந்தான் மொழிந்திடவே மைந்தா கேளே.

பொ. சு:

முன்பாடலில் உரைத்தவாறு "சடாய்" என மந்திரம் ஓதி, வேர் அறுந்து விடாமல் பிடுங்கி, எருக்கலம்பஞ்சு சிறிது எடுத்து அதில் வேரின் சாறினைப் பிழிந்து விட்டுத் திரியாக்கி, வேப்பெண்ணெய் விட்டு விளக்கேற்றி வைத்திருக்கப் பூதங்கள் (தீயசக்திகள்) திசைகெட்டு ஓடிவிடும். இதுவே பூத உச்சாடனம் என இயம்புகிறார்.

அடுத்து, வெண்சுண்டிக்குக் (கீரை வகை) காப்புக் கட்டி மந்திரம் ஓதும் முறையை வரும் பாடலில் கூறுகிறார்.

212. மொழிசோர சோரநீ சேட்டா தேவி
முயங்கலீ யென்றுசொல்லிச் சமூலம் வாங்கி
அழியாம லுலர்த்தியே தூளா யாட்டி
அதிற்பாதி கெந்தப்பொடி கூடக் கூட்டிப்
பழியான தன்மாதர் முலையிற் றூவப்
பார்க்குமுன்னே இருதனமு மறையு மோடி
ஒளியாக வுயர்கண்டங் காரிக் கேதான்
உறுகேட்டை நாளிலே காப்புக் கட்டே.

பொ. சு:

"மொழிசோர சோரநீ சேட்டாதேவி" என முயங்கலீ மந்திரம் உச்சரித்து வெண்சுண்டியைச் சமூலமாய்ப் பறித்து, உலர்த்தித் தூளாக ஆட்டி, இதன் அளவில் பாதி கந்தகப் பொடி சேர்த்துப் பழியுடைய மாதர் மார்பில் தூவ, தனம் மறையும் என்கிறார்.

கண்டங்காரிக்குக் கேட்டை நாளில் (கேட்டை நட்சத்திர நாள்) காப்புக் கட்டிப் பின்னும் செய்ய வேண்டுவதைத் தொடர்ந்து அடுத்த பாடலில் உரைக்கின்றார்.

சொ. வி:

இரு தனமு மறையு மோடி - இரு தனமும் மறையும் ஓடி என்பதாம். தனம் இல்லா மங்கையர் அழகெனும் தனத்தை இழந்தவராவர். இலக்குவன் சூர்ப்பணகையின் மூக்கொடு மார்பகத்தையும் அறுத்து, அவள் ஆணவத்தோடு, அழகையும் நீக்குவதற்கே. தனம் இல்லா மங்கையர் அழகின்மையோடு இன்பம் தர இயலா நிலையை வள்ளுவம் குறிப்பிடுகின்றது.

"கல்லாதான் சொற்கா முறுதல் முலைஇரண்டும்
இல்லாதாள் பெண்காமுற் றற்று" குறள்–402.

தீயபெண்டிரின் மார்பகத்தை நீக்கல் பற்றிய முறைகள் வேறு மருத்துவ நூல்களிலும் இடம் பெற்றுள்ளன.

"மூஞ்சிறுவைப் பிடித்து அரையளவு தண்ணியிலே போட்டு, கத்திகொண்டு வெட்டி, முங்கின பாகத்தை ஈனாக் கிடாரிச் சாணத்தைக் கொண்டு சுட்டுப்பொடி பண்ணி, முலையில் தடவ உள்ளே சுருங்கிப்போம்" - தி.சுவடி எண், 8140.

213. **கட்டியே வராகத்தைப் பலி கொடுத்துக்**
கார்த்திகைநா ளன்றைக்கு வாங்கும்போது
ஒட்டியதோர் மந்திரந்தான் உம்தும்துமுயாரி நமஇராச
உச்சாடாய் உச்சாடாய் வெட்டியே வாங்கிவந்து
வெட்டுண்டோர்கள் வீரப் பல்லுடன் கூட்டி
(மிக நன்றாய்க் கலுவத்தில்) பொடித்துக் கொண்டு
கொட்டியே கிழிசுடலைக் காட்டில் வைக்கக்
கோவுக்குச் சாடனமாங் கூர்ந்து பாரே.

பொ. சு:

காப்புக் கட்டிய பின் பன்றியைப் பலியாய்க் கொடுத்து, கார்த்திகை நாளன்று 'உம்தும் துமுயாரி நமஇராச உச்சாடாய் உச்சாடாய்" என மந்திரம் இயம்பிக் கண்டங்காரி மூலிகையை வெட்டிப் பறித்து வந்து வீரப்போரில் மரணமுற்ற வீரர் பல்லுடன் சேர்த்துப் பொடித்து ஒரு துணியில் கட்டிச் சுடலைக் காட்டில் (சுடுகாடு) வைக்க அரச உச்சாடனம் என்கிறார்.

214. பாரப்பா தேள்கொடுக்கின் மூலம் வாங்க
பாடுகிறேன் ஓம்ஓம் பட்சிசிவு ஓமென்று
பேரப்பா சொல்லியே பச்சை ஒந்திப்
பிச்சுடனே சேர்த்துவைத்து விஷமா னாக்கால்
காரப்பா கண்ணிலிடு விஷங்க ளோடும்
கந்தையென நாறுகிற கரந்தை வாங்கு
ஆரப்பா மந்திரந்தான் அரியர அரியென்று
அடியோடே பிடுங்கிவந்து நிழலு லர்த்தே.

பொ. சு:

"ஓம் ஓம் பட்சி சிவு ஓம்" என மந்திரம் ஓதித் தேள் கொடுக்கு மூலிகையைப் (சுடுகாடு மீட்டான்) பறித்து வந்து பச்சோந்திப் பித்தினுடன் சேர்த்து, எந்த விஷ கடிக்கும் கண்ணிலிட விஷம் நீங்கும் என்கிறார்.

கந்தைத் துணியின் மணம் கொண்ட கரந்தைக்கு "அரியர அரி" என மந்திரம் இயம்பி வேருடன் பறித்து வந்து நிழலில் உலர்த்தவேண்டும் எனக் கூறுகிறார். செய்ய வேண்டுவதை அடுத்த பாடலில் உரைக்கிறார்.

இப்பாடலில் தேள்கொடுக்கு மூலிகையின் வேர், இலை, தண்டு, காய் ஆகிய எந்தப் பகுதியை எடுத்துக் கொள்ள வேண்டும்? அல்லது இவை அனைத்தும் உள்ள சமூலமா? என்பதும், பச்சோந்திப் பித்தினை எந்த அளவு எந்தப் பக்குவத்தில் எந்தெந்த முறைகளுடன் அம்மூலிகையுடன் சேர்க்க வேண்டும் என்பதும், கண்ணில் எந்த விஷத்துக்கு எந்த அளவு இடலாம் என்பதும் விளக்கமாகத் தெளிவுறுத்தப்படவில்லை. ஆனால் இம்மூலிகை விஷாதிகளுக்குப் பயன்படும் என்ற கருத்துப் புலப்படுகிறது.

சொ. வி:

கந்தையென நாறுகிற கரந்தை – சிவ கரந்தையாகும். இது கந்தைத் துணி போன்று நாறும் தன்மை உடையது என்பது சுட்டப் பட்டுள்ளது. திரு சுந்தர ராமசாமியின் 'ஒரு புளிய மரத்தின் கதை' என்ற நாவலிலும் 'கோடித் துணியை நாருப் பெட்டியிலே ரொம்ப நாளு வச்சுப்போட்டு எடுத்தாலே அடிக்குமே அந்த மணம்' (பக்கம். 13) உடையதாகத் துணி வாசனை வர்ணிக்கப்பட்டுள்ளது.

215. உலத்தியே தூளாக்கி வைத்துக் கொண்டு
ஒருபோது வெருகடிதான் வெந்நீரில் கொள்ளு

அலத்தியே நோயோடும் மண்டலந்தான் தின்ன
ஆச்சரியமாங் கொட்டைக் கரந்தை வாங்க
நலத்தியதோர் மந்திரந்தான் ஏகீசுவராய்
நலம் போகீசு வராய் சீசிந்த
நிலத்திலே நின்றுகொண்டு உருவைச் சொல்லி
நிழலுலர்த்தா யுலர்த்தியே தூளா யாட்டே.

பொ. சு:

நிழலில் உலர்த்திய கரந்தையைத் தூளாக்கி, பூனைத் தடத்து (வெருகடி - வெருகு அடி) அளவு வெந்நீரில் ஒரு மண்டலம் உட்கொள்ள அனைத்து நோய்களும் ஆச்சரியப்படும்படி ஓடி விடும் என்கிறார். ('நாறுங் கரந்தை காயசித்தி நல்கும்' என 'வாத வைத்தியத்துக்காதி' என்ற நூலும் குறிக்கிறது.)

அடுத்து, கொட்டைக் கரந்தை (விஷ்ணு கரந்தை என்றும் கூறப்பெறும்) உச்சாடனத்துக்கு உதவும் முறையை விளக்குகிறார்.

'ஏகீசுவராய் நலம் போகீசுவராய்" என மந்திரம் இயம்பி, கொட்டைக் கரந்தையைப் பறித்து நிழலில் உலர்த்தித் தூளாக ஆட்ட வேண்டும் என உரைக்கிறார்.

வித்து வேசணை

216. ஆட்டியே பழச்சாற்றி லுண்ட போது
ஆசையென்னு மோகமெல்லா முச்சாடனமு மாகும்
நாட்டினே னுச்சாடனத்தை எட்டுவகை சொன்னேன்
நலமான வேசணையின் மூலி கேளு
காட்டினேன் கறுத்தக் காக்கணையின் மூலங்
கார்கிரணஞ் சூரியனைத் தீண்டும்போது
மாட்டினேன் மந்திரந்தான் வாவித்து வேஷணையா
... ... வா வா வென்னே.

பொ. சு:

தூளாக ஆட்டிய அதனை எலுமிச்சம் பழச் சாற்றில் உண்ண மோக உச்சாடனமாகும். இவ்வாறு எட்டுவகை உச்சாடனம் சொன்னேன்.

இனி, வித்து வேஷணைக்குரிய (அட்டகர்மத்துள் சிநேகமான விடத்து விரோதஞ் செய்விப்பதாகிய செயல்.) மூலிகை கூறுகிறேன் என்கிறார்.

'கறுத்தக் காக்கணத்தின் சமூலத்தைப் பறிக்கச் சூரிய கிரகணத்தின் போது "வா வித்து வேசணையா . . . வாவா" என மந்திரம் உச்சரிக்க வேண்டும் என இயம்புகிறார்.

சொ. வி:

நாட்டினே . . . சொன்னேன் -

(1) நரிவெருட்டி - மிருகங்கள், துஷ்டர் உச்சாடனம்
(2) மான்செவிக் கள்ளி - பகைவனுச்சாடனம்
(3) ஆரணமுரிவேர் - பூத உச்சாடனம்
(4) வெண்சுண்டி - மாதர் தன உச்சாடனம்
(5) கண்டங்காரி - மன்னர் உச்சாடனம்
(6) தேள் கொடுக்கு மூலம் - விஷங்கள் உச்சாடனம்
(7) நாறும் கரந்தை - நோய்கள் உச்சாடனம்
(8) கொட்டைக் கரந்தை - மோக உச்சாடனம்

என இவ்வாறு எட்டு மூலிகைகள் எட்டு உச்சாடனத்திற்கு உதவும் முறைகள் உரைக்கப்பட்டுள்ளன.

217. வாவென்று பிடுங்கியே குளிச மாடி
மாகாளி கோட்டத்திற் புதைத்த போது
கோவென்ற மன்ன(ர்) வித்துவேஷணையு மாகும்
கூறான வெள்ளைக் காக்கணத்தை வாங்கப்
பாவென்ற மந்திரந்தான் நிற்சுரா வேஷணயா
பரசுவாக வென்று பூரணத்தில் வாங்கித்
தேவென்ற தெய்வவித்து வேஷணையு மாகும்
சிவசிவா அருக்கனிலே திருகுகள்ளி யாமே.

பொ. சு:

'வாவா' என மந்திரம் இயம்பிப் பிடுங்கிக் குளிசமாடி மாகாளி கோயிலில் புதைத்து வைக்க, மன்னர் வித்துவேஷணையாகும்.

'நிற்சுரா வேஷணையா பரசுவாக" என மந்திரம் கூறி வெள்ளைக் காக்கணத்தைப் பறித்துப் பூரணத்தில் (பௌர்ணமி?) இடத் தெய்வ வேஷணையாகும்.

இனி, திருகுகள்ளியை அருக்கன் நாளன்று கொள்ளும் முறை கூறுகிறார்.

218. கள்ளியென்ற திருகுகள்ளி தனித்து நின்றால்
காப்பதற்குக் கட்டியே ம.டவாய் வாங்க

ஒள்ளியதோர் குக்குடந்தான் பலி கொடுத்து
உருவேற்று சோரசோர பூதவித் தேஷணையா[138]
உள்ளியே சொல்லியதைக் குளிச மாடி
ஒடுமடா பூதமா வேஷணையு மாகும்
வள்ளியெனுஞ் செங்கத் தாரியை வாங்க
மைந்தனே செவ்வாயிற் காப்புக் கட்டே.

பொ. சு:

திருகுகள்ளி தனித்து நின்றால் அதற்குக் காப்புக் கட்டிக் கோழி பலிகொடுத்து, 'சோரசோர பூத வித்தேஷணையா' எனக் கூறிக் குளிசமாட பூத வித்துவேஷணையாகும்.

அடுத்து, செங்கத் தாரியை (மயிலடிக் குருந்து எனும் சிறு மரம்) வாங்கச் செவ்வாய்க் கிழமையன்று காப்புக் கட்ட வேண்டும் என இயம்புகிறார்.

219. கட்டியே செம்மறியைப் பலி கொடுத்துக்
கூடிய சுக்கிர வாரமதி(ல்) மந்திரந்தான்
கொட்டிரத்த வாவித்த சாமுண்டி நாவி
கோதே ஷணி சுவாகா வென்று
வெட்டியே பிடுங்கியதை வைத்துக் கொண்டு
வீறாகத் தலைமாட்டில் . . . போகும்
மட்டியே யாருமில்லை காட்டே ரண்டம்
மாளவெட்டிக் குழியைரொம்பக் கோசலத்தை வாரே.

பொ. சு:

காப்புக் கட்டி, செம்மறியாட்டினைப் பலிகொடுத்து, வெள்ளியன்று, "கொட்டி ரத்த வாவித்த சாமுண்டி நாவி கோதேஷணி சுவாகா" என மந்திரம் கூறி, வெட்டிப் பிடுங்கி வந்து தலை மாட்டில் வைக்க அரசர் வித்து வேஷணையாகும்.

அடுத்து, காட்டாமணக்கினை வெட்டி அதன் உட்கூடான குழல் பகுதியில் கோமியத்தை (பசு மூத்திரம்) நிரம்ப விட வேண்டும் என்கிறார்.

---

138. "பூதோச்சாடன கதி றோதி சுவாகா" என மூலத்தில் இருந்தது. யாப்புக்கும், பொருட் பொருத்தத்துக்கும் இயையாமை கண்டு செ. I இன்படி திருத்தி எழுதப்பட்டது.

220. வார்த்ததற்கு மந்(திரந்)தான் ஏரண்ட யிந்து
வான்முகீ யீசுவரி பூதம்
கோர்த்ததற்குக் கட்டவே பூதப் பிரேதங்
கொத்தோடே காடுவிட்டு ஓடிப் போகும்
கார்த்ததற்குக் கீழ்காய்க்குக் காப்புக் கட்டிக்
கடியபுதன் கிழமையிலே காப்புக் கட்டே.[140]

பொ. கு:

கோசலம் நிரப்பிய காட்டாமணக்குக் குழல் பகுதியை "ஏரண்டியிந்து வான்முகீ யீசுவரி சர்வம் பூதம்" என மந்திரம் உச்சரித்துக் கட்டிக்கொள்ளப் பூதப் பிரேதங்கள் கூட்டமாய்க் காடு விட்டு ஓடிப்போகும் என்கிறார். (மூலிகைகள் தேடியும் யோக நிலை சாரவும் கருதி, வனம் நுழையும் சித்தர்களுக்கு இன்னல் நல்கும் பூத, பிசாசுகளை அங்கிருந்து விரட்ட இத்தகு மூலிகை, மந்திர முறைகள் அன்னாருக்குத் தேவைப்பட்டன).

அடுத்து, கீழ்காய் நெல்லி பிடுங்க (கீவா நெல்லி) புதன்கிழமையன்று காப்புக் கட்ட வேண்டும் என்கிறார்.

சொ. வி:

கீழ்காய் – கீழ்காய் நெல்லி. கீழ்வாய் நெல்லி என்றும் அழைக்கப்பெறும். பொதுவாக நன்செய் நெல் வரப்புகளில் புளியிலை வடிவில் பசிய நிறத்துடன் காணப்படும். இம்மூலிகையை அதிகாலை வேளையில் பசும்பாலுடன் சேர்த்தரைத்து ஏழு நாட்கள் பத்தியத்துடன் உண்ண, மஞ்சட் காமாலை வியத்தகு முறையில் பூரண குணமடையும். 'கீவா நெல்லி' எனப் பேச்சு வழக்கில் அழைக்கப்படும்.

221. கிழமைவிட்டுக் குருநாளில் பிடுங்கும் போது
கிளர்தேங்கா யடித்தங்கே மந்திரந்தா னோது
அளமை பெறும் பூமி வித்தேஷணி
அஞ்சனி மூலி சகல சர்வ
பழமைபல பதார்த்தந் தெரியசுவாகா வென்று
பதறாமல் கருக்கியேமுன் தேங்கா நெய்யில்
வளமைபெறக் குழப்பியே கையில் போடு
மண்ணில்வைத்த பொருள் காணும் மறைந்தி டாதே.

140. இந்த இறுதி வரியில் சொற்கள் மறித்து வரலான் பொருள் சிறக்கவில்லை. பாடலில் 3 வரிகளே உள்ளதால் இறுதி ஒரு வரி விடப்பட்டிருக்கக் கூடும். அது இருந்திருப்பின் பொருள் விளக்கமுறும்.

பொ. சு:

புதன் கிழமை அன்று காப்புக் கட்டி வியாழன் அன்று பிடுங்க வேண்டும் என்கிறார்.

அவ்வாறு பறிப்பதற்கு முன்னர் தேங்காய் உடைத்து, 'அளமை பெறும் பூமி வித்தேஷணி அஞ்சனி மூலி சகல சர்வ பழமைபல பதார்த்தந் தெரிய சுவாகா" என மந்திரம் இயம்பிப் பறித்துப் பக்குவமாய்க் கருக்கி, தேங்காய் எண்ணெயில் குழப்பிக் கையில் இட்டுப் பார்க்க, மண்ணில் உள்ள பொருட்களை மறைவின்றிப் பார்க்கலாம் என்கிறார். -

சொ. வி:

கிழமை . . . . . போது – கிழமை எனில் 'வாரம்' என்ற பொருளும் உள்ளதால் ஒருவாரம் விட்டு மறுவாரம் வியாழன் பறிக்க வேண்டும் என்று கொள்ளலாம்.

குறிப்பிட்ட மூலிகைக்கு ஒரு கிழமை அன்று காப்புக் கட்டி மறு கிழமை அதனைப் பறித்தமைக்குக் காரணங்கள் இருக்க வேண்டும்.

அதன் வளர்ச்சிச் செழிப்பைக் கணித்தல் பொருட்டும், ஒரு வேளை கண்ணுக்குப் புலப்படா நோய்க் கிருமிகள் அச்செடியைத் தாக்கி இருப்பின், அது தெளிவாகத் தெரிதற்கும் இடைவெளி கொடுத்தனர் என அறியலாம்.

மருந்துக்கெனக் குறித்து வைத்த செடியை வேறு யாரும் வேறு காரணங்களுக்காகப் பறித்து விடாமல் காக்கவும் காப்புக் கட்டல் துணை புரிந்தது.

வளமைபெற . . . . மறைந்திடாதே – காணமால் போன பொருட்களைக் கையில் மைதடவிக் கண்டுபிடிக்கும் வழக்கம் இன்றும் கிராமப்புறங்களில் காணப்படுகின்றது.

ஆனால் தக்கவர்களால், தக்க முறைப்படி கையாளப்பட்டு, உண்மையை நிலை நிறுத்தும் தன்மையில் இக்கண்டறிதல்கள் வெளிப்படாத காரணங்களால் 'மூடநம்பிக்கை' என்ற வரிசையில் ஒதுக்கப்பட்டு விடுகின்றன. தீயவற்றுக்கும், சுயநலத்துக்கும் மகத்தான உண்மைகள் பயன்படுத்தப்படும்போது அவ்வுண்மைகளே அவற்றுக்குப் பலியாகி விடுகின்றன.

இந்நூலாசிரியரும் இப்பாடலில் மை தயாரித்தல் குறித்த விபரங்களை விரிவாக விளக்கவில்லை என்பது தெளிவாகத் தெரிகிறது.

222. மறைந்திடா தாடுதின்னாப் பாளை வாங்க
மந்தநாள் காப்பு வைத்து அருக்கநாளில்
குறைந்திடா துள்ளுமறிப் பலி கொடுத்துக்
கூறுசர்வ வித்துவேஷணி பதார்த்தந் தன்னை
உறைந்திடாதே தெரிய சுவாகா வென்று
ஓதியே வெட்டுண்ணி யோடு தன்னி(ல்)
அறைந்திடாப் பொடிசெய்து (ஆடு) தீண்டாப் பாளை
அப்பனே சட்டிக்குள் கருக்கி வையே.

பொ. சு:

ஆடு தின்னாப் பாளைக்கு மந்தவாரம் எனப்படும் சனியன்று காப்புக்கட்டி, ஞாயிறு பறிக்க வேண்டும். பறிக்கு முன்பு இளம் ஆட்டுக் குட்டியைப் பலிகொடுத்து, "சர்வ வித்துவேஷணி பதார்த்தந் தன்னை உறைந்திடாதே தெரிய சுவாகா" என்று மந்திரம் உச்சரித்துப் பறித்துப் பொடி செய்து வெட்டுண்ணி ஓட்டில் (முறிபட்ட ஓடு?) இட்டுக் கருக்க வேண்டும் என உரைக்கின்றார்.

223. வைத்ததனைப் புத்துத்தேன் கொண்டு ஆட்டி
வாழ்கரத்தில் தீட்ட அஞ்சனமு மாகும்
வைத்ததனை ஆனைக்கால்[141] சுனையை வாங்கி
மாவேலியின் பாஷாணம் நேரா யாட்டி
வைத்ததனை யார்மேலும் போட்டா யானால்
வாழ்மனையை விட்டேகிப் போவார் பின்னும்
வைத்ததனைக் குட்டநோய்க் கீந்தா யானால்
மைந்தனே பதினெட்டுந் தீருங் காணே.

பொ. சு:

கருக்கிய அந்த ஆடு தின்னாப் பாளையின் சமூலத்தைப் புதிய தேன் விட்டு ஆட்டிக் கையில் தடவ (221 ஆம் பாடலில் குறிப்பிடப்பட்டுள்ளது) அஞ்சனமாகும் என்கிறார்.

'ஆனைக் கால் சுனை' (ஆனை வணங்கி எனும் நெருஞ்சில்) என்ற மூலிகையைப் பறித்து அதற்குச் சமமாக, மாவேலியின் பாஷாணம் சேர்த்து ஆட்டி, அதனை யார் மீதாவது போட்டுவிட வாழுகின்ற வீட்டை விட்டு அவர் சென்று விடுவார். இதே மருந்துச்

141. பா. பே. "பூனைக்காய்". செ. I.

சரக்கைக் குட்டநோய்க்குத் தர, பதினெட்டுக் குட்ட நோயும் நீங்கிவிடும் என இயம்புகிறார்.

சொ. வி:

வைத்ததனைக் குட்டநோய்க் கீந்தாயானல் - ஒரே மருந்துச் சரக்கை தீமை, நன்மை என்ற இரண்டுக்கும் பயன்படுத்த இயலுகின்றது.

ஒருவரது வாழ்க்கையை அழிக்கப் பயன்படும் சரக்கு ஒருவருக்கு வாழ்க்கையை அளிக்கவும் பயன்படுகிறது.

அணு ஆற்றல் கண்டறிப்பட்டதும் உலக அழிவுக்கு வழி பிறப்பித்து விட்டனர் என அறிஞர்கள் அலறினர். ஆனால் நற்செயல்களுக்கே அச்சக்தியைப் பயன்படுத்த வேண்டும் என வேண்டி, தம் பெயரில் ஆண்டுதோறும் பரிசு தரவும் ஏற்பாடு செய்தார் நோபெல்.

எந்த ஒரு மகத்தான கண்டுபிடிப்பிலும் நன்மை, தீமை இரண்டும் அடங்கியே உள்ளது. நன்மைக்குப் பயன்படுத்தினால் உலகம் உவகையுறும்; வளர்ச்சி பெறும். தீமைக்குப் பயன்படுத்தினால் அல்லலுறும்; அழிந்து விடும்.

ஆகர்ஷணம்

224. காணவே ஏசணைக்கு லெட்டுஞ் சொன்னேன்
காசினியி லாகிருஷ்ண மூலி கேளு
தோணவே துடரிக்கும் அருக்க நாளில்
சோர(ா)மல் சரடுகட்டி விஞ்சை யோது
பூணவே மிருகா கர்ஷணி மிருகேசுபரி
புகழ்சுவாகா வென்றுசொல்லிப் பிடுங்கி வந்து
ஊணவே மோதிரம்போல் போட்டுக் கொண்டு
ஓடிவரு மிருகத்தை வாவா வென்னே.

பொ. சு:

வித்துவேஷணைக்கு உள்ள எட்டு மூலிகைகள் பற்றிக் கூறினேன்.

ஞாயிற்றுக் கிழமை அன்று கிருஷ்ணமூலி எனும் துளசிக்கு காப்புக்கட்டி மந்திரம் ஓதவேண்டும். "மிருகா கர்ஷணி மிருகேசுபரி புகழ் சுவாகா" என உச்சரித்துப் பிடுங்கி வந்து கையில் மோதிரம் போல் போட்டுக் கொண்டு ஓடிவரும் மிருகத்தை வா வா என அழைக்கலாம் என இயம்புகிறார்.

சொ. வி:

காணவே . . . சொன்னேன் – வித்துவேஷணைக்கு உரிய (மன்னர், தெய்வம், பூதம், நோய் வித்து வேஷணைகள் (1) கருங்காக்கணம் (2) வெண்காக்கணம் (3) திருகுகள்ளி (4) செங்கத்தாரி (5) காட்டேரண்டம் (6) கீழ்காய் நெல்லி (7) ஆடுதின்னாப் பாளை (8) ஆனைக்கால் சுனை ஆகிய எட்டு மூலிகைகள் பயன்படும் விதம் விளக்கப்பட்டுள்ளது.

225. வாவென்றால் மிருக ஆகர்ஷணமு மாகும்
வளர்சேரும் ரவியிலே காப்புக் கட்டி
பாவென்ற பதினஞ்சு தினமு நீதான்
பண்பாகப் பூசித்து வாவு நாளில்
கோவென்ற உள்ளொட்டி பிறவொட்டி தன்னைக்
குளிரவே பொங்கலிட்டு மந்திரமுஞ் சொல்லித்
தேவென்ற குக்குடத்தைப் பலி கொடுத்துத்
திறமுடைய சுரோணிதத்தைச் செப்பு றேனே.

பொ. சு:

'வாவா' என அழைக்க, ஓடி வந்த மிருகம் ஆகர்ஷணமாகும். உள்ளொட்டி, பிறவொட்டிக்கு ஞாயிற்றுக்கிழமை காப்புக் கட்டி, அதனின்று பதினைந்தாம் நாள்வரை பூசித்து, உவா நாளில் (அமாவாசை) பொங்கலிட்டு, மந்திரம் சொல்லிக் கோழியும் பலிகொடுத்துப் பறிக்க வேண்டும். அடுத்து, சுரோணிதம் பற்றிச் சொல்லுகிறேன் என்கிறார்.

சொ. வி:

சுரோணிதம் – சுக்கிலத்தோடு கலந்து சிசு உற்பத்திக்குக் காரணமாகும் மகளிர் இரத்தம். (மாதவிடாய்)

226. சுரோணிதஞ்சேர் சீலையிலே வைத்து வேரைச்
சுருளாமல் திரியாக்கி நிம்ப நெய்யில்
சுரோணிதஞ்சேர் விளக்கேற்றிச் சாம மட்டும்
தோகையரை வரவேண்டி நினைத்த போது
சுரணைதப்பி நம்மிடத்தே வந்து சேர்வாள்
சுருதியாய்ச் சிறுமுன்னை[143] மூலம் வாங்கச்
சுரோணிதஞ்சேர் கூன்பாண்டம்[144] பலிகொடுத்துச்
சோமனுட கிரணத்தில் தியானங் கேளே.

143. பா. பே. சிறுபூளை, செ. I.

144 பா. பே. கூழ்பாண்டம், செ. I.

பொ. சு:

சுரோணிதஞ் சேர்ந்த சீலையில் இந்த வேரையும் வைத்துத் திரிசெய்து, சுரோணிதம் கலந்த வேப்பெண்ணை விட்டு விளக்கேற்றிச் சாமம் முழுவதும், வேண்டிய அப்பெண்ணை நினைத்து 'அவள் வரவேண்டும்' என மனத்துள் திண்ணமாக எண்ணிய போது, தன் நினைவின்றி அவளும் அவ்விடத்திற்கு வந்து சேர்வாள்' என்கிறார்.

அடுத்து சிறுமுன்னை மூலம் வாங்க, வளைந்த மண்பாண்டத்தைப் பலியாகக் கொடுத்து, பௌர்ணமி அன்று (சந்திர கிரகணம்?) மந்திரம் உச்சரிக்க வேண்டும் எனவும் இயம்புகிறார்.

சொ. வி:

தோகையரை . . . வந்து சேர்வாள் – முன்னால் ஒருவர் தெருவில் நடந்து சென்று கொண்டிருக்கும் பொழுது, அவர் திரும்பித் தன்னைப் பார்க்க வேண்டும் என்று மனத்தில் உறுதியாக நினைத்தால் அதன்படி அவர் திரும்பிப் பார்ப்பார். மனத்தின் சக்தி அவரைத் தாக்கித் திரும்பவைக்கும் என இன்றைய மனோவியல் அறிஞர்கள் கருத்துத் தெரிவிக்கின்றனர்.

தூரத்தில் உள்ள ஒருவர் தன்னைக் காண, உடனே வர வேண்டும் என மனத்தில் திண்ணமாய் எண்ண, அவ்வெண்ணம் அவரைச் சென்று அடைந்து அவரை வரவழைக்கும்[145] என்றும் ஆய்ந்து அறிவித்துள்ளனர். (கோப்பெருஞ்சோழன் - பிசிராந்தையார் நட்பும், நடந்ததும் நினைத்தற்குரியது).

தான் நினைந்த பெண்ணை வரவழைக்க மனத்துள், அவ்விருப்பத்தை உருப்போடல் மட்டுமின்றி அவளது உடலினின்று வெளியேறிய சுரோணிதஞ் சேர்ந்த சீலை, மூலிகைவேர் ஆகியவற்றையும் பயன்படுத்தி, அதற்கு மேலும் வலுவூட்டி இருக்கின்றனர் எனத் தெரிகிறது.

227. கேள் சர்வா கருஷ்ணி சுவாகா வென்று
கிரிகிச்சு நிழலுலர்த்தித் தூளா யாட்டி
வேளப்பா வெள்ளெருக்கம் பஞ்சில் வைத்து
விளக்கேற்றி வைத்திருக்கப் பார்த்த தெய்வம்
வாளுயர்ந்த வாகனமு மேறிக் கொண்டு
வந்துநிற்கு முன்முன்னே மைந்தா பாரு

---

145. 'மனோசக்தி' என்ற நூலிலிருந்து பெற்ற கருத்துகள்.

சூழவே ஆர்வந்து பார்த்தாலுந்தான்
தோற்றுமடா அவரவர்கள் முன்னே தானே.

பொ. சு:

"சர்வ ஆகருஷ்ணி சுவாகா" என மந்திரம் தியானித்துப் பறித்த சிறுமுன்னையை, நிழலில் உலர்த்தித் தூளாக ஆட்டி, வெள்ளெருக்கம் பஞ்சில் தோய்த்து விளக்கேற்றி வைத்திருக்கத் தெய்வதரிசனம் கிட்டும் என்கிறார். (தெய்வ ஆகர்ஷணம் உண்டாகும் என்பதாம்).

228. தோற்றுமடா திருமேனி தனித்து நின்றால்
சுத்திசெய்து பால்பொங்க லிட்டுப் பின்னும்
மாற்றமுடன் கலைக்கொம்பால்[146] கெல்லிக்கொண்டு
மந்திரந்தான் துட்டமிரு காகர்ஷணி
ஏற்றமுயர் விசுவாமித்திர சுவாகா சுவாகா
என்றுசொல்லி வாங்கியே வாயிற் போட
ஆற்றமுடன் மிருகங்கள் தன்னை நோக்கி
அழைத்துடனே மிருகா கருஷ்ணமு மாமே.

பொ. சு:

துளசி தனித்து நின்றால் அதனைச் சுத்தி செய்து, பால் பொங்கலிட்டு மான் கொம்பின் உதவியால் பிடுங்கி, "துட்ட மிருகா கருஷ்ணி ஏற்றமுயர் விசுவாமித்திர சுவாகா சுவாகா" என்று மந்திரம் கூறி வாயில் போட்டு மிருகங்களை 'வா வா' என அழைக்க அவை ஆகர்ஷணமாகும் என்கிறார்.

224ஆம் பாடலில் இதே மூலிகை இதே மிருக ஆகர்ஷணத்துக்கு உரைக்கப்பட்டுள்ளமை கவனிக்கத்தக்கது.

229. ஆமப்பா கோகுல அட்டமிநாள் வெள்ளி
ஆகிருஷ்ணந் தானும் பிறந்த வாரம்
ஓமப்பா யிந்நாளில் தொட்ட தெல்லாம்
உதவுமடா வுடன்சித்தி காப்புக் கட்டி
வேமப்பா அஷ்ட மியி னன்று
விளம்புகிற மந்திரந்தான் விளம்பக் கேளு

146. மூலத்தில் 'கலங்கொம்பால்' எனத் தவறாக இருந்ததை 'கலைக்கொம்பால்' என செ. I. கண்டு திருத்தினேன்.

சேமப்பா பட்சி பட்சி ஓம்பட்சி
சிவபட்சி ராசபட்சி செயராச கருடன்ராச
... ...
மாதங்கி வரதவரத சுவாகா வென்னே.

பொ. சு:

'கோகுலாஷ்டமி' எனும் கோகுல அட்டமி நாள் வெள்ளிக் கிழமை கிருஷ்ணன் பிறந்த நாள் ஆகும். இந்த நல்ல நாளில் தொட்டது அனைத்தும் சித்தியாகும்.

இந்நாளில் கிருஷ்ணமூலி எனப்படும் துளசிக்குக் காப்புக் கட்டி 'பட்சி பட்சி ஓம் பட்சி சிவபட்சி ராசபட்சி செயராச கருடன்ராச மாதங்கி வரத வரத சுவாகா" என மந்திரம் செபிக்க வேண்டும் என்கிறார்.

230. **வரதமென்று சொல்லி(யே) மூலி வாங்கி**
மைந்தனே சிரசின்மேல் வைத்துக் கொண்டு
விரதத்தில் அசுரர்களைக் கையைக் காட்டில்
விரும்பியவர் சொன்னபணி எல்லாங் கேட்பார்
பரதத்தில் சிறியநங்கை சமூலம் வாங்கப்
பாடுகிறேன் கரிநாள்[148] காப்புக்கட்டி
சிரதத்தி லுருமத்தில் வாங்கு மைந்தா
சிறப்பான[149] மந்திரத்தைச் சொல்லக் கேளே.

பொ. சு:

மந்திரம் ஓதி மூலிகையைப் பறித்துச் சிரசில் வைத்துக் கொள்ள, அசுரர்களை நாம் விரும்பியபடி பணி செய்ய வைக்கலாம் (அசுரர் - தீயசக்தியின் குறியீடு. தீய சக்திகளை வெல்லலாம் என்பது பொருளாம்)

அடுத்து, சிறிய நங்கை (சிறியா நங்கை என்றும் அழைக்கப்படும்) சமூலம் வாங்கக் கரிநாளில் (தீயநாள்) காப்புக் கட்டி நண்பகலில் பறிக்க வேண்டும் என்கிறார். என்ன மந்திரம் இயம்ப வேண்டும் என அடுத்த பாடலில் விளக்குகிறார்.

---

148. பா. பே. "குருநாள்" செ. I.
149. மூலத்தில் 'இயல்பான' என இருந்ததை 7-ஆம் வரி முதற்சீருக்கு இயைய 'சிறப்பான' என மாற்றினேன்.

சொ. வி:

வரதமென்று . . . . . கேட்பார் – துளசியை 40 நாட்கள் முறைப்படி உண்டுவர 4448 வியாதிகளையும் தீர்க்கும். இதன் அதீத சக்தி உணர்ந்தே இறைவனோடு சம்பந்தப்படுத்தி வைத்தனர். மதக் காழ்ப்பை இதன்மீது காட்டாமல் வைணவர் கருந்துளசியையும், சைவர் வெண்துளசியையும் தமது தனிச்சொத்தாகக் கருதி வளர்த்தனர்.

சகல நோய் தீர்க்கும் துளசியைக் கிருஷ்ணனது வடிவில் வணங்கியமை கருத்தில் கொள்ளத்தக்கது.

231. **சொல்லசர்வ பிசாகர்ஷணி சர்வ மோகினி**
சூழ்சர்வா கிருஷ்ணி வாவா வென்று
மெல்லதனைக் கிரகித்துக் குளிச மாடி
வெறுவாயி லடக்கியே யாவ ரேனும்
வல்லாரை வாவெனத் தலைசுத்தி நொடிக்க
வந்தவர்கள் தலை சுத்தி யாடுவார்கள்
சொல்லாத அழுகண்ணி மூலம் வாங்க
குளிர்சோம வாரநாள் காப்புக் கட்டே.

பொ. சு:

சிறிய நங்கை சமூலத்திற்கு "சர்வ பிசாகர்ஷணி சர்வ மோகினி சூழ்சர்வா கிருஷ்ணி வாவா" என மந்திரம் ஓதிப் பறித்துக் குளிசமாடி, வெறும் வாயில் அடக்கிக் கொண்டு, எத்தகு வல்லவரையும் கைச்சொடுக்கால் 'வாவா' என அழைக்க, அவர்கள் உடனே வந்து தலைசுத்தி ஆடுவார்கள். (மோகவசப்பட்டு மயங்கி ஆடலைக் குறிக்கும்).

அடுத்து அழுகண்ணி மூலிகை வாங்க, திங்கட்கிழமை காப்புக் கட்ட வேண்டும் என உரைக்கிறார்.

சொ. வி:

அழுகண்ணி மூலம் – 'எப்பொழுதும் அழுது கொண்டிருக்கும் (நீர்சிந்தும்) மூலிகையான அழுகண்ணி கற்பனையானது எனப் பலகாலம் கருதி வந்தனர். விஞ்ஞான ஆராய்ச்சியும், தம்பப்பட்டி, ஸ்ரீவில்லிபுத்தூர் ஏட்டுச் சுவடிகளும் இம்மூலிகை பற்றிய தெளிவை

உண்டாக்கிக் கற்பனை என்ற கருத்தை அறுத்தன. ஆயுள்வேதம் கூறும் 'உருதந்தி', விஞ்ஞானம் இயம்பும் 'திரோஸிரோ' (Drosera) தங்கத்தின் சுருக்கு மூலிகையான 'பனிநாக்கி' ஆகிய அனைத்தும் அந்த அழுகண்ணியே என்றும்' காயகல்பம் செய்யப் பயன்படுத்தப்படும் உயிர்நாடியான மூலிகை இதுவே என்றும், இதன்மூலம் செய்யப்படும் காயகற்பம் ஈளை, இருமல், ஆஸ்துமாவை வியக்கத் தக்க அளவில் குணப்படுத்தும் என்றும் இன்றைய அறிஞர்கள் முழுமையாக ஒத்துக் கொண்டுள்ளனர்." (கருத்துகள். இரா. குமாரசுவாமி, 'அழுகண்ணியும் ஆஸ்துமாவும்.')

232. கட்டுவது மந்திரந்தான் சர்வசித்த மோகினி
. . . . . சர்வா கிருஷ்ணி
கட்டுவது காம்பலி சுவாகா வென்று
கருத்துடனே ஆண்கழற்சிக் குள்ளே வைத்துக்
கட்டுவது வாயிலிட்டு அழைத்த பெண்ணை
கண்மூடி யழைக்குமுன்னே வருவாள் தானே.

பொ. சு:

அழுகண்ணிக்கு "சர்வசித்த மோகினி . . . . . சர்வா கிருஷ்ணி சாம்பவி சுவாகா" என மந்திரம் ஓதிப் பறித்து, ஆண் கழற்சிக் காய்க்குள் வைத்து வாயிலிட்டு, அழைக்க விரும்பும் பெண்ணை அழைக்கக் கண் மூடு முன் வருவாள் என்கிறார். (பெண் வசியம் ஆகும் என்பதாம்).

233. வருவதுதான் மாத்திரமோ சமூலங் கொண்டால்
மைந்தனே திங்களொன்றில் வச்சிர காயம்
பொருவதற்கு வாருதிக்கும் குன்ற னோடும்
பூதமுதல் ராட்சதரும் பொறிப்போ லாடும்
மருவலர்க ளாருமில்லை கரத்தான் போற்று(ம்)
மலைஏது கடலேது மாற்ற லாகும்
பருமுகத்தன் கரிமுகத்த னருளி னாலே
பரப்புமெத்த அழுகணியின் பான்மை தானே.

பொ. சு:

பெண்டிர் மயங்கி அவ்வாறு வருவது மட்டுமல்ல. இந்த அழுகண்ணியின் சமூலத்தை உட்கொண்டால் ஒரு மாதத்தில் வச்சிர

உடல் கிட்டும். பின் கடலும், மலையும் பூதமும் இராட்சதரும் அவர் கைக்குச் சிறு பொறிக்குச் சமம். மலை, கடல் என்ற வேறுபாடு இன்றி ஒன்றினை மற்றொன்றாக மாற்றும் வல்லமையும் அடைவர். இயற்கையை வெற்றி கொள்வர் என்பதாம். (மலைமேல் பறத்தல், கடல்மேல் நடத்தல் ஆகிய சித்தி குறிக்கப்பெறுகிறது. இயற்கைச் சக்தியாகிய கடலை வெற்றி கொள்வர் எனுமிவ்விடத்தில் வடிவேலெறிந்த பாண்டியன் வரலாறு நினைத்தற்குரியதாக உள்ளது).

பெரிய கரிய முகத்தினை உடைய ஆனைமுகன் அருளினாலே அழுகண்ணியினால் கிட்டும் சிறப்புகள் மிகப் பல என்கிறார்.

பேதனம்

234. தானென்ற ஆகிருஷ்ணந் தன்னைக் கேளு
சாற்றினே னெட்டுவகை மூலி யப்பா
ஊனென்ற பேதனமாம் மூலி தன்னை
உரைக்கிறேன் கோழியுட அவரை வாங்க
வானென்ற சோமநாள் காப்புக் கட்டி
மாறாகச் சித்திரையில் வாங்கும் போது
தேனென்ற மந்திரத்தால் அரிஅரதேவி பிரமதேவி
சர்வதேவியே தீரென்று கொண்டு வாவே.

பொ. சு:

ஆகர்ஷணத்துக்கு உள்ள எட்டுவகை மூலிகைகள் பற்றிச் சொன்னேன். இனி பேதனத்துக்கு உரிய மூலிகைகளை உரைக்கிறேன். கோழியவரைக்குத் திங்களன்று காப்புக் கட்டி, சித்திரை நட்சத்திரமன்று பறிக்க வேண்டும். பறிக்குமுன் "அரிஅரதேவி பிரமதேவி சர்வதேவியே தீர்" என மந்திரம் உச்சரிக்க வேண்டும் என உரைக்கிறார்.

சொ. வி:

சாற்றினேன் . . . . மூலியப்பா – கிருஷ்ண மூலி, (துளசி) உள்ளொட்டி, பிறவொட்டி, சிறுமுன்னை, திருமேனி, (துளசி) சிறியநங்கை, அழுகண்ணி ஆகிய ஆறு மூலிகைகளே கூறப்பட்டுள்ளன. மிருக, பெண்டிர், தெய்வ, அசுர இயற்கை ஆகர்ஷணங்கள் உரைக்கப்பட்டுள்ளன.

கோழியுட அவரை – கோழியவரை அல்லது கோழியாவரை எனும் பெருங்கோழியவரைக் கொடி.

235. கொண்டுவந்து மனையில்[151] வைக்க தெய்வ பேதம்
கூறாகத் தலையில் வைக்கத் தலங்கள் பேதம்
திண்டுபுரி செம்பசலை[152] வாங்கும்போது
திருவாதிரையி னன்று காப்புக் கட்டி
செண்டுகா சீறியுங் கீறியுங் சீறியு மென்று
சிறக்கவே சமூலம் வாங்கி வந்து
உண்டுபார் பட்சமொன்ற காய பேதம்[153]
உத்தமனே வச்சிரந்தா[154] லுடம்பேதம் பாரே.

பொ. சு:

கோழியாவரையை முன் பாடலில் கூறியபடி மந்திரம் உச்சரித்துப் பறித்துக் கொணர்ந்து வீட்டில் வைக்கத் தெய்வ பேதமும், தலையில் வைக்கத் தலங்கள் பேதமும் உண்டாகும் என உரைக்கிறார்.

அடுத்து செம்பசலையைப் பறிக்கும் வழி முறைகளை விளக்குகிறார்.

திருவாதிரை அன்று காப்புக்கட்டி "சீறியுங் கீறியுங் சீறியும்" எனமந்திரம் ஓதி, சமூலம் பறித்துப் பதினைந்து நாட்கள் உண்ண காயபேதம் உருவாகி வச்சிர உடல் கிட்டும் என இயம்புகிறார்.

236. பேதனமாம் விசாகத்தில் வட்டத் துத்தி
பெருவேரில் நூல்கட்டிச் சோதி நாளில்
பேதனநல் மந்திரந்தான் லலலல லலலல வென்று
பிடுங்கியதைக் காடியால் ஆட்டிக்கொண்டு
பேதனமாங் காலிலே தடவி நீயும்
பெருந்தீயில் மிதித்திடவே நடக்க லாகும்
பேதனமாஞ் சங்கம்வேர் வெள்ளியன்று
பிடுங்குதற்குச் சேவலங்கே பலியி டாயே.

பொ. சு:

விசாகத் திருநாளன்று வட்டத் துத்தியின் பெருவேரில் (ஆணி வேர்) நூல் காப்பாகக் கட்டி, சுவாதி நாளன்று "லலலல லலலல" என மந்திரம் இயம்பிப் பறித்துக் காடியால் ஆட்டிக் காலில் தடவித்

151, 152, 153, 154. மூலத்தில் 'மலை'. 'செம்பசனி', 'காம பேதம்', 'வச்சிருந்தா', என இருந்த சொற்கள் பொருள் சிறக்காமை கருதி, செ. I. இல் கண்டபடி இவ்வாறு திருத்திக் கொள்ளப்பட்டன.

தீயில் நடக்கலாம் என்கிறார். இன்றும் கோயில் திருவிழாக்களில் 'பூக்குழி மிதித்தல்' என நெருப்பில் நடத்தல்' நிகழ்ந்து வருதல் நினைத்தற்குரியது.

அடுத்து, சங்கின் வேரை வெள்ளிக் கிழமை அன்று பிடுங்கச் சேவல் பலிகொடுக்க வேண்டும் என உரைக்கிறார்.

237. பலியிட்டுத் தூபமுடன் தீப மேற்றிப்
பாயாசம் நேமிச்சு மந்திரத்தைச் சொல்லு
பலியிட்டுப் பூதபேதி மாத்ரபேதி யென்று
பேரிட்டு வாங்கியே வைத்துக் கொண்டு
கலியிட்ட பேய்பூத மாறாதே நின்றால்
காட்டடா பேதனமாய்க் காணா தோடும்
பொலியிட்ட மாவிலங்கு தனித்து நின்றால்
பூசைசெய்து வெள்ளெருக்கு நாரு வாங்கே.

பொ. சு:

சங்கவேருக்குச் சேவல் பலியுடன் தூப, தீபமிட்டு, பாயாசமும் படைத்து, "பூதபேதி மாத்ரபேதி" என மந்திரமும் செபித்து வேரினை வாங்கி, தீச்சக்திகொண்ட பேய், பூதம் மாறாமல் நின்றால் இதனைக் காட்ட, பேதனமாகிக் கண் காணாது ஓடி விடும் என உரைக்கிறார்.

அடுத்து, தனித்து நிற்கும் மாவிலிங்குக்குப் பூசை செய்ய வேண்டும் என்கிறார்.

வெள்ளெருக்கு நார் வாங்கிக் கொள்ள வேண்டும் என உரைக்கிறார். ஏன் என்பதை அடுத்த பாடலில் இயம்புகிறார்.

சொ. வி:

மாவிலிங்கு – மாவிலங்கு. மாவுலிங்கு என்றும் அழைக்கப் பெறும். இதன் பட்டை குழந்தைகள் மாந்தத்தை அறுக்கும் நல்ல மருந்து என்றும், சன்னி, சுரங்களையும் இதன் கசாயம் எளிதில் நீக்கும் என்றும், இதன் துளிர் இலைகளை அரைத்து மோரில் சாப்பிட்டு வர, இரத்த மூலம் குணமாகும் என்றும் 'பதார்த்தகுண போதினி' இதன் குணநலன்களை விளக்குகின்றது.

238. வாங்கியே சீதேவி செங்கழுநீர்ப் பூவால்
மாவுலிங்குக் கர்ச்சித்துக் காப்புக் கட்டி
பாங்கியே மதுவோடே சுத்தி கூடப்
படைத்துரெம்ப மந்திரந்தான் பாடு பாடு

சாங்கியே சடகார வணி சகந்திரி
சூலிஉம் பட்டுடென் . . றேதான்
ஓங்கியே பிடுங்கியந்த மூலந் தன்னை
உத்தமனே சிரசிலே வைத்துக் கொள்ளே.

பொ. சு:

மாவிலங்குக்குச் சீதேவி எனும் செங்கழுநீர்ப்பூ தூவிப் பூசித்து, வெள்ளெருக்கு நாரினைக் காப்பாகக் கட்டிச் சுத்திசெய்த மது படைத்துச் "சாங்கியே சடகார வணி சகந்திரி சூலி உம்பட்டு" என மந்திரம் ஓதிப் பறித்துத் தலையில் வைத்துக் கொள்வாயாக என்கிறார்.

239. **சிரசிலே வைக்க அய்யன்முதற் துர்க்கைகாளி**
சேரவி ழுந்து ஓடுமடா திக்குக் கெட்டு
நி(ர)சையுள்ள நீராமேல் நெருப்பு வாங்க
நீமகனே கன்னிநூல் காப்புக் கட்டி
பிரசையென்ற தினைமாவுந் தேனும் நல்கிப்
பெலியென்ன செஞ்சேவல் மந்திரமோ கேளு
சரசக்கினிரூபி அக்கினியுச்சாரி சர்வக்கிரக வாணி
சர்வேஸ்வரி சுவதி நமாவென்று சாத்தே.

பொ. சு:

தலையில் வைத்துக் கொள்ளத் துஷ்ட தேவதைகள் எனப்படும் அய்யனார், துர்க்கை, காளி ஆகியவை திசை கெட்டு ஓடிவிடும் என்கிறார். (இது தெய்வ பேதனமாகும்).

அடுத்து நீராமேல் நெருப்பு எனும் மூலிகை வாங்க, தாமரை நூலால் காப்புக் கட்டி தினை மாவும் தேனும் படைத்து, செந்நிறச் சேவலைப் பலிகொடுத்து "சரசக்கினிரூபி அக்கினி யுச்சாரி சர்வக் கிரக வாணி சர்வேஸ்வரி நமா" என மந்திரம் இயம்ப வேண்டும் என்கிறார்.

சொ. வி:

நீராமேல் நெருப்பு – கொட்டைப் பாசியாகும். நீர்க்கரைமேல் வளரும் இது வெப்பகாந்தி உடைத்து. அது கருதிக் காரணத்துடன் பரிபாஷையாக 'நீரா மேல் நெருப்பு' என அழைக்கப்பட்டது. இதனைத் தூளாக்கித் துணித் திரியில் இட்டு விளக்கேற்றி வைக்கப்புயல் அடித்தாலும் அணையாது.

240. நமாவென்று வாங்கியே குளிச மாடி
நன்றாகத் தரிக்கவே நோய்கள் தீரும்
நமாவென்று கட்டவே சத்துருவும் மாறும்
நன்றாகா வறுமையெல்லாம் நாச மாகும்
நமாவென்று சீந்திக்கு வெள்ளி நாளில்
நாட்டுவாய் காப்பங்கே நாட்டிப் பின்னும்
நமாவென்று மந்திரந்தான் ரா-ரா-ரா ரா வென்று
நாலிரண்டாம் வேரைநீ[156] குளிச மாடே.

பொ. சு:

நீராமேல் நெருப்புக்கு 'நமா' என முடியும் முன் பாடலில் கூறிய மந்திரம் இயம்பிக் குளிசமாடித் தரிக்க நோய்கள், பகைவர், வறுமை என்ற இம் மூன்று துன்பங்களும் அறவே நீங்கும்.

அடுத்து 'சீந்தி' (சீந்தில் எனும் படர்கொடி வகை) என்ற மூலிகைக்கு வெள்ளிக் கிழமையன்று காப்புக் கட்டி ரா-ரா-ரா-ரா என மந்திரம் உச்சரித்து எட்டாக நறுக்கிய வேரைக் குளிசமாட வேண்டும் என உரைக்கிறார்.

241. குளிசமிட்ட மூலிகையைச் சிரசில் வைத்துக்
கூசாமல் சத்துருவை யெதிர்த்துப் பேசக்
குளிசமிட்ட குளிறாட்டிப் பயந்து போவான்
கூசாமல் பாதிரையின் வடவேர் தோன்றிக்
குளிசமிட்ட நூல்கட்டி விஞ்ஞை யோதிக்
கோழிமுட்டைப் பலியிட்டு போற்று போற்றே.

பொ. சு:

குளிசமிட்ட சீந்தி மூலிகையைத் தலையில் வைத்துக் கொண்டு எதிரியை எதிர்த்து வாதாட, குளிசத்தின் குளிறாட்டிப் பயந்து பின் வாங்கி விடுவான் என இயம்புகிறார்.

அடுத்து, பாதிரையின் வடதிசை செல்லும் வேருக்கு நூல் காப்புக் கட்டி மந்திரம் ஓதி, கோழி முட்டையைப் பலியாகக் கொடுக்க வேண்டும் என உரைக்கிறார்.

சொ. வி:

விஞ்ஞை – *விஞ்சை, அதாவது மந்திரம்.*

---

156. 'வேரை நீ' என செ. I. இல் கண்டு மூலத்தில் வராகத்தில் என இருந்தது திருத்தப்பட்டது.

242. போற்றிப் பரமாநந்தி சுரம் பேதினி
பூர்வதாய் பார்பதி[157] பஞ்சமி சுவாகாவென்று
ஏற்றியொரு வெட்டாக வாங்கி வந்து
இளவெந்நீர் தனிற்கொள்ளச் சுரங்கள் தீரும்
மாற்றமிது பேதனத்தின் மூலி யெட்டு
வகையுரைத்தேன் மாரணத்தின் மூலி சொல்வேன்
கார்த்தகுகன் கார்த்திகையின் கிழங்கு வாங்க
கார்த்திகைநா ளாடுபலி நீசெய் வாயே.

பொ. சு:

"போற்றிப் பரமாநந்தி சுரம் பேதினி பூர்வதாய் பார்பதி பஞ்சமி சுவாகா" என மந்திரம் உச்சரித்து ஒரே வெட்டில் ஆணி வேரைத் துண்டித்து எடுத்து வந்து இளவெந்நீரில் உட்கொள்ளச் சுரம் நீங்கும் என்கிறார். (பாதிரை ஆணிவேரில் கஷாயமிட்டுக் குடித்தலாகும். விளக்கமாக உரைக்கவில்லை).

பேதன மூலி எட்டு உரைத்தேன். இனி மாரணத்திற்கு உரிய மூலிகை சொல்கிறேன். கார்த்திகைக் கிழங்கு (கலப்பைக் கிழங்கு) வாங்கிக் கார்த்திகை நாளன்று ஆடு பலி கொடுப்பாயாக என உரைக்கிறார்.

சொ. வி:

மாற்றமிது பேதனத்தின் மூலியெட்டு வகையுரைத்தேன் – *பேதனத்துக்கு உரிய,*

(1) கோழியாவரை - தெய்வ பேதம், தலங்கள் பேதம்.
(2) செம்பசனி - காயபேதம்.
(3) வட்டத்துத்தி - நெருப்பு (இயற்கை) பேதம்
(4) சங்கம் வேர் - பூதபேதம்
(5) மாவிலங்கு - தெய்வபேதம்
(6) நீராமேல் நெருப்பு - நோய், பகைவர், வறுமை பேதம்.
(7) சீந்தி - பகைவர் பேதம்
(8) பாதிரை - சுரபேதனம்

ஆகியவை கூறியுள்ளார்.

---

157. "போற்றிப் பராமனந்தி பர்பேதினி பூதுவர் பார்தி" என மூலத்தில் தவறாக இருந்தமையை செ. I. இல் கண்டபடி திருத்தி அமைத்தேன்.

243. செய்துநீ சரவணபவா நமா வென்று
திறமாக வாங்கியே வைத்துக் கொண்டு
வெய்துகடு விஷந்தீருங் கண்ணில் தீட்டு
மீளுமடா தண்ணீரில் கொண்டா யானால்
அய்யாத விஷமீளும் பின்னை யொன்று
ஆரேனும் பேய்பிடித்தால் நாவி வேரில்
கொய்யாத உருப்பண்ணி அய்யன் காலில்
குழித்துவைக்க மாரணமாங் கூடு கூடே.

பொ. சு:

"சரவணபவா நமா" என் மந்திரம் இயம்பி வாங்கி வைக்கும் முறையில் வைத்துக் கொண்டு கண்ணில் தீட்ட விஷங்கள் தீரும். தண்ணீரில் உட்கொண்டாலும் விஷம் மீளும்.

அடுத்து யாருக்காவது பேய்பிடித்தால் அதற்கு நாவிவேரில் உருச்செய்து காலில் குழிவாய் வைத்து இட மாரணமாகும் எனவும் இயம்புகிறார்.

244. குழித்துவைக்க மந்திரந்தான் அரஅர வென்று
கூறியே ரெண்டுபத்து சகத்திறமு மோதி
வழுத்தியே நிற்பளவில் மாரணமு மாகும்
மைந்தனே நிர்விஷத்தை வாவு நாளில்
அழுத்தியே வெட்டுண்ணி[158] மண்டை யோட்டில்
கூடிரந்தான்[159] நிர்விஷத்தா லரைத்துக் கீறே
மழுத்தியோர் மிருகபட்சி . . .. தாபா
மாயினி சுவாகா வென்று எழுதிடாயே.

பொ. சு:

நாவி வேரைக் குளிசமிட்டுக் காலில் கட்டுமுன் 'அரஅர' என இயம்பி, இருபது சகஸ்ரநாமமும் (20000 நாமங்கள்) ஓதி நிற்கப் பேய் மாரணம் ஆகும் என்கிறார்.

அடுத்து, வாவு நாளன்று நிர்விஷத்தை (பூடுவகை சார்ந்தது) வெட்டுண்ணி மண்டையோட்டில் அரைத்து, அதில் "மிருகபட்சி .... தாபா மாயினி சுவாகா" என எழுத வேண்டும் என்கிறார்.

---

158. பா. பே. "வெட்டுண்டோர்" செ. I.

159. 5ஆம் வரி முதற்சீருடன் எதுகை, மோனை இயைய அமையவில்லை. 'ஆயிரந்தான் என ஒருவேளை இருக்கக் கூடும். ஆயி - கூடி என வடிவொப்புமையால் தவறாகப் படி செய்யப்பட்டிருக்கலாம்.

245. எழுதியே கீழ்வைத்து நீரணை[160] யைப் போட்டு
இயல்பாக மேலிருந்து தியானஞ் செய்து
தழுதியே அகோரகோர சங்ஙரா ராயாவென்று
சாரணையே மாறாம லோது மைந்தா
தொழுதுநீ யிருப்பளவில் நினைந்த வண்ணந்
தூளாகி மாண்டுபோம் சொல்லொ ணாது
அழுதுநீ திரியாதே காஞ்சுரையைக் கொள்ளு
ஆச்சரியம் நோய்களெல்லாம் மாரணமு மாமே.

பொ. சு:

எழுதிய அதனைக் கீழே வைத்துச் சுற்றிலும் நீரால் அணையிட்டு மேலே அமர்ந்து "அகோரகோர சங்ஙரா ராய' என ஓதிக் கொண்டே தியானம் செய்ய நினைந்த மிருகம் மாண்டு மடிந்து போகும். இதன் மகிமையை இதற்கு மேல் விளக்கிச் சொல்ல இயலாது என்கிறார்.

அலைந்து திரியாமல் காஞ்சுரையை (காஞ்சொறி எனும் பூடு வகை) தக்கவாறு பயன்படுத்தச் சகல நோயும் தீரும் எனவும் உரைக்கிறார்.

246. மாரணமா மொடுவைக்குப் பிரதமையி னன்று
மணியாட்டி நேமிச்சுக் காப்புக் கட்டிக்
காரணமா மறுநாளில் மத்தியா னத்தில்
கவர்ந்துகொண்டு வேர்பிடுங்கி நீரி லாட்டி
வேரணமா மிருகத்தின் பேரைச் சொல்லி
விட்டிடவே மிருகங்கள் மாரணமு மாகும்
ஆரணமாங் கொடுவேலி சித்திரையி னாளில்
அப்பனே காப்பிட்டுச் சோதி கேளே.

பொ. சு:

காஞ்சிரைக்கு, பௌர்ணமிக்குப் பின்வரும் முதல்திதி அன்று மணியாட்டிக் காப்புக் கட்டிவிட்டு, மறுநாள் மத்தியானத்தில் வேரினைப் பறித்து நீரில் ஆட்டித் தூய்மைப்படுத்திக் குறிப்பிட்ட மிருகத்தின் பெயரைச்சொல்லி விட்டெறிய மிருக மாரணமாகும் என இயம்புகிறார்.

---

160. பா. பே. 'திரனை' செ. I.

அடுத்து, கொடிவேலிக்குச் சித்திரை நாளன்று (சித்திரை நட்சத்திரம் கூடிய நாள்) காப்புக்கட்ட வேண்டும் என்கிறார். பிற விபரங்களை அடுத்த பாடலில் விளக்குகிறார்.

247. சோதியன்று பலியிட்டுப் பூசை செய்து
சொல்லுவே னிதின்பெருமை சூட்ச மாக
ஆதியென்ற அக்கினிரூபி அத்த ரூபி
அதிகச் சாவா வினிநமா வென்று
ஓதியே வாங்கிவந்து பாலிற் கொள்ள
ஒரொரு நோய்தீரு மதுபுண்ணுந் தீரும்
வாதியே நச்சுப்புல் லருக்க நாளில்
மனமகிழப் பூசித்துக் காப்புக் கட்டே.

பொ. சு:

சுவாதியன்று (சித்திரைக்கு மறுநாள் சுவாதி) பலிகொடுத்துப் பூசைசெய்து "அக்கினி ரூபி அத்தரூபி அதிகச் சாவா வினிநமா" என மந்திரமும் ஓதிப் பறித்து வந்து பாலுடன் சேர்த்து உட்கொள்ள அனைத்து நோயும் அதனால் விளையும் புண்களும் குணமாகும்.

அடுத்து, நச்சுப்புல்லுக்கு ஞாயிற்றுக்கிழமை அன்று மனமகிழ்வுடன் பூசை செய்து, காப்புக் கட்ட வேண்டும் என்றும் இயம்புகிறார்.

சொ. வி:

நச்சுப்புல் – உண்டவர்களுக்கு நோய் விளைவிக்கும் ஒருவகைப் புல்.

248. பூசையோடு மந்திரந்தான் விருனீ விஷதரீ யென்று
போற்றியே மூலத்தைக் குளிச மாடி
ஆசையோடு தீண்டும் விஷமேதென் றாலும்
அடவாகத் தடவிடவே மாரணமு மாகும்
ஆசையறு மருதாணி வாங்க வேகேள்
வளர்கிரண வேளையிலே காப்புக் கட்டி
காசைவிடு மோசனத்தில் வெட்டி வந்து
காலமே[161] யுலத்தியதை நொறுக்கி டாயே.

---

161. 'கலாவே' எனப் பொருள் பொருத்தமின்றி மூலத்தில் காணப்பட்டது.

பொ. சு:

நச்சுப்புல்லுக்குப் பூசையொடு "விருகனீ விஷதரீ" என மந்திரம் இயம்பிப் பறித்து மூலத்தைக் குளிசமாடி, எந்த விஷம் தீண்டினாலும் தடவிட மாரணமாகும்.

இனி மருதோன்றி மாரணத்துக்குப் பயன்படும் முறையை விளக்குகிறார். கிரகணம் வளர்வேளையில் காப்புக் கட்டி மோசனத்தில் (அதாவது கிரகணம் விடும் வேளையில்) வெட்டி வந்து அதிகாலையில் உலர வைத்து நொறுக்கிக் கொள்ள வேண்டும் என்கிறார்.

249. நொறுக்கியே பாண்டத்தி லடைத்து வைத்து
நுட்பமாய்ப் பூத்தயில மிறக்கி வைத்துத்
தறுக்கியதைக் குப்பியிலே அடைத்துக் கொண்டு
சாற்றிடுவாய் மந்திரந்தான் ரெண்டு பத்து
புறக்கியே உரகநீ சுவாகாஉம் பட்டென்று
போற்றியந்தத் தயிலத்தைச் சுற்றி வந்து
மறக்கியே வராகமொடு ஆடு கோழி
வகையாகப் பலிகொடுத்துச் சுத்தி செய்யே.

பொ. சு:

நொறுக்கிய அதனைத் தக்க பாண்டத்தில் இட்டுப் பூத்தயிலம் இறக்கிக் குப்பியிலே அடைத்துக் கொள்ள வேண்டும் இருபது முறை "உரகநீ சுவாகாஉம் (ஓம்?) பட்" என்று மந்திரம் உச்சரித்துத் தயிலத்தைச் சுற்றிவந்து பன்றியோடு, ஆடும் கோழியும் முறைப்படி பலிகொடுக்க வேண்டும் என இயம்புகிறார்.

250. சுத்தமுள்ள கலசத்தில் வைத்துக் கொண்டு
சொல்லுகிறேன் தொட்டதனைத் திலதந் தீட்டி
எத்தமுள்ள தேவதைகள் பிடித்த பேரை
இருமென்றே பார்த்திருக்கப் போறே னென்று
கத்தியே மறைந்துவிடும் சத்துருவைப் பார்த்தால்
கண்கெட்டுப் போய்விடுவான் கணத்தி லேதான்
பார்த்திலேன் அறுபத்து நாலு மூலி
பாடினேன் அஷ்ட கர்மம் பாடினேனே.

பொ. சு:

சுத்தமான ஒரு கலசத்தில் அத்தயிலத்தை எடுத்து வைத்துக் கொண்டு திலகம் தீட்டிக் கொள்ளத் தேவதைகள், பிடித்தவர்களை விட்டுக் கத்திக் கொண்டே ஓடிப் போய்விடும். (வனதேவதை, தீத்தேவதை போன்றவை).

இதே தைலத்தால் திலகம் இட்டுக் கொண்டு பார்க்க, பகைவன் தன் கண்ணொளியை இழப்பான் என உரைக்கிறார். அறுபத்து நாலு மூலிகையும் கண்டதில்லை. அதனால் செய்யக் கூடிய அட்டகர்மம் பற்றிப் பாடினேன் என இயம்புகிறார்.

சிதம்பர அஷ்டகர்மம்

251. பாடினேன் மந்திரமும் தந்திரமுங் கூடப்
பரிவான கற்பமெல்லாம் பருவ மாக
ஓடினேன் திதிராசி நாளுஞ் சொன்னேன்
உற்பனமாம் வேளையுட உறவுஞ் சொன்னேன்
நாடினே னிதுவெல்லாஞ் சத்தி மார்க்கம்
நலம்பெரிய சிவமார்க்க விதியைக் கேளு
தேடினே னண்டபகி ரண்டத் தப்பால்
சிதம்பரமா கர்மத்துக் கெதிர்கா ணேனே.

பொ. சு:

மூலிகை பறிப்பதற்கு உரைக்க வேண்டிய மந்திரங்களும் பறிக்கும் முறைகளும் கற்பவகைகளும் அப்போது கடைப்பிடிக்க வேண்டிய திதி ராசிகளும், உத்தமமான வேளைகளும் அமைத்து அட்டகர்மம் பாடினேன். இது அனைத்தும் 'சக்தி மார்க்கம்'.

இனி சிவ மார்க்கம் பற்றி உரைக்கிறேன் கேட்பாயாக. அண்டபகிரண்டம் அனைத்தும் தேடிப் பார்த்தேன். சிதம்பர கர்மம் போன்ற இதற்கு இணையான ஒன்று கண்டதில்லை என இனிக் கூறப்போகும் மார்க்கம் பற்றிப் போற்றி உரைக்கிறார்.

252. எதிரில்லா அஞ்செழுத்தும் அஞ்சுமுக மாக
ஏகமா யொருநூற்றி யிருபத் தஞ்சாய்
எதிரில்லா விஞ்சையாய்க் கலைக்கியான மாகி
இதமதித மிரண்டுக்கு முன்னே யாகி
எதிரில்லாத் தோற்றுவித்து எழுவகையு மாகி
எழுவகையின் தோற்றத்தில் லோக மாகி

எதிரில்லா மந்திரத்தின் மகிமை தன்னை
எண்ணுகிறே னொவ்வொன்றுக் கிருபத் தஞ்சே.

பொ. சு:

இணை கூற இயலாத தனித்தன்மை வாய்ந்த 'நமசிவாய' என்ற ஐந்தெழுத்தை ஐந்து முகத்தில் (5 பக்கங்கள்) வைக்க 25X5 எனப் பெருகி நூற்றி இருபத்தைந்தாக அமையும். இது எதிர் சொல்ல இயலாத விஞ்சையாகி (மந்திரம்) கலைஞானமாகி, (பஞ்சகலை எனப்படும் நிவர்த்தி, பிரதிட்டா, வித்யா சாந்தி, சாந்தியாதீத கலைகளாம்) இதம், அதிதம் என்ற இரண்டுக்கும் முன்னேயாகி, ஏழுவகையாகி, எழுவகையின் தோற்றத்தால் உலகமும் ஆகி நிற்கும். இணையில்லா இம்மந்திரத்தின் மகிமையை எண்ணுகிறேன் என உரைக்கிறார்.

சொ. வி:

அஞ்செழுத்தும் அஞ்சுமுகமாக - சிவனை 5 முகம் உடையானாகப் புராணங்கள் கூறும். (நான்கு முகம் நான்கு பக்கமும், ஒரு முகம் ஆகாயத்தை நோக்கியும் அமையப் படைக்கப்பட்டிருக்கும்) ஈசானம், தத்புருஷம், அகோரம், வாமதேவம், சத்தியோசாதம் என்பது அவற்றின் பெயர்களாம்.

253. அஞ்சுமுக மொவ்வொன்றுக் கிருபத் தஞ்சும்
அறுபத்து நாலுசித்தும் ஆடி நிற்கும்
பஞ்சமுக மாயிருந்த பூரணத்தைச் சேர்க்கும்
பராபரனாம் வாழ்நாளும் ஆறுதலம் பாயும்[162]
துஞ்சாது ஒருநாளும் வளர்ந்து தோன்றும்
சுத்தருக்கு இந்தமுறை தொடர்ச்சி யாகும்
பிஞ்சாகும் காயாகும் பூவு மாகும்
பேசரிய பலகோடி யண்ட மாமே.

பொ. சு:

ஐந்து முகம் ஒவ்வொன்றுக்கும் இருபத்தைந்து அட்சரம் என அமையும். நமசிவாய, சிவாயநம, வாயநமசி என இவ்வாறு அமைதலாம். இதில் அறுபத்து நான்கு சித்தும் அடங்கி நிற்கும். ஐந்துமுகமுடைய இது முழுமையைச் சேர்க்கும். ஒருநாளும் அழியாத இது நாளுக்கு நாள் வளரவே செய்யும். தூய்மையானவருக்கு இதன்

162. பா. பே. "பார்நாலு வானில் நாலாறு தலம்பாயும்", செ. I.

தன்மைகள் விளங்கும். பிஞ்சாகும்; காயாகும்; பூவுமாகும். (பிஞ்சாகிக் காயாகிக் கனியாவதே இயற்கை. ஆனால் அக்காயையும் பூவாக ஆக்கலாம் என்கிறார்) சொல்லுவதற்கு அரிய பல கோடி அண்டங்களாகவும் ஆகும். அதாவது உலகத் தோற்றமே 'நமசிவாய' என்ற ஐந்தெழுத்தின் மகிமையே என்பதாம்.

254. ஆமப்பா அச்சரங்க ளஞ்சு பின்னை
அன்பத்தோ ரட்சரமாய் விரிந்து நிற்கும்
ஓமப்பா ஒவ்வொன்றாய் வழுத்த வென்றால்
உரையேது கரையேது உரைப்ப ராரோ
வேமப்பா கருவுடனே சேர்ந்து தானால்
வேரேது தூரேது வெல்வா ரேது
நாமப்பா அறிந்தமட்டுஞ் சொல்வோங் கேளு
நாதாக்கள் தவறாமல் பார்த்திட் டாரே.

பொ. சு:

ஐந்து அட்சரங்களும் ஐம்பத்தோரு அட்சரங்களாக விரிந்து நிற்கும். ஒவ்வொன்றையும் கூறி வழுத்த உரையும் இல்லை; கரையும் (எல்லை) இல்லை; உரைக்கும் வல்லமை பெற்றோரும் யாரும் இல்லை.

இந்த அட்சரங்கள் தக்க கருக்களுடன் சேர்ந்து விட்டால் வேரும் இல்லை; தூரும் இல்லை; (தூறு-பூமியின் மேலுள்ள தண்டுப் பகுதி; 'வைத்தூறு போலக் கெடும்' என்பது குறள். (அகம், புறம் என்ற வேறுபாடு இல்லை என்பதாம்) தக்க மருந்துடன் தக்க மந்திரமும் சேரத் தகுந்த பலன் கிட்டும் என்பதாம்). வெல்பவரும் இல்லை. நாம் அறிந்தவரை இது பற்றி உரைக்கிறோம். நாதாக்கள் இதனில் சிறிதும் பிழை இன்றிக் கண்டனர் என இயம்புகிறார்.

தற்புருஷ முகம்

255. பார்த்திட்ட தற்புருஷ மிருபத் தஞ்சும்
பாடுகிறேன் நமசிவ அகோர மாகும்
சேர்த்துயிது சேவிக்க உச்சாடனமு மாகும்
சிவமான சவுமியத்தைச் சேவிக்கக் கேளு
காத்திட்ட அங்சிவாய நமா வென்றால்
காதலித்த புத்திரரைக் கொடுக்குங் காணும்
ஏத்திடவும் அங்உங்வங் சிவாயநமா வென்றால்
இயல்பான தேகத்தில் நோய்கள் தீரும்காணே.

பொ. சு:

"நமசிவ" என்ற அகோர மந்திரத்தை விடாது உச்சரிக்க உச்சாடனமாகும். "அங்சிவாயநமா" என்றியம்ப அன்புடைய குழந்தை பாக்கியம் கிட்டும். "அங்உங்வங் சிவாய நமா" என உச்சரிக்க உடலில் உண்டாகியிருக்கும் நோய்கள் அனைத்தும் தீரும் என்கிறார்.

சொ. வி:

சிவமான சவுமியம் – அழகும், சாந்தமும் கொண்ட சிவனது உருவம்.

256. **காணப்பா ஹூம் ஹூம் சிவாயநமா வென்றால்**
கடுகவே யோகசித்தி காண லாகும்
பூணப்பா ஹூம்ஹூம் சிவாயநமா வென்றால்
பொன்றாது தேகம்ப்பா ஆயித் துண்டாம்
ஊணப்பா ஒம்நமசிவாய நமா வென்னில்
ஒழியாத பூதங்க ளோடும் பாரு
தோணப்பா கிலியும் நமசிவாய மென்றால்
தொல்லுலகில் மன்னவர்கள் வசிய மாமே.

பொ. சு:

யோகசித்தி, தேக ஆயுள், பூதங்களை ஓட்டல், மன்னர் வசியம் ஆகியவற்றுக்கு ஐந்தெழுத்து மந்திரத்தை எவ்வெவ்வாறு உச்சரிக்கப் பலன் கிட்டும் என்பது உரைக்கப்பட்டுள்ளது.

இதில் யோக சித்தி, தேக ஆயுள் இரண்டுக்கும் ஒரே மந்திரமே கூறப்பட்டுள்ளது கவனிக்கத் தக்கதாயுள்ளது. யோக நிலை நின்றாருக்கு தேகசித்தி கிட்டல் உண்மையாதலின், இரண்டும் ஒன்றுக்குள் ஒன்று அடக்கமாதலின் இங்ஙனம் அமைத்தனர் எனக் கொள்ளலாம்.

257. **நமசிவாய மென்றதுதா னமுர்தவச்சர மாகும்**
நாடிநீர் நினைந்ததெல்லா முண்மை யுண்மை
நமசிவாயஊம் நமசி வாய வென்றால்
நாட்டிலுள்ள பதினெட்டுச் சுரமுந் தீரும்
நமசிவயங் செலனக நமசிவாய மோதில்
நாவிவிஷ மறுபத்து நாலுந் தீரும்
நமசிவாயம் லங்க நமசிவாய வென்னில்
நற்சயமாய்ப் பூமழையைக் கொடுக்கும் பாரே.

பொ. சு:

'நமசிவாய' மென்ற நாமமே அமிர்த வச்சிரம். இது குறித்து அறிந்த அனைத்தும் உண்மையானவை எனக் கூறி, பதினெட்டுச் சுரமும், அறுபத்து நான்கு பாஷாண வகையினால் உண்டாகும் விஷமும் தீர எவ்வாறு ஓதினால் நல்வெற்றியுள்ள பூமியில் மழை பெய்யும் எனவும் விவரிக்கிறார்.

258. பாரப்பா சவ்வும் நமசிவாய நமாவென்றால்
பரிவாக ராசாங்க முண்டாம் பாரு
ஆமப்பா காண்பவர்கள் ஸ்ரீயும் நமசிவாய நமாவென்றால்
அப்பனே தந்திரமாங் கள்ளர் வாரார்
ஓமப்பா ஊங்கிறீயும் நமசிவாய நமாவென்றால்
உரையுணர்வுக் கெட்டாத மோட்ச நல்கும்
போமப்பா அலங்கே நமசிவாய நமாவோதில்
புகழ்ராச்சியச் சித்தியுண்டாம் புகழ்ந்து காணே.

பொ. சு:

அரசர் போகம் அனுபவிக்க, கள்ளர் வாராதிருக்க, சொல், உணர்வுக்கு எட்டாத மோட்சம் கிட்ட, இராச்சியச் சித்தி உண்டாக சிவமார்க்க மந்திரத்தை எங்ஙனம் உச்சரிக்க வேண்டும் என உரைத்துள்ளார்.

259. காணப்பா வநமசி வாய மென்றால்
கயிலாச தேகசித்தி யுண்டாங் கண்டாய்
பூணவே ஓம்நமசி வாய மென்றால்
புகழ்மிகுந்த காலனையும் வெல்ல லாகும்
தோணவே லங்கிரியும் நமசிவாய மென்றால்
தொல்லுலகில் தானியங்கள் பெருக்க லாகும்
நாணவே ஓங்கிறியும் ஓங்நமசி வாயமென்றால்
நயமான வாணிபங்கள் பலிக்குந் தானே.

பொ. சு:

கயிலாச தேக சித்தி அடைதல், காலனை வென்று மரணமிலாப் பெருவாழ்வு பெறுதல், உலகில் உணவுப் பொருள் வளம் சேர்த்தல், வாணிபம் பெருக்கல் ஆகிய இவற்றை அடைய கைக்கொள்ள வேண்டிய மந்திர உச்சாடனங்கள் உரைக்கப்பட்டுள்ளன.

260. தானென்ற ஓங்ஊங் சிவாயநமஉங் நமாவென்றால்
தாங்காத குட்டபதி னெட்டுந் தீரும்
தானென்ற லீங்க்ஷீம் சிவாயநம வோதில்
தையலர்க ளெல்லோரும் வசிய மாகும்
தானென்ற லூரங்ஓங் நமசிவாய வென்னில்
தப்பாமல் சிரரோக மீளும் பாரு
தானென்ற ஓங்அங்கிஷ சிவாயநமா வென்றால்
தாரணியில் பிரவேசம் பண்ண லாமே.

பொ. சு:

குட்ட நோய் பதினெட்டு, தையலர் வசியம், தலை சம்பந்தமான நோய்கள், பூமி சஞ்சாரம் என்ற இவற்றுக்கு உச்சரிக்க வேண்டிய மந்திர முறைகள் உரைக்கப்பட்டுள்ளன.

அகோர முகம்

261. ஆமப்பா தற்புருஷ மிருபத் தஞ்சும்
அறைந்திட்டேன் அகோரத்தைச் சொல்லக் கேளு
வேமப்பா அகோரமென்றால் அண்ட ரண்டம்
விள்ளரிது உத்தமற்கு விள்ளு விள்ளு
நாமப்பா துங்மவாய நமசி யென்றால்
நயமான யேசணையாம் நயந்து பாரு
போமப்பா ஓங்கங்ம வாயநமசி யென்றால்
பொங்கிவரு கடகசித்தி யுண்டாம் பாரே.

பொ. சு:

'தற்புருஷம்' இருபத்தஞ்சும் பற்றி உரைத்தேன். இனி 'அகோரம்' பற்றி விளக்குகிறேன். அகோரமென்றால் அண்டரண்டம். இதனை உத்தமர் தவிர, மற்றவர்க்கு உரைக்காதே என்கிறார். அடுத்து ஏசணைக்கும் (வித்துவேஷணை) கடகசித்திக்கும் உச்சரிக்கும் நாமம் பற்றி இயம்பியுள்ளார்.

262. உண்டாகு மன்னர்சித்தி ஓம்நமசிவாய நமாவென்றால்
உயர்ந்துநின்ற செலத்தம்ப முறைக்கக் கேளு
பண்டாகும் ஓங்நமசிவாய நமா வென்னில்
... ...
... ...

தானிரவி செய்கண்ட முண்டாம் பாரு
வண்டாரும் ஓங்சறுவ நமசிவாய மென்றால்
வருணசிவஞ் செல்வமிக வளருந் தானே.

பொ. சு:

மன்னர் சித்தி, நீர்த்தம்பம், மழைச் செல்வம் ஆகியவை கிட்டுதற்குக் கூறும் மந்திரம் உரைக்கப்பட்டுள்ளது.

263. வளருமடா ஓம்நமசி வாயநமா வென்றால்
வாருதிக ளேழையுந்தான் வற்றச் செய்யும்
தளருமடா கேங்கேங் ஓம்நமசி வாயமென்றால்
தடையறவே யாவருந்தான் வசிய மாகும்
களருமடா விஷங்களைத்தான் தம்பித்துக் கொள்ளும்
காயுமாங் யம்ஓம் சிவாய வென்றால்
பளருமடா மாரி பஞ்சாட்சரமு மாகும்
பரப்புடைய சமுத்திரத்தைக் கடக்க லாமே.

பொ. சு:

எழுகடலை வற்றச் செய்தல், மக்கள் அனைவரையும் வசியப் படுத்தல், விஷ தம்பனம், சமுத்திரத்தைக் கடந்து செல்லல் ஆகியவற்றுக்கு மந்திரங்கள் இயம்பியுள்ளார்.

264. கடக்கலாம் வானிலுள்ள புதுமை எல்லாம்
கற்றவர்க்குத் தெரியுமது மற்றோர் காணார்
அடக்கலாம் அங்கிஷஅங்கிஷ ஓம்சிவாய நமாவோதில்
அப்பனே சங்கிராம அட்சரமு மாகும்
நடக்கலாம் ஓங்சங்கிங் சிவாயநமா வென்னில்
நற்றேவ கன்னியரை வெல்ல லாகும்
துடக்கலாம் ஓம்அங்கிஷ சிவாயநமா வென்றால்
துடர்ந்துவரு முக்குணத்தை வெல்ல லாமே.

பொ. சு:

வானிலுள்ள புதுமைகள் அனைத்தையும் அறிந்து கடக்கலாம். இதன் வழிமுறைகளைக் கற்றவர்கள் (அதற்குரிய துறையில் தேர்ந்தவர்கள்) அன்றி, மற்றவர்கள் உணர இயலாது என்கிறார்.

அடுத்து, சங்கிராம அட்சரம் குறித்தும், தேவ கன்னியரை வெற்றி கொள்ளக் கூறும் மந்திரம் பற்றியும், சத்வம், ராஜசம், தாமசம்

எனும் முக்குணத்தை வெற்றி கொள்ளும் மந்திரம் குறித்தும் விளக்கியுள்ளார்.

265. வெல்லலாம் பாதாள கெவுன மப்பா
விழாமடங்கில் சரணாயச் சிவாயநம வென்றால்
அல்லல்போஞ் சுயம்பாடும் ஓம்நூம் பயம்யுஞ் சிவாயநமா
ஆறுசாஸ்திரம் நால்வேத மறிய லாகும்.
சொல்லலாம் விஞ்சிங்ஓம் நமசிவாய நமவென்னில்
துரியத்தில் தெய்வநகர்க் கேக லாகும்
சொல்லலாம் சங்சங் சிவாயநமா வென்னில்
சிந்தனமாஞ் சிலத்தையங் கெழுப்ப லாமே.

பொ. சு:

பாதாள கெவுனம், ஆறுசாஸ்திரம், நான்கு வேதங்கள் அறிதல் துரியத்தில் (விளக்கம் 167ஆம் பாடல் சொ.வி.இல் காண்க. துரிதத்தில் எனக்கொண்டு விரைவாக என்ற பொருளும் கொள்ளலாம்) தெய்வ நகர்க்குச் செல்லுதல், நீரை மேலெழுப்புதல் ஆகியவற்றுக்குரிய மந்திரங்கள் உரைத்துள்ளார்.

சொ. வி:

ஆறுசாஸ்திரம் – நான்கு வேதங்களின் ஆறு அங்கங்களாய ஆறுசாஸ்திரங்கள்.

266. எழுப்பலாம் நினைத்ததெல்லாம் முன்னே வந்து
என்மகனே முன்னிற்கும் மந்திரமோ கேளு
எழுப்பலாஞ் சிறுங்சிறுங்ஓம் சிவசிவ ஓமென்ன
இடம்பெரிய பூமிகளைக் கொடுக்குங் கண்டாய்
எழுப்பவே மரங்களைத்தான் வளையச் சொன்னால்
இதமாக வளையுங்காய் பறிக்கக் கேளே.

பொ. சு:

நினைப்பவை உடனே கண் முன் வந்து நிற்கும் மந்திரமும் உண்டு. ('நினைத்ததை எல்லாம் அடைந்து அனுபவித்தல்' என்ற ஈசத்துவம் எனும் எட்டாம் சித்தியாகும்).

"சிறுங்சிறுங்ஓம்சிவசிவஓம்" என்றுரைக்க நன்னிலங்கள் கிட்டும். மரங்களை 'வளை' எனச் சொல்ல அவை வளையும்; வேண்டும் காய் பறித்துக் கொள்ளலாம் என்கிறார்.

267. கேளப்பா மந்திரந்தான் பிறங்பிறங்ஷங்ரங்சிங் சிவாயநமாவோதில்
கிளர்ந்துநின்ற தென்னைமரம் வளையுமப்பா
நாளப்பா மங்மங் மங்கென் றாக்கால்
நாளிலே அன்னத்தை வெறுக்க லாகும்
வாளப்பா வசாலவசால சிவாயநமா வோதில்
மழையிலே நனையாமல் போக லாகும்
ஆளப்பா மழைபெய்யா திருக்க வென்றால்
ஆச்சரியம் அங்ஓங்மின் சிவாயஓமென்று[163] சொல்லே.

பொ. கு:

இப்பாடலில் தென்னை மரம் வளைவதற்கும், அன்னம் இன்றியே உயிர் வாழ்வதற்கும், மழையில் நனையாமல் செல்வதற்கும், மழை பெய்யாதிருக்கவும் உச்சரிக்க வேண்டிய மந்திரங்களை உரைத்துள்ளார்.

பசியாதிருக்க, மழையில் நனையாது செல்ல, சத்திமார்க்கத்தில் மூலிகை வழிமுறைகளுடன் கூறியுள்ள கருத்துகள் ஒப்பு நோக்கத் தக்கவை.

268. சொல்லடா ஹ்றீஸ்ரீ[164] சிவாயநமா வென்று
சூட்டவே ஆறுண்டாய் வெள்ள மோடும்
செல்லடா ஓங்சீங்சிவ சிவஉங்ஊங் சிவாயநமா
செப்புசிறை யண்டகடலில் ஆருமோட லாகும்
புல்லடா நிறுத்தினால் நிற்கும் பின்னைப்
போகுமடா தண்ணீரில் நடக்கக் கேளு
வெல்லுமடா சங்சங்ய வாசிமகளு மென்றோதில்
வெட்டவெளி சமுத்திரபஞ் சாட்சரந்தா னாச்சே.

பொ. கு:

நீரில்லா ஆற்றில் வெள்ளமோட, கடலில் ஓட, நீரில் நடக்க, வெட்ட வெளியைச் சமுத்திரமாக்க உச்சரிக்க வேண்டிய மந்திரங்களை இயம்பியுள்ளார்.

வாமமுகம்

269. ஆச்சென்று புலையும்புலையும்[165] சிவாயநமா வென்றால்
அப்பனே இசகுவந்து சரணம் போற்றும்

163. பா. பே. "அர அரா ஓங்வங் ஸ்ரீயும் நசிநசி சிவாயம்" செ. I.
164. பா. பே. "அரியும் இறீயும்", செ. I.
165. பா. பே. "மலையும் மலையும்", செ. I.

நீச்சென்று நிலைத்துநின்ற அகோரஞ் சொன்னோம்
நேரான வாமத்தை நிகழ்த்தக் கேளு
போச்சென்று ஓம்ஓம்டேபுர நமசிவாயம் பேசில்
பேர்பெரிய அமுர்தத்தைப் பொசிக்க லாகும்
மோச்சென்று ஓங்சங்கங் மமையுநமா வென்றால்
மோனமுறுந் தேவர்களைக் காண லாமே.

பொ. சு:

"புலையும் புலையும் சிவாய நமா" என்று கூற இசக்கி என்ற தெய்வம் 'சரணம்' என வந்து போற்றி நிற்கும். இத்தகு அகோரம் குறித்துக் கூறினேன். இனி வாமம் பற்றி உரைக்கிறேன் என்கிறார்.

வாமத்தில் முதலில் கிட்டற்கரிய அமிர்தம் புசிக்கவும், மோனமுறும் தேவர்களைத் தரிசிக்கவும் உரைக்கும் மந்திரம் குறித்து இயம்பியுள்ளார்.

270\. காணவே ஐயுங்கிலியுஞ் சிவாயநமா வென்றால்
கடவுளுயர் விமானம்வந்து கண்முன் தோன்றும்
பூணவே உங்தேங்ஓங் சிவாயநமா வென்னில்
புகழ்தருக்க ளஞ்சும்வந்து போற்றி நிற்கும்
தோணவே கங்கண்ணங் ரிஷிர்சிலிங்க மென்றால்
பொற்பெரிய காமதேவன் துய்த்த லாகும்
ஊணவே கேங்சேங் சிவாயசேங் நமாவென்றால்
உயர்ந்துவாழ் தேவர்சபை காண லாமே.

பொ. சு:

கடவுள் விமானம் கண்முன் தோன்றவும், புகழ் தருக்கள் ஐந்தும் வந்து போற்றி நிற்கவும், காம இன்பம் நுகர்தற்கும், உயர்ந்து விளங்கும் தெய்வசபை காணுதற்கும் ஓத வேண்டிய மந்திரங்களை உரைத்துள்ளார். புட்பக விமானம், ஐந்தருக்கள், தேவர்சபை இவைகளைக் கூறியிருப்பதால் இந்திரபதம் கிட்டும் என்பதாம்.

சொ. வி:

புகழ் தருக்கள் – பாற்கடல் கடைந்தபொழுது வந்தவையாகக் கருதப்படும் அரிசந்தனம், கற்பகம், மந்தாரம், சந்தனம், பாரிசாதம் ஆகிய ஐந்து மரங்களாகும்.[166]

166\. சிறு மணவூர் முனுசாமி முதலியார், 'சிவகலா ரகசியம்' எனும் சிவ சொரூப சாஸ்திரம்.

271. சபைகாணு ரங்ரங் சிவ்வுநமா வென்றால்
தாயிச்சா சத்திவந்து தான்முன் னிற்பாள்
அபையத்தங் கொடுத்தென்றுங் காத்துக் கொள்வாள்
ஆச்சரியம் வாமமென்றா லதீத மாகும்
கவையுற்ற இரக்ஷஇரக்ஷஇரக்ஷ இரக்ஷஸ்ரீம்சிவாய நமாவோதில்
கலங்காத ஆதித்தன் ரதங்காணும் பாரே.

பொ. சு:

இச்சா சக்தி கண்முன் வந்து நிற்கவும், சூரியனின் இரதம் காணவும் (சூரிய மண்டலத்தைக் கண்கூசாது நேராகக் காண இயலும் என்பதாம்) மந்திரம் கூறப்பட்டுள்ளது. வாமம் அதீதமே என்ற உண்மையும் ஒத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

சொ. வி:

இச்சாசத்தி - ஆதி சத்தியின் ஆயிரத்திலொரு கூறுடையதாய், தனு, கரண, புவன, போகாதி காரணமாய்ச் சிருஷ்டியைச் செய்யும் சத்தி' எனப்புராணம் பகரும்.

272. ரதங்காணும் உசவ்வுங் சிவாயஓம் உம்பட்டென்று
நாட்டிடவே சிவனுந்தான் தோற்றொடுக்கங் காணும்
ரதங்காணும் டேங்டேங் ஓங்சிவாய சுவாகவென்றால்
நற்பூமிக் குள்ளதெல்லாங் கண்ணிற் காணும்
ரதங்காணும் வங்வங்சிங் சிவாயநமா வென்றால்
நாட்டிலுள்ள சகங்களிலே வழிகள் காணும்
ரதங்காணும் சியும்சியும்ணங் சிவாயநமா வென்றால்
நாட்டினேன் சாதினையை நாட்டி றேனே.

பொ. சு:

சிவனின் தோற்றம், ஒடுக்கம், பூமியில் உள்ள அனைத்தையும் பூதக்கண்ணால் காணும் திறன், இந்த உலகின் எப்பாகத்திற்கும் செல்லும் வழி அறிதல், ஆகிய இவற்றினை அடையக் கைக்கொள்ள வேண்டிய மந்திரங்கள் இயம்பப்பட்டுள்ளன.

பூமியில் மறைந்து கிடப்பவற்றைக் கண்ணால் காண மூலிகைகள் பயன்படுத்தப்பட்ட முறைகள் இந்நூலின் முன் பகுதியில் பல இடங்களில் இடம் பெற்றுள்ளன.

ஆரம்பக் கட்டத்தில் மூலிகையின் பயனோடு சாதித்ததை, வெறும் மந்திரத்தால் மட்டும் சாதிக்கும் இவ்வல்லமை சித்திகள்

கைவரப் பெற்ற முத்தி நிலையில் இருப்போரால் சாதிக்கப் படுபவையாகும். அங்குச் செயல்பாட்டுக்கு முக்கியத்துவம். இங்கு மனோவலிமையால் அனைத்தையும் சாதிக்கும் வல்லமை சுட்டப்படுகிறது.

273. நாட்டுகிறே னுன்னுடைய சடத்தி னுள்ளே
நாட்டஞ்செய் புருஷனைப்போல் காண லாகும்
நாட்டுகிறேன் கெய்ங்கெய்ங்பி கெய்ங்அங் ஓங்சிவாய
நமாவென்றால் கவனமென ஆகாச மோடலாகும்
பூட்டுகிறேன் சீயுங் கோஷ்ய கோஷ்யசங் சதசிவாய நமாவென்னில்
புகழ்வேத நாலையுந்தான் காண லாகும்
மூட்டுகிறேன் ஓங்அங்கிஷ ஊங்சிவாய நமாவோதில்
மூண்டு மனோவேகம் நினைத்திடத்திற் செல்லுந்தானே.

பொ. சு:

சாதனைகளை நிகழ்த்தும் சித்தி கை கூட, உண்மையான புருஷத்தன்மை உடையவனாக ஆவதை உணரலாம். ஆகாயத்தில் பறக்கலாம். புகழ்வேதம் (ரிக், யஜுர், சாம, அதர்வணம்) நான்கினது சாரத்தின் உண்மையையும் கண்டு தெளியலாம்.

நினைத்த இடத்தில் மனத்தினை விரைவாகச் செலுத்தலாம் என விளம்புகிறார்.

274. செல்லலாம் ஓங்வங் நமசிவாய நமஓங்
செப்பவே குழலூதச் சித்தியுண்டாங் கரமுதல்
வெல்லலாங் கிலீயுங் சிங்சிங் வாயாநமா வென்னில்
வெண்மையுள்ள உடுக்களுட தோற்றொடுக்கங் காணும்
சொல்லலாம் ஊங்சிவா சிவா சரணஞ்
சிவானந்தம் சிவ சிவாயா சிவாயநம
பல்லவே தினை கடித்த தில்லையெனப்
போகுமடா தெரியாமல் போகுந் தானே.

பொ. சு:

வெண்மை ஒளிகொண்ட விண்மீன்களின் தோற்றொடுக்கங் களைக் காண உரைக்கும் மந்திரம் இயம்பப்பட்டுள்ளது.

275. தானென்ற சிறுபெண்ணைப் பெரியோ ராகச்
சவ்வுங் அவ்வுங் சிவாயசுந்தராயா நமாவோது

தானென்ற சிறையுங் சிவாயஓங் நமாவென்றால்
சாற்றினே னுற்பனத்தைச் சாற்றக் கேளு
தானென்ற வித்துவனாய்ச் சமத்த னாகிச்
ச(ண)த்திலே உன்மனைபோ லாக்க லாகும்
தானென்ற சிலீயுங் மங்பங்க சிவாயஉம்பட்டும்
தானுரைக்க யிந்திரனை யழைக்க லாமே.

பொ. சு:

சக்தி வடிவாய 'வாலை' என்ற சிறுபெண்ணைப் (பூப்பெய்தாதவள்) 'பெரியவர்' என ஆக்கி வைத்தனர்.

உற்பனத்தை (எதனையும் விரைவில் அறிதல்) இனி உரைக்கிறேன். 'தான்' என்ற வித்துவனாய், சமர்த்தனாகி உனது வீடு போல ஆக்கலாம் என்கிறார். அடுத்து, இந்திரனை அழைக்கக் குறிப்பிடும் மந்திரம் உரைத்துள்ளார்.

276. ஆமப்பா செத்தவனை யெழுப்பக் கேளு
அறைகிறே னட்சரத்தை யன்பாய்த் தானே
பாமப்பா பிறங்பிறங் சிவாயஓம்நம சுவாகா வென்னில்
பொன்றாது எழுவகையின் தோற்றப் பேறெல்லாம்
ஏமப்பா வாமத்தைப் பிரித்துச் சொன்னோம்
இயல்பான சத்தியோ சாதங் கேளு
வேமப்பா உள்ளபடி திறந்து போட்டேன்
வெற்றியுள்ள புத்திரர்க்கு விரித்துச் சொல்லே.

பொ. சு:

செத்தவர்களை எழுப்புதற்கும், ஏழுவகைத் தோற்றங்கள் குன்றாதிருப்பதற்கும், (எழுபிறப்பு உயிரினங்களையும் உயிர்ப்பிக்கலாம் என்பதாம்) மந்திரம் உரைத்துள்ளார்.

வாமத்தைப் பிரித்துச் சொன்னேன். இனி 'சத்தியோசாதம்' (ஒரு சைவ மந்திரம்) பற்றி விளக்குகிறேன். உள்ளதை உள்ளவாறு திறந்து போட்டு விட்டேன். வெற்றியுடைய புத்திரர்களுக்கு விரித்து விளக்கமாகக் கூறுவாயாக என்கிறார்.

சொ. வி:

உள்ளபடி . . . சொல்லே – உள்ளதை உள்ளவாறு திறந்து போட்டு விட்டேன் என்கிறார். சில மந்திரங்களை மனத்துள் உச்சரிக்க முழுப் பயன் கிட்டும். அத்தகு மறைமொழிகளை வெளியில்

தெரியுமாறு திறந்து விட்டேன். எடுத்த காரியத்தில் வெற்றியைத் தேடிக் கொள்ளும் திறமையும், அறிவும் உள்ள புதல்வர்க்கு இதனை விரித்துக் கூறுவாயாக என்கிறார். ஆக உள்ளது உள்ளவாறு எழுதப்பட்ட இம்மந்திரங்களுக்கு விரிவும் உண்டு எனத்தெரிகிறது அது தக்காருக்கன்றி, மற்றோருக்கு உரைக்க ஒண்ணாதது; விளங்காதது என்பதும் தெளிவாகிறது.

சத்தியோசாத முகம்

277. வெற்றியுயர் சிவாய பேதனமே யென்றால்
வேண்டாத பேர்களைத்தான் பிரிக்க லாகும்
பற்றியாசா பத்தி யட்சரமு மாகும்
பண்பாகக் கிருட்டிணன் ஓம்சிவாய நமவோதில்
பெற்றியா ராவணன்முன் மலையெடுத்தாப் போலே
பெலமுடைத்தாய் வாழலாம் பேதம் போமே.

பொ. சு:

"சிவாய பேதனம்" என்றுரைக்க, வேண்டாத பேர்களைப் பிரித்து விடலாம். ஆசாபத்தி அட்சரமாய 'கிருட்டிணன் ஓம் சிவாயநம" என்றியம்ப இராவணன் மலையெடுத்தது போன்ற பலம் உடையராய்ச் சேர்ந்து வாழலாம். பேதங்கள் நீங்கி விடும் என இயம்புகிறார்.

278. பேதமறும் எங்கும் ஓம்சிவாய நமாவென்னில்
பேரான நிர்வாணம் அக்கினிநோய்[167] தீரும்
வேதமறும் மய்ங்வங்ய வாசிநமா வென்னில்
வேலமரம் வரையுடனே திட்டிக்க லாகும்
போதமுறும் நாளின் சிவாயஓ மென்றால்கேள்
புரையுடைய மாலுடனே பொருது வெல்லும்
சீதமுறும் அங்குங் சிவாயஓ மென்னில்
திறனிந்திர னசுவமெய்தும் பாரு பாரே.

பொ. சு:

· மோட்ச இன்ப நிலையடைய, அக்கினி நோய்தீர, வேலமரத்தை மலையோடு புதிதாகப் படைக்க, திருமாலையும் வெல்லும் சக்தி கிட்ட, இந்திரனுடைய குதிரையையும் கைவசப்படுத்த உரைக்கும் மந்திரங்கள் கூறப்பட்டுள்ளன. ·

---

167. பா. பே. "கண்ணோய்", செ. I.

சொ. வி:

இந்திரன் அசுவம் – 'உச்சைச் சிரவம்' எனும் பெயர் கொண்ட குதிரையாகும். பாற்கடல் கடைந்த பொழுது வெளிப்பட்டவற்றுள் இதுவும் ஒன்று.

279. பாரப்பா ஓங்உங் சிவாயஓ மென்றால்
பார்புகழும் வன்னியுட நாக்குக் காணும்
நேரப்பா மந்திராக்கினி யென்று சொல்வார்
நெறியாக முன்னோர்கள் நற்பாவங் காண
சீரப்பா சியுங்சியுங் சிவாய சீஓம் சீயுங்
திறந்துஓது திடனாகச் சிந்தை வைத்து
ஆரப்பா அதின்பேர்தா னதிலட் சணந்தான்
அப்பனே யனாகதத்தை யறைகி றேனே.

பொ. சு:

'மூலாக்கினி' எனும் குண்டலினி சக்தியின் இலட்சணம் அறிய மந்திரம் உரைத்துள்ளார்.

அடுத்து, 'அனாகதம்' பற்றி (ஆறாதாரத்தில் ஒன்று) கூறுகிறேன் என்கிறார்.

சொ. வி:

வன்னியுட நாக்கு – அக்கினி (மூலாக்கினி) ஜ்வாலை.

280. அறைகிறேன் இங்ரங் சிவாயநமா வென்னில்
அப்பனே மேகசர முரைக்கக் கேளு
பறைகிறேன் மேகமண் டலத்தி லேறிப்
பார்க்கலா மிருக்கலாம் பதங்கள் பெற்று
இறைகிறே னென்றுநின்ற வாயிற் றோற்றம்
இயல்பாகக் காணலாந் தியானங் கேளே.

பொ. சு:

இப்பாடலில் அனாகதம் அறிய 'இங்ரங் அங் சிவாயநமா' என உரைத்தல் வேண்டும் எனவும், 'மேகசரம்' என்ற மந்திரம் உச்சரிக்க, மேகமண்டலத்தில் ஏறிப் பார்க்கவும், இருக்கவும், பதங்கள் பெறவும், வாயில் தோற்றங்கள் காணவும் இயலும் எனவும் உரைக்கிறார்.

அடுத்து, தியானம் பற்றிக் கூறுகிறார்.

281. தியானமென்ன ஒங்இங்சங் சிவசிவா வென்றால்கால்
தென்றலென்ற மாருதந்தான் தெளிந்து தோணும்
தியானமா பங்ஒங்கு நாதசி மயவென்னில்
தாரணியில் சரீரங்க ளொடுங்கல் காணும்
தியானமாம் ஸ்ரீயுங்உங் சிவாயநமா வென்றால்
தியானித்தோர் பலன்பெறுதல் காண லாமே.

பொ. சு:

தென்றலெனும் மந்தமாருதம் வீச, (இயற்கைச் சக்திகளை ஆளும் சித்தி கைவரப் பெறல் என்பதாம்) சரீர ஒழுக்கம் காண, (சமாதி சார்ந்து, தூல உடல் மறைய சூக்கும உடல் பெறும் நிலையாம்) தியானத்தின் உண்மையான பலனை அடைய ஓதும் மந்திரங்களை உரைத்துள்ளார்.

282. பலன்காணும் யாங்ஊங் சிவாயஒங் கேளு
பரிமள பஞ்சாக்கரமாய்ப் பகர்தல் தானும்
மலங்காத பரிமளங்கள் தோற்ற மாற்ற(ம்)
மாய்கையன்றிக் காணலா மப்பா பாரு
கலங்காத எங்ளங்இஷங்கிஷங் சிவாயஒம் உரைக்கில்
காணலா முயிர்த்தோற்றங் காண லாகும்
பிலங்காணுந் தெரிசனத்தைப் பேசக் கேளு
பிரியாமல் செயங்சீயுங் சிவஒம்நமவென் றூணே.

பொ. சு:

பஞ்ச அக்கரமாகிய 'நமசிவாய' என்பதனை முறைப்படி ஓத, பரிமளங்களின் தோற்றங்களையும், மாற்றங்களையும், உயிர்த் தோற்றங்களையும் காணலாம் என்றுரைக்கிறார்.

அடுத்து, பலன் காணும் தரிசனம் பற்றி விளக்குகிறார்.

283. ஊணவே திக்குகளின் தோற்றங் காணும்
ஒளிநயன தோற்றங்க ளூற்றுக் கேளு
பூணவே எங்மங்சிவங் எங்சிவாய நமாவோது
புகழோசை நிற்கிறதைப் பூட்டக் கேளு
நாணவே சீயுங்உங் சிவசிவஒ நமோவென்று
நயமாக ஒங்சிங்சிங் சிவாயசிங்சிங் ஒமென்றக்கால்

தோணவே அறுசுவையு மறிய லாகும்
சொல்லாதே வாய்திறந்து சொல்லொ ணாதே.

பொ. சு:

மந்திர உச்சரிப்புகளால் திக்குகளின் தோற்றம், நயன தோற்றம், அறுசுவை இன்பம் ஆகியவற்றை உணரலாம் என்கிறார்.

சொ. வி:

திக்குகளின் தோற்றம் - உருண்டை வடிவாய இவ்வுலகின் திசைகள் என்னென்ன என்பதை அறிய இயலும். திக்குகள் தொடங்கும் இடத்தை, அதாவது அத்திசையில் உள்ள உலகின் தொடக்க இடத்தை யார் அறிய இயலும்? மந்திரத்தின் தன்மையை உணர்ந்த ஞானியருக்கு அது கைகூடும் என்கிறார்.

ஒளிநயன தோற்றங்கள் உற்றுக்கேளு - கண்ணால் காண இயலும் கேட்க இயலுமா? ஞானிகளுக்கு அந்த நிலையை எய்த இயலும் என்கிறார். மனத்தால் உணர்த்தலாம். ஐம்புலனால் ஐவேறுபட்ட அடைவுகளை அடைதல் மனிதத் தன்மை. ஒருபுலனால் ஐம்புலனின் அடைவுகளையும் ஒரு சேரப் பெறுதல் யோகத் தன்மை.[168]

284. **ஒண்ணாது திரிபுருஷர் புணர்ந்த யின்பம்**
ஊடரிய மந்திரத்தை உற்றுப் பாரு
கிண்ணாத சலசலிசலம் செலசல சௌசல
. . . . . . சிவாயநங் கிட்டி யோது
அண்ணாந்து ஐயைந்துஞ் சத்தியோ சாதம்
அறையிறே னீசான மறையக் கேளு
உண்ணாது உறங்காது பொன்றி டாது
உரையுணர்வுக் கெட்டாத உண்மை தானே.

168. 'டோயோ' என்ற மாணவன் 'ஞானம்' பெறற் பொருட்டு, 'மோக்குராய்' என்ற பெரும் துறவியை அடைந்தான். அவர் 'ஒரு கையால் ஓசை எழுப்பு' என்கிறார். அவன் ஒரு கையால் இசைக் கருவியை மீட்டினான். 'இல்லை' என்றார். ஒருகையால் பாத்திரத்திலிருந்த தண்ணீரைச் சாய்த்தான். 'இல்லை என்றார். டோயோ பலநாள் முயன்றான். இறுதியில் வருவதை விட்டு விட்டான். ஓராண்டு கழித்து வந்து குருவை வணங்கிக் கூறினான். "குருவே எனக்கு அந்த சப்தம் கேட்டது. அந்த சப்தமில்லாத சப்தத்தை, ஒரு கை உண்டாக்கும் சப்தத்தை நான் கேட்டேன்." என்றான். - டாக்டர் எம்.எஸ். உதயமூர்த்தி, மனமும் பிரார்த்தனையும்.

பொ. சு:

பெண், ஆண் என்ற இரு தனிப்பட்டவர் அனுபவித்த இன்பம் இத்தன்மைத்தானது என உரைக்க இயலாது. ஊடுருவிக் காண்பதற்கரிய மந்திரங்களை உற்றுப் பார்ப்பாயாக. 'சிவாய நம' என்பதன் தன்மை விளங்கும் என்கிறார்.

இதுவரை இருபத்தைந்து 'சத்தியோசாதம்' பற்றி உரைத்தேன். இனி ஈசானம் பற்றிக் கூறுகிறேன். அது சொல்லுக்கும், உணர்வுக்கும் எட்டாத உண்மை எனப் புகல்கிறார்.

சொ. வி:

ஒண்ணாது திரிபுருஷர் புணர்ந்த இன்பம் – இருவர் அடைந்த இன்பத்தை விளக்க இயலாது. இதனையே திருமூலர்,

> **"முகத்திற் கண்கொண்டு காண்கின்ற மூடர்காள்!**
> **அகத்திற் கண்கொண்டு காண்பதே ஆனந்தம்!**
> **மகட்குத் தாய்தன் மணாளனோ டாடிய**
> **சுகத்தைச் சொல்லென்றால் சொல்லுமா றெங்ஙனே!**

எனப் பாடியிருக்கிறார்.

ஊடரிய மந்திரத்தை உற்றுப்பாரு – உரைக்கப்பட்டுள்ள ஊடுருவிப் பார்க்க இயலாத மந்திரத்தை ஊடுருவிக் காணப் பல உண்மைகள் தெளிவாகும் என்கிறார்.

சல = அ; சலி = இ; சலம் = அம்;

செல = எ; சேல = ஏ; செலள = ஔ; சல = அ

ஆக அ, இ, அம், எ, ஏ, ஔ, அ எனக் கொள்ளலாம். இவை ஒவ்வொன்றுக்கும் தனி உட்பொருள்கள் இருக்கக் கூடும். அவை யோகிகள் மட்டும் அறிந்த, அறியக்கூடிய மறைபொருளாகலாம்.

ஈசான முகம்

285. உண்மை யின்னஞ் சொல்லுகிறோம் ஆகிர்ஷணந்தான்
உத்தமனே சிதம்பரத்தின் ரூப மாகும்
வண்மையுறும் ராசியும் சிவாயநமா வென்று
வாட்டவே உற்பனஞ்சே ரீசானங்க ளுண்டாம்
தண்மைமிகுந் ஆங்சிவ சிவாய அவ்வு மோதில்
தவறாத பிரசாத சுந்தரரைக் காணலாமே.

பொ. சு:

ஆகர்ஷணம் அதாவது கவர்ந்து இழுப்பதுவே சிதம்பர உருவம் (ஆகாஷம் - ஒன்றுமில்லாது வெட்டவெளியாய் சூக்கும உடல் பெறல் என்பதாம்) என்றும் , ஈசானமுக மந்திரமும், எம் மந்திரம் உச்சரிக்க பிரசாத சுந்தரரைக் (சிவ வடிவில் ஒன்று) காணலாம் என்றும் இயம்பப்பட்டுள்ளது.

286. காணலாந் தத்துவத்தின் தரிசனத்தைப் பாரு
காட்டாகச் சிமிறியுங்ஊங் சிவாயஊங்அங் நமஔங்கப்
பூணலாந் திரையுங் சிவாயநமஔங் சிவஔங்ம்
புரிந்தாயானால் புகழான மூலாதாரம் காணும்
தோணவே யங்சிங் சிவாயநம வென்றால்
தோற்றாத சுவாதிட்டந் தோற்ற லாகும்
ஊணவே சிங்ஐயுங் சுவாகா வென்றால்
உற்பனஞ்சேர் பூரகத்தி லுற்றுக் காணே.

பொ. சு:

இனித் தத்துவத்தின் தரிசனத்தைப் பார்க்கலாம் என இயம்பி, மூலாதாரம் காணவும், ஆறு ஆதாரத் தானங்களுள் அடங்கும் சுவாதிட்டம், (ஆறாதாரங்களில் மூலாதாரத்திற்கும் நாபிக்கும் இடையேயுள்ள ஆறிதழ் வடிவாயுள்ள தானம்) மணிபூரணம் (கொப்பூழ்) ஆகிய இரு தானம் காணவும் மந்திரம் உரைத்துள்ளார்.

287. உறவாக வங்லங்வங் சிவாய மென்றால்
உரையுணர்வி லுயர்ந்துநின்ற சுவாதிட்டத் துண்மைகாணும்
மறவாமல் வங்சிங் சிவாய மோதில்
மைந்தனே அனாகதத்தை மன்தில் காணும்
இறவாமல் ஊங்உங் சிவாயஔ மென்றால்
இயல்பான விசித்ததனை விருமாக் காணும்
பிறவாத சிங்கங்சிங் சிவாய மென்றாற்
பேர்பெரிய அக்கினியைக் காண லாமே.

பொ. சு:

இப்பாடலில் கூறப்பட்டுள்ள நாமங்களை உச்சரிக்கக் குண்டலினி சக்தியை (மூலாக்கினி) எழுப்ப இயலும் என இயம்பப்பட்டுள்ளது.

நாம உச்சரிப்புப் பற்றியும், அப்பொழுது மனம், உடல் அடையும் நிலைகளைப் பற்றியும் தற்பொழுது அறிவியல் பூர்வமாகவும் ஆராய்ந்து வருகின்றனர்.

மனத்தை ஒரு நிலைப்படுத்தக் குறிப்பிட்ட ஒரு சொல்லை மனதுக்குள் தொடர்ந்து சொல்ல, தர்ககரீதியாகச் சிந்திக்கும் அறிவு மரத்து, பொங்கி எழும் உணர்வுகள் சமநிலைப்பட்டு, சொல்லொணா அமைதியை மனமும், உடலும் அனுபவிக்கின்றன என்றும், இத்தகு தியானத்தின் போது ஏதோ எல்லையற்ற இடத்திற்குச் செல்வது போலவும், சாவு இல்லாத உலகில் வாழ்வதாகவும், அசாதாரண ஆக்க சக்தி பிறப்பதாகவும், மனிதனுடைய பால் உறுப்புகளில், கரு உற்பத்தியாகுமிடத்து காமமல்லாத ஓர் உணர்வையும், ஒரு விழிப்பையும் அனுபவிப்பதாகவும் தியானம் செய்த பலர் கூறியதாக விஞ்ஞான பூர்வமாக ஆய்வு நடத்தி அறிந்து அறிக்கை வெளியிட்டுள்ளனர். இதனையே சித்தர்களும், அன்னார் நூல்களும் குண்டலினி சக்தி என்றும், அது அடியிலிருந்து புறப்பட்டு முள்ளந்தண்டு வழியே மூளையின் பகுதியான பைனியல் சுரப்பியில் (Pineal gland)-அதாவது சித்தர்கள் கூறிய ஆயிரம் இதழ்த் தாமரை கலக்கிறது என்றும், அப்போது உள்ளொளி பிறப்பதாகவும், ஆத்ம விழிப்புப் பெறுவதாகவும் கூறிச் சென்றனர்.

மனத்தைத் தியானத்தில் ஆழ்த்த 'ஓம் நமசிவாய' என்ற மந்திரத்தைச் சித்தர்கள் சைவர்கள் ஆனதால் பயன்படுத்தினர். அது ஏன் இந்த இந்துமதக் கலப்பு? என எண்ணிய ஹார்வர்டு பல்கலைக் கழக 'பென்சன்' இறுதியில் கண்டறிந்த 'ஒன்' என்பதாகவும் கூட இருக்கலாம். எடுத்து இயம்பும் சொல்லில் ஒன்றும் இல்லை. அது ஆழ்மனத்தில் அச்சொல் புனிதமானது; மனத்தை அமைதிப் படுத்தக்கூடியது; ஆன்ம விழிப்புக்கு அழைத்துச் செல்லக் கூடியது; இறையனுபவத்தை இறுதியில் தந்து இறைவனோடு கலக்கச் செய்வது என்ற திடமான எண்ணம் மட்டும் இருந்தால் போதுமானது.

288. ஆமப்பா மங்வங் சிங்ஓங்கென் றாக்கால்
அண்டங்க ளொடுக்கெல்லா மறிய லாகும்
காமப்பா கிலியுங் கிறியுங் சிவாய மென்றால்
கற்பித்த வேதாவின் நந்தி காணும்
தாமப்பா மங்நங் சிவசிவயஓ மோதில்
தனைக்காணா வுருமாற்றுஞ் சத்தியந் தானே.

பொ. சு:

அண்டங்களின் ஒடுக்கத்தை அறியவும், சித்தர் பரம்பரையின் ஆதி கர்த்தாவான நந்தியைக் காணவும், (அவரது கருத்துகளின் உண்மைப் பொருளை அறிதல் என்பதாம்) உருமாற்றம் பெறவும், பருவுடல் மறைந்து நுண்ணுடல் அல்லது ஒளியுடல் பெறுதல்) இயம்ப வேண்டிய மந்திரங்கள் உரைக்கப்பட்டுள்ளன.

சொ. வி:

கற்பித்த வேதாவின் நந்தி காணும் - சித்த வைத்திய உண்மைகளைப் பார்வதி கேட்கச் சிவன் அவளுக்குச் சொல்ல, அவர் நந்திக்குச் சொல்ல, நந்தி தன் பதினெண் சீடருக்கு உரைத்ததாகவும், இச்சித்தர் பரம்பரை, 'நந்திவர்க்க அடியார்கள்' என்று அழைக்கப்பட்டதையும் அறிகிறோம். இந்நந்தி வழி வந்தவரே திருமூலர் என்பது அவர் திருமந்திரத்தால்[169] தெளிவாகிறது. நந்தி அறிந்த அவ்வனைத்து உண்மைகளையும் அறியலாம் என்பது பொருளாம்.

289. **சக்தியுடன் னவங்யங்சிங் ஓங்சிவாய மென்றால்**
சத்துருவுங் கரகேழுந் தணலாய் வேகும்
புத்தியுடன் நங்வங் யங்சிங் கென்னாக்கால்
போட்டவிரை யுடன்முளைத்துக் கனிகள் நல்கும்
சித்தியுடன் சிங்சங் சிவாயஓ மென்றால்
திரிகால ஞானமங்கே சித்தி யாகும்
புத்தியுடன் இங்யேங் உங்சிவாய மென்றால்
பன்மாய்கை தோற்றாம லப்பாற் போமே.

பொ. சு:

பகையழிக்க, போட்டவிதை அன்றே முளைத்துக் கனி நல்க, முக்காலத்து உண்மைகளையும் உணர்ந்து கொள்ள (நடந்தது, நடப்பது, நடக்கப் போவது என்ற அனைத்தையும் அறிதல்) மன மயக்கம் கடக்க என்ற இவற்றுக்கு உச்சரிக்க வேண்டிய மந்திரங்களை உரைத்துள்ளார்.

---

169. "நந்தி அருள் பெற்ற நாதரை நாடிடில்
நந்திகள் நால்வர் சிவயோக மாமுனி
மன்று தொழுத பதஞ்சலி வியாக்கிரமர்
என்றிவர் என்னோடு எண்மரு மாமே"
"கொண்டிடும் தோடக்குறி சொன்னார் என்நந்தி"
"மேகம் பிறந்தவிதம் சொன்னார் என்நந்தி"

சொ. வி:

கரகேழு - கரவு ஏழு?

290. **மாய்கைபோஞ் சிவாயநமா வென்றால் தானே**
வரைகளெல்லாந் தூளாகப் பொடிக்க லாகும்
மாய்கைபோம் வயசிநம ஓமென் றாக்கால்
வாள்ரவியுஞ் சோமனுந்தான் புணர்ச்சி காணும்
மாய்கைபோம் யவநமசிவ ஓமென் றாக்காற்
மனோன்மணி யனுக்கிரகம் வளரும் பாரே.

பொ. சு:

மலைகளைத் தூளாக்க, சூரிய, சந்திரரை இணைக்க, மனோன்மணி அனுக்கிரகத்தை முழுமையாகப் பெற நாமங்கள் இயம்பப்பட்டுள்ளன.

சொ. வி:

வாள் ரவியும் சோமனுந்தான் புணர்ச்சி காணும் - சூரியனும், சந்திரனும் வெம்மை, குளிர்ச்சி என்ற இருவேறு பண்புகள் கொண்டவை. அத்துடன் வெவ்வேறு காலத்தில் (பகல், இரவு) தோன்றக் கூடியவை. ஆனால் மாறுபட்ட குணம் கொண்ட இந்த இயற்கைச் சக்திகளை இணைக்கும் ஆற்றல் பெறலாம் என்பது இங்குக் குறிக்கப்படுகிறது. (நெருப்பும் நீரும் ஒன்று கூடி அணைந்து கொள்வதாகும்) இத்தத்துவத்தை அடக்கியே வாலை எனும் வாலாம்பிகை ரூபம் நெற்றியில் சந்திர கோணத்துடனும், முடியின் நுனியில் சூரியனுடனும் அமைக்கப்பட்டுள்ளது. இதுவே நாத, விந்து இணைப்பாம்.

ரவியும், சோமனும் சேரும் பொழுது உண்டாகும் கிரகணத்தையும் தம் சக்தியால் நடக்கச் செய்யலாம் என்றும் கொள்ளலாம்.

292. **பார்த்திடவே மயநசிவ சுவாகா வென்றால்**
பாய்கிற கெவுனிகளுங் குளிகை யீவார்
சேர்த்திடவே சிம்வயந ஓமென் றாக்கால்
சித்தென்ற அறுபத்து நாலு மெய்தும்
போத்திடவே வங்சிங்யங் யங்சுவாகா வென்றால்
புவலோகத் தரசர்வந்து போற்றி நிற்பார்

காத்திடவே இங்சிங்சங் ஓமென் றாக்கால்
களங்கமற்ற பொன்னுலகோர் பணியுங் காணே.

பொ. சு:

பாய்கிற கெவுனிகளும் குளிகை தர, சித்து அறுபத்து நான்கும் எய்த, புவியரசர் வந்து போற்றி நிற்க, சுவர்க்க லோகத்தாரையும் பணியச் செய்ய உச்சரிக்கும் மந்திரங்களை விளக்கியுள்ளார்.

சொ. வி:

கெவுனிகளும் குளிகையீவார் – கெவுனி - ககனி - ஆகாய மார்க்கமாகப் பறந்து செல்லும் சித்தர். இவர்களே இறங்கி வந்து குளிகை தருவார்கள் என்பதாம்.

292. காணப்பா ஈசான மிருபத் தஞ்சுங்
கற்பித்த படிசொன்னோம் நூற்றிருபத் தஞ்சு
பூணப்பா இதினாலே சித்தி முத்தி
பூவுலகில் பிறக்குமடா பூசை வேணும்
ஊணப்பா அஞ்செழுத்தால் திட்டி யஞ்சும்
உத்துப்பார் திடனாக வுண்மை காணும்
வீணப்பா மற்றதெல்லாம் இத்தை விட்டால்
வெறும்பொய்யாய் நூல்முதலாய் விரும்பிட் டாரே.

பொ. சு:

ஈசான முகம் இருபத்தைந்தையும் கூறினேன். கற்பித்துக் கொடுத்தபடி நூற்றிருப்பத்தைந்தையும் இயம்பினேன். இவற்றை முறையாக ஓத, சித்தியில் முத்தி கிட்டும். ஆனால் பூசை முறைகளை நன்கு அறிந்திருக்க வேண்டும். ஐந்தெழுத்தால் திட்டி (திருஷ்டி?) ஐந்தும் உண்மையாகும். இத்தகு சீர்மை வாய்ந்த இதனை விட்டுப் பொய்யான பலவற்றை விரும்புகின்றனரே என அலமருகின்றார்.

293. விரும்பிநின்ற வாதமொடு வசியம் தம்பம்
வீறுடைய பாதங்கள் நூறும் சொன்னேன்
விரும்பிநின்று நாதாக்கள் மறைத்த தெல்லாம்
வெட்டவெளி யாய்த்திறந்து வீசி னேனான்
விரும்பியதைப் பார்ப்பளவி லெல்லாம் சித்தி
வெடியுப்புச் செயநீரை விரித்துச் சொல்வோம்
விரும்பியவர் பலமுகமாய்ச் செய்த மார்க்கம்
வேதைக்குப் பாதையிது விரைந்து கேளே.

பொ. கு:

இரசவாதம், வசியம், தம்பனம் ஆகியவற்றையும், இவற்றின் கிளைக்கருத்துகள் நூறினையும் (பல என்ற பொருளில்) எடுத்துக் கூறினேன். நாதாக்கள் மறைத்து வைத்தவற்றை எல்லாம் வெட்ட வெளியாய்த் திறந்து வீசிவிட்டேன். விருப்பத்துடன் இதனைப் பார்க்க, உனக்கு எல்லாம் சித்தியாகும் எனக் கூறி அடுத்து, வெடியுப்பு, செயநீர் பற்றி விளக்குகிறேன். பலரும் பல வழியில் செய்து பார்த்த இதனை நானும் கூறுகிறேன். வேதித்தலுக்கு ஏற்ற பாதை இதுவே விரைவாகக் கேள் என உரைக்கிறார்.

294. கேளப்பா வெடியுப்பு பலந்தான் பத்து
கிருபையுள்ள பழம்புளியோர் பலந்தான் பத்து
நாளப்பா வெடியுப்பு நாலாங் காய்ச்சல்
நலமாகப் புளியிலுள்ள நரம்பைத் தள்ளு
ஆளப்பா கலவத்தில் மையா யாட்டி
அதின்பிறகு வெடியுப்பைத் தூளா யாட்டி
வாளப்பா உப்பிலரைப் பலந்தான் வைத்து
மற்றவுப்புப் புளிகூட்டி ஆட்டு ஆட்டே.

பொ. கு:

வெடியுப்புப் பத்துப் பலம், பழைய புளி பத்துப் பலம் எடுத்துக் கொள்ள வேண்டும். வெடியுப்பு நாட்பட நன்கு காய்ந்ததாகவும் புளி நரம்புகள் நீக்கப்பட்டுச் சுத்தமாக்கப்பட்டதாகவும் இருக்க வேண்டும். சுத்தி செய்த புளியை அரைக்குங் கலத்தில் இட்டு மைபோல் நன்கு ஆட்டிக் கொண்டு, வெடியுப்பினையும் தூள் போல ஆட்டிச் சாதாரண உப்பு (உணவிற்கு இடும் உப்பு) அரைப் பலமும், ஆட்டி வைத்த வெடியுப்பு, புளியுடன் கூட்டி ஆட்ட வேண்டும் என்கிறார்.

295. ஆட்டுவது அமுரியினால் வாய்நீ ராலும்
அப்பனே மயனம்போ லடையாய்த் தட்டி
நீட்டுவது அயக்கிண்ணிக் குள்ளே வைத்து
நெருப்பிட்டுத் திரும்பியதைக் கருக்கிக் கொண்டு
மூட்டுவது உலைமுகத்தில் கிண்ணி வைத்து
முதிரவது வெளுக்குமட்டும் கிண்டிக் கிண்டி
சூட்டுவது மிறக்கியதைத் தூளா யாட்டிச்
சொல்லுகிறேன் மேன்மருந்தைச் சொல்லு றேனே.

பொ. சு:

அமுரி, வாய்நீர் ஆகியவை சேர்த்து மயனம் போல் ஆட்டி அடை போலத் தட்டி, அயக்கிண்ணிக்குள் வைத்து நெருப்பிட்டுக் கருக்கிப் பின் திரும்பவும் உலை முகத்தில் அக்கிண்ணத்தை வைத்து, மருந்துச் சரக்கு வெளுக்கு மட்டும் கிண்டிய பிறகு இறக்க வேண்டும், பின்னர் மீண்டும் அதனைத் தூளாக ஆட்ட வேண்டும். இதனுடன் சேர்க்கும் மருந்தை அடுத்த பாடலில் விளக்குகிறார்.

296. சொல்லுகிறேன் மண்சட்டி வாங்கி வந்து
தூளிட்டுப் பழச்சாற்றைச் சேரைக் கூட்டிச்
சொல்லுவது யிருகடிகை வறுத்துக் கொண்டு
திரும்பவதைப் பொடியாக்கிப் பீங்கானி லிட்டுக்
கொல்லுவது சரக்குகளைப் பனியில் வைக்கக்
கொடுஞ்சுண்ணந் தண்ணீருங் குறைந்தி டாதே.

பொ. சு:

மண்சட்டி வாங்கிக் கொண்டு வந்து, அதில் ஆட்டிய தூளை இட்டு, எலுமிச்சஞ் சாறு ஒரு சேர் கூட்டி, இரு கடிகை வறுத்து எடுத்துத் திரும்பவும் அதைப் பொடியாக்கிப் பீங்கான் கிண்ணத்தில் போட்டுப் பனியில் வைக்கச் சரக்குகளை வேதிக்கும் செயநீர் கிட்டும் என்கிறார்.

297. குறையாத சத்திசிவங் கார சாரங்
கொத்தோடே நீருச்சு சீனஞ் சேரில்
நிறையாகத் தொட்டதெல்லாங் கட்டிக் கொள்ளும்
நிகரில்லாப் பூநீறு கட்டித் தானால்
துறையாக மறைத்திட்டார் பெரியோ ரெல்லாம்
... ...
மறைவாக மறைத்திட்ட மறைவை யெல்லாம்
வாய்திறந்து பேசாதே வழங்கி னேனே.

பொ. சு:

சக்தி மார்க்கம், சிவ மார்க்கம் என்ற இரண்டிலும் கூறப்பட்ட காரசாரங்களைச் சீனஞ்சேர்ந்த செயநீரால் நீறாக்க இயலும். எடுத்துச் செய்யத் தொடங்கும் எந்தச் சரக்கினையும் பூநீறு கட்டத் தெரிந்தவனால் கட்ட இயலும்.

இந்த முறைகளை (சரக்கு நீற்றல், கட்டல்) எல்லாம் பெரியோர் கூறாது மறைத்தனர். மறைத்த அக்கருத்துகளை வாயைத் திறந்து பேசாமலேயே நான் வழங்கிவிட்டேன் என இயம்புகிறார்.

298. வழங்கினதோர் சாஸ்திரமு மைந்தா சேர
விபரமுடன் பலதிரட்டி(ல்) விரித்துச் சொன்னேன்
அழங்கிநின்று அலையாமல் பலநூல் தேடி
ஆத்தாளைப் பூசித்து அமிர்தங் கொண்டு
தளங்கிநின்ற மனத்தோடே கற்பங் கொண்டு
சதாநித்த மேறுவாய் திரட்டு முத்தே.

பொ. சு:

இதுவரை வழங்கிய சாத்திரங்கள் அனைத்தையும் விவரமாக இப்பலதிரட்டில் விரித்துக் கூறினேன். இதனை விடுத்துப் பல நூல்களையும் தேடி அலையாது ஆத்தாள் சக்தியைப் பூசை செய்து வணங்கி கற்பம் உட்கொண்டு உயர்வடைவாயாக. இத்துடன் திரட்டு முற்றுப் பெற்றது என்கிறார்.

அரகர குரோதன வருஷம் மார்கழி
மாசம் ரு(5)தேதி புதன்கிழமை யண்ணைக்கு
தாண்டவ மூர்த்தி வாத்தியார் கருவூர் நாயனார்
பல கலம்ப(க)த் திரட்டு எழுதி முடிந்தது முற்றும்.

சம்பூரணம் தேவி சகாயம். குமர
குருபரன் துணை. சரவணபவ குகன் துணை.
கணபதியார் துணை. சரஸ்வதி(இ) ரட்சிக்க.

❖❖❖❖❖

சொல்லகராதி

எண் – பாடல் எண்

* * * * * * *

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை – 600 113
அண்மை வெளியீடுகள்

உ. வே. சா. பதிப்புப் பணியும் பன்முக மாட்சியும்	35.00
தமிழக வரலாறு மக்களும் பண்பாடும்	125.00
தெசிணி-யின் தமிழாக்கப் பாடல் திரட்டு	50.00
மிருச்சகடிகம்	50.00
தனிநாயகம் அடிகளாரின் சொற்பொழிவுகள்	40.00
தமிழ்ச் சமூகவியல் ஒரு கருத்தாடல்	25.00
பெரியாரின் பண்பாட்டுப்புரட்சி	25.00
வ. உ. சி. வளர்த்த தமிழ்	20.00
ஜப்பானியக் காதல் பாடல்கள்	75.00
குறுந்தொகை - ஒரு நுண்ணாய்வு	80.00
தமிழ் நாட்டுப்புறவியல் ஆய்வின் வரலாறு	50.00
தமிழ் நாடகம் – நேற்றும் இன்றும்	30.00
நாடகமும் நாடகக் கம்பெனி அனுபவங்களும்	60.00
தொல்காப்பியப் பாவியல் கோட்பாடுகள்	40.00
தனிநாயகம் அடிகளாரின் சொற்பொழிவுகள்	40.00
இருபதாம் நூற்றாண்டுத் தமிழ் நாடகங்கள்	75.00
தமிழர் கட்டிடக்கலை	30.00
சர்வக்ஞர் உரைப்பா	40.00
தமிழில் ஆவணங்கள்	75.00
தமிழ் மேடை நாடக வரலாறு	55.00
பரதநாட்டிய சாஸ்திரம்	150.00
இந்திய விடுதலைக்குப் பின் தமிழிலக்கியச் செல்நெறிகள்	55.00
சதகத்திரட்டு தொகுதி-1	80.00
தொல்காப்பிய இலக்கண மொழியியல் கோட்பாடுகள்	70.00
எழுத்திலக்கணக் கோட்பாடு	70.00
தமிழ்ப் பண்பாடு	25.00
பாவாணர் கண்ட இன்றைய தமிழின் இலக்கணங்கள்	30.00
தமிழக நாட்டுப்புறக் கலைகள்	55.00
தமிழ் மொழியின் வரலாறு	30.00
தமிழிலக்கியத்தில் ஊனமுற்றோர்	45.00
சங்ககாலக் காசு இயல்	30.00
தமிழர் நாட்டு விளையாட்டுகள்	75.00
தமிழக மகளிரியல்	80.00
பாரதி இந்தியா	40.00
தமிழில் மருத்துவ இதழ்கள்	50.00
தமிழ்ச் சுருக்கெழுத்து நூல்	50.00
தமிழர் நாட்டு விளையாட்டுகள்	75.00
Social Heritage of Tamils	75.00

Pub.No. 465 **கருவூரார் பல திரட்டு** **70.00**